# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 309 புரட்டாதி 15ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 01 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 30

பக்கங்கள்: 56


## வட – கிழக்கு வாழ் மலையகத்தவர்களுக்கு தமிழ் அரசுக் கட்சியில் இடம்வேண்டும்

அதன் தலைவரிடம் நேரில் வலியுறுத்து



யாழ்ப்பாணம், ஒக். 1
வடக்கு - கிழக்கில் உள்ள மலையக மக்களுக்கு தேர்தலின் போது இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என்று, மலையக மக் >> 53

## வாக்காளர் பட்டியல் ஒக். 12 வெளியாகும்

யாழ்ப்பாணம், ஒக். 1
மாகாண சபைத் தேர்தல்கள் பிற்போடப்பட்டதும், வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடும் நாளையும் தேர்தல்கள் திணைக்களம் பிற்போட்டுள்ளது. நேற்று வெளியிடப்பட விருந்த வாக்காளர் பெயர்ப் பட்டியல் எதிர்வரும் 12ஆம் திகதியே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.
2017ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் >> 53

## அலவாங்கு நெஞ்சில் பாய்ந்து குடும்பப் பெண் பரிதாபச் சாவு

மாடு அவிழ்க்கச் சென்ற போது பரிதாபம்
முத்துஐயன்கட்டில் நேற்றுச் சம்பவம்

முல்லைத்தீவு, ஒக். 1
மேய்ச்சலுக்குக் கட்டிய மாட்டை அவிழ்க்கச் சென்ற குடும்பப் பெண் மாடுகட்டும் அலவாங்கு நெஞ்சில் தாக்கியதில் உயிரிழந்தார். அலவாங்கிலிருந்து கயிறை அவர் அவிழ்த்த போது, மாடு இழுத்ததால் அலவாங்கு அந்தப் பெண்ணின் நெஞ்சில் பாய்ந்ததாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.
முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு தட்டையர் மலைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த தேவராசா >> 53

## மரக்கட்டை நெஞ்சில் குத்தி குடும்பத் தலைவர் இறப்பு

ஆடு கட்டும்போது துயரம்

யாழ்ப்பாணம், ஒக். 1
ஆடு கட்டச் சென்றவர் ஆடு கட்டும் கட்டைக்கு மேல் வீழ்ந்து நெஞ்சில் கட்டை குத்தியதால் உயிரிழந்தார்.
நீர்வேலி வடக்கில் இந்தப் பரிதாபச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த சுப்பையா சிவநேசன் >> 53

# தேரர்களை அரசியல் தலைவர்களே தீர்வுக்கு வழிப்படுத்தவேண்டும்

பசில் ராஜபக்சவிடம் எடுத்துரைத்தார் நல்லை ஆதீன முதல்வர்

யாழ்ப்பாணம், ஒக். 1
அரசியல் தீர்வுக்கு தமிழர் தரப்பில் இருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. மாறாக பௌத்த தேரர்களும் தென்னிலங்கை இனவாதிகளுமே தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அவர்களை தெற்கு அரசியல் தலைவர்களே வழிப்படுத்த வேண்டும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுடனும் பேசி உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டியதும் உங்களின் பொறுப்பு"
இவ்வாறு பசில் ராஜபக்சவிடம் நல்லை ஆதீன குரு >> 53



# தமிழர்கள் ஏற்காத தீர்வை கூட்டமைப்பு ஆதரிக்காது

மன்னார் ஆயருக்கு உறுதி கூறினார் சம்பந்தன்

மன்னார், ஒக்ரோபர் 1
“தமிழ் மக்கள் விரும்பாத தீர்வை உள்ளடக்கிய அரசமைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஆதரிக்காது. தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவு செய்யும் தீர்வை அடைவதற்கான முயற்சிகளே முன்னெடுக்கப்படுகின்றன”
இவ்வாறுதமிழ்தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் மன்னார்



மாவட்ட ஆயர் ஜோசப் கிங்ஸ்லி >> 53


see more news in
newuthayan.com


## மூத்த குடிமக்களால் இலங்கைக்கு சவால்

மருத்துவ வல்லுநர் கணிப்பு

கொழும்பு, ஒக். 1
ஆசியப் பிராந்தியத்தில் மூத்த குடிமக்களின் தொகை வேகமாக அதிகரித்து வரும் நாடாக இலங்கை மாறி வருகிறது. இதனால் பல்வேறு தீவிர சவால்களை எதிர்கொள்ளும் நிலை ஏற்படும் என்று மருத்துவ வல்லுநர் லசந்த கணேவத்த தெரிவித்தார்.
2012ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, இலங்கையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை 2.5 மில்லியனாக இருந்தது. இது மொத்த குடிமக்கள் தொகையில் 12.5 வீதமாகும்.
2021ஆம் ஆண்டில், 60 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களின் எண்ணிக்கை, 3.6 மில்லியனாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது மொத்த குடிமக்கள் தொகையில் 16.7 வீதமாக இருக்கும்.
2041ஆம் ஆண்டில், இலங்கையின் மொத்த குடிமக்கள் தொகையில் நான்கு பேரில் ஒருவர் >> 53

## கடற்படைத் தளபதி சின்னையாவுக்கு ஒரு மாதம் மட்டுமே சேவை நீடிப்பு

விரிவு பக்.04

## பாடசாலை பவள விழாவை இடைநிறுத்தியதால் சர்ச்சை

கூட்டமைப்பின் உள்வீட்டு அரசியல் காரணமா?

யாழ்ப்பாணம், ஒக். 1
கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைர விழா நாளை இடம்பெறவுள்ள நிலையில், நிகழ்வைப் பிற்போடுமாறு அறிவுறுத்தி கல்வி அமைச்சின் செயலரால் பாடசாலை அதிபருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அரசியல் காரணங்களுக்காகவே நிகழ்வைப் பிற்போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சர்ச்சை எழுந்துள்ளது.
இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தின் வைர விழா நாளை 2ஆம் திகதி நடைபெற ஏற்பாடாகியிருந்தது. நிகழ்வில் முதன்மை விருந்தினராகதமிழ்த்தேசி >> 53

## காணாமற்போனோர் பணியகத்துக்கு 4 தமிழ் ஆணையாளர்கள் கட்டாயம்

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்
சம்பந்தனிடம் நேரில் வலியுறுத்து

மன்னார், ஒக். 1
காணாமற்போனோர் அலுவலகத்துக்கு நியமிக்கப்படும் 7 ஆணையாளர்களில் 4 பேர் தமிழர்களாக இருக்க வேண்டும். எமது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாட அரச தலைவரைச் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டும். இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனிடம் காணாமல் ஆக்கப்பட்டோரின் >> 53

## வடமாகாண அரச ஊழியர்களுக்கான பேருந்து சேவைகளை நிறுத்த முடிவு

>> 53







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டுக்கரைக் குளத்தின் கீழான

# சிறு குளங்களைத் திருத்த நிதியை ஒதுக்கவேண்டும்

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. கோரிக்கை

மன்னார், ஒக். 1
கடந்த 35 ஆண்டுகளாகச் சீரமைக்கப் படாதுள்ள கட்டுக்கரைக் குளத்தின் கீழ் உள்ள 41 சிறிய குளங்களையும் சீரமைப்பதற்கு 228 மில்லியன் ரூபாவை ஒதுக்க வேண்டும் 2016 ஆம் ஆண்டு முதல் கோரப்படுகின்றது. இன்றுவரை அது நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் நிலமெவகர அரச தலைவர் மக்கள் சேவை தேசிய வேலைத்திட்டம் நேற்று நடைபெற்றது. அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
மாந்தைமேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அனைவருமே போரால் முழுமையாக இடம்பெயர்ந்து மீளக் குடியமர்ந்தவர்கள். அவர்களுக்கான கட்டுமான வசதிகளோ, சீரான பாதைகளோ, வாழ்வாதாரங்களோ இன்றுவரை அமைத்துக் கொடுக்கப்படவில்லை. அங்கவீனர்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இதில் மிகவும் பாதிப்பை எதிர்கொள்கின்றனர். இது தொடர்பில் அரசின் கவனம் இன்றுவரை கிடையாது.

இந்தப் பிரதேசத்தின் பெரும்பகுதி விவசாயப் பகுதியாகவே காணப்படுகின்றது. இந்தப் பகுதிக்கு நீர்ப் பாய்ச்சல் பகுதியான கட்டுக்கரை குளத்தின் கீழ் 161 சிறிய குளங்கள் உள்ளன. அவற்றில் 41 சிறிய குளங்கள் கடந்த 35 ஆண்டுகளாக எந்தவிதமான ஒரு அபிவிருத்தியும் இன்றிக் காணப்படுவதால் தமது விவசாயம் பாதிப்பதாக இந்தப் பகுதி மக்கள் கடந்த 5 ஆண்டுகளாக சுட்டிக்காட்டினர்.

2016 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின்போது அந்த நிதியை ஒதுக்கித்தருமாறு கோரினேன். ஆனால் 2016 ஆம் ஆண்டு அந்த நிதி கிடைக்கவில்லை. அடுத்த ஆண்டு கவனத்தில் கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்திலும் கோரப்பட்டது. அப்போதும் கிடைக்கவில்லை. 2018 ஆம் ஆண்டிலாவது இந்த மக்களின் அவலத்தை போக்க அமைச்சர் முன்வந்து நிதியை ஒதுக்கித் தர வேண்டும் என இந்த மக்களின் சார்பில் கோரிக்கை முன்வைக்கின்றேன்.

மன்னார் திருக்கேதீச்சரம் பகுதியிலேயே தமிழ் மக்கள் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பூர்வீக நிலங்களையும் வாழ்வாதார நிலங்களையும் அபகரித்து அமைக்கப்பட்ட விகாரை தற்போது திறக்கப்பட்டுள்ளது.

அந்த நிலத்தின் உரிமையாளர்கள் வீதியில் நிற்கின்றனர். இது தொடர்பில் பௌத்த சாசன அமைச்சரிடம் சுட்டிக்காட்டியபோது, விகாரை அமைந்துள்ள பிரதேசத்தைத் தவிர ஏனைய நிலங்கள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படும் என்று வாக்குறுதியளித்தார். ஆனால் அதுவும் இடம்பெறவில்லை. இது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவேண்டும்.

மன்னார் மாவட்டத்தில் பிரதேச செயலகங்களில் நானாட்டான் பிரதேச செயலகத்துக்குரிய அலுவலகம் மிகப் பழைமை வாய்ந்த கட்டடத்தில் இயங்குகின்றது. அந்தச் செயலகத்துக்கு ஒரு புதிய கட்டடத்தை அமைத்துக் கொடுக்க அமைச்சர் ஆவன செய்ய வேண்டும். என்றார்.

நடமாடும் சேவையில் நாடாளுமன்ற உறுப்பினருடன் அமைச்சர்களான வஜிர அபேவர்த்தன, ரிசாத் பதியுதீன், குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.
(ற-10,101)



சாவகச்சேரிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வாணி விழாநேற்றுசங்கமண்டபத்தில்தலைவர்செ.மகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. (ற-9)



சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் வாணி விழாவும் ஏடு தொடக்கல் நிகழ்வும் நிலையத்தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நேற்று நடைபெற்றது. (ற-9)





## மட்டக்களப்பில் நேற்று அமைதி ஊர்வலம்

மட்டக்களப்பு, ஒக்.1
பன்னாட்டு சமாதான தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் நேற்று அமைதி ஊர்வலம் நடைபெற்றது. மட்டக்களப்பு மாவட்ட சர்வ மதப் பேரவையால் இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது.

மட்டக்களப்பு, திருமலை வீதி, தாண்டவன் வெளிக் காணிக்கை மாதா தேவாலய முன்றிலில் இருந்து ஆரம்பமான இந்த ஊர்வலம் மட்டக்களப்பு காந்தி பூங்காவைச் சென்றடைந்தது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பாக அரசே பதில் கூறு, ஊழல் மோசடியாளர்களை சட்டத்தின் முன் நிறுத்து, அதிகாரத்தைப் பகிர்ந்து தேசிய இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டு, கிழக்கு மக்களின் நிலங்களை உடன் கையளி போன்ற பதாகைகள் ஊர்வலத்தில் ஏந்திச் செல்லப்பட்டன.

அமைதியின் அவசியம் உணரப்பட்ட சமகாலத்தில் அதை செயலுருப் பெறச் செய்ய வேண்டும் என்பதற்காகவும், முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதை வலியுறுத்தியும் இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டது என்று சமாதானப் பேரவையின் இணைப்பாளர் இராசையா மனோகரன் தெரிவித்தார். (ற-10,46)



சங்கானை ஜுப்பிற்றர் முன்பள்ளி பாலர் பாடசாலையில் விஜய தசமி நிகழ்வும் ஏடு தொடங்குதல் நிகழ்வும் நடைபெற்றது. நிகழ்வில் மாணவர்களும் பெற்றோரும் கலந்துகொண்டனர். (ற)

## குருதிக் கொடையாளர்களும் உயிரைக் காப்பாற்றுவோரே

### வவு. மருத்துவனை பணிப்பாளர் அகிலேந்திரன் தெரிவிப்பு

வவுனியா, ஒக். 1
குருதிக் கொடையாளர்கள் அனைவரும் ஏதோ ஒரு விதத்தில் உயிரைக் காப்பாற்ற உதவுபவர்கள். அவர்களின் சேவை மீண்டும் மீண்டும் தேவை.

இவ்வாறு வவுனியா பொதுமருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார். பன்னாட்டு குருதிக் கொடையாளர் தின நிகழ்வுகள் நேற்று வவுனியாவில் நடைபெற்றன. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
6 மருத்துவர்கள் சேவையாற்ற வேண்டிய இடத்திலே தற்போது மூன்று மருத்துவர்களே உள்ளனர். நாம் 24 மணிநேரமும் சேவையாற்றி வருகின்றோம். இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ள மருத்துவமனையில் குருதி வங்கியில் இவ்வாறான குறைபாடுகள் இருக்குமானால் அவர்கள் உடனடியாக அந்தத் தேவையை 24 மணிநேரத்திலிருந்து 12மணிநேரமாக மற்றியிருப்பார்கள். ஆனால் நாங்கள் அவ்வாறு மாற்றவில்லை. எங்களது வேண்டுகோளுக்கு இணங்க எங்களது உதவியுடன் மருத்துவர்கள் அர்ப்பணிப்பால் இவ்வாறான சேவையை வழங்கமுடிகின்றது.

குருதித் தானம் என்பது மிகவும் ஒரு விலை மதிப்பற்ற விடயம். நீங்கள் வழங்கப் போகின்ற குருதி யாருக்குப் போய் சேரப்போகின்றது என்று யாருக்கும் தெரியாது. மருத்துவர்களுக்கும், இங்கு பணியாற்றும் தாதியர்களையும் தவிர வேறு எவருக்கும் தெரியாது. பதிவுகள் எங்களிடம் மட்டும் தான் இருக்கும் வேறு ஒருவருக்கும் நாங்கள் வழங்கமாட்டோம்.

எமக்கு தொடர்ந்து குருதி வழங்கிவரும் பொலிஸார், இராணுவத்தினர்கள், திணைக்கள உத்தியோகத்தர்கள், மருத்துவமனை ஊழியர்கள், இளைஞர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைக் கூறுகின்றேன். என்றார். (ற-10)

## குருதி கொடையாளர் தின நிகழ்வு வவுனியாவில்

வவுனியா, ஒக்.1
பன்னாட்டு குருதிக் கொடையாளர் தின நிகழ்வுகள் வவுனியா பொது மருத்துவமனையில் நேற்றுக் காலை நடைபெற்றன.

நிகழ்வில் மருத்துவமனையின் குருதி வங்கிக்குக் குருதிக் கொடை வழங்கிய குருதிக் கொடையாளர்கள் சான்றிதழ், பரிசுப் பொருள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். மாணவிகளின் நடனம், கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

குருதி வங்கி மருத்துவர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா பொது மருத்துவமனைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன், பம்பைமடு இறை இரக்க ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஜெஸ்லி ஜெகானநந்தன், குருதி வங்கி மருத்துவர்கள், உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் 5 படகுகள் நாடு திரும்பின

யாழ்ப்பாணம், ஒக். 1
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப் பட்டிருந்த இந்திய மீனவர்களின் படகுகளில் முதற் கட்டமாக 7 படகுகள் நேற்று எடுத்துச் செல்லப்பட் டன. அவற்றில் 5 தமிழகத்தைச் சென்றடைந்தன. ஒரு படகு பழுது காரணமாக கச்சதீவில் நிறுத்தப் பட்டுள்ளது. மற்றையது காலநிலை காரணமாக மீண்டும் காரைநகருக்கே திருப்பிக் கொண்டு வரப் பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து எடுத்துச் செல்ல 42 படகுக ளுக்கு இலங்கை அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதனால் அந்தப் படகுகளை எடுத்துச் செல்லும் நடவடிக்கையில் இந்திய மீனவர்கள் ஈடுபட்டுள்ள னர். முதற்கட்டமாக 7 படகுகளை அவர்கள் நேற்று எடுத்துச் சென்றனர்.

மிகுதிப் படகுகளை எடுத்துச் செல்லும்நோக்கில் மேலும் 2 குழுக்கள் இலங்கை வந்துள்ளன. அதில் ஒரு குழு காரைநகரிலும் மற்றையது மன்னாரிலும் உள்ள தமது படகுகளை எடுத்துச் செல்லவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு நீதி மன்ற உத்தரவில் யாழ்ப்பாணத்தில் படகுகள் தடுத் துவைக்கப்பட்டுள்ளன. அவற்றில் அனுமதிக்கப் பட்ட படகுகளை மீட்டுச் செல்ல இந்திய மீனவர் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தது. அந்தக் குழுவே காரைநகரில் உள்ள 7 படகுகளில் 5 படகுகளை தமிழகத்துக்குக் கொண்டு சென்றுள் ளது. (வ-4.8)

# சமூக சேவையாளர் கந்தவேள் மறைவு



சுயாதீன ஊடகவிய லாளரும் சிறந்த சமூக சேவையாள ருமாகிய கந்தர் விசு வலிங்கம் கந்த வேள் நேற்றுமுன்தி னம் இறைபதம் எய்தினார்.

லேக் ஹவுஸ் வெளி யீடுகளின் யாழ்ப்பா ணத்துக்கான செய் தியாளராகக் கடமையாற்றிவந்த அவர் சித்த ஆயுள் வேதவைத் தியரும்கூட. நோயாளர்களின் உரிமை கள் பாதுகாப்பு மக்கள் இயக்கத்தின் யாழ். மாவட் டச் செயலாளராகவும் யாழ். மாவட்ட மூத்தோர் அவையின் நிறுவக உறுப்பினர்களில் ஒருவராக வும் குடும்பநல துணையாளராகவும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணக் கிளையின் முன்னாள் செயலாளராகவும் மக்கள் தொண்டாற்றி யவர் இவர்.

அவர் தனது 75 வயதில் இறை பதம் அடைந்தார். அவர் தனது மனைவி மற்றும் மூன்று பிள்ளைகளைத் தவிக்கவிட்டு மறைந்தார். (உ)

# சிந்தாத்திரை மாதா கொடியிறக்கம்

யாழ்ப்பாணம், ஒக். 1
வேலணை சாட்டி புனித சிந்தாத்திரை மாதா யாத் திரைத் தலத்தில் கொடிமரம் இறக்கும் வழிபாடு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறும்.

வருடாவருடம் நடைபெறும் இந்தப் பூசை வழிபாட் டில் யாழ்ப்பாணத்தின் பல பாகங்களிலும் இருந்து கத்தோலிக்க மக்கள் முக்கியம் கொடுத்து பங்கு பற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ய-51)

# வேலைகளில் இணைவதற்கு பின்னடிக்கும் இளைஞர்கள்

## வெளிநாட்டுப் பணமும் ஒரு காரணம் என சரவணபவன் எம்.பி. சுட்டிக்காட்டு



யாழ்ப்பாணம், ஒக்.1
வடக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான இளைஞர்கள் வேலைவாய்ப்புகளை நாடிச் செல்லும் தன்மை குறைந்து வருகின்றது. வெளிநாடுகளில் இருந்து உறவினர்களால் அனுப்பப்படும் பணமும் அதற்கு ஓர் காரணமாக உள் ளது. இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

உதயன் பத்திரிகை நிறுவனத்தில் நேற்று வாணி விழா நிகழ்வுகள் நடைபெற்றன. அதில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் இளைஞர்கள் தொழில் முயற்சிகளில் பெரும் பின்னடைவில் உள்ளனர். அதற்கு உறவினர்களால் வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணம் முக்கிய காரணமாக உள்ளது. கையில் பணம் புரள்வதால் உழைக்க வேண்டும் என்ற எண்ணம் அவர் களிடத்தில் இல்லாது போகின்றது.

தற்போது பெண்களே அதிகம் வேலைக்குச் செல்லும் தன்மை அதிகரித்துள்ளது. பணியிடங்களில் அவர்களின் முன்னேற்றம் அதிகரித்துள்ளது. இந்த நிலமை தொடருமா னால் பத்தாண்டுகளில் மகளிர் தினம் போன்று ஆண்கள் ஒரு தினம் கொண்டாட வேண்டிய நிலமை ஏற்படும்.

இளைஞர்கள் வேலைவாய்ப்புகளில் இணைந்து கொள்ள ஆர்வம் காட்ட வேண்டும். அரசு தற்போது வெளிநாட்டு பணியாளர்களை இங்கு பணியில் ஈடுபடுத்துவதற்கான ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடவுள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள தொழில் தருநர்கள் பெரும் பணியாளர் பற்றாக்குறைகளை எதிர்நோக்கியுள்ள நிலை யில், எதிர்காலத்தில் வெளிநாட்டு பணியாளர்களை அவர் கள் பணிக்கு அமர்த்தும் சூழ்நிலை ஏற்பட்டாலும் ஆச்சரி யப்படுவதற்கில்லை. இதனால் பாதிக்கப்படப் போவது இளைஞர்களே. இந்தந் சூழ்நிலைகளை உணர்ந்து இளைஞர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும் - என்றார். (ற-8)

# ஒக்ரோபர் புரட்சியும் உலக இலக்கியமும்

யாழ்ப்பாணம், ஒக். 1
ஒக்ரோபர் புரட்சியின் நூற் றாண்டை முன்னெடுக்கும் முக மாக (1917 - 2017) தேசிய கலை இலக்கியப் பேரவை நடத்தும் கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் 6 ஆவது அமர்வு இன்று ஞாயிற் றுக்கிழமை பி.ப 4 மணிக்கு கே. கே.எஸ். சாலை கொக்குவில் சந்தி யில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

"ஒக்ரோபர் புரட்சியும் உலக இலக் கியமும்" என்ற தலைப்பிலான இந்தத் தொடர் பிரபல எழுத்தாளர் ஐ. சாந்தன் அவர்களின் தலைமை யில் இடம்பெறவுள்ளது. ஆய்வு ரையை பேராசிரியர் சி. சிவசேகரம் வழங்கவுள்ளார். தொடர்ந்து கலந் துரையாடல் இடம்பெறும். கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவ ரையும் இந்த ஆய்வரங்கில் கலந் துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் கேட்டுள் ளனர். (4)

# வாள்வெட்டுச் சம்பவம்: நால்வர் கைது

கொடிகாமம் கச்சாய் தெற்குப் பகுதியில் அண் மையில் நடத்தப்பட்ட வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலும் நால்வரை நேற்றுக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 24 ஆம் திகதி இரவு கொடிகாமம் கச் சாய் சாலையில் இடம்பெற்ற மோட்டார் சைக் கிள் விபத்து. அதனையடுத்து இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் என்பவை தொடர்பாக நீதிவானின் பணிப்பின் பேரில் இந்த நால்வ ரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக் கப்பட்டது. மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து யாழ்.போதனா மருத்துவம னையிலிருந்து திரும்பிய இருவரும் கடந்த ஆகஸ்ட் மாதம் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக் குத் தோற்றிய மாணவர்கள் இருவருமாக நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் அந்தப் பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் குழுப் புகைப்ப டம் எடுத்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்ப டுகிறது.

வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பாக ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற் படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2,9)

நாட்டின் பிரசித்தி பெற்ற நிறுவனத்தில்

வேலைவாய்ப்பு

லாஃஸ் கார் கெயார் நிறுவனத்துக்கு யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படும் சேவை நிலையத்தில் கீழ்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு பயிற்றப்பட்ட / பயிற்றப்படாத தொழிலா ளர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

- அதிகாரிகள்
- சேவை / தொழில்நுட்ப மேற்பார்வையாளர்கள்
- அனுபவம் / அனுபவமற்ற வாகனம் கழுவுபவர்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள்.

உயர்ந்த சம்பளம், கவர்ச்சிகரமான ஊக்குவிப்புக்கள், போக்கு வரத்து கொடுப்பனவுகள், உணவுக் கொடுப்பனவுகள், இலவச தங்குமிட வசதி, வைத்திய வசதி, காப்புறுதியுடன் உயர்ந்த தொழில்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :
லாஃஸ்கார்கெயார் இல. 101, மாயா அவனியூ, கொழும்பு - 06
எங்களுடன் தொடர்புகொள்ள அழையுங்கள்:
A. பரமேஸ்வரன் 0777 900 326

## மரண அறிவித்தல்

# சுப்பிரமணியம் சிவலோகநாதன்

*(சொக்கர் சிவா முன்னாள் சாரதி, த பினான்ஸ் கொம்பனி லிமிட்டட்)*

கலைவாணி வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட சுப்பிரமணியம் சிவலோகநாதன் நேற்று (30.09.2017)சனிக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங் கள் பின்னர் அறியத்தரப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

**கலைவாணி வீதி,**
**கோண்டாவில் வடக்கு,**
**கோண்டாவில்.0212227741**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# சுப்பிரமணியம் மோகனசெல்வம்



பெரியவிளானைப் பிறப்பிடமா கவும் ஆவரங்காலை வசிப்பிடமா கவும் சங்கானை காளிகோவிலடி யை தற்போதைய வசிப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் மோகன செல்வம் 28.09.2017 அன்று கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான சுப்பிரமணியம் - இராசம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ் சென்றவர்களான சபாவதி - வள்ளி யம்மா தம்பதியரின் மருமகனும் மகேஸ்வரியின் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்த சாமி, மகேஸ்வரி மற்றும் மகா தேவி, தனலட்சுமி (கனடா), காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், அமிர்த லிங்கம் மற்றும் பேபி சறோஜினி, கனகராணி (பிரான்ஸ்), தேவநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மோகனேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ் சென்ற விஜயகுமார் மற்றும் மோகனேஸ்வரன் (லண்டன்), இராஜேஸ்வ ரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அரசரட்ணம் (பிரான்ஸ்), கேமாவதி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் அஸ்வினி, அபிராமி, அஜித் (பிரான்ஸ்), ஜிகாந்தன், ஜனார்த்தன், நிறோசன், நிதுஷன், ஆத்திகா, அக்ஷயா, நிவேதா, அபர்னயா, அபினாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2017) திங்கட் கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தக னக்கிரியைக்காக பெரியவிளான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்படைத் தளபதி ட்ராவிஸுக்கு ஒரு மாதம் மட்டுமே சேவை நீடிப்பு

## மைத்திரியின் முடிவில் பலருக்கும் ஆச்சரியம்

கொழும்பு, ஒக். 1

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவுக்கு, ஒரு மாத சேவை நீடிப்பு மாத்திரமே அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டுள்ளது. இது பாதுகாப்பு வட்டாரங்களில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஒகஸ்ட் மாதம் 22ஆம் திகதி கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்ட வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையா, கடந்த 26ஆம் திகதியுடன் 55 வயதை நிறைவு செய்துள்ளார்.

இவருக்கு ஒரு மாத சேவை நீடிப்பு மாத்திரமே அரச தலைவர் மைத்திரிபாலவால் வழங்கப்பட்டுள்ளது. இந்த ஒரு மாத சேவை நீடிப்பு வரும் ஒக்ரோபர் 26ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

1973ஆம் ஆண்டுக்குப் பின்னர், கடற்படைத் தளபதிகளாக இருந்த அனைவருமே, குறைந்தபட்சம் ஒரு ஆண்டு இந்தப் பதவியில் இருந்துள்ளனர். மிக அண்மையில், வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவுக்கு முன்னதாக கடற்படைத் தளபதியாக இருந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன, 2 ஆண்டுகள் 1 மாதம் கடற்படைத் தளபதியாக பதவியில் இருந்தார். இந்தக் காலகட்டத்தில் அவருக்கு மூன்று தடவைகள் சேவை நீடிப்புகள் வழங்கப்பட்டன.

பாதுகாப்பு அமைச்சில் உள்ள மூத்த அதிகாரி ஒருவர் வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவை உடனடியாக கடற்படைத் தளபதி பதவியில் இருந்து ஓய்வுபெற வைப்பதில் உறுதியாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ட்ராவிஸ் சின்னையாக ஓய்வு பெற்றால், அம்பலங்கொடவைச் சேர்ந்த கடற்படை அதிகாரி ஒருவர் அந்தப் பதவியை ஏற்றுக் கொள்வார். சின்னையாவை ஓய்வுபெற வைக்க விரும்பும் பாதுகாப்பு அமைச்சின் மூத்த அதிகாரியும் அதே அம்பலங்கொடவைச் சேர்ந்தவராவார். கடற்படை அதிகாரிக்கு அம்பலங்கொடவைச் சேர்ந்த அமைச்சர் சரத் பொன்சேகாவின் ஆதரவும் இருப்பதாக கூறப்படுகிறது.

21ஆவது கடற்படைத் தளபதியாக பொறுப்பேற்ற வைஸ் அட்மிரல் ட்ராவிஸ் சின்னையாவுக்கு இன்னமும், அதிகாரபூர்வ இல்லமோ, வாகனங்களோ வழங்கப்படவில்லை என்றும் கூறப்படுகிறது. கடற்படைத் தளபதியின் அதிகாரபூர்வ இல்லம், மற்றும் வாகனங்களை முன்னைய கடற்படைத் தளபதியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன இன்னமும் ஒப்படைக்கவில்லை. (வ-5)

# இலங்கையில் முதலீடுகள் செய்ய அமெரிக்காவுக்கு இதுவே தருணம்

## அந்த நாட்டு துணைத் தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 1

அமெரிக்க நிறுவனங்கள் தமது முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்வதற்கு இதுவே சரியான நேரம் என்று கொழும்பில் உள்ள அமெரிக்கத் துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சம்மேளனத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இருதரப்பு வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான வழிகளில் அமெரிக்க அரசு ஈடுபட்டுள்ளது. அமெரிக்காவும் இலங்கையும் மிக நெருங்கிய நட்பு நாடுகளாக - கூட்டாளிகளாக மாறவுள்ளன. இன்னும் கூடுதலான வர்த்தகத்தை இருநாடுகளும் இணைந்து மேற்கொள்ள முடியும்.

அமெரிக்காவின் உதவி வர்த்தகப் பிரதிநிதி மார்க் லின்ஸ்கொட் இலங்கை வந்திருந்த போது, வர்த்தகத்தை அதிகரிப்பதற்கான சூழலை முன்னேற்றுவதற்கான கொள்கைகளை நடைமுறைப்படுத்துமாறு அரசிடம் கேட்டுள்ளார்.

இலங்கை 2.8 பில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்கிறது. ஆனால், 268 மில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களைத் தான் அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்கிறது - என்றார். (வ-5)

# இலங்கை மீது தலையிடும் நாடுகளுக்குச் சீனா புத்திமதி

## மக்களுக்கு உதவவேண்டுமாம்

கொழும்பு, ஒக். 1

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதற்கான வாய்ப்புகளை ஒரு கருவியாக பயன்படுத்துவதற்குப் பதிலாக, இலங்கையின் சாதாரண பொதுமக்களுக்கு உதவுவதில் ஏனைய வெளிநாடுகள் கவனம் செலுத்த முடியும் என்று சீனத் தூதுவர் ஷி ஷி யான்லியாங் தெரிவித்தார்.

"இலங்கைக்குப் பெரியளவில் கொடைகளை வழங்கும் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். இதில் சுகாதாரத் துறை முக்கியமானதாக உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படும் கொடைகளில் மூன்றில் ஒரு பங்கு இதற்கே வழங்கப்படுகிறது. சீனாவின் உதவிகள் வெளிப்படையானவை. மக்களின் வாழ்வாதாரத்திலேயே முக்கிய கவனம் செலுத்துகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-5)

# இலங்கையின் கடலுணவுகளை அமெ. தவிர்க்கும் நிலை வரலாம்

## கடற்றொழில் அமைச்சர் அச்சம்

கொழும்பு, ஒக். 1

இலங்கையிலிருந்து கடலுணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு அமெரிக்கா தடைவிதிக்கும் நிலை ஏற்படலாம் என்று கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் மகிந்த அமரவீர எச்சரித்துள்ளார்.

பாரம்பரியமாக கையாளப்படும் மீன்பிடி முறையில் டொல்பின் மீன்கள் அகப்படுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்காவிடின், அமெரிக்காவின் கடலுணவு ஏற்றுமதித் தடையை எதிர்கொள்ள நேரிடும்.

டொல்பின்கள் வலைகளில் சிக்குவது மற்றும் கொல்லப்படுவதை தடுப்பதற்கு பொருத்தமான பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும். இல்லாவிடின் அமெரிக்காவின் ஏற்றுமதித் தடையை எதிர்கொள்ளக் கூடிய ஆபத்து உருவாகும்.

பன்னாட்டு மீன்பிடிச் சட்டத்தின் கீழ் டொல்பின்களைப் பிடிப்பது மற்றும் அதனைக் கொல்வது சட்டவிரோதமாகும்.

ஏனைய நாடுகளில் டொல்பின்கள் அகப்படுவது கொல்லப்படுவதை தடுப்பதற்குப் பயன்படுத்தும் கருவிகளை, உள்ளூர் மீனவர்களுக்குப் பெற்றுக் கொடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். (வ-5)



# மன்னார் ஆயரை நேற்று சந்தித்தார் அமைச்சர் வஜிர

மன்னார், ஒக்.1

மன்னார் மறைமாவட்ட ஆயர் ஜோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையை உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன சந்தித்து ஆசி பெற்றார்.

இந்தச் சந்திப்பு மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் நடைபெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதி அவைத்தலைவருமான செல்வம் அடைக்கலநாதனும் கலந்து கொண்டார்.

சந்திப்பின் போது சமகால அரசியல் நிலவரங்கள், மாவட்டத்தில் உள்ள பல்வேறு பிரச்சினைகள், தடைப்பட்டுள்ள அபிவிருத்தி பணிகள் உள்ளிட்டவை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டன.

இந்தச் சந்திப்பில் மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அன்ரனி விக்டர் சோசை அடிகளாரும் கலந்துகொண்டார். (வ- 56)


எங்கள் அன்புத் தெய்வத்திற்குநாட்கள் 31

தோற்றம்
01 . 01 . 1928




மறைவு
29 . 08 . 2017

அமரர் பராசத்தி நாகரட்ணம்

நாட்கள் 31 ஆனதுவோ !
இன்றுபோல் உள்ளதுஉங்கள் மொழிமுகம்
எங்களைவரவேற்றது..........
இளமையில் அழகுமுதுமைஅறிவு
முதுமையில் அறிவுஉங்கள் புதுமைஅறிவு
கார்மேகம் சொரிந்துஉங்களைவிடைகொடுத்தது.
வான் உயரஉங்கள் புகழ் பூத்தது.
வழங்கிடுவீர் உங்கள் ஆசிகள் என்றும் எமக்கு.........

"பராசத்தி இல்லம்"
அப்பையாஒழுங்கைகேணியடி,
கொக்குவில் மேற்கு.

குடும்பத்தினர்.

உதயன் பணிமனையில் நேற்று வாணி விழா நடைபெற்றது. உதயன் குழு மத்தின் தலைவர் ஈ.சரவணபவன் நிகழ்வுகளில் கலந்து கொண்டார். சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து, கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. நிகழ்வில் பணியாளர்கள், ஊடகக் கற்கை மாணவர்களும் கலந்து கொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

ISO 9001:2008 CERTIFIED

எந்த மாற்று வழியுமில்லை British Way

## British Way® English Academy

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நுகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

### இரண்டு மாத காலப் பயிற்சி — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

10, October, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

### வார இறுதி வகுப்புகள் — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

### IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

### KIDS' Class — Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way® English Academy

Contact (Jaffna Branch) : 021 300 55 55
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

## மரண அறிவித்தல்



பிறப்பு 24 . 04 . 1946

இறப்பு 23 . 09 . 2017

### முருகேசு ஜெயரட்ணம்

(முன்னாள் உரிமையாளர் - யாழ் ஸ்ரான்லி வீதி சுபமாலா மோட்டார்ஸ்)

யாழ். கந்தர்மடம் அன்னசத்திரலேனைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட முருகேசு ஜெயரட்ணம் 23.09.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான முருகேசு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான சிவகுரு - தையல்நாயகி தம்பதிகளின் மருமகனும், கமலேஸ்வரி (தேவி) இன் அன்புக் கணவரும், ராஜினி(ஜேர்மனி), சுபாசினி(கனடா), சதீஸ்வரன் (சதீஸ் - கனடா), தவராஜேஸ்வரன்(தவம்- கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற தங்கரெட்ணம் மற்றும் மங்கையற்கரசி, குணரெட்ணம்(நியூசிலாந்து), காலஞ்சென்றவர்களான விஜயரெட்ணம், சண்முகரெட்ணம் மற்றும் பஞ்சரெட்ணம்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிமோகன் (ஜேர்மனி), கண்ணன் (கனடா), துவாரகா(கனடா), பிருந்தாகௌரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும் சரஸ்வதிமனோகரி(கனடா), கமலாதேவி (கனடா), ராசமனோகரி (கனடா), கோகிலமனோகரி (கனடா), சிவமனோகரன்(கனடா), ஹரிமனோகரன் (கனடா), சத்தியகுமாரி (கனடா), சிவமனோகரி (கனடா), திலகமனோகரி (கனடா), கலாரஞ்சனி (கனடா), கலைவாணி (கனடா), காலஞ்சென்ற வடிவேலு மற்றும் விமலாவதி (இலங்கை), கௌரி (நியூசிலாந்து), இந்திரமலர் (கனடா), நவரட்ணராஜா (இலங்கை) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கௌசிக், நவீனன், அபர்ணா மிலோன், அனோஜன், ஓவியா, வருண், வக்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர் மனைவி, பிள்ளைகள்**

**சதீஸ்(கனடா)+163 720 05018**
**தவம்(கனடா)+164 765 53933**

## மரண அறிவித்தல்



பிறப்பு 05 . 09 . 1922

இறப்பு 29 . 09 . 2017

### திருமதி சரஸ்வதி கிரிஷ்ணர்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம், கந்தரோடை, ஐக்கிய அமெரிக்கா Fort Myers, Florida ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி கிரிஷ்ணர் 29.09.2017 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற கிரிஷ்ணர் (இளைப்பாறிய கூட்டுறவுப் பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் (Florida), பாலச்சந்திரன் (Florida), சிவானந்தன் (கனடா), சர்வானந்தன் (கனடா), தனலட்சுமி (Florida) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற கண்மணி வேலுப்பிள்ளை (மலேசியா) அவர்களின் அன்புச் சகோதரியும், தேவகாந்தன் (Florida), பத்மாசினி (Florida), ராசாம்பாள் (Florida), கிரிஜா (கனடா), ஜமுனா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், பாலமுரளி, வித்தியா, அனுஜா, கிருசாந்தி, ஜிலோஜினி, ரேணுகா, அம்பிகா, கிஷானி, கிஷோர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சோனாலி, வசந்தன், அமலா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**பாலசுப்பிரமணியம் - ஐக்கிய அமெரிக்கா - +195 485 63375,**
**பாலச்சந்திரன் - ஐக்கிய அமெரிக்கா - +123 928 13430,**
**சிவானந்தன் - கனடா - +1780 263 9661,**
**தனலட்சுமி - ஐக்கிய அமெரிக்கா - +123 985 02897,**
**சர்வானந்தன் - கனடா - +164 728 08324**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

யாழ். போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமைபுரியும் பாலசுப்பிரமணியம் கரன் அவர்களின் அன்பு மனைவி

**திருமதி அமுதகௌரி கரன்**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**தாதியர் நலன்புரிக்கூட்டுறவுச் சங்கம், யாழ்ப்பாணம்.**



Crompton Greaves

Smart solutions.
Strong relationships.

அதி சிறந்த தொழில் துறை
மோட்டார்கள்

குறைந்த சீரான மின்சார பாவனை

பொறியியல் தொழில் துறை சார்ந்த பிரயோகங்களுக்கு அதி வினைத்திறன் வழங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளன



Apex Series

விஷேட அம்சங்கள்
- குறைந்த செலவில் அதி உயர் வினைத்திறன்.
- குறைவான அதிர்வும் சத்தமும்.
- அதி கூடிய சுழற்சியும் மிருதுவான வேக மாற்றமும்.
- VFD பிரயோகத்துக்கு உகந்தது.

ஏனைய மோட்டார்கள் :

♦ FDU/VFX இயக்கி முறையமைப்பு (DRIVE SYSTEM)
♦ ஒருங்கிணைந்த மின் விநியோக முறை ♦ இழுவை (Traction) மோட்டார்
♦ LV மோட்டார் (தீ எதிர்ப்பு வகை) ♦ குறைந்த இயக்க வன்மை மோட்டார்
♦ பெரிய MV மோட்டார் ♦ DC மோட்டார் ♦ மின் ஒத்தியங்கும் ஜெனரேடர்
♦ LV மோட்டார் ♦ LV மின் மாற்றிகள் (ALTERNATOR)
♦ மின் சக்தி சேமிக்கும் MV மோட்டார்

ரூபா.15,500/=முதல்

தொடர்புகளுக்கு: திரு.வே.காண்டீபன்
கைத்தொலைபேசி: +94 772514914 மின்னஞ்சல்: KaandeebanV@rochegroup.lk

உத்தியோகபூர்வ விநியோகத்தர்

Rotax Limited

332,காலி வீதி, கொழும்பு 04
தொலைபேசி: +94 115 574000 / 112 556750
தொலைநகல்: +94 112 587286
மின்னஞ்சல்: rtx@rochegroup.lk
இணையம்: www.rochegroup.lk


## மரண அறிவித்தல்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 06 . 1945 | 30 . 09 . 2017 |

**நடராஜா தங்கவேலு**

*(முன்னாள் உதவி சுங்க அத்தியட்சகர், இலகடி - காரைநகர், வெள்ளவத்தை, கொழும்பு)*

காரைநகர், பெரியமணலைப் பிறப்பிடமாகவும் இலகடி, காரைநகர், வெள்ளவத்தை, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய உதவி சுங்க அத்தியட்சகர்நடராஜாதங்கவேலு(30.09.2017)சனிக்கிழமை காரைநகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் புஸ்பவதியின் அன்புக் கணவரும் சந்திரகுமார் (லண்டன்), சசிகலா (பிரான்ஸ்), சந்திரகலா (கொழும்பு), புஸ்பகலா, ஜெயகலா, நந்தகுமார் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் யோகேஸ்வரன் (பிரான்ஸ்), சற்குணானந்தன் (பொறியியலாளர் கொழும்பு), கௌரி (லண்டன்), சிவரூபன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் ஹரிணி, சாரங்கன் ஆகியோரின்அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2017) ஞாயிற்றுக்கிழமைபிற்பகல்ஒருமணிக்குஇலகடி, காரைநகரில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகசாம்பலோடைஇந்துமயானத்திற்குஎடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இலகடி,
காரைநகர்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**

### தேவை

யாழ். சுண்டுக்குழி பகுதியில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டு பணிப்பெண் தேவை. **தொடர்பு - 076 423 3119**

### தேவை

கொழும்பில் இயங்கும் Film & Video Production Company க்கு உதவியாள் தேவை.

தொடர்புகளுக்கு:
**077 8768181**

### விற்பனைக்கு

ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் (சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில்) இரண்டு படுக்கையறை, இரண்டு குளியல் அறைகளுடன்கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. **தொடர்பு-077 606 6019**

### வாடகைக்கு/ குத்தகைக்கு

ஐந்து சந்திக்கு அருகில் நாவலர் றோட்டில் முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட மாடி வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு. நிறுவனங்கள்/உத்தியோகஸ்தர்கள் விரும்பத்தக்கது. **தொடர்பு-077 1476932**

### வாடகைக்கு (Peacock Rest House)

அமைதியான இடத்தில் புதிய மாபிளிடப்பட்ட A\C ,Non A\C அறைகளும் குடும்பமாக தங்க கூடிய சமையலறை மற்றும் தளபாட வசதிகளுடன் புதிய பங்களா சகல கொண்டாட்டங்களுக்கும் நாள் வாடகைக்கு,மாத வாடகைக்கு விடப்படும்.
**077 810 5102, 077 3013659**

### காணி விற்பனைக்கு

Navalar Road இல் கனகரத்தினம் மகா வித்தியாலயத்துக்கு அருகில் 3 பரப்பு காணியும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்துக்கு அருகில் கொக்குவில் பிரம்படி வீதியில் 3 பரப்புக்காணியும் விற்பனைக்குண்டு.
**தொடர்பு : 077 305 8782, 076 6972 287**


FM-94.0, 97.9 மற்றும்
FM -103.1 அலைவரிசையில்



## உடனடி வேலைவாய்ப்பு

வெகு விரைவில் நாடு முழுவதிலும் ஆரம்பிக்கப்பட
இருக்கும் தனியார் வானொலி சேவையில் இணைந்து பணியாற்ற அரிய சந்தர்ப்பம்

*வானொலி செய்தி ஆசிரியர்கள் (ஆண் / பெண் - அனுபவம்உள்ளவர்கள்)
*வானொலி செய்தி வாசிப்பாளர்கள் (ஆண் / பெண் 35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
*வானொலி அறிவிப்பாளர்கள் (ஆண் /பெண் 35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
*விற்பனை அதிகாரிகள் (ஆண் / பெண் 35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
*பிராந்திய செய்தி நிருபர் (ஆண் / பெண் 40 வயதுக்கு உட்பட்டவர்கள்)
*விரிவாக்கல் அதிகாரிகள் ( ஆண்கள் 35 வயதுக்கு உட்பட்டவர்கள்)
*வரவேற்பாளர் ( பெண் 28 வயதுக்கு உட்பட்டவர்கள்)
*காரியதரிசி ( பெண் 25 வயதுக்கு உட்பட்டவர்கள்)
*தட்டச்சாளர் (ஆண் / பெண் தமிழ், சிங்களம், ஆங்கிலம்)



மும்மொழிகளிலும் தட்டச்சு செய்யக்கூடியவர்கள்
30 வயதுக்கு உட்பட்டவர்கள்

உங்கள் சுயவிவரக்கோவையை ஒக்டோபர் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்புங்கள்.

TRYMAS MEDIA NETWORK (PVT) LTD. No.142/21 Vijayakumarathunga Mawatha, Kirulapana. Email - sam@trymasmedia.com

வானலையில் புதிய சரித்திரம் படைக்க தயாராகுங்கள்


| 09 ஆம் வருட நினைவஞ்சலியும் | 08 ஆம் வருட 06 ஆம் மாத நினைவஞ்சலியும் |
|---|---|
| தோற்றம் 09 . 06 . 1947 — மறைவு 11 . 10 . 2008 | தோற்றம் 16 . 05 . 1954 — மறைவு 10 . 04 . 2009 |





**அமரர் நடராசா அற்புதானந்தராசா**

**அமரர் சோதிராணி சதானந்தராஜ்**

திதி - ஏகாதசி

சோகத்தின் சுமையதனை சுமக்கின்றோம் இதயமதில்
பாசத்தின் உறவுகள் நாம் பரிதவித்து வாடுகின்றோம்
நேசத்தை மறந்தது ஏன்? நீங்கள் நெடுந்தூரம் சென்று
ஒன்பது ஆண்டுகள் ஆயிற்றே...!

கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,
உரும்பிராய் வடக்கு

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு
18.03.1959

இறப்பு
01.09.2017

கடந்த (01.09.2017) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**விநாசித்தம்பி சிவலிங்கம்**

அவர்களின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை இன்று (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோட்டை விநாயகர் வீதி, நாவலடி, அரியாலை.

**குடும்பத்தினர்.**

## பல்கலையில் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மொழிமாற்றுக் கற்கைப் பிரிவின் ஏற்பாட்டில் கலாசார நிகழ்வும், கண்காட்சி நிகழ்வும் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். கண்காட்சி நிகழ்வு புதிய கலைப்பிரிவு மண்டபத்திலும், கலாசார நிகழ்வு பிற்பகல் 2.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கிலும் நடைபெறும். முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசியர் ஆர். விக்னேஷ்வரன் கலந்து கொள்வார். விசேட நிகழ்வாக நாடகத்துறை மாணவர்களின் அன்ரன் செக்கோவின் 'தான் விரும்பாத் தியாகி' நாடக ஆற்றுகை இடம்பெறும். (ய-ரி)

## சின்மயாமிசனில் வாணிவிழா

யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ்ப்பாணம் சின்மயாமிசனில் இன்று ஞாயிற்றுக்கிழமை கிழமை மாலை 5 மணி முதல் 7 மணிவரை வாணி விழா சிறப்பு வழிபாடு நடைபெறும். இவ்விழாவில், சின்மய பாலவிஹார் பிரிவினரின் கலை நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

### தேவை

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு தையல் வேலை தெரிந்தவர்கள் தேவை. (ஆண்/பெண்)
**தொடர்பு : 077 165 9845**

### வீடு விற்பனைக்கு

பெரியமாவடி சாவகச்சேரியில் காணியுடன் கூடிய வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு - 077 8617538, 076 708 5518**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல்கைதிகளின் கோரிக்கையை மனிதாபிமானத்துடன் பரிசீலிக்கவேண்டும்

## சிவசக்தி ஆனந்தன் எம்.பி கோரிக்கை

வவுனியா, ஒக்.1
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கைதிகளில் மூவர், வவுனியா நீதிமன்றத்திலேயே தமது வழக்குகள் விசாரிக்கப்பட வேண்டும் எனக்கோரி உணவொறுப்பில் ஈடுபட்டுள்ளனர். தாம் நீண்டகாலமாக நீதி விசாரணைகளின்றித் தடுத்து வைக்கப்பட்டிருப்பதனால், தங்களை பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யவேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். இவர்களின் கோரிக்கைகளை மனிதாபிமானத்துடன் அரசு பரிசீலனை செய்யவேண்டும் என்று வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.



வவுனியாவில் தமது வழக்குகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து ஆறாவது நாளாக 3 தமிழ் அரசியல்கைதிகள் போராடி வருகின்றார்கள். அவர்களையும் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று நேரில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
மூன்று அரசியல்கைதிகள், தங்களுடைய வழக்குகளை வவுனியாவிலேயே விசாரிக்கவேண்டும் எனக் கோரியும், தங்களை சாவுத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுடன் வைத்திருக்கக் கூடாது எனக் கோரியும் ஆறாவது நாளாக உணவொறுப்பில் இருந்து வருகின்றார்கள். அவர்களில் ஒருவருடைய உடல்நிலை மோசமாகியிருக்கின்றது. சிறைச்சாலை மருத்துவமனையில் அவருக்குச் சிகிச்சையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களுடைய வழக்குகளை வவுனியா நீதிமன்றத்திலேயே விசாரிக்க வேண்டும். அவர்களுடைய வழக்குகள் வேறிடத்துக்கு மாற்றப்பட்டால், சிங்களம் தெரியாத அவர்கள் மொழிப் பிரச்சினைக்கும், வேறு பிரச்சினைகளுக்கும் முகம்கொடுக்க நேரிடும். எனவே அவர்களுடைய வழக்குகளை வவுனியாவில் விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அரசதலைவருக்கு கடிதம் அனுப்பியிருந்தோம். தமிழ் அரசியல்கைதிகளின் அந்தக் கோரிக்கையை ஏற்று உரிய நடவடிக்கை எடுக்குமாறு நீதி அமைச்சின் செயலாளருக்கு அரசதலைவர் கடிதம் அனுப்பியுள்ளார். அதேவேளை, தூக்குத்தண்டனை பெற்றுள்ள கைதிகளுடன் தடுத்து வைக்கப்பட்டுள்ள தம்மை வேறு இடத்துக்கு மாற்றுமாறும் அவர்கள் கோரியிருந்தனர். இவர்களுடைய கோரிக்கையை ஏற்று அவர்களை வேறிடத்துக்கு மாற்றுமாறு நீதிமன்றத்தினால் உத்தர விடப்பட்டுள்ள போதிலும், சிறைச்சாலை அதிகாரிகள் அதற்குரிய நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை. இதுகுறித்து சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்து, அவர்களை சிறைச்சாலையின் மருத்துவமனைக்கு மாற்றுமாறு கோரினேன். அந்தக் கோரிக்கை ஏற்கப்பட்டு அவர்கள் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்கள். அதேவேளை, தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை தொடர்பாக புதிய அரசோ, தமிழ் அரசியல் தலைவர்களோ, அல்லது மனித உரிமைச் செயற்பாட்டாளர்களோ, சட்டத்துறை சார்ந்த நலன்விரும்பிகளோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை. இதனால் அநுராதபுரம் சிறைச்சாலையில் உள்ளவர்களில் 16 தமிழ் அரசியல்கைதிகள் தங்கள் வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து, சிறைச்சாலையில் 6, 7 வருடங்களுக்கு மேலாக அனுபவித்துள்ள சிறைவாசகாலத்தை கழித்துக் கொண்டு தண்டனை வழங்குமாறு தாங்களாகவே முன்வந்து தெரிவித்துள்ளனர். சிறைவாசத்தைத் தொடர்ந்தும் அனுபவிக்க முடியாத நிலையில், தண்டனை பெற்றாவது வெளியில் வந்துவிட வேண்டும் என்பதற்காகவே இவர்கள் இவ்வாறு முன்வந்துள்ளனர். எனினும், இவர்களுடைய வழக்குகள் புதிய வழக்குகளைப் போலவே நடத்தப்பட்டு, முழுமையான தண்டனை வழங்கப்படும் என்றும், எந்தக் காரணத்தைக் கொண்டும் அவர்கள் அனுபவிக்கின்ற சிறைவாச காலம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்றும் அறுதியிட்டு அதிகாரிகளினால் கூறப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இதனால் அவர்கள் மிகுந்த கவலை அடைந்துள்ளார்கள். எனவே, தமிழ் அரசியல்கைதிகளின் நிலமைகள் கணக்கில் எடுக்கப்பட்டு, அவர்கள் மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்யப்படுவதற்கு சம்பந்தப்பட்டவர்களும், அரசும் முன்வர வேண்டும் -என்றுள்ளது.
(ய 21,402)

# முகாமில் வாழும் 55 பேருக்கு உறுதியுடன் கூடிய காணிகள்

## யாழ். மாவட்டச் செயலர் தகவல்



யாழ்ப்பாணம், ஒக்.1
யாழ்ப்பாணத்தில் தற்போது முகாமில் வாழும் காணி அற்றவர்களில் 55 பேருக்குக் காணிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கான காணி உறுதிகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும் 15 பேருக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. அவர்களுக்கான உறுதி விரைவில் வழங்கப்படும். இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இவர்களை விடவும் 43 பேருக்கான காணிகள் மதிப்பீட்டில் உள்ளன. அவை கிடைத்த தும் அவை உடனடியாக உரியவர்களுக்கு வழங்கப்படும். 32 காணிகள் நில அளவீட்டில் உள்ளன. அவையும் அடுத்த கட்டமாக மக்களுக்கு வழங்கப்படும். அந்த மக்கள் விரும்பும் இடத்தில் ஒரு பரப்புக்கு 2 லட்சம் ரூபா வீதம் 2 பரப்புக் காணி கொள்வனவு செய்ய முடியும். அதேவேளை, யாழ்ப்பாணத்தில் தற்போது நிலவும் வறட்சியால் தொடர்ந்தும் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகின்றது. வறட்சி உதவிகளின் இரண்டாம் கட்டம் வழங்கப்படுகின்றது. வறட்சி உதவிகளை மக்கள் தரம் , நிறை என்பனவற்றைப் பரீட்சித்துக் கொள்வனவு செய்ய முடியும். அதில் தரம் அல்லது நிறைக் குறைவு காணப்பட்டால் உடனடியாகவே முறையிடமுடியும். தீவகப் பிரதேசத்தில் ஓர் கிளையில் மேற்கொள்ளப்பட்ட விநியோக முறைகேட்டை அடுத்து உடனடியாக வழக்குத் தாக்கல் செய்யப் பணித்துள்ளேன். எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி முதல் 12ஆம் திகதிவரை உணவு உற்பத்தி வாரம் அரச தலைவர் செயலக ஏற்பாட்டில் நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்படவுள்ளது. அதில் தரிசு நிலத்தை பயிர்ச் செய்கைக்கு உட்படுத்துவது மற்றும் வருமானம் ஈட்டும் பயிர்ச் செய்கையை ஊக்குவித்தல்போன்றன அடங்கும். இந்த வேலைத்திட்டம் அரச நிறுவனங்களுக்கும்பொருந்தும் - என்றார். (ற -101)

# அர்ப்பணிப்புடன் செயற்பட விரும்புவோருக்கு தேர்தலில் போட்டியிடுவதற்கு வாய்ப்பளிப்பேன்

## அங்கஜன் எம்.பி தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.1
அர்ப்பணிப்புடன செயற்பட விரும்புபவர்களுக்கு நான் தேர்தலில் போட்டியிட வாய்ப்பளிப்பேன் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதிமூலம் கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள சனசமூக நிலையங்கள் சிலவற்றுக்கு உதவிகளை வழங்கினார். இந்த நிகழ்வுகளில்கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:
உண்மையாகவும், நேர்மையாகவும், அர்ப்பணிப்புடனும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய தேவை உள்ளது. அரசியல் ஒரு தொழில் அல்ல, அரசியலை ஒருதொழிலாகக் கருதினால் நிச்சயமாக என்னிடத்தில் இடமில்லை. மக்களுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்ற சேவை மனப்பாங்குடன் வருவோருக்கு நிச்சயமாக நான் இடமளிப்பேன். பெருமளவான இளையோர் முன்வந்துள்ள னர். குறிப்பாக செயலாற்றும் திறன்களுடைய இளைஞர்கள் முன்வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன் கட்சி ரீதியாக நீண்டகாலமாகப் பயணித்துக் கொண்டிருப்பவர்கள், நேர்மையான வழியில் பயணித்து கொண்டிருப்பவர்கள், இதுவரை எந்தவிதமான கையாடல்களும் இல்லாமல் கைச்சுத்தத்துடன் முன்வருபவர்கள் என்னுடன் இணைந்துகொள்ளலாம். வேட்பாளர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத் தேர்வுகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரும்பியவர்கள்இணைந்து கொள்ளலாம். இவ்வாறானவர்கள் முன்வருகின்ற போது எதிர்காலத்தில் லஞ்சம் அற்ற ஒரு சமூகத்தை நாம் கட்டி எழுப்ப முடியும் - என்றார்.
(ய-35)

# போதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தண்டம்

கிளிநொச்சி, ஒக்.1
மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு 21 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்று தீர்ப்பளித்தது.
பளைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மதுபோதையில் வாகனம் செலுத்தினர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இருசாரதிகள் நேற்றுமுன்தினம் பளைப் பொலிஸாரால் மன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.
இவர்களில் ஒருவர் சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மதுபோதையுடன் வாகனம் செலுத்திய குற்றத்தை ஒப்புக் கொண்டார். அவருக்கு 11ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
மற்றையவர் மதுபோதையில் வாகனம் செலுத்தியதுடன் பொலிஸார் நிறுத்துமாறு சைகை செய்தபோதும் நிறுத்தாமல் சென்றார் என்பதை ஒப்புக்கொண்டார். அவருக்கு 10,500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (ய-6)

# ரிக்கட் கேட்ட பயணியைத் தாக்கியதாக நடத்துநர் மீது பொலிஸில் முறைப்பாடு

கிளிநொச்சி, ஒக்.1
இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்றில் பற்றுச்சீட்டுக் கேட்ட பயணி ஒருவர் அந்தப்பேருந்தின்நடத்துநரால்அச்சுறுத்தப்பட்டுத் தாக்கப்பட்டார் எனப் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணம் - திருகோணமலை வழித்தடத்தில் சேவையில் ஈடுபட்டு வரும்பேருந்துஒன்றிலேயேநேற்று முன்தினம்இந்தச்சம்பவம்இடம்பெற்றுள்ளது என தெரிவிக்கப்பட்டது.
இதுதொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
யாழ்ப்பாணத்தில் இருந்து திருகோணமலை நோக்கி நேற்றுமுன்தினம் மாலைபேருந்துசென்றுள்ளது. அதில் பளை செல்வதற்காக குறித்த பயணி ஏறியுள்ளார். அவர் ஆசனத்தில் அமரும்போதுநடத்துநரிடம்பற்றுச்சீட்டுக் கேட்டுள்ளார்.
நடத்துநர் கவனிக்காமல் சென்றுள்ளார். மீண்டும்பணத்தைக்கொடுத்து பற்றுச்சீட்டுக் கேட்டுள்ளார்.
அப்போது நடத்துநர், பயணியை அச்சுறுத்தி "பளையில் எல்லாம் பேருந்து நிற்காது" என்று கூறினார். பயணியை எழுப்பிவிட்டு, கொடிகாமம் செல்லும் பெண் ஒருவரை அந்த ஆசனத்தில் அமர்த்தியுள்ளார்.
பின்பு பயணி பளை பொலிஸ் நிலையத்துக்கு தொலைபேசி மூலம் முறைப்பாடு செய்துள்ளார். இதற்குப் பின்னர் நடத்துநர் பற்றுச்சீட்டு வழங்கியுள்ளார்.
அதன்பின்னர் பஸ் நடத்துநரும், அவருடன் நின்ற நபர் ஒருவரும் பயணியைப் படம் எடுத்துள்ளனர். பயணியைப் பளை பேருந்து நிலையத்தில்இறக்காமல்200மீற்றர்தூரத்துக்கு அப்பால் (பளை எரிபொருள் நிலையத்துக்கு அப்பால்) இறக்கியுள்ளனர்.
இறங்கும்போது நடத்துநர் பயணியை கையால் தாக்கியுமுள்ளார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ய -6)

பயணியை அச்சுறுத்தி பளையில் எல்லாம் பேருந்து நிற்காது என்று கூறினார். பயணியை எழுப்பிவிட்டு, கொடிகாமம் செல்லும் பெண் ஒருவரை அந்த ஆசனத்தில் அமர்த்தியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN PRINT
Twitter : UTHAYANPRINT



## 951 போத்தல் கோடா விசுவமடுவில் மீட்பு

கிளிநொச்சி, ஒக்.1
தருமபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 951போத்தல் கோடா கைப்பற்றப்பட்டுள்ளது என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.
விசுவமடு காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகத் தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. பொலிஸ் பொறுப்பதிகாரி சத்துரங்க தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினர் காட்டுப்பகுதியில் 4 பெரல் (951போத்தல்) கோடாவைக் கைப்பற்றினர். கசிப்பு உற்பத்தி உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேகநபர்கள் தப்பிச்சென்றுள்ளனர். அவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என தருமபுரம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ய-6)

## ஒருங்கிணைப்புக் குழுவின் தீர்மானத்தை மீறி

# 210 ஏக்கர் கரும்புத் தோட்டக்காணியை தனவந்தர்களுக்கு வழங்க முயற்சி

## முன்னாள் போராளிகளுக்கு ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.1
முன்னாள் போராளிகளுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட அக்கராயன் கரும்புத்தோட்டக் காணியை இப்போது வெளியாள்களுக்கு வழங்க முயற்சிப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை யும் மீறி இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என உள்ளூர் விவசாய அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன. இந்த நடவடிக்கைக்கு வடக்கு மாகாணசபையும் ஒப்புதல் அளித்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதுதொடர்பில் உள்ளூர் விவசாய அமைப்புகள் மேலும் தெரிவித்ததாவது: அக்கராயன் பகுதியில் உள்ள கரும்புத் தோட்டத்தின் 210 ஏக்கர் நிலத்தை அப்பகுதியில் வாழும் நிலமற்ற விவசாயிகளுக்கும், முன்னாள் போராளிகளுக்கும் வழங்கவேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் தீர்மானத்தை மீறி இப்போது அவற்றைத் தனவந்தர்களிடம் வழங்க முயற்சிக்கப்படுகின்றது.
இப்பகுதி ஓர் அரச நிலமாகும். இருப்பினும் முன்னர் 90 வருடகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டு கரும்புச் செய்கை இடம்பெற்றது. போருக்குப் பின்னர் அப்பகுதியை உள்ளூர் விவசாயிகள் தமது வாழ்வாதாரத்துக்கு வழங்குமாறு கோரியிருந்தனர். இதன் அடிப்படையில் இவ்விடயம் ஒருங்கிணைப்புக் குழுவில் ஆராயப்பட்டது. அப்போது குறித்த நிலத்தை முழுமையாக முன்னாள் போராளிகளுக்கு தலா 3 ஏக்கர் வீதம் குத்தகைக்கு வழங்குவதாக இணக்கம் காணப்பட்டிருந்தது. இந்த நிலையில் தற்போது மீண்டும், முன்னர் அப்பகுதியில் கரும்புச்செய்கையில் ஈடுபட்ட நிறுவனம் அதனைக் கோருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.
கோரிக்கைக்கமைய காணியை அவர்களிடம்வழங்கமுயற்சிக்கப்படுகின்றது. இதற்கு வடக்கு மாகாணசபையும் ஒப்புதல் வழங்கியுள்ளதாக அறிகின்றோம். ஆனால், குறித்த நிறுவனத்துடன் இணைந்து தனவந்தர்கள் 19பேரும் அந்த நிலத்தைப் பெற்று அதில் கரும்புச்செய்கையை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர். எனவே, தனவந்தர்களின் பணத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்காது ஏழை விவசாயிகளினதும், முன்னாள் போராளிகளினதும் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டு அப்பகுதியை வழங்க ஆவன செய்யவேண்டும் என்றனர்.
இந்த விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச செயலாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, குறித்த நிறுவனம் தனது ஒப்பந்தப் பிரதியை வழங்கியுள்ளது.
அதேபோல் நிலமற்ற உள்ளூர் விவசாயிகள் 30பேர் ஒப்பமிட்டு அப்பகுதியை வழங்குமாறு மற்றுமோர் கோரிக்கையைச் சமர்ப்பித்துள்ளனர்.
இருப்பினும் உள்ளூர் விவசாயிகளுக்கும், முன்னாள் போராளிகளுக்குமே அப்பகுதியை வழங்கவேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் தீர்மானமும் உள்ளது.
இருப்பினும் எமது தரப்பில் இதுவரை எந்தவிதமான இறுதித் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை - என்றார். (ய-101)

## சுகாதாரப் பரிசோதகர்களின் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

யாழ்ப்பாணம், ஒக்.1
வடக்கு மாகாண பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைக்கு எதிர்வரும் புதன் கிழமை தீர்வு கிடைக்கலாம் என்று வடக்கு மாகாண பொதுச் சுகாதாரப் பரிசோதர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.
இதுபற்றி அந்தச் சங்கத்தினர் மேலும் தெரிவித்ததாவது: யாழ்ப்பாண மாநகரசபையின் ஊழியர்களுக்கான இடமாற்றம் முறையற்றது. ஆகவே நாம் போராட்டத்தில் ஈடுபட்டோம்.
பொதுமக்களின் சேவைகள் பாதிக்கப்படுவதால் போராட்டத்தைத் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். இது தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 4ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது. இதில் கொழும்பு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் சங்கம் மற்றும் இணைந்த மருத்துவசேவை, துணை மருத்துவசேவை அதிகாரிகள் கலந்துகொள்ளவுள்ளனர். இக்கலந்துரையாடலின் பின்னர் இடமாற்றம் தொடர்பான பிரச்சினைக்கு தீர்வுகள் கிடைக்கலாம் என்றனர்.
கடந்த 5 மாதங்களாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட 5 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவந்தனர்.
யாழ்ப்பாணம் மாநகர சபையில் அவர்கள் நீண்டகாலம் பணியாற்றினர். எனினும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்தே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ய-ரி)

## கைதடி அரச இல்லத்தில் முதியோர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.1
கைதடி முதியோர் இல்லத்தின் முதியோர்தின நிகழ்வுகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இல்லத்தில் ஆரம்பமாகும். தொடர்ந்து 7 ஆம் திகதி சனிக்கிழமை வரை நிகழ்வுகள் இடம்பெறும்.
இல்லத்தின் அத்தியட்சகர் ச.கிருபாகரன் தலைமையில் பிற்பகல் 2 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.
முதல்நாள் நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.
மாகாணசபையின் மகளிர் விவகார மற்றும் சமூகசேவைகள் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், மாகாண தலைமைச் செயலாளர் அ.பத்திநாதன் ஆகியோர் மதிப்புறு விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.
முதல்நாள் நிகழ்வின் சிறப்பு நிகழ்வாக கைவினைப் பொருள் கண்காட்சி திறந்துவைக்கப்படும். (ய- 17,51)



## விபத்தில் முதியவர் படுகாயம்

வவுனியா, ஒக்.1
வவுனியா வேப்பங்குளத்தில் துவிச்சக்கர வண்டியுடன் மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளாகியதில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்தார்.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. குருமன்காட்டில் இருந்து மோட்டார் சைக்கிளும் வேப்பங்குளம் 7ஆம் ஒழுங்கையை நோக்கிச் செல்ல முற்பட்ட துவிச்சக்கரவண்டியும் மோதியதில் விபத்து இடம்பெற்றது. துவிச்சக்கரவண்டியில் சென்ற கணபதிப்பிள்ளை (வயது 70) என்பவர் இதன் போது படுகாயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.
(ய - 402)

# வடக்கு மாகாண சபை அமைச்சின் ஆலோசனைக் குழுக்களில் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.1
வடக்கு மாகாணசபை அமைச்சுக்களின் ஆலோசனைக் குழு உறுப்பினர்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.
வடக்கு மாகாணசபையின் 106ஆவது அமர்வு கடந்த வியாழக்கிழமை அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்வில் சபை அறிவித்தல்களை அறிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாது: வடக்கு மாகாணசபையின் அமைச்சுகளில் அண்மையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக சில அமைச்சர்கள் ஆலோசனைக் குழுக்களில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இதனால் அவற்றில் மாற்றங்கள் செய்யவேண்டிய தேவை உள்ளது. அதன்படி அனைத்து அமைச்சுகளின் ஆலோசனைக்குழு உறுப்பினர்களிலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.
முதலமைச்சரின் அமைச்சின் ஆலோசனைக்குழுத்தலைவராக முதல்வரும், அதன் உறுப்பினர்களாக எம்.கே.சிவாஜிலிங்கம், சிராய்வா, ஏ.ஜெயதிலக, அ.புவனேஸ்வரன், க.விந்தன் மற்றும் வே.சிவயோகன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். மகளிர் விவகார அமைச்சின் ஆலோசனைக்குழுத் தலைவராக மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரனும், அதன் உறுப்பினர்களாக ஜெயசேகரம், து.ரவிகரன், அ.பரஞ்சோதி, ச.சுகிர்தன், [illegible] தன் ஆகியோரும் [illegible] டுள்ளனர். கல்வி அமைச்சின் ஆலோசனைக்குழுத் தலைவராக கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனும், அதன் உறுப்பினர்களாக ஆர்.இந்திரராஜா, இ.ஆனோல்ட், க.தர்மலிங்கம், பா.கஜதீபன், சி.தவராஜா, சி.அகிலதாஸ் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் ஆலோசனைக்குழுத் தலைவராக சுகாதார அமைச்சர் குணசீலனும், உறுப்பினர்களாக அஸ்மின், ரிப்கான் பதியுதீன், தர்மபால செனவிரட்ன, யவாகீர், வ.கமலேஸ்வரன் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர். விவசாய அமைச்சின் ஆலோசனைக் குழுத் தலைவராக விவசாய அமைச்சர் சிவநேசனும், அதன் உறுப்பினர்களாக ம.தியாகராஜா, சு.பசுபதிப்பிள்ளை, [illegible] ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர் - என்றார். (ய-8)

## வவுனியா தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிப்பரீட்சைக்கு விண்ணப்பம் கோரல்

வவுனியா, ஒக்.1
வவுனியா தொழில்நுட்பக்கல்லூரியின் 2017ஆம் ஆண்டுக்கான இறுதியாண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
பரீட்சைக்கான விண்ணப்பப்படிவத்தை அலுவலக நாட்களில் பெற்று ஒக்ரோபர் 8ஆம் திகதிக்கு முன்பாக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கல்லூரியின் அதிபர் நற்குணேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
தமிழ்மொழி மூலம் குடிசார், மின் மற்றும் இலத்திரனியல், கணிய அளவையியல் பயின்ற மாணவர்களுக்கு இவ்வாண்டு டிசம்பர்மாதம் பரீட்சை நடைபெறும்.
இந்தப் பரீட்சையே இறுதிச் சந்தர்ப்பம் என்பதனால் இதுவரை பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடையாத மாணவர்களுடன் மீள் பரீட்சைக்குத் தோற்றுமாறும் அவர் கோரியுள்ளார். (ய - 21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்த எடுப்பிலேயே எல்லாம் கிடைக்காது படிப்படியாகத்தான் முன்னேறவேண்டும்

## தமிழரசுவின் செயலர் துரைராசசிங்கம் விளக்கம்

மட்டக்களப்பு, ஒக். 1

வானூர்தி உருவாக்கப்பட்டபோது தற்போது இருக்கின்ற வானூர்தியாக உருவாக்கப்படவில்லை. காலம் செல்லச் செல்ல பல தொழில்நுட்பங்கள் மூலம் அவை மெருகூட்டப்பட்டு தற்போது ஜெட் விமானங்கள் என்ற வரையில் உருவாக்கப்பட்டுள்ளன. அதேபோன்றுதான் எந்தவொரு அரசமைப்பும் ஆக்கப்படும்போது அது முழுமையானதாக ஆக்கப்படுவதில்லை. 1977ஆம் ஆண்டு அரசமைப்புக் கூட தற்போது வரையில் 19 திருத்தங்கள் வந்திருக்கின்றன. இந்திய அரசமைப்புச் சட்டத்துக்கு 50க்கும் மேற்பட்ட திருத்தங்கள் வந்திருக்கின்றன.

இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலரும், முன்னாள் விவசாய அமைச்சருமான கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண விவசாய கால்நடை அபிவிருத்தி அமைச்சின் 21 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் புதிதாக அமைக்கப்பட்ட கால்நடை அபிவிருத்தித் திணைக்கள மட்டக்களப்பு மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் காரியாலயத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டினுடைய மிக முக்கியமான நாள்கள் இப்போது நகர்ந்து கொண்டிருக்கின்றன. நாட்டிலே ஆக்கப்பட்ட அரசமைப்புச் சட்டங்கள் எல்லாம் ஒரு கை ஓசையாக அமைக்கப்பட்ட அரசமைப்புக்களாகத்தான் இருக்கின்றன. டொனமூர் தொடக்கம் மகிந்தவால் ஆக்கப்பட்ட அரசமைப்புச் சட்டம் வரையில் இந்த நாட்டின் ஒட்டுமொத்த மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற அரசமைப்பாக அவை இருக்க வில்லை. இப்போது ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அரசமைப்புச் சட்டமானது அப்படியல்ல.

தற்போதைய அரசமைப்புக்கும் இதற்கு முன்பிருந்த அரசமைப்புக்கும் இடையிலே இருக்கின்ற வித்தியாசத்தை, வேறுபாட்டை ஒவ்வொரு அரசியல்வாதியும், ஒவ்வொரு குடிமகனும் விளங்கிக் கொள்ள வேண்டும்.



இணக்கப்பாடுகள், வேறுபாடுகளை உள்ளடக்கியதாக இடைக்கால அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது. இடைக்கால அறிக்கையை வெறுமனே தூக்கி எறிந்து விடுவது, சில சொற்களைப் பாவித்து இதனை நிராகரிப்பது என்பது என்னைப் பொறுத்தமட்டில் அறிவுடைமையான காரியமோ அல்லது இதுவரை நாங்கள் கடந்து வந்த வரலாறுகளை மனதிலே வைத்துச் செயற்படுகின்ற காரியமோ அல்ல. இது எமது தலைவர்களும் சேர்ந்து உருவாக்குகின்ற அறிக்கை. இதில் இன்னும் பல திருத்தங்களும் மேற்கொள்ளப்படலாம். அது இறுதியில் அறிக்கையாக வருகின்ற போது ஒரு தீர்மானத்தை எமது தலைவர்கள் எடுப்பார்கள். அந்தத் தீர்மானத்துக்கு நாங்கள் ஒத்துழைப்பவர்களாக ஒரே குரலிலே அவர்களோடு நின்று உழைக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இலட்சோபலெட்சம் உடன்பிறப்புகளை நாங்கள் இழந்திருக்கின்றோம். எங்களுடைய சந்ததி அப்படியே நாசமாக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நாடு ஒரு பன்மைத்துவம் கொண்ட நாடு. ஒரு குறிப்பிட்ட இனத்திற்கோ, மொழிக்கோ மாத்திரம் உரிய விடயங்கள் இங்கு கையாளப்படக் கூடாது. பன்மைத்தவம் மிக்க இந்த நாட்டிலே இங்கிருக்கின்ற விகிதாசாரத்தையும் கவனத்திற் கொண்டு இந்த நாட்டில் பெரும்பான்மை, சிறுபான்மை என்ற விடயமும் இருக்கின்றது என்பதையும் மறந்து விடாமல் சகல அடிப்படை விடயங்களையும் நாங்கள் அங்கீகரித்துத் தான் ஆக வேண்டும் என்கின்ற உலக நியதியை நாங்கள் வெறுமனே தூக்கி எறிந்து விட முடியாது.

அவற்றையெல்லாம் மனதில் வைத்து ஆக்கப்படுகின்ற அரசமைப்புச் சட்டம் நாங்கள் எமது அடைவுகளை எய்தக் கூடிய அளவுக்கு, எய்த முடியாமல் இருந்தாலும்கூட அடையக் கூடியதிலே அதியுச்சத்தை நாங்கள் அடைந்திருக்கின்றோம் என்று வருகின்ற போது நாங்கள் அனைவரும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும். வெறும் சொற்களை மாத்திரம் வைத்து விமர்சனம் செய்யக் கூடாது.

கூட்டாட்சி, ஒற்றையாட்சி என்பது தற்போது வளர்ந்த, வளர்ந்து வருகின்ற நாடுகளில் பார்க்கின்ற போது பல்வேறு விதமான கோட்பாடுகள் இருக்கின்றன. இந்த எல்லாக் கோட்பாடுகள் பற்றி கலந்து ஆலோசித்து ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற அரசமைப்புச் சட்டம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த நிலைப்பாட்டை எடுக்கின்றதோ அந்த நிலைப்பாட்டோடு சிறுபான்மை மக்களாகிய நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என்று எல்லாத் தலைவர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஒரு அரசமைப்புச் சட்டம் அடிப்படையான விடயங்களைக் கொண்டதாக இருக்கின்ற போது எமது தலைமையும் அதனை அங்கீகரிக்கின்ற போது நாங்கள் அதனை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொண்டு அதன் பின்னர் நீடித்து நிலைத்திருக்கக் கூடிய நல்லிணக்கம் இருக்கும் என்றால் நாங்கள் அதனை இன்னும் மெருகூட்டிக் கொண்டு செல்லலாம் என்பதை எல்லோரும் உணர்ந்து ஆராய்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இந்த நாட்டின் இயல்பை, வரலாற்றை அறிந்து கொண்டு யதார்த்தமான நிலமை, வடக்கு - கிழக்கின் நிலமை, குறிப்பாகக் கிழக்கின் நிலமை இங்கு நாம் முட்டிமோதிக் கொண்ட கசப்புணர்வுகளையெல்லாம் அப்பால் நகர்த்தி விட்டு எவ்வாறு நாங்கள் ஒற்றுமையாக இருக்கப் போகின்றோம் என்ற விடயங்களையெல்லாம் கவனத்திலே எடுத்துச் செயற்படவேண்டும். இடர்பட்டுக் கொண்டிருப்பவர்களை எவ்வாறு இணங்கச் செய்யலாம் என்றெல்லாம் சிந்தித்து இந்த நாட்டு மக்களுக்கு முழுமையான தீர்வினை நாங்கள் பெற்றுக் கொடுக்க முடியாவிட்டாலும் இந்த இடத்தில் இருந்து முன்னேற்றகரமான இடத்திற்கு நாங்கள் செல்லக் கூடியதான ஒரு தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்காகக் கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கின்றோம். இப்படியான கருத்துக்களுடன் எமது தலைவர்களும் சேர்ந்து ஆக்கிக் கொண்டிருக்கின்ற இந்த அரசமைப்பினை வெறுமனே நுனிப்புல் மேய்ந்தவர்களாக நாங்கள் உதறி விடக் கூடாது.

நாங்கள் கடந்து வந்த பாதையினை, இழந்த இழப்புக்களைப் பார்க்க வேண்டும். அதற்காக நாங்கள் தற்போது எந்த வகையிலே செயற்படுகின்றோம் என்பதைப் பார்க்க வேண்டும். இவற்றையெல்லாம் அடிப்படையாகக் கொண்டு புதிய அரசமைப்புச் சட்டம் ஆக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தலைமையின் கருத்தை ஏற்பவர்கள் தான் ஒழுங்கான தொண்டர்களாக இருக்க முடியும் அவ்வாறான தொண்டர்கள் தான் சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக இருக்க முடியும் - என்றார். (5)

## மிருகக்காட்சிச் சாலையை சிறுவர்கள் இலவசமாகப் பார்வையிட அனுமதி

கொழும்பு, ஒக். 1

மிருகக்காட்சிச் சாலைகளை இலவசமாகப் பார்வையிடுவதற்கான சந்தர்ப்பம் சிறுவர்களுக்கு இன்று கிடைத்துள்ளது. சிறுவர் தினத்தை முன்னிட்டு இந்த ஏற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் தேசிய வனஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் தம்மிகா மல்சிங்க தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் தெஹிவளை மிருகக் காட்சி சாலை, பின்னவல யானைகள் சரணாலயம், பின்னவல மிருகக்காட்சிசாலை ஆகியவற்றைப் பார்வையிடுவதற்குச் சிறுவர்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படவுள்ளது.

12 வயதுக்குக் குறைந்த சிறுவர்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படவுள்ளதுடன், 12 வயதுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் பாடசாலைச் சீருடையில் சமூகமளிக்குமாறும் தேசிய வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார். (5)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய அரசமைப்புடன் இடைக்கால அறிக்கையை ஒப்பிட்டுப் பரிசீலிக்கவேண்டும்

## இப்படிச் சொல்கிறார் வடக்கு அவைத் தலைவர்

யாழ்ப்பாணம், ஒக். 1

தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்து தமது அரசியல் அபிலாசைகளாக முன்வைத்து வந்த தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணயம் என்ற கோட்பாடுகள் இடைக்கால அறிக்கையில் முழுமையாக உள்ளடக்கவில்லை. எனினும் ஒட்டுமொத்தமாக இதனை நிராகரிக்காமல் முன்னேற்றங்கள் இருக்கின்றன என்று முன்னைய அரசமைப்புடன் ஒப்பிட்டுப்பரிசீலித்தல்வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்தார்.

வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வெளிவந்திருப்பது ஓர் இடைக்கால அறிக்கை மட்டும்தான் என்பதையும் சாதகமான அல்லது பாதகமான மாற்றங்கள் இதன் முன்மொழிவுகளில் ஏற்பட்டேயாகும் என்பதை இதன் பரிசீலனையின்போது கவனத்தில் கொள்ளப்படவேண்டும்.

தற்போதைய நிலையில் நடைமுறையில் உள்ள அரசமைப்பு ஏற்பாடுகளுடன் ஒப்புநோக்கி ஆராய்ந்து பார்த்தால் ஆய்வுப் பாதையில் ஓர் அம்சமாகும்.

தமிழ்த் தேசிய இனம் தொடர்ந்து தமது அரசியல் அபிலாசைகளாக முன்வைத்து வந்த தாயகம், தேசியம், தன்னாட்சி, சுய நிர்ணயம் என்ற கோட்பாடுகளை முழுமையாக உள்ளடக்கவில்லை என்ற கருத்தை பதிவுசெய்து கொள்ளவேண்டும். எனினும் ஒட்டுமொத்தமாக இதனை நிராகரிக்காமல் முன்னேற்றங்கள் இருக்கின்றன என்று ஒப்புநோக்கல் ரீதியில் பரிசீலித்தல் வேண்டும்.

**தற்போதைய அரசமைப்பின் உறுப்புரை 2**

'இலங்கைக் குடியரசு ஒற்றையாட்சி உடைய அரசு' எனக் கூறுகின்றது. தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரை ஒற்றையாட்சி முறைமையை ஏற்றுக்கொள்ளாத நிலைப்பாடே தெளிவானதாக இருந்து வருகின்றது. அந்த வகையில் இந்தச் சொற்பதம் இடைக்கால அறிக்கையில் தவிர்க்கப்பட்டிருப்பதைக் கவனித்தல் வேண்டும்.



இதற்குப் பதிலாக 'சிறிலங்கா (இலங்கை) அரசமைப்பில் குறிப்பிட்டவாறு தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு ஏற்புடையதான மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவனங்களாகக் கொண்டுள்ள சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்டுள்ள ஏக்கிய இராஜ்ஜிய / ஒருமித்த நாடு எனும் குடியரசாகும்' என்று முன்மொழியப்பட்டுள்ளது.

சாதாரணமாகப் பார்க்கும்போது மலல சேகரவின் ஆங்கில - சிங்கள அகராதியின் படி 'யுனிர்ரரி' என்ற பதத்துக்கான சிங்களச் சொல் 'ஏகிய' என்ற சொல்லும் உள்ளது. (பக்கம் 1870) அந்தக் கருத்தைத் தவிர்க்கும் பொருட்டாகக் கருதக்கூடிய வகையில் இந்தச் சொல்லுக்கு அரசமைப்பு ரீதியாகவே 'இந்த உறுப்புரையின் ஏகிய இராஜ்ஜியம்/ஒருமித்த நாடு என்பது பிரிக்கப்படாத மற்றும் பிரிக்கப்பட முடியாத நாடு எனும் பொருளாகும். என்ற பொருட்கோடல் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மேலும் அரசமைப்பு தத்துவங்களை மத்திய மற்றும் மாகாணங்களின் நிறுவனங்கள் பிரயோகிக்கும் எனக் குறிப்பிட்டதிலிருந்து மத்திய அரசு மற்றும் மாகாணங்களின் தத்துவப் பிரயோகம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஒரு கூட்டாட்சி அல்லது இணைப்பாட்சி அம்சமும் மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வும் அரசமைப்பு ரீதியாக குறிப்பிடப்படுவதையும் காணலாம்.

தற்போதைய அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணசபைகள் அமைப்பு தற்போது ஆட்சியமைப்புக் கட்டமைப்புக்குள்ளேயே உள்ளடக்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

மதம் சம்பந்தமாகத் தனியொரு அத்தியாயம் பௌத்த மதம் எனத் தலைப்பிட்டுள்ள, இலங்கையில் பௌத்த மதத்திற்கு முதன்மைஸ்தானம் வழங்கப்படுதல் வேண்டும் என்பதோடு அதற்கிணங்க 10ஆம் 14(1)(2) ஆம் உறுப்புரைகளால் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை எல்லா மதங்களுக்கும் காப்புறுதி செய்யும் அதே வேளையில் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணி வளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தலும் வேண்டும், என்ற உறுப்புரை 9ஐ அப்படியே முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதன்படி பௌத்த மதம் பற்றி மட்டுமே மதம் என்ற அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டு ஏனைய மதங்கள் அடிப்படை உரிமைகள் ஏற்பாட்டுக்குள் பத்தோடு பதினொன்று என்று கூறுவது போல் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

இப்போதைய முன்மொழிவில் மாற்றுத் தெரிவாக, இலங்கையின் பௌத்த மதத்துக்கு முதன்மைஸ்தானம் வழங்கப்படவேண்டும். எல்லா மதங்களையும் மற்றும் அதன் நம்பிக்கைகளையும் மரியாதையுடனும் மாண்புடனும் மற்றும் பாரபட்சமின்றியும் நடத்துவதும் அரசமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை எல்லா ஆள்களுக்கும் உத்தரவாதமளிக்கும் அதேவேளையில் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்தலும் பேணிவளர்த்தலும் அரசின் கடமையாக இருத்தல் வேண்டும். என்ற ஒரு மாற்று தெரிவு முன்மொழியப்பட்டுள்ளது.

இலங்கை ஒரு மதசார்பற்ற நாடு என்ற எமது நிலைப்பாட்டை பூர்த்திசெய்யவில்லை. எனினும ஏனைய மதங்களையும் பௌத்த மதத்துடன் சேர்த்து மதம் தொடர்பான உறுப்புரையில் சேர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம்.

மாகாணம் அதிகாரப் பகிர்வின் முதல் நிலை அலகாக இருக்கும் என்ற நிலைப்பாடு முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு-கிழக்கு இணைப்புப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை என்பதையும் கவனத்திற் கொள்ளும் அதே வேளை, இணைப்பிற்கு அரசமைப்பு ஏற்பாடு செய்தலாகாது, என்ற எதிர்மறை வாசகம் இடைக்கால அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஆனால், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தனியொரு மாகாணமாகப் புதிய அரசமைப்பு அங்கீகரிக்கும், என்ற மாற்றுத் தெரிவும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான ஒப்பீட்டு ரீதியான மாற்றங்களும் பரிசீலிக்கப்படவேண்டும்.

இவற்றை மேலும் மேம்படுத்துவதற்கான எத்தனங்கள் எடுக்கப்படவேண்டும். இவை ஒப்பீடு மட்டுமே. ஏற்றுக்கொள்வதாகவோ ஏற்றுக்கொள்ளப்படும் என்றோ கருதமுடியாது என்று தெரிவித்துள்ளார். (5)

# காவி உடைக் கும்பலே மகிந்த அணிக்குத் துணை

## நீதி அமைச்சரின் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 1

மகிந்த அணியினர் நாளுக்கு நாள் பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றனர். அந்த அமைப்புக்காகப் பணியாற்றக் காவியுடை தரித்த கும்பல் உள்ளது. இதுதான் பிரச்சினைக்குக் காரணமாக உள்ளது. இவ்வாறு நீதி அமைச்சர் தலதா அத்துக்கோரல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யார் என்ன சொன்னாலும் ரோஹிங்ய மக்களையும் நாம் மனிதர்களாகவே பார்க்க வேண்டும். ஏதிலிகள் என்பதற்காக அவர்களை எமக்கு கடலில் வீசிவிட முடியாது. பன்னாட்டு ரீதியில் எமது நாடு உடன்பட்ட சில நிபந்தனைகள் உள்ளன. அந்த நிபந்தனைகளுக்கு ஏற்ப நாம் செயற்பட வேண்டியுள்ளோம்.

மகிந்த அணியினர் நாளுக்குநாள் ஒவ்வொரு பிரச்சினையை ஏற்படுத்தி வருகின்றது. அந்த அமைப்புக்காக பணியாற்றும் காவியுடை தரித்த ஒரு கும்பல் உள்ளது. இது தான் இந்தப் பிரச்சினைக்குக் காரணமாகவுள்ளது - என்றார். (5)

# உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதில் சிக்கல்

## தவறுகளைச் சுட்டிக்காட்டுகிறது மகிந்த அணி



கொழும்பு, ஒக். 1

உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்தில் மற்றுமொரு திருத்தம் மேற்கொள்ளப்பட்டால் மாத்திரமே, உள்ளூராட்சித் தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்யமுடியும். தேர்தல் திருத்தச் சட்டத்தின் ஆங்கில மற்றும் சிங்கள மொழிபெயர்ப்புக்களில் உள்ள வேறுபாடுகளே இதற்குக் காரணம். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தச் சட்டத்துக்கு அமைவாக பெண்களை நியமிப்பது தொடர்பிலான பிரிவிலேயே வேறுபாடு நிலவுகிறது. ஆங்கில மொழியிலேயே சட்டவரைவை சமர்ப்பித்ததாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். வேறுபாடு நிலவும் சந்தர்ப்பங்களில் சிங்கள மொழிமூலமானதையே கருத்தில் கொள்ளப்படும் என்று அரசமைப்புக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் திருத்தச்சட்டத்தில் மீண்டும் திருத்தம் கொண்டுவர வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. அரசு குழப்பகரமான சந்தர்ப்பங்களில் அவசரமாகச் சட்டம் நிறைவேற்ற முயற்சிப்பதனாலேயே இவ்வாறான நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டி நேர்ந்துள்ளது.

நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தச் சட்டத்திற்கு இணங்க உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்புமனுத் தாக்கல் செய்ய முடியாத நிலை உருவாகும். இது மிகவும் பயங்கரமான விடயமாகும்.

மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டவரைவும் அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தில் ஆணைக்குழுக்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. எல்லை நிர்ணய ஆணைக்குழு முக்கிய இடம் வகிக்கிறது. அது நிலையான ஆணைக்குழுவாகும். அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ள மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டத்தினூடாக மற்றுமொரு எல்லை நிர்ணய ஆணைக்குழு அமைக்கப்படவுள்ளது - என்றார். (5.31)

# மாற்று மதத்தவர்களையும் மதியுங்கள்

## இப்படிக் கோருகிறது அஸ்கிரியபீடம்

கொழும்பு, ஒக். 1

இனங்களுக்கிடையில் தேவையற்ற விதத்தில் பேதங்களையும் பிணக்குகளையும் ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் தேரர்கள் செயற்படுவது பௌத்த மதத்தின் மீது அபகீர்த்தியை ஏற்படுத்தும் என்று அஸ்கிரிய பீட மகாநாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாற்று மதத்தவர்களுக்கு இந்த நாட்டில் நோவினை செய்யும் விதத்தில் பிக்குகள் நடந்து கொள்வதானது தமது மதத்துக்கே செய்து கொள்ளும் மதிப்பின்மை என்று குறிப்பிட்டுள்ளார். (5)

# சைட்டம் விவகாரத்தில் யாருக்கும் நான் அஞ்சமாட்டேன்

## ராஜித தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 1

சைட்டம் மருத்துவக் கல்லூரி தொடர்பில் நான் யாருக்கும் அஞ்சப்போவதில்லை. சைட்டம் தொடர்பில் அரசின் கொள்கையில் மாற்றம் ஏற்படாது என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நிகழ்வொன்றில் கலந்து உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சைட்டம் மருத்துவக் கல்லூரி தொடர்பில் கடந்த வியாழக்கிழமை பேச்சு நடத்தினேன். அவர்களிடம் என்னுடைய நிலைப்பாட்டைத் தெளிவாகக் குறிப்பிட்டேன்.

மக்கள் விடுதலை முன்னணியின் பேச்சைக் கேட்டுக் செயற்படாமல் பயப்படாமல் உறுதியான தீர்மானத்தை நீங்கள் எடுக்க வேண்டும் என்று அவர்களுக்கு நான் குறிப்பிட்டேன். சைட்டம் கல்லூரி நாட்டுக்கு தேவையாகும். இந்தப் பிரச்சினையில் நான் யாருக்கும் அஞ்சமாட்டேன். நான் கட்சி மாறினாலும் எனது கொள்கையில் எந்த மாற்றமும் ஏற்படாது. எதிர்ப்புகளுக்கு அஞ்சி நாட்டுக்கு அனுகூலமானதை இல்லாமல் செய்வதற்கு அரசு தயாரில்லை. இப்படி அனைத்துக்கும் எதிர்ப்பு வெளியிட்டால் அது நாட்டின் எதிர்காலத்திற்கு நல்லதல்ல. நாட்டில் அனைத்து துறையிலும் தனியார் கல்வி நிறுவனங்கள் உள்ளன. தனியார் கல்வி நிறுவனங்களில் கல்வி பயில்வது தவறு இல்லை. ஆனால் சைட்டத்தில் படித்தால் மாத்திரம் தவறு. இதில் என்ன நியாயம் இருக்கின்றது - என்றார். (5.31)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு

### Car விற்பனைக்கு
Toyata Allion 2007
விற்பனைக்குண்டு.
**070 377 7138**

### TOYATA HIACE விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள NP-JQ இலக்க வான் 3L ENY (ENG body 100%) Convert Diesel Regist-2002, Double A/C விலை 44L
**077 6040920, 077 9464287**

### வாகனம் விற்பனைக்கு
இலக்கம் 41 - XXXX உடைய ISUZU DOUBLE CAB (Diesel Pickup) வாகனம் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு - 077 76 66 160**

### காணி விற்பனைக்கு
யாழ்.நகருக்கு அண்மையிலுள்ள மின்சார நிலைய வீதி. 2ஆம் ஒழுங்கையில் கிட்டத்தட்ட ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. சகல வசதிகளும் ஒரே இடத்தில் அமையப்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.
**077 287 0820, 077 555 7899**

### விற்பனைக்கு
யாழ் ஆஸ்பத்திரி வீதியில் ஆஸ்பத்திரி முகப்புடன் ரட்ணம் பாமசிக்கு அருகில் 30 அடி அகலம் 240 அடி நீளம் கொண்ட 2½ பரப்பு வெற்றுக்காணியும். யாழ் பிறவுண் வீதியில் 2½ பரப்புடன் காணியுடன் வீடும். அன்ன சத்திர ஒழுங்கையில் 1 பரப்பும் விற்பனைக்கு உண்டு.
**077 723 2535**

### விற்பனைக்கு
பஜாஜ் CT 100 XP - நீலம் மிக நல்ல நிலையிலுள்ளது. உடன் விற்பனைக்குண்டு:
தொடர்புகளுக்கு: **076 660 4584**

### விற்பனைக்கு
தெல்லிப்பழை. யாழ்நகரில் இடிந்த கட்டட இடிபாடுகள் உண்டு.
தொடர்புகளுக்கு: **078 502 9616**

### வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் இணுவில் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையில் நாலு Room கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு
**075 4266 711** S.பாலா

### விற்பனைக்குண்டு
**JCB விற்பனைக்கு உண்டு.**
**077 480 1734**

### காணி விற்பனைக்கு
கோண்டாவில் பலாலி றோட் தாயகம் கிளினிக்கிற்கு பின்புறமாக 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
**075 542 9401, 077 452 7317**

## தேவை

### வீடு வாடகைக்குத் தேவை
யாழில் உள்ள பிரபல நிறுவனம் ஒன்றுக்குப் பலாலி வீதியில் வீடு வாடகைக்குத் தேவை.
**070 236 3676**

### மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயதான மணமகனுக்கு மணமகள் தேவை.
**077 972 3355/ 076 625 0429**

### மணமகன் தேவை
யாழ் இந்து குடும்பத்தைச் சேர்ந்த 1998 ஆம் ஆண்டு பிறந்த நட்சத்திரம் - பூரம். 4ஆம் பாதம் 12இல் செவ்வாய் உள்ள அழகிய மணமகளுக்கு மணமகன் தேவை.
**077 634 1226**

### மணமகள் தேவை
1985. இந்து கௌரவ குடும்பம் 5'4" கணினித் துறையில் தொழில் புரியும் தூய சைவபோசன மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. நிரந்தர அல்லது தொழிலு டைய பெண் விரும்பத்தக்கது. நேரடியாகத் தொடர்பு கொள்ளவும் தரகர்கள் / முகவர்கள் அழைக்க வேண்டாம்.
**077 959 6609, 021 205 3065**
nagules1949@gmail.com

### பணிப்பெண் தேவை
கொக்குவில் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்வதற்கு 45 வயதுக்கு மேற்பட்ட பணிப் பெண் தேவை. நாள்தோறும் வந்து போவோரும் விண்ணப்பிக்கலாம்.
**077 187 7754**

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983ஆம் ஆண்டு பிறந்த அத்தம் 4ஆம் பாதம். கிரகபாவம் 79 உடைய. லக். செவ்வாய் கிரகபாவமுடைய கொழும்பில் வர்த்தக நிலையத்தில் காசாளராகப் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
**076 744 5345**

### வேலையாள்கள் தேவை
விஷன் லங்கா நிறுவனத்தில் 17 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள்.
❋ தரம் - 10 முதல் O/L, A/L முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.
**076 832 3071/ 076 991 1306**

### வேலையாள் தேவை
Colombo 06 இல் இயங்கும் வியாபார ஸ்தாபனத்திற்கு ஆண் வேலையாள் (Tamil) தேவை. (Field Work) தங்குமிட வசதி உண்டு. (25 வயதிற்குட்பட்ட) சம்பளம் 30000/= (Basic) முன்னனுபவம் தேவையில்லை.
**078 911 3766**

## ஏனையவை

### வாடகைக்குண்டு
தெஹிவளையில் படிக்கும் வேலைக்கு போகும் ஆண்களுக்கு மாத நாள்களுக்கு Room வாடகைக்கு உண்டு.
தொடர்பு :- **077 749 0307**

### வாடகைக்கு
யாழ் மாநகர எல்லைக்குள் அறை வாடகைக்கு உண்டு. தாதியப் பெண்கள், மாணவிகளுக்கு முன்னுரிமை
**077 803 0950**

### அறைகள் வாடகைக்கு
நல்லூர் பகுதியில் அமைதியான சூழலில் பல்கலைக்கழக மாணவிகள் வேலை செய்யும் பெண்களுக்கான அறைகள் வாடகைக்குண்டு.
**077 844 9890** (CS 8344) (14)

### A/L Classes Personal & Group
உயர்தர மாணவர்களுக்கான
பௌதிகவியல் (Physics)
Ramanan BSc.(Hons) in Physics
T.P:- 077 647 0614
இணைந்த கணிதம் (Com. Maths)
Suganthan BSc
T.P:- 077 651 0506

### அனெக்ஸ் வாடகைக்கு
ஆனைப்பந்தியடியில் அனெக்ஸ் வாடகைக்கு உண்டு. உத்தியோகத்தர்களுக்கு உகந்தது
Eye Clinic இற்கு முன்பாக
New No.:371/3,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

### பணியாளர்கள் தேவை
பருத்தித்துறையிலுள்ள புடைவைக் கடை ஒன்றுக்கு ஆண்/ பெண்பணியாளர்கள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
**077 917 3777**

### வாடகைத்தாய் தேவை
கருணை உள்ளம் கொண்ட 30 வயதிற்குக் குறை வான பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.
**077 906 1406**

### Rooms வாடகைக்கு உண்டு
சுண்டுக்குளி பழைய பூங்காவீதியில் அமைந்துள்ள முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டு உள்ள வீட்டின் பகுதி வாடகைக்கு உண்டு. வேலை பார்க்கும் பெண்பிள்ளைகளுக்கு முன்னுரிமையும் அன்றேல் சிறிய குடும்பம் வாழ்வதற்கும் உகந்தது.
**077 777 7384**

### வேலைவாய்ப்பு
மீட்டர் டாக்ஸி நிறுவனத்துக்கு. சந்தைப்படுத்தல் அதிகாரிகள் Sales Executive தேவை. ஆண்/ பெண் O/L படித்திருந்தால் போதுமானது. விரும்பியவர்கள் அழைக்கவும். **077 764 3322**

### சேவை
உங்கள் முச்சக்கரவண்டியை (Three Wheel) எங்களுடன் இணைத்த மீட்டர் டக்ஸியாக்குங்கள். இலகுவான நவீன தொழில்நுட்பம். இணைத்துக் கொள்ள அழையுங்கள்.
**Speed Go - 077 764 3322**

### வீடு வாடகைக்கு
சிறிய குடும்பத்திற்கு பொருத்தமான வீடு தட்டாதெரு சந்திக்கு அருகில் (மேல் மாடி மட்டும்.)
**077 393 6964/ 077 632 0462**

### வாடகைக்குண்டு
இலக்கம் 21 / 2. இந்து மகளிர் வீதி. கந்தர்மடத்தில் (யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்பாக குமாரசாமி வீதியும் இந்து மகளிர் வீதியும். இணையும் சந்திக்கு மிக அருகில் இருக்கும் ஒழுங்கையில்) 5 அல்லது 6 பெண்பிள்ளைகள் தங்கக் கூடிய விசாலமான சகல வசதிகளுடன் கூடிய அறை வாடகைக்குண்டு.
**077 473 9659, 076 907 7758**

### தேவை
பிலியந்தலையில் இயங்கும் இரும்பு தொழிற்சாலைக்கு தொழிலாளர்கள் தேவை. சம்பளம் 37500/- ரூபாய் + (Incentive) உணவு தங்குமிடம் இலவசம். கிராம சேவகர் சான்றிதழ். பிறப்பு சான்றிதழ். தேசிய அடையாள அட்டையுடன் தொடர்பு கொள்ளவும்.
**071 348 9084, 078 299 5265**

### நல்லூர் யாழ்நகரில் வீடு விற்பனைக்கு
மருதடி வீதியில் 3 பரப்புக் காணியில் உள்ள இரு வீடுகள் மதிக்கப்பட்ட விலையிலும் மிகவும் குறைந்த விலை யில் உடன் விற்பனைக்கு.
மாடி வீடு - 4 படுக்கை அறைகள். 4 குளியலறைகள். 1500 ச.அடி.
மற்றைய வீடு- 3 பெரிய படுக்கை அறைகள் 2 குளி அறைகள் விசாலமான வரவேற்பறை / சாப்பிடும் இடம் & வாகன தரிப்பிட வசதி.
தொடர்புகளுக்கு:
சிறிகரன்- **077 308 1905**

### SALE
வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட
1. GLASS TABLE (6 Chair) ~~29000~~ 24000/=
2. GLASS TEAPOO ~~5500~~ 3500/=
(கையிருப்பு உள்ளவரை மட்டுமே)
(இலுப்பையடி சந்திக்கும் ஆனைப்பந்தி சந்திக்குமிடையில்)
**ASIAN FURNITURE** 076 821 9415
230, நாவலர் றோட், யாழ்ப்பாணம். 076 821 9414

### தேவை
- நிறுவனம் ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த கணக்காளர் தேவை.
- "AD" வாகனப் பத்திரம் உடைய சாரதி தேவை.

(நிரந்தரமான வேலை வாய்ப்பு)
**076 821 9415 / 076 821 9414**

### அமெரிக்க வீஸா லொத்தர்
இன்ரநெற்/ஆங்கிலம் தெரியாதவர்க்கு சேவை
அமெரிக்காவில் நேர்மையாக குடியேறுங்கள் அரிய சந்தர்ப்பம். உடன் விண்ணப்பியுங்கள்.
15ஆவது வருடசேவையில்.
எமது விண்ணப்பத்திற்கு இப்போதே ரூ15/- முத்திரையுடன் எழுதவும்.
**BBSNETTING,**
**3/14,PINWATTA ROAD**
**DEHIWALA.**
யாழ்ப்பாணத்தில் விண்ணப்பத்திற்கு ... ஸ்ரோர்ஸ், 378, கே.கே.எஸ் வீதி (வண்ணிவன் கோவில் முன்பாக).
www.bbsnetting.com

### திருமண சேவை
எம்மிடம் டொக்டர். இஞ்சினியர். வங்கியாளர். ஆசிரியர்கள் அரச உத்தியோகத்தர்களது குறிப்புக்களும் வெளிநாட்டு குறிப் புக்களும் ஏராளம் உள்ளன. காளி அம்மன் துணையுடன் பல்லாண்டு காலம் சிறப்பாக செயற்படும் எமது நிறுவனத்துக்கு பிரதேச ரீதியாக அனுபமுள்ள தரகர்கள் தேவை. உங்கள் வீட்டில் மங்கல ஒலி கேட்க இன்றே எம்மை தொடர்பு கொள்ளவும்.
077 946 4287
077 604 0920 + Viber

### MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் - 07 பாஷையூர் 2ஆம் குறுக்குத்தெரு வீதி, ஆதன இல. 3 என்ற இலக்கத்தைகொண்ட ஆதனம் சம்பூரணம் பெண் செல்லம்மா என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் பாஷையூர் கடற்கரை வீதி, 169/2ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஆசீர்வாதம் தம்பிராசா அல்லது ஆசீர்வாதம் செபஸ்ரியாம்பிள்ளை, பிரசித்த நொத்தாரிசுரி.எம் அந்தோனிப்பிள்ளை முகதாவில் 353ஆம் இலக்க 1982/10/13ஆம் திகதிய பிரகடன உறுதியில் இதே நொத்தாரிசு முகதாவில் 352 ஆம் இலக்க 17.10.1982 இல் தனது பெயரில் முடித்த அறுதி உறுதியின்படி நில.பர.குளி 2 1/4 உம் மேற்கூறிய ஆதனத்தில் தனது தாயார் காலஞ்சென்ற பேனாட் ஆசீர்வாதம் பெண் இராசாத்தியின் வழியில் முதுசமாய் வந்தடைந்த குளி 1 1/8 உம் மேற்கூறிய ஆதனத்தில் காலஞ்சென்ற சம்பூரணம் சந்திரராசாவிடம் இருந்து கொள்வனவு செய்த குளி 2 1/4 உம் ஒருங்கிணைந்து ஒரே துண்டுக் காணியான குளி 5 1/16 உம் தனது உரிமையும் தடையற்ற ஆட்சியுமானதென பிரகடனப்படுத்தியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 570 இலக்க 1984/07/08ஆம் திகதிய அறுதி உறுதியால் ஆசீர்வாதம் தங்கராசா அல்லது ஆசீர்வாதம் செபஸ்தியாம்பிள்ளை குருநகர் கொண்டடி வீதி, 10/4 ஐ சேர்ந்த பேபியன்ஸ் அன்ரன் உதயகுமாருக்கு அறுதியாக வழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் 4420 இலக்க 2012.09.21 ஆம் திகதிய அறுதி உறுதியால் பாஷையூர் சென் யூட்ஸ் வீதியைச் சேர்ந்த முன்பு குருநகரைச் சேர்ந்தவருமாகிய பேபியன்ஸ் அன்ரன் உதயகுமாரன் அதே இடத்தைச் சேர்ந்த சென்.செபஸ்தியன் வீதி, 24 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த பேபியன்ஸ் டான்சியஸ் மதிவாணனுக்கு அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விவரம் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று பாஷையூர் இறை "சின்ன மெஞ்ஞன் கந்தன் குடியிருப்பு". இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களின் வரைபட இலக்கம் 1180/2009/11/29 இல் துண்டு - 1 எனக் காட்டப்பட்ட நில.பர.00, குளி 05.64 ஆகும். இதற்கு எல்லை

**கிழக்கு பாஷையூர் 2ஆம் குறுக்கு தெரு.**
**வடக்கு எஸ்பி ரியல் பெண் டொனேற்றா.**
**தெற்கு கடற்கரை வீதி.**
**மேற்கு செகராயசிங்கம் ஞானசீலன்**

தற்போது இவ்வாதனத்தை பேபியன்ஸ் டான்சியஸ் மதிவாணன் என்னும் பெயரில் எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்துமூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பேபியன்ஸ் டான்சியஸ் மதிவாணன் என்னும் பெயரிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**








# + றோயல்
## மெடிக்கல் சென்ரர்

யாழ். போதனா வைத்தியசாலை பழைய OPD முன்பாக விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனையை பெற அழையுங்கள்.

**றோயல் வைத்திய ஆலோசனைகள் ...**

- காது, மூக்கு தொண்டை [ENT] சத்திரசிகிச்சை நிபுணர்
- நீரிழிவு (சலரோகம்) கோமோர்ன்ஸ் வைத்தியநிபுணர்
- சத்திரசிகிச்சை நிபுணர்
- மூட்டுவாத வைத்திய நிபுணர்
- தோல் வைத்திய நிபுணர்
- பொது வைத்திய நிபுணர்
- குழந்தை வைத்திய நிபுணர்
- மகப்பேற்று வைத்திய நிபுணர்
- நரம்பியல் சத்திரசிகிச்சை நிபுணர்
- சிறுநீரக வைத்திய நிபுணர்
- மார்புநோய் வைத்திய நிபுணர்
- இதய வைத்திய நிபுணர்
- பிளாஸ்ரிக் [Plastic] சத்திரசிகிச்சை நிபுணர்
- பேச்சு மற்றும் மொழி சிகிச்சையாளர்
- பல், முக சீராக்கல் வைத்திய நிபுணர்
- பல், தாடை சீராக்கல் சத்திரசிகிச்சை நிபுணர்
- பற்சிகிச்சை நிபுணர்



**தொடர்புகளுக்கு...**
021 720 1587, 021 320 2300, 021 221 3668, 077 045 7976
royalmedicalcentre458@gmail.com
**458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாத துயருடன் ஆண்டு ஒன்றில்...

வைரமாய் மடியில் 19 . 10 . 1955



வைரவர் அடியில் 01 . 10 . 2016

## அமரர் சோமசுந்தரம் ராஜினி (பபி)



அன்போடும் அறத்தோடும் அகிலமதில் வாழ்ந்து
அனைவர் மனங்களையும் வென்ற அன்னை
இன்போடு நாமிருக்க இயன்றவரை உழைத்து
ஏணியென எமையேற்றி மகிழ்ந்த செம்மல்
முன்பிருந்து குடும்பம் சுற்றம் உறவுஎன
முறையோடு செய்தவைகள் நெஞ்சில்
நிலைக்குதம்மா
நன்றேயுன் ஆத்மா இறையடியில் இனிதிருக்க
நாமெல்லாம் வேண்டுகின்றோம் முதலாம் ஆண்டில்

எம்மையெல்லாம் உயர்த்திய எமது குடும்ப ஒளிவிளக்காகத் திகழ்ந்த அன்னையின் ஆத்மா இறையடியில் இனிதிருக்க முதலாம் ஆண்டு நினைவில் பிரார்த்திக்கின்றோம்.

இல.22, நாவலடிலேன்,
வண்ணார்பண்ணை,
(பேச்சியம்மன் கோயிலடி, யாழ்ப்பாணம்)

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## திருமதி சாந்தினிதேவி சுப்பிரமணியம்

நீர்வேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தினிதேவி சுப்பிரமணியம் 29.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு - செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், பரமநாதன் நவமணியின் பெறாமகளும், செல்லையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், நிலானி, சிவானி, சுகிர்தன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவரான துரைரட்ணம் மற்றும் கமலாதேவி, யோகேஸ்வரன் (சுவிஸ்லாந்து), உமாநேசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மராஜா, பிரபாகரி (சுவிஸ்லாந்து), திருஞானசம்பந்தமூர்த்தி - சிவபாக்கியம், மங்களேஸ்வரி, சுபா, காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, தங்கலக்சுமி ஆகியோரின் மைத்துனியும், தயாளசீலன், லோகதாஸ், தனுசியா ஆகியோரின் அன்பு மாமியும், வவினரூபி, பௌசிகா, சரண்யன், பவிதரன், கஜனன், லக்னேஸ், அக்ஷயா, அர்ச்சனா, யதுர்சன், யாதவி, யனுஷ்கா, கஜானன், கனிஸ்ரன், கபிசன், கபிசா, ருபினா, டயான், ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பகீர், பிரதீசன் - சகிதா, மதனிகா, சுதர்சன் , தர்சினி, சிவதர்சன்- நிர்மலா மற்றும் காலஞ்சென்றவரான சுதர்சினி ஆகியோரின் பாசமிகு சித்தியும், தேவதர்சன் -டினுசா, ரஜிதன் (சுவிஸ்லாந்து), கெயின்ஸ் - விஜயமலர், கணேஸ்வரன் - சுலக்சனா ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி வில்லுமதவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நீர்வேலி தெற்கு,**
**வீரபத்திரர் கோயிலடி, நீர்வேலி.**

தகவல்
**குடும்பத்தினர்.**

077 183 245 6 / 077 850 5131

# சங்கானையில் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.01

சங்கானை மேற்கு, தெற்கு கமக்காரர் அமைப்பின் வருடாந்தப் பொதுக்கூட்டமும், நெற்செய்கைக் கூட்டமும் எதிர்வரும் செவ்வாய்க்கி ழமை பிற்பகல் 2 மணிக்கு தலைவர் வே.சிவலிங்கம் தலைமையில் சங்கானை விழிசுட்டி சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்த பிடியாள்களை நியமித்தல், புதிய நிர்வாகசபைத் தெரிவு உள்ளிட்ட பல விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. தொல்புரம் கமநலசேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தர், சங்கானை தெற்கு, மேற்கு கிராம அலுவலர்கள் கலந்து கொள்வார்கள் என்று தலைவர் தெரிவித்துள்ளார். (ய-29)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி ந.உதயகுமாரன் அவர்களின் மாமனார்

**அமரர் பொ.இராசசிங்கம்**

28.09.2017 அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம், மத்தியகல்லூரி.**

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியை திருமதி பி.கற்பகஜோதி அவர்களின் தந்தை

**அமரர் விஸ்வலிங்கம் கந்தவேள்**

30.09.2017 அன்று காலமானார். அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் வட்டம், யாழ்ப்பாணம், மத்தியகல்லூரி.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**சொக்கலிங்கம் நாகம்மா**

அன்பால் எம்மை அரவணைத்து
அறிவால் எம்மை உயர்த்தி
பண்பால் போற்றிட வாழ்ந்திட்ட எம்
அன்புத் தெய்வமே ஓராண்டு அல்ல
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சிலே
என்றும் நிலைத்திருக்கும்.

**குடும்பத்தினர்.**
95, இராஜேஸ்வரி வீதி,
நாயன்மார் கட்டு, யாழ்ப்பாணம்.

தோற்றம் 12.11.1928 மறைவு 12.10.2016

## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் கந்தவேள்

(சித்த சல்லிய வைத்தியர், கைதடி ஆயுள்வேத போதனா வைத்தியசாலை, கைதடி, யாழ்ப்பாணம்.



பிறப்பு 03.02.1942 இறப்பு 29.09.2017

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, பருத்தியடைப்பினை பிறப்பிடமாகவும் இல.18, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் கந்தவேள் 29.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தர் விசுவலிங்கம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், கதிரநாயகமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சி.புனிதவதியின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பா.சித்திரவேல்நாயகமணி மற்றும் திருமதி கோ.தேவநாயகமணி ஆகியோரின் மைத்துனரும், விசுவநாதம் (உயிர்மருத்துவ பொறியியலாளர்), கற்பகஜோதி (ஆசிரியை - யாழ். மத்திய கல்லூரி), மயூரன் (பணிப்பாளர், NEWS 1St, மகாராஜா கூட்டுத்தாபனம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - காரைநகர் பிரதேச செயலகம்), பிரசாந்தன் (ஆசிரியர் - யாழ். இந்துக் கல்லூரி), ரனித்தா (சட்டத்தரணி) ஆகியோரின் மாமனும், பவிசனா, சிந்தனா, அருண், கிரிஷ், ஆதர்சன், ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை இல.18, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக யாழ். வில்லூண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு: 021 222 9956
விசுவநாதம் 077 363 0885
மயூரன் 077 591 4225

## பாராட்டுவிழா

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் க.சர்வேஸ்வரனை பாராட்டி கௌரவிக்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இருபாலை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவரும், ஓய்வுநிலை கிராம உத்தியோகத்தர் லயன் சி.இலட்சுமிகாந்தன் தலைமையில் நிகழ்வு நடைபெறவுள்ளது. (ய)

# உடனடி வேலைவாய்ப்பு

VACANCY

01) சாரதி - 01
02) பொருள்களை ஏற்றி இறக்குபவர் - 03
03) காசு சேகரிப்பாளர் - 01
(உயர் சம்பளத்துடன்)

*வயது - 20 - 50 இடையில்

*தகைமைகள் - முன் அனுபவம் O/L சித்தி ஆங்கில அறிவு உள்ளவராக இருத்தல் வேண்டும்.

தகுதியானவர்கள் கீழ்காணும் முகவரியில் திங்கள் முதல் வெள்ளி வரை சுயவிவரக்கோவையுடன் (BioData) காலை 9 மணியிலிருந்து மாலை 4 மணிக்கு முன்னர் சந்திக்கவும்.

**AMI MARKETING & DISTRIBUTORS NESTLE**
**No. 28, New Sivan Road, Thirunelvely, Jaffna.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்றும் காப்போம் தேசத்தின் பிள்ளைகளை

## கல்வி அமைச்சு தனது பிள்ளைகளுக்குப் பரிசளிக்கும் ரூபா. 500,000/- பெறுமதியான பிரதிலாபத்துடன் கூடிய முழுமையான காப்புறுதி.

கல்வி மறுசீரமைப்பின் கீழ் பிரதமரின் எண்ணக்கருவிற்கு அமைவாக கல்வி அமைச்சர் கௌரவ அகில விராஜ் காரியவசம் அவர்களின் வழிநடத்தலின் கீழ் செயற்படுத்தப்படும், அனைத்துப் பாடசாலைப் பிள்ளைகளுக்கும் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக்கொடுக்கும் உன்னத நடவடிக்கை நாளை காலை 9 மணிக்கு அதிமேதகு ஜனாதிபதி மற்றும் கௌரவ பிரதமர் ஆகியோரின் தலைமையில் அலரி மாளிகையில் ஆரம்பித்துவைக்கப்படும்.

## நன்மைகள்

- வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும்போது ரூ.200,000 வரை
- தெரிவு செய்யப்பட்ட நோய்கள் 7இன் வெளியக சிகிச்சைக்காக ரூ.10,000 வரை
- விபத்தில் மாணவர் மரணம் ரூ.100,000 வரை
- விபத்தில் பெற்றோர் மரணம் ரூ.75,000 வரை
- முழுமையான நிரந்தர அங்கவீனம் ரூ.100,000 வரை
- முழுமையான – பகுதியான அங்கவீனம் ரூ.50,000 – ரூ.100,000 வரை
- வைத்தியசாலைக் கட்டணங்கள் செலவின் கழிவாக 20%
- வைத்தியர் ஆலோசனை செலவு கழிவாக 20%





### அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் செய்தி

உள்ளத்துடன் பின்னிப்பிணைந்த மிக நெருங்கிய பிள்ளைப் பாசத்துடன் பாதுகாப்பினை வழங்கும் தந்தையைப் போன்று ஒழுக்க நெறிமுறைகளைப் பின்பற்றும் விழுமியம்மிக்க சமூகத்தின் அடிப்படைப் பொறுப்பாக அமைவது பிள்ளைகளுக்கான அன்பு, பாசத்தையும் உரிய பாதுகாப்பினையும் வழங்குவதாகும்.

தற்போதைய உலகில் ஏதேனும் ஒரு தேசத்தில் அதிசிறந்த மற்றும் ஜனநாயகச் செயற்பாடுகள் தொடர்பில் உரிய அடைவுமட்ட எல்லைகளை எட்ட முடிவது அச்சமூகத்தின் பிள்ளைகளுக்காக மேற்கொள்ளக்கூடிய சாதகமான முதலீடுகளின் அடிப்படையிலாகும்.

இன்று முன்னேற்றகரமான சமூகத்தில் அதிஉயரிய சிந்தனையாக மாற்றம் பெற்றுள்ள "சகல சிறந்தவைகளும் பிள்ளைகளுக்கே" என்பது எமது கலாசாரத்தில் புதிதாக உருவான விடயமல்ல. சமூக வாழ்விலும் குடும்ப வாழ்விலும் பௌத்த சமயத்தினால் போசிக்கப்பட்ட சமய நோக்கிலும் பிள்ளை என்பது எமக்குப் பெறுமதிமிக்க வளமாகக் காணப்படுகின்றது.

கல்வி அமைச்சு தேசத்தின் சிறார்களுக்கு வழங்கும் "சுரக்ஷா" மாணவர் காப்புறுதி வேலைத்திட்டம் பிள்ளைகள் தொடர்பில் எம்மிடம் காணப்படும் பின்னிப்பிணைந்த சமகாலப்படுத்தப்பட்ட அதிஉயரிய நற்பணியாக அமைகின்றது. இலவசக் கல்வியிலும், இலவச சுகாதார சேவையிலும் இணைந்த திட்டமாக அமுல்படுத்தப்பட்டுள்ள "சுரக்ஷா" காப்புறுதி உடல் உள ஆரோக்கியமிக்க தாயகத்தின் எதிர்கால எதிர்பார்ப்பினை நிறைவேற்றும் வளம்மிக்க மாணவ வளத்திற்கான அதிஉயரிய பணிகளாக அமைய வாழ்த்துத் தெரிவிப்பதுடன் "சுரக்ஷா" மாணவர் காப்புறுதி வேலைத்திட்டத்திற்காக பங்களிப்பு வழங்கிய அனைவரினதும் அர்ப்பணிப்புக்கு பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன்.



### பிரதமர் கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்களின் செய்தி

உயர் பண்புசார் தரம்மிக்க இலவசக் கல்விக்கான சந்தர்ப்பத்தினை நாட்டின் சகல பிள்ளைகளுக்கும் வழங்கும் தேசிய பொறுப்புக்கு மத்தியில் தேசம் என்ற ரீதியில் நாம் வெற்றி கொள்ளவேண்டிய பல இலக்குகள் உள்ளன. உலகளாவிய அபிவிருத்தி நோக்கினை வெற்றி கொள்ளக்கூடிய சர்வதேச வேலை உலகிற்கு அச்சமின்றி இணையக்கூடிய தேகாரோக்கியம், சுகாதார வளம், அறிவியல் ரீதியிலான பிள்ளைகளை பாடசாலை முறைமை ஊடாகக் கட்டியெழுப்பும் நோக்கினை எட்டுவதே பிரதான இலக்காகும்.

இந் நோக்கத்திற்காக தற்போதைய அரசாங்கத்தின் கீழ் ஏற்கனவே பல வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் நிதி ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேசம் என்ற ரீதியில் எவ் வகையான பொருளாதார நெருக்கடிகள் காணப்பட்டபோதிலும் நாட்டின் கல்வி அபிவிருத்திக்காக மற்றும் சிறார்களின் எதிர்காலத்திற்காக அர்ப்பணிப்புச் செய்ய வேண்டியுள்ளது.

இவ் அர்ப்பணிப்பின் விசேட நடைதாண்டலைக் குறித்துக்காட்டும் வகையில் அமுல்படுத்தப்பட்டுள்ள சுரக்ஷா மாணவர் காப்புறுதி இலவசக் கல்வியின் மற்றுமொரு வெற்றிகரமான பயன்மிக்க நடவடிக்கையாக அமையும் என்று எதிர்பார்க்கிறேன். நாட்டின் பாடசாலைகள், பிரிவெனாக்கள் உட்பட முழுமையாக கல்வி முறைமையில் உள்ள நாற்பத்தைந்து இலட்சம் மாணவர்களுக்குத் தலா ரூபா இரண்டு இலட்சம் காப்புறுதிப் பாதுகாப்பை வழங்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

சிறந்தவைகளை பிள்ளைகளுக்கே வழங்க வேண்டும் அதற்கமையவே நாட்டின் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகின்றது. இதற்கு உதவக்கூடிய சுரக்ஷா மாணவர் காப்புறுதித் திட்டம் வெற்றியளிக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.



### கல்வி அமைச்சர் கௌரவ அகில விராஜ் காரியவசம் அவர்களின் செய்தி

தேகாரோக்கியம், சுகாதார வளம்மிக்க இளம் சந்ததியினரை நாட்டின் கல்வி முறைமையின் ஊடாக கட்டியெழுப்பும் தேசிய பொறுப்பை இனங்கண்டு 4.5 மில்லியனுக்கு மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்காக இரண்டு இலட்சம் பெறுமதியான காப்புறுதியினை வழங்கும் தேசிய வேலைத்திட்டத்தை அமுல்படுத்தக் கிடைத்தமை தொடர்பில் கல்வி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் நான் பெரும்மகிழ்ச்சி அடைகிறேன். 2017 வரவு செலவுத் திட்டத்திற்காக எம்மால் யோசனை தெரிவிக்கப்பட்ட விசேட வேலைத்திட்டம் என்பதுடன் இவ் மாணவர் காப்புறுதி வேலைத்திட்டத்திற்காக அதிஉயரிய இடம் வழங்கப்படுகின்றது. இது இலவசக் கல்விக்கு புதிய பெறுமதியைச் சேர்க்கக்கூடியதாக அமையும் என்பதைக் குறிப்பிட முடியும்.

அன்புமிக்க பிள்ளைகளே அதிஉயரிய சிறந்த நாளைய தினத்தை உங்கள் அனைவருக்கும் எட்டுவதற்கு இதனூடாக நாம் மேற்கொள்ளும் முயற்சிகள் மூலம் உங்கள் வாழ்விற்கு உண்மையான பலத்தையும் உதவியையும் வழங்கும் என்பது எமது நம்பிக்கையாகும். இவ் வேலைத்திட்டத்தின் உண்மையான உரிமையாளர்கள் நீங்களே, இதன் அனைத்துப் பயன்களும் உங்களுக்கே கிடைக்கின்றன. இச் சகல பயன்களையும் சுதந்திரமாக அனுபவித்து தேகாரோக்கியம்மிக்க பிரஜைகளாக எதிர்கால தொழிற்துறை உலகை வெற்றிகொள்ள உங்கள் அனைவருக்கும் வாழ்த்துத் தெரிவிக்கிறேன்.



### கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ வி. ராதாகிருஷ்ணன் அவர்களின் செய்தி

ஆரோக்கியமான பிள்ளைகளை பாடசாலை அமைப்பினுள் உருவாக்கும் தேசிய பொறுப்புக்கு மத்தியில் எமக்கு பெருமளவு சவால்கள் உள்ளன. தொற்றா நோய்கள் மற்றும் தொற்றும் நோய்களைத் தவிர்க்கக்கூடிய சுகாதார சுற்றுச்சூழலொன்றை நாம் பிள்ளைகளுக்கு உருவாக்கிக்கொடுக்கவேண்டும். அதற்காக தேசிய அளவில் கல்வி அமைப்பினுள் செயற்படக்கூடிய பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு மத்தியில் சுரக்ஷா மேன்மையும், சிறப்பும் மிக்கதொரு வேலைத்திட்டமாகும்.

குறிப்பாக பொருளாதார கஷ்டங்கள் காரணமாக சரியான முறையில் சுகாதார, வைத்திய வசதிகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்புகளை இழந்திருக்கும் தோட்டப்புறப் பாடசாலைகளின் பிள்ளைகளுக்கு சுரக்ஷா பாதுகாப்பு ஒரு மிகப்பெரிய ஆசீர்வாதமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. தாங்கிக்கொள்ள முடியாத மருத்துவச் செலவுகளினால் பிள்ளைகளின் பாடசாலைப் பயணத்தைக்கூட இடைநடுவில் நிறுத்திவிட்டு பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும் பெருமளவான பெற்றோருக்கு இது உண்மையான சக்தியாகும். கல்வியை கற்பிக்கும் நடவடிக்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு பிள்ளைகளுக்கு உடல், உள ரீதியான அபிவிருத்தியைக் கட்டியெழுப்பும் தேசிய பொறுப்புக்கு சுரக்ஷா பாதுகாப்பு உண்மையான ஆதரவை வழங்குகின்றது. இந்த நற்காரியத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும், ஒத்துழைப்பைப் பெற்றுத்தரும் அனைவருக்கும் நாம் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் பாதுகாப்பான எதிர்காலம் அமையவேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்.

mango data

சுரக்ஷா
என்றும் காப்போம் தேசத்தின் பிள்ளைகளை

கல்வி அமைச்சு

ஸ்ரீ லங்கா இன்சூரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று

கல்வி அமைச்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனத்திற்கும் உடல்நலத்திற்கும் செலுத்தும் ஒரே மோட்டார் காப்புறுதி

செலின்கோ VIP ON THE SPOT



சௌகரியமானது

ஒரு மில்லியன் ரூபாய் வரையிலான மருத்துவ செலவுகளுக்கு!

இதய நோய், சிறுநீரக கோளாறு, பக்கவாதம், புற்றுநோய் போன்ற பல கடுமையான நோய்களுக்கு.

அனைத்து மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி மற்றும் 3rd party காப்புறுதி உரிமையாளர்களுக்கும் 100,000/- ரூபாய் வரை மருத்துவ செலவுகளுக்கு.

செலின்கோ VIP ON THE SPOT காப்புறுதியை புதிதாக பெற்றுக்கொள்ளுமிடத்து அல்லது தற்போதைய காப்புறுதியை புதுப்பிக்கும்போதும் இச்சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.

அழையுங்கள்: 0112 39 39 39

CEYLINCO VIP ON THE SPOT

உலகிற்கே ஒன்று!


## வேலைத்தள மன அழுத்தம் என்றால் என்ன?

வேலைத்தளத்தில் பணியாளர்கள் மேல் மேலதிகாரிகளால் அல்லது சக பணியாளர்களால் கொடுக்கப்படும் மேலதிக வேலைப்பழு மற்றும் எல்லை மீறிய எதிர்பார்ப்பு என்பவற்றால் அவர்களது உடல் மற்றும் மனதில் ஏற்படக்கூடிய அசௌகரியமான நிலையே வேலைத்தள மன அழுத்தம் எனப்படும்.

– சாந்திகம்

## ரோஹிங்ய ஏதிலிகள் முகாம் முன்பாகப் போராட்டத்துக்குத் தடை

யாழ்ப்பாணம், ஒக். 1

ரோஹிங்ய ஏதிலிகள் தங்கவைக்கப்பட்டுள்ள பூசா முகாமை அண்டியுள்ள பகுதிகளில் அவர்களுக்கு எதிராக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குக் காலி நீதிவான் நீதிமன்றம் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மியன்மாரில் இருந்து கடல்மார்க்கமாக வந்த 30 ஏதிலிகள் நீதிமன்ற உத்தரவின் படி தெஹிவளைப் பகுதியில் உள்ள வீட்டில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

தங்கவைக்கபட்டடிருந்த ஏதிலிகள் வீட்டின், முன்பாகக் கடந்த 26ஆம் திகதி பிக்குகள் அடங்கிய குழுவினர் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்து அவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறு கோரிக்கை விடுத்தனர்.

இதனையடுத்து 30 ஏதிலிகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின் படி பூசா தடுப்பு முகாமில் தற்போது தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

ஏதிலிகள் தற்போது தங்கவைக்கப்பட்டுள்ள பூசா தடுப்பு முகாமைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் எவ்வித ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபடுவதற்குக் காலி நீதிவான் நீதிமன்றம் தடை விதித்துள்ளது. (5)

## ஞானசாரருக்கு எதிரான வழக்கு திடீரென மீளப்பெறப்பட்டுள்ளது!

கொழும்பு, ஒக். 1

இனங்களுக்கிடையிலான பதட்டத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டதாக ஞானசார தேரருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கு பொலிஸாரால் மீளப் பெறப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் தொடங்கி பொதுபல சேனா அமைப்பு மற்றும் அதன் பொதுச் செயலர் ஞானசார தேரர் ஆகியோர் தீவிர முஸ்லிம் எதிர்ப்பு பரப்புரைகளை முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடுகளின் பிரகாரம் பொலிஸாரால் தீவிரமாகத் தேடப்பட்ட நிலையில் தலைமறைவாக இருந்த ஞானசார தேரர் கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி காலை கோட்டை நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார்.

பொலிஸார் வழக்கின் முறைப்பாட்டை மீளப் பெற்று இலகுவான சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிந்த காரணத்தால் சில நிமிடங்களில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.


இந்த வழக்கின் விசாரணை கொழும்பு நீதிமன்ற நீதிவான் லால் பண்டார முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஞானசார தேரருக்கு எதிரான வழக்கை மீளப் பெற்றுக் கொள்ளவதாகப் பொலிஸார் நீதிமன்றத்தில் அறிவித்துள்ளனர். (5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L இன் பின்

**A solid foundation for professional growth**

**IPM** Sri Lanka
The Nation's Leader in HRM



பாடநெறி ஆரம்பம்
**October 2017**

மொழி: ஆங்கிலம்
காலம் : 2 மாதங்கள்
பாடநெறிக்கட்டணம் : LKR 19,000/-*

## FCHRM | Foundation Course in Human Resource Management

Educational Pathway: FCHRM → CCHRM → Dip. in HRM → PQHRM → MSc. (2years & 3months)

பாடநெறியினை தொடர்வதற்கான தகைமைகள்
உயர்தர பரீட்சை முடிவுகளுக்கு காத்திருக்கும் மாணவர்கள்

நாடளாவிய தொடர்புகளுக்கு அழையுங்கள்
**011 2199988**

Apply Online
**www.ipmlk.org**

Our Affiliations

**Institute of Personnel Management Sri Lanka (Inc.)**
(Incorporated by an Act of Parliament No. 24 of 1976)
HR HOUSE, No.43, Vijaya Kumaranathunga Mawatha, Colombo 05.

**REGIONAL CENTRES**
கண்டி : 081 2238030
குருநாகல் : 037 2231990
காலி : 091 2231100

**AFFILIATED STUDY CENTRES**
நீர்கொழும்பு : 031 7388001
யாழ்ப்பாணம் : 021 2224142
கம்பஹா : 033 3338480
அனுராதபுரம் : 025 2058150
மட்டக்களப்பு : 065 7572572
திருகோணமலை : 026 7572572

---

## இலங்கையில் முதல் முறையாக

**Haier** Inspired Living

## மறைமுக கட்டணங்கள் இல்லை!

**இப்பொழுது ஹையர் Wi-Fi வளிச்சீராக்கிகளுக்கு எவ்வித மேலதிக கட்டணங்களும் இன்றி**
**2 வருட உத்தரவாதம் இலவசம்!**

Comfort Made Easier

Wi Fi Smart Control

R410A

புதுமையான மற்றும் மலிவான ஹையர் Wi-Fi வளிச்சீராக்கியை நீங்கள் இருக்கும் இடத்திலிருந்தே Wi-Fi ஆதாரத்தில் உங்கள் ஸ்மார்ட்:போன் மூலம் கட்டுப்படுத்த முடியும். இரவு மற்றும் பகல் நேரங்களில் வெப்பநிலையை சரிசெய்து ப்ரீசெட் செய்யவும், முன்கூட்டியே ஒரு வாரத்திற்கு புரோகிரம் செய்யவும் முடியும். மேலும், உங்கள் குழந்தைகள் வீட்டில் தனியாக இருக்கும் சந்தர்ப்பங்களில் வளிச்சீராக்கியின் பயன்பாட்டை கண்காணிக்கவும் முடியும்.



வட்டியில்லா 15 மாத கொடுப்பனவு

வட்டி இல்லை ஜொலி அதிகம்

### 47% துரித குளிரூட்டல்
### 17m + தூரத்திற்கு காற்றோட்டம் வீசும்

| கொள்ளளவு | 9000BTU | 12000BTU | 18000BTU | 24000BTU |
|---|---|---|---|---|
| விலை | ரூ.74,990 | ரூ.79,990 | ரூ.99,990 | ரூ.122,990 |
| விசேட விலை | ரூ.66,990 | ரூ.72,990 | ரூ.90,990 | ரூ.112,990 |
| மாதாந்த தவணை | ரூ.4,743 | ரூ.5,056 | ரூ.6,306 | ரூ.7,743 |

- R410a சூழல் நட்புறவுடைய எரிவாயு
- அரிப்பை எதிர்க்கும் வெளிப்புற அலகு
- Wi-Fi தொழில்நுட்பம்:
- மூட் கட்டுப்பாடு
- விசிறி வேக கட்டுப்பாடு
- டைமர் செயற்பாடு
- வெப்பநிலை கட்டுப்பாடு
- காற்று திசைக்காட்டி இயக்கம்
- பிழை கண்டறிதல்
- ஸ்லீப் கர்வ்: நீங்கள் உறங்கும் நேர அட்டவணைக்கு அமைவாக, முன்கூட்டியே ஒரு வார காலத்திற்கான வெப்பநிலையை சரிசெய்திட முடியும் (22.00 முதல் 6.00)

**20% தள்ளுபடி + 24 மாதங்கள் வரை 0% வட்டியற்ற தவணைத் திட்டம்**

Sampath Cards · Standard Chartered · DFCC BANK · HNB · PAN ASIA BANK

Hotline: 011 5999000
A/C Projects: 0714020800

**Abans**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தார்மீகப் பொறுப்பை விஜயகலா ஏற்கட்டும்!

மாணவி வித்தியா வன்கொடுமை வழக்கு முடிவுக்கு வந்தாலும், அது புதிய திருப்பம் ஒன்றை எடுத்துள்ளது. வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 9 பேரில் 7 பேர் குற்றவாளிகள் என்று தனி அமர்வுத் தீர்ப்பாயம் தீர்ப்பளித்துள்ளது. மூன்று நீதிபதிகள் கொண்ட அந்தத் தீர்ப்பாயத்தின் ஒரு நீதிபதியான மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில், குற்றவாளி களில் ஒருவரை மக்களின் தாக்குதலில் இருந்து காப்பாற்றிய அமைச்சர் ஒருவர், அவரைப் பொலிஸாரிடம் ஒப்படைக்காமல் விட்டமை குற்றவாளி தப்பிச் செல்வதற்கு உதவியதாகவே அர்த்தப்படும் என்று தெரிவித்திருந்தார்.

மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் ஒருவர், கூட்டுப் பாலியல் வன்புணர்வு மற்றும் படுகொலை வழக்கின் குற்றவாளி தப்பிச் செல்வதற்கு உதவினார் என்று நீதிமன்றம் தெரிவித்திருப்பது மிகப் பாரதூரமானது. அதுவும் அதே வழக்கின் மற்றொரு குற்றவாளி கேட்டுக்கொண்டார் என்பதற்காகவே இந்த விடயத்தில் தலையிட்டு, பலர் முன்னிலையில் மற்றைய குற்றவாளியின் பெயரை விழித்த பின்னரே சம்பந்தப்பட்டவரைக் காப்பாற்ற அமைச்சர் முயன்றார் என்பது ஏற்கப்பட முடியாதது.

"இதுபோன்ற சம்பவங்கள் மேற்கு நாடு ஒன்றில் நடந்திருந்தால் இந்நேரம் அந்த அமைச்சர் பதவி விலகவேண்டி வந்திருக்கும். ஆனால், இலங்கையில் மட்டுமே இப்படி குற்றவாளிகள் தப்பிச் செல்ல உதவியவர்கள் பதவியில் தொடர முடிகிறது" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பொருத்தமாகவே சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆனால், இந்த விவகாரம் சமூகத்தின் பெரும் கரிசனைக்குரியதாக இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. தீர்ப்பு வெளியாகி இரண்டு நாள்களின் பின்னரேயாழ். குடாநாட்டின் சில பகுதிகளில் "முழுமையான நீதி வேண்டும்" என்று கோரி சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. நேற்றைய தினம் வடமராட்சியில் கடையடைப்பு நடத்துமாறு இந்தச் சுவரொட்டிகள் கோரிக்கைவிடுத்திருந்தன என்றபோதிலும் அதற்குச் சாதகமான சமிக்ஞைகள் கிடைத்திருக்கவில்லை என்பது கவலைக்குரியது.

கடையடைப்புகள் பொருளாதாரச் சரிவை ஏற்படுத்துபவை. அதனால் அதனைத் தவிர்த்தமை நியாயமானதாக இருந்தாலும் ஒரு கவனவீர்ப்புப் போராட்டம், ஆர்ப்பாட்டம் இப்படி ஏதாவது வழியில்கூட மக்கள் தமது உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கலாம். ஆனால் அது நடைபெறவில்லை. இது தமிழ் இனத்தின் துன்பியல்.


வித்தியா கொலை வழக்கில் சந்தேகநபர்களாக இருந்தவர்களைத் (இப்போது குற்றவாளிகள்) தப்பிக்க விட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் மீது பிறிதொரு வழக்கு நடைபெறுகின்றது. அந்த வழக்கிலும் இராஜாங்க அமைச்சர் விஜயகலாவிடம் பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்திருந்தனர். அதன் பின்னரே வித்தியா கொலை வழக்குத் தீர்ப்பு வெளியானது.

குற்றத்துக்கும் குற்றவாளிகளுக்கும் உடந்தையாக இருப்பதும், குற்றமே என்கிறது சட்டம். அதனடிப்படையில் பார்த்தால், உள்நோக்கம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் கூட, ஒரு குற்றவாளி தப்பிச் செல்வதற்கு உடந்தையாக இருந்தமைக்கான தார்மீகப் பொறுப்பை, அதுவும் நாட்டையே உலுக்கிப்போட்ட, அரச தலைவர் ஒருவர் சம்பவ இடத்துக்கே வந்து பாதிக்கப்பட்ட குடும்பத்துடன் நேரடியாகப் பேசவைத்த ஒரு சம்பவத்தின் கொலையாளி தப்பிக்கத் தெரிந்தோ தெரியாமலோ உதவியதற்குத் தார்மீகப் பொறுப்பேற்று இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் பதவியிலிருந்து தானாகவே நீங்கியிருக்கவேண்டும்.

அப்படி எதுவும் நடக்கவில்லை என்பதும், நீதிமன்றத் தீர்ப்பு ஒன்றில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும், அரசும் அந்த அமைச்சர் மீது எந்தவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதும் நாட்டின் சாபக்கேடு என்பதைத் தவிர வேறு எப்படிச் சொல்லமுடியும்.

இந்த விடயத்தில் குரலை உயர்த்தி நீதியை நிலைநாட்ட வேண்டியது பெண்களுக்கு மட்டுமேயான கடமையல்ல, எல்லோருக்குமான கடமை.

# வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான்



வருடாவருடம், முதலாம் திகதி முதல் 31 ஆம் திகதி வரையான ஒக்ரோபர் மாதம் முழுவதும் வாசிப்பு மாதமாக தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையால் அறிவிக்கப்பட்டு சகல மட்டங்களிலும் வாசிப்புப் பழக்கம் ஊக்குவிக்கப் படுத்தப்படுகிறது. அதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரமாகிறது.

முட.ஈழத்தமிழ்மணி

உலகிலுள்ள சகல மனிதர்களுக்கும் கல்வியறிவானது முக்கியமானதொன்றாகும். எழுதுதல், வாசித்தல், மனதில் பதியவைத்தல், காலவரலாறுகளை, நடக்கின்ற சம்பவங்களை அறிந்து கொள்ளல் ஆகியவற்றுக்கும் வாசிப்பு மிக இன்றியமையாதது.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதியிலிருந்து முப்பத்தோராம் திகதிவரை வாசிப்பு மாதமாக அறிவித்து, மாணவர்களை வாசிப்பில் ஊக்கப்படுத்துவதற்கும், அதன் மூலம் பரந்த அறிவு பெற்றுக் கொள்வதற்கும், வாசிப்புப் பழக்கத்தைப் பழக்கப்படுத்துவதோடு பொதுநூலகங்கள் மற்றும் பாடசாலைகள் மூலமும் அதன் செயற்பாடுகளையும் விழிப்புணர்வையும் உண்டாக்குவதற்குரிய நடவடிக்கைகளை அரசு ஆரம்பித்துள்ளது.

**வாசிப்புப் பழக்கத்தின் தேவை பற்றி முன்னோர்கள் உணர்ந்திருந்தனர்**

மனித மேம்பாட்டுக்கும், அறிவு வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்துக்கும் வாசிப்பு என்பது முக்கியமானதொன்றாகும். வாசிப்பு என்பது ஒரு மனிதனைப் பூரணமாக்கும் என்பது கற்றறிந்தோரின் அனுபவக் கூற்று. இளமையிற்கல்விசிலையில்எழுத்து என்பதும் முன்னோர் வார்த்தையே. மாணவர்கள் சிறந்த நூல்கள், சஞ்சிகைகள், தினசரிப் பத்திரிகைகள் ஆகியவற்றைப் படித்துப் பயன்பெறவேண்டும்.

எவனொருவன் வாசிக்காதவனாக இருக்கின்றானோ, அவன் மனதில் அறியாமை என்ற தூசியே படிந்திருக்கும். உலக மக்களின் ஒரு பகுதியினர் படிப்பறிவில்லாதவர்களாக இருக்கின்றனர். அல்லது வாசிப்பதற்கு நேரம் ஒதுக்கிக் கொள்ள முடியாத நிலையிலிருக்கக் கூடும். இதனால்தான் வாசிப்பின் பெறுமதியை உணர்த்தும் பொருட்டு, தேசிய நூலக ஆவணவாக்கல் சபை ஒக்ரோபர்மாதம் முழுவதையும் வாசிப்பு மாதமாக அறிவித்துள்ளது..

வாசிப்பின் தேவையையும் பெறுமதியையும் உணர்ந்து வாழ்நாள் முழுவதும் வாசித்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற எண்ணம், சிந்தனை ஒவ்வொரு மாணவர்கள் மத்தியிலும் உருவாக வேண்டும் என்ற கருத்து ஒக்ரோபர் மாதத்தில் நடைமுறைப்படுத்தப்படுவது வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்க உதவுகின்றது. வாசிப்பால் ஒவ்வொருவரினதும் அறிவு விருத்தியாகின்றது. நல்லவை பற்றிச் சிந்திப்பதற்கான உந்துதலையும் ஏற்படுத்துகின்றது. அத்தோடு கற்பனை வளத்தை அதிகரிக்கவும் உதவுகின்றது.



**21 ஆம் நூற்றாண்டுக்கு ஈடுகொடுக்க வாசிப்பு என்ற கருவி அவசியம்**

'வாழ்நாள் முழுவதும் வாசித்துக் கொண்டேயிரு' என்ற சொற்றொடரானது, ஒவ்வொருவருக்கும் ஏற்றதாகும். அறிவு என்பது பிரதானமான தந்திரோபாயச் சொத்தாக மாற்றமடைந்துள்ள 21ஆம் நூற்றாண்டுக்கு ஈடு கொடுத்து வாழ்வதற்கு வாசிப்பு என்ற கருவி அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிப்பின் மூலமாக உளநலம் சீரடைவதுடன், பண்பட்ட மனிதனாக மாறவும், சமூகம் பற்றிய விழிப்புணர்வு பெறவும், அறிவு ஆற்றலைப்பெருக்கவும், வாழ்வின் விழுமியங்களை அறிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிட்டுகிறது.

வாசிப்பு என்பது ஒரு மனிதனின் குழப்பமான மனநிலையை அகற்றி நன்னிலைப்படுத்தவும் உதவுகின்றது. மனதில் எவ்வளவு துன்பங்கள், தாங்க முடியாத துயரங்கள் இருந்தாலும், நாளாந்த தினசரிப் பத்திரிகைகளையோ அல்லது அறிவு சார் விடயங்களையோ, நாவல்களையோ அமைதியான சூழலிலிருந்து வாசிக்கின்றபோது மனதில் குடைந்து கொண்டிருந்த கடந்த கால நினைவுகள் அல்லது வலிகள் ஒதுங்கிக் கொள்ள, புதிய விடயங்கள் மனதில் இடம்பிடித்துக் கொள்வதற்குரிய சந்தர்ப்பத்தை வாசிப்புஏற்படுத்திக்கொடுக்கிறது.

வாசிப்பின் சிகரங்களாக விளங்கிய ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, அப்துல் கலாம் போன்ற அரசியல் தலைவர்கள் மற்றும் கல்கி கிருஸ்ணமூர்த்தி, அகிலன், சாண்டில்யன், எண்டமூரி கனதுர்க்கா, சுஜாதா போன்ற எழுத்தாளர்கள் உருவாகுவதற்கு அவர்கள் வாசித்தறிந்தநுண்ணறிவுகளே காரணமாக இருந்துள்ளன என அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

அனைவருக்கும் வாசிக்கின்ற உரிமை உண்டு . நூலகங்கள் கிராமங்களூடாக மாநகரங்கள்வரை இன்றைய காலத்தில் வியாபித்திருக்கின்றன. வாசிப்பு மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் ஆக்கத்திறனையும் நல்லொழுக்கத்தையும் மேலுயர்த்துவதற்கு உதவுகிறது.

> வாசிக்கக் கற்றுக்கொள்கின்றவன், வாழவும் கற்றுக்கொள்கின்றான். இன்றைய மாணவர் உலகம் நன்கு வாசித்தறிந்து கொள்வதற்கு வாசிப்பு மாதமாகிய ஒக்ரோபர் மாதத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சிறுவயதில் சுயவாசிப்பில் ஈடுபடும் பிள்ளை எதிர்காலத்தில் சிறந்த மேதையாக விளங்குவான்.
> வாசிப்புக்கு வரம்புமில்லை; எல்லையுமில்லை. இணையத்தளத்தின் ஊடாக அறிவைப் பெருக்கிக் கொள்ளமுடியாது.வாசிப்பின்போதுநன்குஅறிந்து உள்வாங்கப்படுகின்ற பல ஆக்கபூர்வமான விடயங்கள், மனதில் நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும் என்பதில் எந்தவிதச் சந்தேகமுமில்லை



**கருவறையிலிருந்து கல்லறைவரை கற்றல் தொடர்கிறது**

கருவறையிலிருந்து கல்லறைவரையும் கற்றல் தொடர்கிறது என்பார்கள். அத்தகைய கற்றல் பயணத்தில், வாசிப்பே முதன்மை இடம்பெறுகின்றது. வாழும் காலமெல்லாம் வாசித்துக் கொண்டே வாழ்வை வளமாக்கும் நுட்பங்களை அறிந்து தெரிந்து வாழ்தலே வாழ்க்கை எனலாம்.

இன்றைய நவீன யுகத்தில் வாசிப்பு அலுத்துக் கொள்கின்றதொரு விடயமாக ஆகி வருகின்றது. நூல்களை வாசிப்பதிலிருந்து இன்றைய இளைய சமுதாயத்தினர் விலகி நவீன தகவல் தொடர்பு சாதனங்களுக்குள் நுழைந்துவிட்டனர்.

தொலைக்காட்சி, கணனி, முகப்புத்தகம், போன்றனவற்றிலிருந்து முழு வாசிப்புப்பயன்பாட்டை மாணவர்களால் பெற்றுக்கொள்ள முடியாது. சிறந்த நூல்களும் சிறந்த ஆசிரியர்களே.

மாணவர்கள் சிறந்த நூல்கள் சஞ்சிகைகளை நூலகங்களில் தேடிச் சென்று வாசிக்கப்பழகிக்கொள்ளல் வேண்டும். மாணவர்களது அறிவுப்பசிக்குக் கணனி, முகப்புத்தகங்களால் தீனி போட முடியாது. அறிவுப் பசிக்குத் தீனிபோட பாடசாலை நூலகங்கள், பொதுநூலகங்கள், பல்வேறுபட்ட நூலகங்களும் மக்களோடுஇணைந்திருக்கவேண்டும்.

வாசிப்பதில் தினமும் ஈடுபடுதல் என்பதே சிறப்பாகும். நெல்லிக்கனியை உண்ணும்போது அது கசப்பான அல்லது புளிப்பான தன்மையை ஏற்படுத்தினாலும், அதனை உண்டு முடித்தபின், இனிப்பும் இன்பமும் தாமதமாகவே ஏற்படுகின்றனவல்லவா? அதனைால்தான், நல்ல ஆக்கங்களைச் சிறிது வாசித்துவிட்டு இது சுவைக்கவில்லையெனத் தூக்கியெறிந்துவிடாது தொடர்ந்து பொறுமையுடன் வாசித்து முடிக்க வேண்டும்.

அறிவுக்கு விருந்தூட்டும் அனுகூலமானவைகளைப் பொறுமையுடன் வாசிக்கவேண்டும். வாசிக்கும் போது கண்கள் மட்டுமோ அல்லது வாய்மட்டுமோ வாசிக்கக்கூடாது. ஆழமாகவும் நிதானமாகவும் விடயத்தை உள்வாங்கி இதயத்தில் பதித்துக்கொள்ளல்வேண்டும். மேலோட்டமாகவாசிப்பதென்பதுநீண்டநாள்களுக்கு மூளையில் நிற்காது.

**‘மனிதர்கள் கல்வி கற்க வேண்டும்; ஏனெனில் அவர்கள் மனிதர்கள்’ என்பது ரஷ்யப் பழமொழி**

அறிவை வளர்ப்பதற்கு அனைவரும் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். ‘மனிதர்கள் கல்விக்கற்க வேண்டும்; ஏனெனில், அவர்கள் மனிதர்கள்’ என்கிற ரஷ்யப்பழமொழிக்கேற்பஎம்மைத் துலங்கவைப்பது அறிவுசார் கல்வியேயாகும். அந்தக்கல்விக்குஅடிப்படையாக அமைவது தேடலின் ஊடான வாசிப்பே என்பது ஆய்ந்தறிந்த உண்மையாகும். இதனையே திருவள்ளுவர் ‘தொட்டனைத்தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத்தூறும் அறிவு’ என்கிறார். நூல்களைத் தேடி வாசிப்பை நேசித்து, கற்கவேண்டியதை கசடு அறக் கற்று, அறிவு படைத்தவர்களாக உயர உறுதுணையாக இருப்பது பொது நூலகங்களேயாகும்.

2004 ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையானது ஒக்ரோபர் மாதத்தை வாசிப்பு மாதமாக அறிவித்து நாடெங்கிலும் உள்ள பொது நூலகங்கள் ஊடாக சமூகத்தில்வாசிப்புவிழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. பாடசாலை மாணவர்களிடையே தேடலினூடாக வாசிப்பின் அவசியத்தை கருத்திற்கொண்டு ஒரு மாதம்வரையில் பொது அறிவு, கவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டிகளை பொதுநூலகங்கள் ஊடாக நடத்தியும் பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

வாசிக்கக் கற்றுக்கொள்கின்றவன் வாழவும் கற்றுக்கொள்கின்றான். இன்றைய மாணவர் உலகம் நன்கு வாசித்தறிந்து கொள்வதற்கு வாசிப்பு மாதமாகிய ஒக்ரோபர் மாதத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். சிறுவயதில் சுயவாசிப்பில் ஈடுபடும் பிள்ளை, எதிர்காலத்தில் சிறந்தமேதையாக விளங்குவான். வாசிப்புக்கு வரம்புமில்லை; எல்லையுமில்லை.

இணையத்தளத்தின் ஊடாக அறிவைப் பெருக்கிக் கொள்ளமுடியாது. வாசிப்பின்போது நன்கு அறிந்து உள்வாங்கப்படுகின்ற பல ஆக்கபூர்வமானவிடயங்கள், மனதில்நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்கும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. மாணவர்கள் வாசிப்பு மாதமாகிய ஒக்ரோபர் மாதத்தை நன்கு பயன்படுத்தி வாசிப்புப் பழக்கத்தை மேம்படுத்திக்கொள்ளவேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### அரசமைப்பு இடைக்கால அறிக்கை தமிழர்களை திருப்திப்படுத்துமா?

கடந்த பல தசாப்த காலமாக தமிழ்மக்கள் சிங்கள இனத்திடம் இழந்த தமது தன்னாட்சி உரிமை, அரசியல் உரிமை, ஏனைய மொழி, நில, சமய உரிமைகளுக்காக அகிம்சை வழியில் போராடினர். கடந்த முப்பது வருட காலமாக, ஆயுத ரீதியான போராட்டத்திலும் ஈடுபட்ட தமிழினம், பன்னாட்டுச்சூழ்ச்சிகள், துரோகங்களால் பலவழிகளில் ஏமாற்றப்பட்டுதமதுபோராட்டங்களில்தோல்வியடைந்து, சிங்கள இனவெறி அரசுகளின் பாரபட்சமான திட்டமிட்ட செயற்பாடுகளால்திக்குமுக்காடி, தடுமாறி விரக்தியுடன் வாழ நேர்ந்துள்ளது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும், நிம்மதியாக, கூடியபட்ச, பிளவுபடாத இலங்கைக்குள் தன்னாட்சி, வடக்கு - கிழக்கு இணைந்த தாயகப் பிரதேசத்துள் அமைதியாகவாழலாம் என்ற தமிழ் பேசும் மக்களின் தமிழ்த் தலைமைகளின் எதிர்பார்ப்புக்கும் விருப்புக்கும் மாறாக தற்போது அரசால் இலங்கை அரசமைப்பு மறுசீரமைப்பு சபையால் முன்வைக்கப்பட்ட இடைக்கால அறிக்கையில் தமிழர் தரப்பு ஏமாறும் வகையிலான பெருமளவிலான அம்சங்களே இடம்பெற்றுள்ளன. தமிழ் மக்களை இறைவன்தான் காப்பாற்ற வேண்டும் என தீர்க்க தரிசனத்துடன் தந்தை செல்வா தமது கடைசிக் காலத்தில் கூறிய வார்த்தைகளே இன்று எமக்கு நினைவுக்கு வருகின்றன.

பிளவுபடாத இலங்கைக்குள் நியாயமான, நீதியான, உயர்ந்த பட்ச அதிகாரத்தைபுதிய அரசமைப்பு ஊடாகவழங்க மனம் இல்லாத சிங்கள, பௌத்த, மேலாதிக்கச் சக்திகள், சிங்கள் மக்களின் எதிர்ப்பைச் சந்திக்கக் கூடாது; தமது அரசியல் இருப்புக்கு பங்கம் ஏற்படக்கூடாது, என்ற குறுகிய நோக்குடன் செயற்படமுனைந்துள்ளன. அரசமைப்பு சீர்த்திருத்தச் சபையின், இடைக்கால அறிக்கையையிட்டு தமிழினம் மீண்டும் சிந்திக்கவும் கவலைப்படவும் வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. பொறுமையாய் இருங்கள்; எதையும் எடுத்தோம்; கவிழ்த்தோம் என்று செயற்படாமல் பொறுமை காக்குமாறு தமிழ்த் தலைமைகள் கூறுகின்றனர். இனவெறி அரசுகளிடம் தமிழர் தரப்பு கடந்த காலத்தில் ஏமாந்தது போல், இப்போதும் ஏமாறாமல், அனைத்துத் தரப்பு தமிழ்த் தலைமைகளையும் அரசமைப்பு வரைவு விடயத்தில் ஒற்றுமையுடன் அரசமைப்பு சீர்திருத்தஇடைக்காலஅறிக்கையின் சாதகபாதகங்கள் குறித்து எதிர்காலத் தமிழினத்துக்கு வழிகாட்டி, கூடி ஆராய்ந்து, உரிய முடிவுகளை மேற்கொண்டு உதவுமாறு தயவுடன் கோருகிறேன்.

**வ.க. ஜெயபாலன், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

உதயன் நித்திய சுகம் 338
உடலே கோயில்

ச.சுதாகரன்

# நீரிழிவு

## நோயையும் உணவுப்பழக்கங்களையும் அறிந்துகொள்ளல்



நீரிழிவு நோய் குறித்த வகைப்படுத்தலை மருத்துவர்கள் இருவாறாகப் பெயர் குறிப்பிடுகின்றனர். அவை வகை 1, வகை 2 என அமையும். வகை ஒன்றில் 5 தொடக்கம் 10 வீதமும் வகை இரண்டில் 80 தொடக்கம் 90 வீதமும் காணப்படுகின்றன.

நீரிழிவைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்
01. உணவுக் கட்டுப்பாடு
02. குருதிப் பரிசோதனை
03. உடற்பயிற்சி
04. மருந்து (குளிசை) ஊசிமருந்து

**நோயின் குணங்குறிகள்**
உடல்மெலிவு, அதிகரித்த தண்ணீர்த் தாகம், அதிகமான பசி, அடிக்கடி சிறுநீர் வெளியேறல், உடற்சோர்வு, மங்கலான பார்வை, காயங்கள் எளிதில் மாறாமை, கால்களில் எரிச்சல் போன்ற அறிகுறிகளை நீரிழிவு நோயின் அடிப்படை குணங்குறிகளாகக் குறிப்பிட முடியும்.

**பக்கவிளைவுகள்**
நரம்புத்தளர்ச்சி, கண்பார்வை இழப்பு, இதயம் பாதிப்படைதல், மாரடைப்பு ஏற்படல், சிறுநீரகப் பாதிப்பு, மூளையில் குருதிக்குழாயில் அடைப்பு ஏற்பட்டு பக்கவாதம் ஏற்படுதல் போன்ற பக்க விளைவுகள் நீரிழிவு நோயின் காரணமாக ஏற்படும்.

**உணவுக் கட்டுப்பாடு**
குருதியில் குளுக்கோஸின் அளவை குறைப்பதில் உணவுக் கட்டுப்பாடு பெரும் பங்காற்றுகிறது. குறிப்பாக சரியான நேரத்தில் என்ன உணவைச் சாப்பிட வேண்டும், எவ்வளவு சாப்பிட வேண்டும் போன்ற விடயங்களை அறிந்து வைத்திருப்பதன் மூலம் ஒருவரின் வாழ்வை ஆரோக்கியமான முறையில் கட்டமைத்துக்கொள்ள முடியும். ஒருவர் உண்ணும் உணவில் பல்வேறு மூலக்கூறுகள், சத்துக்கள் காணப்படுகின்றன. அவை மாப்பொருள், கொழுப்பு, விற்றமீன்கள், தாதுப் பொருள்கள், புரதம் போன்ற சத்துக்களாகவும் நீர் மூலக் கூறுகளாகவும் அமைந்திருக்கும்.
இவற்றுள் மாப்பொருள் சக்தியையும், புரதம் உடலுக்கு வளர்ச்சியையும், கொழுப்பு உடலுக்குச் சக்தியையும் வழங்குகின்றது. மேலும் ஒருவர் மாப்பொருள் உள்ள உணவை உண்ணும் போது அவை குருதியில் குளுக்கோஸின் அளவை உயர்த்துகின்றன. மேற்படி குளுக்கோஸானது இன்சுலினின் உதவியுடன் உடலில் உள்ள ஒவ்வொரு கலங்களுக்கும் சென்று சக்தியை வழங்குகின்றது.
எனினும் மாப்பொருள் ஆனது பல்வேறு வகைகளில் காணப்படுகின்றது. அவை ஒரு சக்கரைட்டு, இரு சக்கரைட்டு, பல்சக்கரைட்டு என அமைந்திருக்கும். இவற்றின் தன்மைக்கேற்ப சில உணவுகள் வேகமாக உடைந்து குருதியில் குளுக்கோஸின் அளவை உயர்த்துகின்றன. சில உணவுகள் உடைந்து குளுக்கோஸாக மாறவதற்கு நீண்டநேரம் ஆகின்றன. இதனால் குருதியில் குளுக்கோஸின் அளவு மெதுவாக உயர்கின்றது.

**உணவுகளின் கிளைசிமிக் குறிகள்**
(Glycaemic Index)
கிளைசிமிக் குறியீட்டை பொறுத்தே உணவுகள் வகைப்படுகின்றன. அதிக கிளைசிமிக் குறியீடு உள்ள உணவுகள் எளிதில் சமிபாடைந்து விரைவாகக் குருதியில் குளுக்கோஸின் அளவை உயர்த்துகின்றது. உதாரணமாக சீனி, தேன், வெல்லம், இனிப்புகள், குளிர்பானம், கேக் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். குறைந்த கிளைசிமிக் குறியீடு உள்ள உணவுகள் மெதுவாக சமிபாடைந்து மெதுவாகக் குருதியில் குளுக்கோஸின் அளவை உயர்த்துகின்றன. உதாரணமாக தானியங்கள், காய்கறிகள், கீரைகள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். நீரிழிவு நோயாளிகள் குறைந்த கிளைசிமிக் கொண்டுள்ள உணவுகளை உள்ளெடுப்பதே சிறப்பானது.

**அதிக மாச்சத்துள்ள உணவுகள்**
நாம் உண்ணும் உணவில் மாப்பொருள் பெரும்பகுதியாக உள்ளது. உதாரணமாக சோறு, பிட்டு, இட்லி, பரோட்டா, அப்பம், உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு போன்றவை எளிதில் சமிபாடு அடைந்து குருதியில் குளுக்கோஸின் அளவை அதிகரிக்கின்றன. இவை அதிக கிளைசிமிக்கை கொண்டிருக்கும். இவற்றை நீரிழிவு நோயாளிகள் அளவுடன் உண்ணுதல் நன்று.

**மிதமான மாச்சத்துள்ள உணவுகள்**
குறைந்த கிளைசிமிக் கொண்ட உணவு வகைகள் மிதமான மாச்சத்துள்ள உணவுகளாகக் குறிப்பிடப்படுகின்றன. காய்கறிகள், கீரை வகைகள், தானியங்கள், சிறுதானியங்கள், பருப்புவகைகள், கடலை போன்ற உணவு வகைகளை உள்ளெடுப்பதன் மூலம் நீரிழிவு நோயாளிகள் குருதியில் குளுக்கோஸின் அளவைக் கட்டுப்பாடாக வைத்திருக்க முடியும். இவை கொண்டுள்ள அதிக நார்ச்சத்துக் காரணமாகவே இது நிகழ்கிறது.

**நார்ச்சத்துள்ள உணவுகள்**
நார்ச்சத்து என்பது உணவால் சமிபாடு அடைய முடியாத ஒரு வகையான மாச்சத்து. மனிதக் கழிவின் மூலம் இவை வெளியேற்றப்படுகின்றன. முதலில் இவை உடலுக்குச் சக்தியைத் தராதவை என்றே கருதப்பட்டது. ஆனாலும் மருத்துவ ஆய்வுகளின் அடிப்படையில் இவை எண்ணற்ற நன்மைகளைக் கொண்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவை வருமாறு,
- குருதியில் கொழுப்பின் அளவைக்குறைக்கும்.
- குருதியில் குளுக்கோஸின் அளவு திடீர் என அதிகரிப்பதைக் தடுக்கும்.
- வயிறு நிறைவுத் தன்மையை அளிக்கிறது.
- மிக இலகுவான குடல் இயக்கத்துக்கு உதவுகிறது.
- உடல் நிறையைக் குறைப்பதற்கு உதவுகிறது.

முழுத்தானியங்கள் கொண்டு (தீட்டப்படாத அரிசியல்) செய்யப்பட்ட உணவுகள், தவிடு நீக்கப்படாத கோதுமை, அரிசிமாவில் செய்யப்பட்ட உணவுகள் (ஆட்டாமா), நவதானிய உணவுகள், பயறு, கடலை, கௌப்பி, உழுந்து, நார்ச்சத்து அதிகமுள்ள பழங்களான கொய்யா, திராட்சை, நெல்லி, நாவல், பச்சைக் காய்கறிகள் போன்றன நார்ச்சத்து உணவு வகையினுள் உள்ளடங்குகின்றன. இந்த நார்ச்சத்தானது எமது குடலில் இருந்து மெதுமெதுவாக குளுக்கோஸை குருதியில் கலப்பதற்கு உதவுகின்றது. இதனால் சடுதியாக குருதியில் குளுக்கோஸின் அளவு உயர்வதைத் தடுக்கிறது. எனவே நாம் உண்ணும் உணவில் ஒரு பகுதி நார்ச்சத்து உள்ள உணவாக இருக்க வேண்டும். மூன்று வேளையும் குறைந்தது 100 கிராம் அளவுள்ள நார்ச்சத்து உணவினை உண்பது சிறப்பானது.

**உள்ளெடுக்க வேண்டிய மாப்பொருள் அளவு**
மாப்பொருள் உண்ணும் அளவு ஒருவருடைய ஊட்டச்சத்துத் தகுதியைப் பொறுத்து மாறுபடும். உதாரணமாக [illegible] நிறை, [illegible] நிறை, அதிக நிறை, பருமனான [illegible] வயது, [illegible] அளவு, பாலினம் மற்றும் உள்ளெடுக்கும் மருந்துகள் போன்றவற்றில் தங்கியுள்ளன. அத்துடன் ஒருவருக்குத் தேவையான கலோரி உணவில் 60 தொடக்கம் 65 வீதம் வரை மாப்பொருள் இருக்க வேண்டும்.

**தடையின்றி எடுக்கக்கூடிய உணவுகள்**
குருதியில் குளுக்கோஸின் அளவை அதிகப்படுத்தாத உணவுகளை எடுக்கவேண்டும். சீனி இல்லா தேநீர், எலுமிச்சம்பழச்சாறு, தெளிந்த சூப் வகைகள், பச்சைக்காய்கறிகள், கீரைவகைகள் மற்றும் குறைந்த மாச் சத்தும் குறைந்த கலோரியும் உள்ள உணவுகள் போன்றவற்றை உள்ளெடுப்பதன் மூலம் நீரிழிவு நோயாளிகள் ஆரோக்கியமான நிலையில் வாழலாம்

**நீரிழிவு நோயாளிகள் உணவு எடுக்கும் முறை**
நீரிழிவு நோயாளிகள் நேரம் தவறாமல் உணவு எடுத்தல் அவசியம். மூன்று வேளை உணவு அத்துடன் இரண்டு வேளைக்கு இடையில் சிறிய சத்தான தீன் பண்டங்களை எடுக்க வேண்டும். இன்சுலின் எடுப்பவராக இருப்பின் உணவும் ஊசி மருந்தும் சரியான நேரங்களில் எடுக்கப்பட வேண்டும். நீண்ட நேர உணவு இடைவேளைகளைத் தவிர்க்க வேண்டும். உங்களுடைய காலை உணவை தவிர்க்கக் கூடாது. இரவு உணவுக்குப் பின்பும் படுக்கைக்கு போகமுன்பும் சிறிய சத்தான தீன்பண்டங்களை எடுக்க வேண்டும். இதன்மூலம் குளுக்கோஸின் அளவு குறைவதைக் தவிர்க்கலாம்.

**குருதியில் குளுக்கோஸின் அளவு குறைதல்**
கைபோ கிளைசீமியா (Hypo Glycaemia) நிலைக் குருதியில் குளுக்கோஸின் அளவு 70 மில்லி கிராமுக்கு குறையும் போது இந்த நிலை ஏற்படும். இதற்குப் பலகாரணங்கள் உள்ளன. உதாரணமாக உங்கள் உணவை தாமதமாக எடுத்தால் சில நேரங்களில் அதிகப்படியான உடற்பயிற்சி அல்லது இன்சுலின் எடுத்துக் கொண்டு தாமதமாக உணவு எடுத்துக் கொண்டாலோ, உடலில் தொற்றுக்கள் ஏற்பட்டாலோ இந்தநிலை ஏற்படலாம். இந்தச் சந்தர்ப்பத்திலே நோயாளிக்கு வியர்த்தல், தலைசுற்றுதல், சுயஉணர்வு இல்லாமை, நடுக்கம் போன்றன ஏற்படலாம்.
இதன்போது குருதியில் குளுக்கோஸானது 70 மில்லி கிராமுக்குக் கீழ் குறைந்தால் (15 mg - 3 teaspon) 3 தேக்கரண்டி குளுக்கோஸ் எடுத்துக்கொள்ளவும். 10 நிமிடம் கழித்து மீண்டும் குருதியில் குளுக்கோஸின் அளவை சரிபார்க்கவும். தொடர்ந்து குறைவாக இருப்பின் உங்கள் வழக்கமான உணவு அல்லது சிறிய சத்தான தீன் பண்டங்களை 30 நிமிடங்களுக்குள் எடுத்துக்கொள்ள வேண்டும். எங்கு பயணித்தாலும் நீங்கள் உங்களுடன் (குளுக்கோஸ் அல்லது இனிப்பு) ஏதாவது இனிப்பு வகைகளை எடுத்துச் செல்வது பாதுகாப்பானது.

தாதிய உத்தியோகத்தர், நீரிழிவு சிகிச்சை நிலையம்,
யாழ். போதனா மருத்துவமனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு அம்சம் - 01.10.2017

சூரியகாந்தி
உதயன்



பணத்தால் நிறையும் 'பாத்ரா' 25



2500 வருடங்களுக்கு முன்பிருந்த நாக வழிபாடு 31



இந்த மானிடமே விறகுமாகி... 29



32 வாழ்வியலை சிதைக்கும் சாதியம்

# பனம்பழம் - 5/= பனம் விதை - 1/=

கட்டுரை

ஜெ.காயா

"பனங்கொட்டைகளைப்பொறுக்கிஎடுத்துப்பாத்திபோடுறது ஒண்டும்கஸ்ரமானவேலையில்ல. அன்றாடம்பொறுக்கிற கொட்டைகளைச் சேர்த்துக் குவிச்சண்டு வருவன். பினாட்டுக்கோ இல்லாட்டிப் பனங்காய்ப் பணியாரம் சுடவோ களி பிளிஞ்செடுக்கிற கொட்டைகளையும் சேர்த்துக் குவிப்பன். பனங்காய்விழத்தொடங்கிறஆரம்பத்திலவிழுந்தகொட்டைகள் முதலில முளை விடத் தொடங்கீரும். முளை விட்டிருக்கிற கொட்டைகளைத் தனியாக எடுத்து 'ஆடிக் கொட்டை' எண்டு அதுகளை ஆடி, ஆவணி மாசங்களில பாத்தி போடுறது.

பிறகுமழைபொய்யத்தொடங்கிறகாலத்திலஎல்லாக்கொட்டைகளையும் சேர்த்துத் தனிப் பாத்தியாப் போடுவன். இதில எங்களுக்குச் செலவொண்டும் இல்ல. பராமரிக்கிறது, மருந்தடிக்கிறது எண்டு ஒரு வேலையும் இல்ல. ஆறு, ஏழு மாசங்கள் கழிச்சுக் கிழங்கு புடுங்கத் தொடங்கீருவம். அந்தக் காலத்தில நாலாயிரம், ஐயாயிரம் கொட்டைகள் சேர்த்து நாலைஞ்சு பாத்தி போடுவன். இப்ப முந்திமாதிரி என்னால ஏலாது. இந்தமுறை ஆயிரம், ஆயிரத்து ஐஞ்நூறு கொட்டை வரும். சின்னனா ரெண்டு பாத்தி போட்டிருக்கிறன்" என்கிறார் வேலணையைச் சேர்ந்த விநாயகமூர்த்தி.

அவருக்கு அறுபது வயதிருக்கும். அவரும் மனைவியுமாகப் பாத்தி போட்டுக்கொண்டிருக்கும் நேரமும், பனம்பழம் ஒன்றை ஐந்து ரூபாவுக்கும் அதன் விதை ஒன்றை ஒரு ரூபாவுக்கும் கொள்வனவு செய்யப்போவதாகச் செய்தி வெளிவந்த நேரமும் பார்த்து எனது சந்திப்பும் நிகழ்ந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இயற்கையோடு இணைந்திருக்கிறார் விநாயகமூர்த்தி

விநாயகமூர்த்தி, பாத்தி போடுவதற்காக அந்தத் தரையைச் சிறிய சதுர வடிவில் மேடாக உயர்த்தி இருக்கிறார். அதன்மேல் பனம் விதைகளை அடுக்கிக்கொண்டிருக்கிறார். அவருக்கு அண்மையாக அமர்ந்திருக்கும் அவருடைய மனைவி லீலாவதி, விதைகளைத் தெரிந்தெடுத்தும், பின ணந்திருக்கும் அவற்றைத் தனித்தனியாகப் பிரிந்தும் கணவனுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார். இயற்கையோடு ஒன்றித்து வாழ்ந்து கொண்டிருக்கும் விநாயகமூர்த்தியின் உடல் இசைவுகள் பனம்விதகளோடும் அவற்றின் முளைகளை ஏந்தக் காத்திருக்கும் அந்த்த தரையோடும் ஒட்டி உறவாடியபடி இருந்தன. அவரிடம், "இப்ப பனம்பழம் ஐஞ்சு ரூபாய்க்கும், பனங்கொட்டை ஒரு ரூபாய்க்கும் எடுக்கிறாங்களாமே ஐயா…" என்று இழுத்தேன்….

### ஐயாவும் ஆமோதித்தார்

விநாயகமூர்த்தி ஐயா தளர்ந்த உடலைக் கொண்டிருக்கிறார். ஆனாலும் உடல் களை து நன்றாக வேலை செய்கின்றார். அவர் போன் றவர்களைத் தவிர தற்போது எவரும் இப்படியாகப் பனங்காய் புறக்கியெடுப்பதிலும், பாத்தி போட்டுக் கிழங்கெடுப்பதிலும் நாட்டம் காட்டுவதில்லை என்றும் சொல்லிக்கொண்டார். நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லவும் அவர் தயங்கவில்லை…

"அந்தக் காலத்தில ஒடியல் மாத்தான் சாப்பாடு. பனங்களியில வித விதமான சாப்பாடு செய்வம். அப்ப பனங்களியில உடுப்புத் தோய்ச்சதாகவும் அப்பு, ஆச்சியாக்கள் கதைச்சுக் கொண்டது ஞாபகமிருக்கு. ஒடியல் கூழ், பனாட்டு, பனங்காய்ப் பணியாரம், கிழங்கு எல்லாமேதான் எங்கட வழமையான சாப்பாடு. இந்தக் காலத்தில பனாட்டையும், ஒடியலையும், கிழங்கையும், புளுக்கொடியலையும் வித்துச் சுட்டுச் சீவியம் போக்குறம். இந்த முறை பாத்தியில ஒரு… ஆயிரத்து ஐஞ்நூறு கிழங்குதான் விழும். பிடுங்கிச் சந்தைக்குக் கொண்டுபோனா ஒரு ரூபாயோ ரெண்டு ரூபாயோதான் போடுறாங்கள். ஆகக் கூட ஐஞ்சு ரூபா வரைக்கும் வித்திருக்கிறன். ஆனா இப்ப ரெண்டு, மூண்டு வருசமா விலை ரெண்டு, ரெண்டர்வாய்க்குக் கூடுறதில்லை. தொகையாப் பிடுங்கிக் குடுத்து முடிஞ்சாப்பிறகு மிஞ்சிக்கிடக்கிற நூறு, இருநூறக் கொண்டுபோய்க் குடுக்கிற காலத்தில கிழங்குக்குத் தட்டுப்பாடு வந்திரும்.

அப்பேக்க மாத்திரம், ஐஞ்சுரூபா அப்பிடி எடுப்பாங்கள். பனங்கொட்டைகளை அள்ளிப் பாத்தி போட்டு, அது கிழங்காகும் வரைக்கும் காத்திருந்து, பிறகு கிழங்கு பிடுங்கி, அதை வெட்டி, துப்புரவு செய்து வாகனங்களில ஏத்தியிறக்கிச் சந்தைக்குக் கொண்டுபோய் ஒரு ரூபா, ரெண்டு ரூபாவுக்கு விற்கிறதைக் காட்டிலும் கொட்டையை ஒரு ரூபாவுக்கு விற்கிறது இலாபம் போலதான் கிடக்கு…" என்று அவரும் இழுக்கத்தான் செய்தார். அவரின் இழுவைக்குப் பின்னால் இருப்பவற்றை என்னால் ஊகித்துக் கொள்ள முடிந்தாலும், அதையும் அவரே கூறி முடித்தார்.


### இடத்து இடம் சேகரிப்பு நிலையங்கள் தேவை

"காரைநகரிலையும் இன்னுமொரு இடத்திலையும் தான் பனங்கொட்டை எடுக்கினமாம். இஞ்சயிருந்து வாகனம் புடிச்சு ஏத்திக் கொண்டு போறதெண்டால் அதுவும் கஸ்ரம் தான். எங்கட இடங்களுக்கு வந்தோ இல்லாட்டி எங்கட எங்கட வசதிக்கு ஏற்ற மாதிரி கிட்டவா எங்காவது கம், அதோட பனம் பழத்துக்கு உமிழ்(மூடி) கழன்டிருக்கக் கூடாது.

## பயனாளிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் சில

நாளென்றுக்கு மிகக் குறைந்த அளவில் சேகரிப்பவர்களின் பனம் பழங்களை பனை அபிவிருத்தி சபை உரிய இடத்துக்கு வந்து எடுக்காது. பயனாளி அவற்றைக் கொண்டு சென்று கையளிப்பது என்பது சிக்கலானது. குறிப்பிட்டளவு பழங்கள் சேரும்வரைக் காத்திருந்து கையளிப்பதும் சாத்தியமற்றது. அத்தோடு மரத்திலிருந்து விழுந்தால் மாத்திரமே பனம் பழங்களைப் பெற முடியும். மரத்தில் ஏறிப் பறிக்கப்படுவதில்லை.

அவ்வாறாக விழும் பழங்களின் உமிழ் கழன்று போகும், வெடிப்புகள் உண்டாகும், தரையில் விழுவதும் தவிர்க்கப்பட முடியாதது. இவை பனை அபிவிருத்தி சபை எதிர்பார்க்கும் உமிழ் கழராத, வெடிக்காத, மண் புகாத பழங்களாக அமையாது.



### பனை அபிவிருத்தி சபையின் உற்பத்தி முகாமையாளர் பா. ரஜீபரனிடம் இந்த அறிவிப்புப் பற்றி வினாவியபோது…

"பனம் பழங்களைப் பெற முடிவு செய்திருப்பது, பனங்களியைப் பெற்று ஐஸ்கிறீம், யோகட், யூஸ் போன்று அதிலிருந்து செய்யக் கூடிய பொருள்கள் அனைத்தையும் உற்பத்தி செய்வதற்காகவே. பனம் விதைகளைப் பெற்றுக்கொள்வது, பாத்தியிலிட்டு ஒடியல், கிழங்கு, புளுக்கொடியல்களை உற்பத்தி செயவதற்காகவே. பனம் விதைகளைச் சேகரிக்காமல், கவனிக்காமல் விட்டிருப்பவர்களுக்கு இது ஊக்கமளிக்கும் என்று நம்புகிறோம்.

இன்று பனம் பொருள்களுக்கு இருக்கின்ற அதிகரித்த கேள்விகளைப் பூர்த்தி செய்யவேண்டியிருக்கின்றது. கடந்த காலங்களில் பெற்றுக்கொண்ட பனம் பண்டங்களளின் அளவை இந்த வருடம் அதிகரித்துக்கொள்ள வேண்டும் எனும் கடப்பாடும் எங்களுக்கிருக்கின்றது. இந்த அறிவிப்பின் பின்னர் இது வரைக்கும் ஒரு சிலரே இவ்விடயத்தில் ஈடுபாடுகாட்டியிருக்கின்றனர்"

**கேள்வி -**

"தங்களிடமுள்ள பனம் விதைகளையோ பழங்களையோ பனை அபிவிருத்திச் சபை அறிவித்துள்ள இடங்களுக்குக் கொண்டுவந்து சேர்ப்பதில் அவரவருக்கு நடைமுறைப் பிரச்சினைகள் சில இருக்கின்றன. (போக்குவரத்து முதன்மையானது) அதைக் கையாளுவதற்கு தாங்கள் ஏதாவது வழிவகைகளை வைத்திருக்கிறீர்களா?

**பதில்**

"குறிப்பிட்டளவு தொகையில் ஒரு இடத்தில் விதைகள் கிடைக்குமாயின் அங்கு சென்று எங்களால் அவற்றைக் கொள்வனவு செய்ய முடியும். குறைந்தளவு இருக்குமாயின் அவ்விடத்துக்குப் போய் எடுத்து வருவது சாத்தியமில்லை. குறித்த இடத்திலிருந்து எங்களோடு தொடர்பு கொள்பவர்களை இணைத்துக் குறித்த நாளோன்றில் அங்கு சென்று அவற்றைச் சேகரித்து வரக்கூடிய வசதிகளை ஏற்படுத்தும் முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறோம்"

பழம் வெடிச்சிருக்கக் கூடாது எண்டும் சொல்லீனம். நல்ல பழங்களை வாகனங்களில ஏத்தி அவ்வளவு ராச்சியத்துக்கும் அப்பிடிக் கொண்டு போய்ச் சேர்க்கிறது லெசுப்பட்ட வேலையில்லை. பனம் பழம், பனங்கொட்டை மாதிரி அவ்வளவு நிறையவும் கிடைக்காது. அஞ்சப் பத்தக் கொண்டு போய்க் குடுக்கிறதில பலனில்ல.


சேர்த்து வைச்சுக் குடுக்கிறதெண்டா லும் பழங்களை ரெண்டு நாளுக்கு மேலை வைச்சிருக்க ஏலாது. வண்டு பிடிச்சு பழுதாப் போயிரும்…" என்று தனது ஆதங்கத்தையும் தற்போது பனை அபிவிருத்திச் சபை முன்னெடுத்திருக்கின்ற மேற்போந்த நடவடிக்கையில் தான் எதிர் கொள்ளும் சிக்கலையும் முன்வைத்து முடித்தார் விநாயகமூர்த்தி.

> நல்ல பழங்களை வாகனங்களில ஏத்தி அவ்வளவு ராச்சியத்துக்கும் அப்பிடிக் கொண்டு போய்ச் சேர்க்கிறது லேசுப்பட்ட வேலையில்லை. பனம்பழம், பனங்கொட்டை மாதிரி அவ்வளவு நிறையவும் வராது.

### இந்தத் திட்டம் மக்களுக்குப் பயன் தருமா?

பனை அபிவிருத்திச் சபை எடுத்திருக்கும் இந்தச் செயற்றிட்டம் பனையைத் தமது வாழ்வாதாரமாக நம்பியிருக்கும் விநாயகமூர்த்தி போன்றவர்களின் வாழ்க்கைக்கு ஒளியூட்ட வேண்டும் என்றால் அவர்களுடைய நாளாந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விதத்தில் அது செயற்படுத்தப்பட வேண்டும். பனம் பழத்தையும், பனம் கொட்டையையும் சேகரித்து வழங்குவதில் அவர் போன்றவர்களுக்கு இருக்கின்ற நடைமுறைப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால், இந்தத் திட்டம் வெறும் அறிக்கைத் திட்டமாகவே போய்விடும். பயனாளிகளுக்கு நன்மை தரக்கூடியவாறு இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே சம்பந்தப்பட்டவர்களின் ஆவலும்கூட.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ஹக்கீமை காப்பாற்றிய தாய்

பலதும் பத்தும்
எம்.ஐ.முபாறக்

எதிரியின் எதிரி நண்பன் என்பது எவ்வளவு தூரம் உண்மையானது என்பதை அரசியல் வாழ்க்கையில்தான் அதிகமாகக் காணமுடியும். தம்மை எதிரிகளாகக் காட்டிக்கொள்பவர்கள் மறுகணமே நண்பர்களாக மாறுவதும் நண்பர்களாக இருப்பவர்கள் மறுகணமே எதிரிகளாக மாறுவதும் அரசியலில் சாதாரணமானது.

இந்தக் கூத்து எல்லா அரசியல் கட்சிகளுக்குள்ளும் இருக்கவே செய்கிறது. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் இதற்கு விதிவிலக்கல்ல. அந்தக் கட்சிக்குள் இருந்து கொஞ்சிக் குலாவியவர்கள் அதில் இருந்து விலகி, அந்தக் கட்சியை எப்படியெல்லாம் தாக்கி வருகின்றனர் என்பதற்குப் பல நிகழ்வுகளை ஆதாரமாகக் காட்டலாம்.

அந்தக் கட்சியின் ஆரம்பகர்த்தா அஷ்ரபின் மறைவைத் தொடர்ந்து தொடங்கிய பிளவு இன்னும் முடிவுக்கு வரவில்லை. அதில் இருந்து பிரிந்த அதாவுல்லா ஒரு கட்சியை உருவாக்கினார். பின்னர் றிசாத் பதியுதீனும் விலகி ஒரு கட்சியை உருவாக்கினார். இப்போது பஷீர் சேகுதாவூதும் விலகி ஒரு கட்சியை உருவாக்கியுள்ளார். ஹிஸ்புல்லா சுதந்திரக் கட்சியில் இணைந்துகொண்டார். இவர்கள் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ஹக்கீமின் எதிரிகளாக மாறிவிட்டதால் எதிரியின் எதிரி நண்பன் என்ற அடிப்படையில் தமக்குள் ஒன்று சேர்ந்து ஹக்கீமை வளைத்து வளைத்துத் தாக்கி வருகின்றனர்.

இவ்வாறான தாக்குதல் நிகழ்வுகளில் ஒன்று கடந்த வாரம் ஏறாவூரில் ஏற்பாடு செய்யப்பட்டது. வடக்கு- கிழக்கு இணைப்பு, அரசியல் தீர்வு, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை சட்டங்கள் போன்றவை தொடர்பில் ஹக்கீமின் நிலைப்பாட்டை விமர்சிப்பதற்காகப் பொதுக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டம் மாலைபோல் திரண்டது. ஆனால், அன்று காலையே ஏற்பாட்டாளர்களைச் சோர்வடையச் செய்யும் வகையிலான செய்தி ஒன்று கிடைத்தது. அதுதான் ஹக்கீமின் தாயாரின் சாவுச் செய்தி. இந்தச் செய்தியைக் கேட்டு ஏற்பாட்டாளர்கள் கவலை அடைந்தனர். அந்தத் தாய் இறந்ததற்காக அல்ல ஹக்கீமை விமர்சிக்க முடியாமல் போய்விட்டதே என்பதற்காக.

ஆம்...! தாயின் இழப்பால் கவலையுற்றிருக்கும் ஹக்கீமை விமர்சித்தால் மக்கள் தங்களைப் பிழையாக நினைத்துவிடுவார்கள் என்பதால் சற்று அடக்கி வாசிப்பதற்கு முடிவு செய்தனர். ஹக்கீமுக்குப் பதிலாக கிழக்கு முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹம்மத் மாட்டிக்கொண்டார். பாவம் அந்த மனிதர். 'மைக்' உடையாததுதான் குறை. குத்திக் குதறி விட்டனர். இறந்தும் தன் மகனைக் காப்பாற்றிவிட்டார் ஹக்கீமின் தாயார். அநியாயமாகச் சிக்கிக்கொண்டார் முதலமைச்சர்.



# ஒருவர் மட்டும் 'மிஸ்சிங்'...!

மாகாண சபைத் தேர்தல் சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பாமையுடன் நிறைவேற்ற வேண்டும் என்ற நிலை இருந்ததால் அதற்கான ஏற்பாட்டில் இறங்கியது அரசு. அதற்கு ஆதரவு வழங்குவதற்கு '50 இற்கு 50' என்ற நிபந்தனையை ரவூப் ஹக்கீம், ரிசாத் பதியுதீன் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் முன்வைத்தனர்.

இவர்கள் எதிர்த்து வாக்களித்தால் சட்டமூலத்தை தோற்கடிக்க முடியும் என்று கருதிய மகிந்த இவர்களுக்குச் செய்தி அனுப்பி இவர்களின் உதவியைப் பெறுவதற்கு முயற்சி செய்தார்.

அமெரிக்காவில் இருந்த மைத்திரி இந்த முயற்சியை அறிந்தார். உடனடியாக அங்கிருந்தே சுதந்திரக் கட்சி அமைச்சர்களை வழிநடத்தத் தொடங்கினார். அனைவருடனும் தொடர்பை ஏற்படுத்தி "கட்டாயம் வாக்களிக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார். இதனால் சுகவீனமுற்றிருந்த சரத் அமுனுகமவுக்கும் நாடாளுமன்றம் செல்ல நேர்ந்தது.

ஒருவாறு சட்டமூலமும் நிறைவேற்றப்பட்டது. அப்படியிருந்தும்கூட ஒருவர் 'மிஸ்சிங்'. அவர்தான் பதில் அமைச்சர் துலிப் விஜயசேகர. அவர் வாக்களிக்க வராததற்கான காரணத்தை வினவினார் மைத்திரி. "கடுமையான வயிற்று வலி அதனால் வீடு சென்றுவிட்டார்" என்று பதில் வழங்கப்பட்டது. "கண்டதையும் திண்டா வயிற்று வலி வராமல்...?" சிரித்துக்கொண்டே அமெரிக்காவில் இருந்து அழைப்பைத் துண்டித்தார் மைத்திரி.

# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா

# சோத்துக் கோப்பையோடு ஓட்டம்...!

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் மைத்திரியைச் சுதந்திரக் கட்சியின் தலைவராக ஏற்றுக்கொண்டபோதிலும் அவர்களுள் பலரும் மகிந்தவைக் கண்டால் நடுங்கவே செய்கின்றனர். கடந்த வாரம்கூட அவ்வாறான ஒரு சம்பவம் நாடாளுமன்றில் இடம் பெற்றது.

நாடாளுமன்றுக்குச் சென்ற மகிந்த, பகல் உணவை எடுப்பதற்காக நாடாளுமன்றின் உணவுச்சாலைக்குச் சென்றார்.



அங்கு அமைச்சர் பைசர் முஸ்தபா உணவு உண்டுகொண்டிருப்பதைக் கண்டு அவர் அருகே சென்று "என்ன பைசர்...! சாப்பிடுறீங்கபோல?" என்றார். அமைச்சர் பைசர் முஸ்தபா சடாரென எழுந்து, அடக்க ஒடுக்கமாக நின்று "ஆமாம் சேர்" என்றார்.

அமைச்சரின் முதுகிலே சின்னதாக ஒரு அடியைப் போட்டுவிட்டு "என்ன பைசர்! மாகாண சபைத் தேர்தலையும் ஒத்திப்போடப் போகிறீர்கள் போல" என்று கூறிவிட்டு அடுத்த மேசைக்குச் சென்றுவிட்டார் மகிந்த.

பைசருக்கோ இந்தக் கேள்விக்கான பதிலை வழங்கிவிட வேண்டும்போல் இருந்தது. தனது உணவுக் கோப்பையைத் தூக்கிக் கொண்டு மகிந்த அமர்ந்திருந்த ஆசனத்துக்குப் பக்கத்தில் போய் அமர்ந்தார்.


"நான் என்ன சேர் செய்வது...? இது நான் எடுத்த முடிவு இல்லயே. என்ன நடந்திருக்கும் என்று உங்களுக்குத் தெரியும்தானே." என்றார் பைசல்.

"மேலிடத்து உத்தரவை ஏற்றுச் சிக்கலில் வீழ்ந்துடாதீங்க பைசர்" என்று ஒருவகையான தொனியில் கூறினார் மகிந்த.

இந்த விடயத்தில் மகிந்த தன்மீது குற்றம் சுமத்திவிடக்கூடாது என்பதில் பைசர் குறியாக இருப்பது தெரிந்தது. சாப்பாட்டில் கவனம் செலுத்தாது மகிந்தவைச் சமாளிப்பதிலேயே அவர் கவனம் செலுத்தினார்.

மகிந்த அங்கும், இங்கும் எழுந்து செல்லும் போதெல்லாம் பைசர் சோற்றுக் கோப்பையோடு மகிந்தவுக்குப் பின்னும் முன்னுமாக ஓடித்திரிந்தமை கண்கொள்ளாக் காட்சியாகவும் இருந்தது.

# மூக்குடைபட்டார் ரஞ்சன்!



அரசியல், சினிமா மற்றும் விளையாட்டுத் துறைகளில் ஈடுபடுபவர்கள் உலக அளவில் பிரபல்யமாகின்றனர். அவர்களுக்கு ரசிகர்கள் அதிகம். ஆனால், இந்தத் துறைகளில் இருக்கும் எல்லோரும் உலக அளவில் பிரபல்யமானவர்கள் என்று சொல்ல முடியாது. தானும் இப்படியான ஒரு உலக பிரபல்யம் தான் என நினைத்துக்கொண்டு ஓர் அரசியல்வாதி மூக்குடைபட்ட சம்பவம்தான் இது. அண்மையில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் விழா ஒன்று இடம்பெற்றது. பல அரசியல் புள்ளிகள் அழைக்கப்பட்டனர். இந்திய நாட்டவர்களும் வந்திருந்தனர்.

அமைச்சர்கள் அர்ஜுன ரணதுங்க மற்றும் ரஞ்சன் ராமநாயக்க இருவரும் அருகருகே அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.

இந்தியாவில் இருந்து வந்தவர்களுள் ஓர் அழகிகள் கூட்டமும் இருந்தது. அவர்கள் ரஞ்சனைப் பார்த்துச் சிரித்தனர். ரஞ்சனுக்கு அப்படியொரு சந்தோசம். இந்தியாவிலும் எனக்கு ரசிகைகளா? இவர்களுக்கு நான் ஒரு நடிகன் என்பது தெரிந்திருக்கின்றதுபோலும் என்று பூரித்துப் போனார். நிகழ்வு முடிந்தது. ரஞ்சன் அந்த அழகிகளிடம் சென்று பேச்சுக் கொடுத்தார். அப்போது அந்த அழகிகள் "நீங்கள் யார் சேர்?" என்று கேட்டுவிட்டனர். ரஞ்சனுக்கோ அதிர்ச்சி. "நான் யாரென்று தெரியாமலா என்னைப் பார்த்துச் சிரித்தீர்கள்? எனக்கு கை அசைத்தீர்கள்?" என்று நேராகவே கேட்டும் விட்டார்.



"சேர் நாங்கள் உங்களைப் பார்த்துச் சிரிக்கவில்லை. நீங்கள் யாரென்றே எங்களுக்குத் தெரியாது. உங்கள் அருகில் இருந்த முன்னாள் கிரிக்கெட் தலைவர் அர்ஜுன ரணதுங்கவை அல்லவா பார்த்துச் சிரித்தோம்" என்றனர்.

ரஞ்சனுக்கு வார்த்தைகள் வரவில்லை. "அப்படியா... சொறி" என்று கூறி அங்கிருந்து நழுவி விட்டார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் எனும் பருவக்காற்று



கவிதைகள்

எஸ்.தர்சி

முன்பெல்லாம் எழுதவே தோன்றாது
இப்போது நிறைய
கவிதைகள் வருகின்றன
ஆனால்
எழுதத் தான் முடியவில்லை
இப்போது புரிகிறது
இதுவரை என் தட்டில்
உணவு மட்டுமே பரிமாறப்பட்டிருக்கிறது
அதில் உணர்வைப்
பரிமாறியவன்
நீ மட்டும் தான்

இதுவரை என் கேள்விகளுக்கு
மொழியால் மட்டுமே
பதில் சொல்லப்பட்டிருக்கிறது
புன்னகையும் பதிலாக முடியுமென
போதித்தவன் நீ மட்டும் தான்

காதல் என்ற
பருவக்காற்று
இப்போது
என் திசையில்
வீசப் பார்க்கிறதா...?
இல்லை
வீசிக் கொண்டிருக்கிறதா...?



## மனிதப் பிறவி

என்னை நீ
எரித்து எரித்த
சாம்பலைக்
கடலில் கரைத்த பின்
எரித்த இடத்திலிருந்து
மீண்டும் முளைத்து வர
நானொன்றும்
பீனிக்ஸ் பறவையல்ல
நானுமோர்
மனிதப் பிறவி தான்
அன்பே...!

## முற்றுகை

முடிவற்ற எதுவாகவோ
வறண்டு கிடக்கும்
பயனற்ற என் வாழ்வு
திமிறவோ, திரும்ப
நிமிர்ந்திருக்கவோ
முடியாமல் சிராய்ப்புத் தனமாய்
குத்திக் கிழித்த
காயங்களும் உராய்வுகளும்
என் வாழ்வைக்
கொஞ்சம் கொஞ்சமாய்
சிதைத்து வர, உடைக்க முடியா
அடக்கு முறையால் நீயும் நானும்
முற்றுகை இடப்பட்டுவிட்டோம்.



கட்டுரை

சி.சிவபாலன்



# சிலிக்கன் சில்லுகள்

இலத்திரனியல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் இன்றைய கருவிகளில் 'சிலிக்கன் சில்லுகள்' உட்புகுத்தப்படாத கருவிகளே இல்லை எனலாம். இத்தகைய 'சிலிக்கன் சில்லுகள்' எவ்வாறு தயாரிக்கப்படுகின்றன...?

மணல், கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டுமல்ல கண்ணாடித் தயாரிப்பு, 'சிலிக்கன் சில்லுகள்' தயாரிப்புக்கும் மூலப் பொருளாக இருக்கிறது. 'சிலிக்கன்' எனும் மூலப் பொருள் மணலில் இருந்து தான் பெறப்படுகிறது. இது மண்ணில் மிகுந்து காணப்படும் தனிமம் ஆகும். பூமியில் ஒட்சிசனுக்கு அடுத்து அதிகம் கிடைப்பது இதுவே.

### பிரித்தெடுப்பும் தயாரிப்பும்

சிலிக்கன் தூய தனிமமாகக் கிடைப்பது அரிதே. காரணம், அதன் ஒக்சைட்டிலிருந்து சிலிக்கனைத் தனித்துப் பிரிப்பதில் உள்ள இடர்பாடுகளே ஆகும். சிலிக்கன் இயற்கையில் தனித்துக் காணப்படவில்லை. மணல், பாறைப் படிமங்கள், சில வகையான இரத்தினக் கற்களில் ஒக்சைட்டாகவும், கிரானைட், அஸ்பெஸ்டோஸ், களிமண், மைக்கா போன்றவற்றில் சிலிகேட்டாகவும் சிலிக்கன் உள்ளது. ஆனால் மணலில் பெருமளவு காணப்படும் சிலிக்கன் பிரித்தெடுக்கப்பட்டு நூறுவீதம் தூய்மைப்படுத்தப்பட்ட பின்பே 'சிலிக்கன் சில்லு' தயாரிக்கப்படுகிறது.

நன்கு தூய்மைப்படுத்தப்பட்ட சிலிக்கன் உருகும் வரை, மணல் வெப்பமேற்றப்பட்டு குளிரவிடப்பட்டு சிலிக்கன் சில்லுக்கான அடிப்படை மூலகம் பெறப்படுகிறது. இந்தச் செயற்பாட்டின் மூலம் பெறப்படும் மூலகங்கள் குறைக்கடத்திகளுக்கான முழுமையான பண்பைப் பெறுகின்றன. பின்னர் இவை மெல்லிய படலமாக 20செண்ரி மீற்றர்கள் அல்லது 30 செண்ரி மீற்றர்கள் விட்டமுள்ள படலங்களாகக் கவனமாக வெட்டி எடுக்கப்படுகின்றன. இவ்வாறு தயார்செய்யப்பட்ட சிலிக்கன் எனும் உலோகத்தைச் சிலிக்கன் சில்லுகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் கொள்வனவு செய்து தமது வேலையை ஆரம்பிக்கின்றன.

### மின்னைக் கடத்தும் பண்பு

சிலிக்கனின் மின்னைக் கடத்தும் தன்மையானது அதன் தயாரிப்புக்கு அமைவானது. அதாவது இது சில சந்தர்ப்பங்களில் மின்னைக் கடத்தும் சில சந்தர்ப்பங்களில் மின்னைக் கடத்தாது. அதனால் இதைக் குறைகடத்தி என்பர். அதன் இந்த இயல்பே சிலிக்கன் சில்லு தயாரிப்பில் அதனை முக்கிய மூலப் பொருளாக்கியுள்ளது. இந்த இயல்பு காரணமாக அது 'ஆளி' போலவும் தொழில்படுகிறது. இதனால் கணிப்பீடுகளில் பயன்படுத்தப்படும் தர்க்க முறைமைக்கும் இது நன்மையளிக்கக் கூடியதாக இருக்கிறது.



சிலிக்கன் சில்லு கணினிகள் மற்றும் இலத்திரினியல் உபகரணங்களின் செயற்பாட்டுக்குத் தேவையான மின் சுற்று கட்டமைப்புகள் வடிவமைக்கவும் தொழில்பாட்டுக்கு ஏற்றவாறு இவை தயாரிக்கப்படுகின்றன. இவை மின்னைக் கடத்தும், கடத்தாத மூலப் பொருட்களைக் கொண்டு தேவைக்கேற்ப வேறுபடுத்தப்படுகின்றன. சிலிக்கன் சில்லுகள் முப்பரிமாணம் கொண்டவை. இவை சிக்கலான மின் சுற்றுக்ளைக் கொண்ட கிட்டத்தட்ட 30 அடுக்குளைக் கொண்டவையாகக் கூட அமைக்கப்படலாம்.

### தயாரிப்பதற்குக் கணினிகளின் உதவி!

'சிலிக்கன் சில்லு' தயாரிப்பில் கணினி உதவியுடனான வரைகலை தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தித் தேவைக்கேற்ப சுற்றுக்கள் வரையப்படுகின்றன. மிகவும் சிக்கலான இந்தச் சுற்றுக்கள் 'ஒளிப்படவியல் அச்சிடல்' முறையில் பல்வேறு அடுக்குகளாக உருவாக்கப்பட்டு சிலிக்கன் சில்லுகள் தயாரிக்கப்படுகின்றன. இவ்வாறு தயாரிக்கப்படும்போது அதில் ஒன்றுக்கு மேற்பட்ட சில்லுகள் காணப்படும். இவை அச்சுகளில் இடப்பட்டுத் துண்டுதுண்டாக வெட்டப்பட்டுத் தனித்தனியாக்கப்படுகின்றன. இவை இயங்கும்போது வெளிவிடும் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் அமைப்புகள் பின்னர் ஒவ்வொரு துண்டுக்கும் பொருத்தப்பட்டுக் கணினிகள், தொலைபேசிகள் போன்றவற்றைத் தயாரிக்கும் நிறுவனங்களுக்கு விற்பனைசெய்யப்படுகின்றன.

இவ்வாறு சிலிக்கன் சில்லுகள் பல படிமுறைகளினூடாக உருவாக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் மிகச் சிக்கலான நுட்பமான பொறிமுறையாகும். அதனால் தான் இவற்றைத் தயாரிக்கும்போது கணினிகளின் உதவி பெறப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கட்டுரை

வி. அருணாசலம்

# பணத்தால் நிறையும் பிக்குகளின் உணவுப் 'பாத்ரா'

இலங்கைத் தீவு ஒரு சிங்கள-பௌத்ததீவு எனப் பெரும்பான்மைச் சிங்களவர் கூறுவது, அரசியல் போக்கு கள் அதை நோக்கி நகர்வது என்பனவெல்லாம் சிறுபான்மை இனத்தவரான தமிழரையும் முஸ்லிம்களையும் அதிருப்தி கொள்ள வைத்திருக்கிறது. கடந்த 65ஆண்டுகால இலங்கைத் தீவின் வரலாற்றில் சிங்கள பௌத்தமே ஆழ வேரூன்றி இருக்கிறது. அது தொடர்ந்தும் நிலைபெற்று வருகிறது. இந்த மதத்தைக் கொண்டே இலங்கையின் தலைவிதியும் நிர்ணயிக்கப்படுகிறது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் வர்த்தகம், மதம் பரப்பல் என்ற இரண்டு விடயங்களையும் முன்னிலைப்படுத்தியே தமது ஆதிக்கத்தைச் செலுத்தினர். அதே போன்றதொரு நிலை இன்று வடக்குக் கிழக்குப்பகுதிகளில் சிங்கள ஆட்சியாளர்களால் கச்சிதமாகச் செய்து முடிக்கப்பட்டு வருகிறது.

**வனவள, தொல்லியல் திணைக்களங்கள் மும்முர வேலையில்...!**

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் சிங்கள பௌத்தத்தின் செல்வாக்கு 2009ஆம் ஆண்டுக்கு முன்பான 30 ஆண்டுகளில் கைவிடப்பட்ட நிலையிலேயே இருந்தது. 2009 இற்குப் பின் இந்தப் பகுதிகளில் ஆட்சியாளர்களும் பௌத்த பிக்குகளும் பௌத்த மேலாதிக்கவாதிகளும் தமது நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்தனர். விடுதலைப் புலிகள் காடுகளுக்குள் முகாம் அமைத்திருந்தபோது நகரங்களில் எங்கோ ஓர் அறைக்குள் முடக்கப்பட்டுக் கிடந்த இலங்கை வனவளப்பாதுகாப்புத் துறை 2009க்குப் பின் சட்டபூர்வமாகத் தமக்கான வனத்தை வரையறை செய்வதில் அக்கறை செலுத்தத் தொடங்கியது.

தொல்லியல் திணைக்களத்தைச் சேர்ந்தவர்களும் தமது செயற்பாட்டில் மும்முரமாக இறங்கி, இலங்கையின் தொன்மையைத்தேடுவதற்கு அப்பால் பௌத்த எச்சங்கள் எங்கெல்லாம் இருந்தன, இருக்கின்றன என்பதைத் தேடிக் குறித்துக் கொண்டார்கள். அதன் அடுத்த கட்டமாக மகாவம்ச யாதகக் கதைகளை மையமாக வைத்து, அதில் கூறப்பட்டுள்ள பாழடைந்த புத்த கோயில் வரலாற்றைக் கூறிக்கொண்டு அவ்விடத்தில் ஒரு பௌத்த பிக்குவை நிரந்தரமாகத் தங்க வைத்துச் சேவை செய்வதற்கும் அனுமதிக்கப்பட்டது.

**மக்களின் கவனம் ஒருபுறம் பௌத்த வளர்ச்சி மறுபுறம்**

திருகோணமலையில் திரியாய, லங்காபட்டுன (இலங்கைத் துறை) போன்ற புத்த கோயில்கள் மீண்டும் உருவாக்கப்பட்டுள்ளன. வெருகலுக்கு அருகில் கடற்கரையிலுள்ள மலைக்கோயிலான பௌத்த கோயில் புனரமைக்கப்பட்டுள்ளது.

பொலன்னறுவை மாவட்டத்தில் மகாவலி கங்கைக்கு அருகில் இருந்த 'சோமாவதி சைத்திய' என்ற புத்தகோயில் மிகப் பெரிய முன்னெடுப்புடன் புனரமைக்கப்பட்டு, அடர்ந்த காடுகளுக்கு ஊடாக வீதிகள் போடப்பட்டு மின்சாரமும் வழங்கப்பட்டது. இந்த வகையிலேயே யாழ்ப்பாணம் கந்தரோடை எச்சங்கள், யம்பு கோளப்பட்டணம், நயினாதீவு பெரிய புத்தர்சிலை நிர்மாணம் என்பன வடக்கில் தீவிரமாகின. கொக்குளாய், திரியாய் பகுதிகளில் புத்த கோயில்கள் பலவும் புனரமைக்கப்பட்டன. தமிழ் மக்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்திலும், இராணுவத்தினரிடம் இருக்கும் தமது காணிகளை மீட்பதிலும் வாழ்வாதாரத்துக்கான போராட்டத்திலும் ஈடுபட்டிருக்க, தமிழ் அரசியல்வாதிகள் ஆட்சியாளரின் பக்கமே முடிவுகளை எடுத்துத் தீர்வுக்காக காத்திருக்கும்போது, குறித்த பிரதேசங்களில் பௌத்த பரவல் மிக நுட்பமாக நடந்தேறி வருகிறது.

**பௌத்தத்துக்குச் சேவை செய்வது குற்றமா...?**

2009ஆம் ஆண்டு வரை அனுராதபுரம், மிகிந்தலை ஆகிய பகுதிகளைக் கடந்து வடக்குக்கு வர நாட்டம் கொள்ளாத சிங்கள மக்கள், தென்பகுதியிலுள்ள புத்த கோயில்களின் ஏற்பாட்டின் பேரில் அரசினதும், தனிப்பட்ட நபர்களினதும், அரசியல் வாதிகளினதும் ஏற்பாட்டில் 'வந்தனா கமனக்' (யாத்திரை) என்ற பெயரில் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வந்து 'இலங்கைத் தீவு சிங்கள மக்களுக்குரியது' என்ற தோற்றப்பாட்டினை ஏற்படுத்தி விட்டுள்ளார்கள். மகாவம்ச நூலின் நீட்சி என்ற விடயமும், நல்லாட்சி அரசில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. மிக அண்மையில் முன்னாள் அரச தலைவர் மகிந்த அரசின் ஊழல் விவ காரங்களில் ஒன்றாக 600 மில்லியன் ரூபாவுக்குப் பௌத்தர்கள் தமது கோயில்களுக்குச் செல்லும்போது அணிந்து செல்லும் வெள்ளைத் துணி (சில் துணி) வழங்கியதில் உள்ள ஊழல் வெளிக்கொணரப்பட்டுள்ளது. அந்தக் குற்றத்திலீடுபட்டவர்களான முன்னாள் அரச தலைவரின் செயலாளர் லலித்வீரதுங்க மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ பெல்பிட்ட ஆகிய இருவரும் 3 வருட கடூழியச் சிறைத்தண்டனையும், தலா 20 இலட்சம் ரூபா, அபராதமும் செலுத்த வேண்டும் எனவும் நட்ட ஈடாக தலா 5கோடி ரூபா செலுத்த வேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பிட்டது. இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர். "பௌத்த மதத்துக்கு அரசு சேவை செய்தது குற்றமா?" என ஒவ்வொரு சிங்கள பௌத்தரும் கேள்வி எழுப்புகின்றனர். சில் துணி ஊழல் விவகாரம் புதிய எழுச்சியை சிங்கள பௌத்தர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கிறது. அதற்கான நீதிமன்றத் தீர்ப்பை மகிந்த ஆதரவு அணி பௌத்த மதத்துக்கு எதிரான தீர்ப்பாக ஆக்கிக்கொண்டது மட்டுமல்லாது குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையில் இருப்பவர்களுக்குத் தண்டப்பணம் சேர்ப்பதற்காகப் பிக்குகள் தமது 'பாத்ரா'வில் பணம் ஏந்திச் சேகரிக்கவும் தலைப்பட்டுள்ளார்கள். அதன்படி ஒரே நாளில் அவர்கள் 15இலட்சம் ரூபாவைத் திரட்டியும் உள்ளார்கள்.

> **துறவிகள் உணவுப் பொருள்களை வாங்கி, உண்ணும் 'பாத்ரா'வுக்குள் உணவுப் பொருள்களைத் தவிர வேறு எதையும் பௌத்தர்கள் போடுவதில்லை. ஆனால் இன்றைக்கோ அந்த உணவுப் பாத்திரங்கள் பணத்தால் நிறைகின்றன.**



**வழமை மாறி, வசதி கூடிவிட்ட பிச்சையிடும் முறை**

பிக்குகள் கையில் ஏந்திச் செல்லும் பாத்திரமே 'பாத்ரா' என்று சிங்கள மொழியில் அழைக்கப்படுகிறது. ஒரு பௌத்த துறவி தனது உணவில் தெரிவுகளை வைத்திருக்க முடியாது. அவர் யாரை நாடிச் செல்கிறாரோ அந்த மக்கள் தாமாக முன்வந்து வழங்குகின்ற எந்த உணவுப் பண்டத்தையும் அந்தப் பாத்திரத்தில் வாங்கி உண்ண வேண்டும் என்பதே பௌத்த மதத்தின் நிபந்தனையாகும்.

இதன் காரணத்தால் குறித்த பாத்திரம் 'பிச்சா பாத்திரம்' (தர்மம்) என்றும் கொள்ளப்படுகிறது. ஆனால் இன்றைக்கோ அது சார்ந்த சம்பிரதாயங்கள் முற்றாக மாறிப் போய்க் கிடக்கின்றன. தமது வீட்டுக்கு ஒரு துறவி வருவதைப் பெரும் பேறாகவே பௌத்தர்கள் கருதுகின்றனர். தம்மிடம் உள்ள மிக நல்ல உணவுகளையே அவர்களுக்கு வழங்குகின்றனர். அவர்களைச் சாதாரண இடங்களில் அமரவிடாது வெள்ளைத் துணி விரித்த இருக்கையில் அமர வைத்து, பிக்குகளின் காலில் வீழ்ந்து வணங்கிய பின்னரே உணவைப் பரிமாறுகின்றனர். இது தர்மமிடுவது அல்ல. கௌதம புத்தரின் மறைவுக்கு, ஒரு பக்தர் வழங்கிய பன்றி இறைச்சியே காரணம் எனக் கூறுகிறார்கள். அந்தப் பக்தன் அன்புடன் வழங்கியதைப் புத்தரால் நிராகரிக்க முடியவில்லை அல்லது நிராகரிக்கக் கூடாது என்பதால் அந்தக் கேடான பன்றி இறைச்சியை உண்டு புத்தர் சமாதி அடைந்தார். இதன் அர்த்தம் இன்றைக்கு மாறிப் போய்க் கிடக்கிறது.

**இன்னொரு மாற்றம் பாத்திரத்துக்குள் பணம்...!**

துறவிகள் உணவுப்பொருள்களைவாங்கி, உண்ணும் 'பாத்ரா'வுக்குள் உணவுப் பொருள்களைத் தவிர வேறு எதையும் பௌத்தர்கள் போடுவதில்லை. ஆனால் இன்றைக்கோ அந்த உணவுப் பாத்திரங்கள் பணத்தால் நிறைகின்றன. பௌத்த மக்களுக்கு வெள்ளைத்துணி வழங்கியது ஊழல் மோசடி எனத் தீர்ப்பு வழங்கியதற்குச் சவாலாகவே மக்கள் அந்தப் பாத்திரங்களுக்குள் பணத்தைக் கொட்டுகிறார்கள்.

3 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டவர்கள் பின்னாளில் நிபந்தனையுடன் கூடிய பிணையில் விடுவிக்கப்படும் அளவுக்கு இலங்கையின் நீதித்துறையை விட பௌத்த மதம் பலமாயிருக்கிறது. அஸ்கிரிய, மல்வத்த பௌத்த பீடங்கள் இறுதிப் போரின்போது ஒருபோதுமே போரை நிறுத்துமாறோ, அப்பாவி மக்களைக் காப்பாற்றுமாறோ குரல் கொடுக்கவில்லை. இந்த நிலையில் தற்போது இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவது பௌத்தபீடங்கள் சிங்கள பௌத்தர்களின் விடயங்களுக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றன என்பதை தெளிவுபடுத்துகிறது. இந்தப் பௌத்த நிறுவனங்களுக்கு ஏலவே ஒரு நிகழ்ச்சிநிரல் உண்டு. அதன் அடிப்படையிலேயே புதிய அரசமைப்புத் திருத்தத்திலும் 'பௌத்த மதத்துக்கு முன்னுரிமை' என்ற விடயம் அழுத்திக் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தொகுப்பு**
தி.இராஜநாயகி


# தமிழ்ப் பண்பாட்டில் சினிமா
## முன்னுரையாகச் சில குறிப்புகள்

கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத் துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.


பேராசிரியர்
கார்த்திகேசு சிவத்தம்பி

தொடர்பியலில் ஒவ்வொரு ஊடகத்தினதும் தனிச் சிறப்புக்களைப் பற்றிக் கூறி வரும் பொழுது, சினிமா பற்றிப் பேசும்பொழுது(தொடர்பியலில் ஆங்கிலத்தில் The Film என்றே கூறுவர். பிலிம் - ஒளிபதிபடலம்) அச்சொல்லின் மூலமான கினிமட்டோகிராப், கினெசிஸ் என்பவற்றின் அடியாக, கட்புல வழி வரும்மனப்பதிவையேபிரதானப்படுத்திக் கூறுவர். கினோசிஸ் என்ற சொல்லே சினிமா என நின்றது. இந்தச் சினிமாவின் அச்சாணியான அம்சம் அசையும் படங்களாகும். அதாவது தனிநிலைப் படங்களாக இல்லாமல் அசைகின்றவையாக, அந்த அசைவின் ஊடாக முழு உருவச் செய்கைப் பதிவையும் காட்டுகின்ற தொழில்நுட்பமாக ஒளியின் பின்புலத்தில் செய்யப்படுவது. தொடக்கத்தில் மௌன சினிமாவாக இருந்தது. மிக விரைவில் ஒலியின் இணைப்பு மூலம் பேசும் படமாக ஆகிற்று. அந்த நிலையிலேயே சித்திரி படங்கள் முக்கியத்துவமுடைய ஊடகமாயிற்று.

ஒளிப்பதிப்படலம் என்பது உண்மையில் ஆவண நெறி சார்ந்தது, கதை சித்திரிப்பது என வரும் பிரதான இரண்டு வகையினுள், நாம் இங்கு இரண்டாவதையே கொள்கிறோம். ஏனெனில் இன்னும் தான் தமிழ்நாடு, தமிழ்ப்பண்பாடு பற்றிய தமிழர்களால் தயாரிக்கப்பட்ட, நெறிப்படுத்தப்பட்ட உலகத் தரமுள்ள ஆவண வகைப்படம் ஏறத்தாழ இல்லை என்றே கூறலாம். சினிமா, அதனைப் பார்ப்பவர்களை எவ்வாறு தனது தொடர்பு வலுவுக்குள் கொண்டு வருகிறது என்பது பற்றி ஏற்கனவே வந்துள்ள கட்டுரைகளில் விளக்கப் பெற்றுள்ளது. அவற்றை இங்கு மீண்டும் கூறவேண்டியதில்லை. ஆனால் இவ்விடத்தில் முன்னர் கூறப்பட்டவற்றுக்கு மேலதிகமாக ஒன்றைக் கூறலாம். அதாவது, அச்சித்திரி படங்களைத் தொலைக்காட்சிப் பெட்டி மூலமும் பார்க்கலாம். தொலைக்காட்சிப் பெட்டி வழி பார்க்கின்ற




போதும்கூட தனியே இதனைப் பார்க்கின்றபொழுது, தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்கும் இதற்குமுள்ள வேறுபாடு முக்கியமானதாகும். மேலும், இந்தியாவில் பொதுவாக சினிமாவின் மேலோங்கு கவர்ச்சி காரணமாகச் சினிமாப் படங்கள் தொலைக்காட்சி மூலம் நிறையக் காட்டப் படுகின்றன.

மின்னியல் ஊடகங்களில் ஒன்று என்ற வகையில் இதன் பிரதான தொடர்பு முறைமை, அதனைப் பார்ப்பதற்கான ஒரு சூழலில், இயன்றளவு வசதியாக இருந்துகொண்டு, பூரண கட்புல, செவிப்புலக் குவிவுடன் சித்தமும் அதன்பால் இழுக்கப்பெற்று, அதனிடத்து முற்றிலும் உணர்ச்சி பூர்வமாக இயைபுற்று நிற்கும் நிலையேயாகும். திரையில் நடப்பனவற்றுடன் ஏற்படுத்தும் ஈடுபாடு முற்று முழுதானதாக இருக்கும் நிலையில் மானசீகமாக சினிமாவில் நடப்பனவற்றின் சாட்சியாக அல்லது மேலதிக ஒருவராகத் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளும் நிலை சினிமாவினுடைய ஒரு முக்கிய பண்பாகும். உண்மையில் திரையில் அசைந்து செல்லும் பிம்பங்களோடு நாமும் இணைந்து விடுகிறோம். அவற்றின் ஆட்ட ஓட்டங்கள், கோப தாபங்கள், சுக துக்கங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் நம்முடையனவாகவும் ஆகிவிடுகின்றன. அத்தகைய ஈடுபாட்டுக்கு, அது ஏற்கனவே நமக்குத் தெரிந்த, நாம் மதிக்கிற நம் முடைய மனதிலும் கிளர்ச்சியை ஏற்படுத்துவனவாய் நமக்கு ஏற்கனவே தெரிந் திருந்த உணர் நிலைகளுக்குப் புதிதாய் இல்லாதனவாய் இருப்பின், நமது ஐக்கியப்பாடு பூரணமானதாகி விடும். சினிமாவின் வலு இதிலேயே தங்கியுள்ளது. இவை யாவும் பண்பாட்டின் வழி வருவனவாகும்.

தொடர்பு ஊடகங்களின் அத்தியாவசியம் காரணமாக அவை அவ்வச் சமூகங்களின், நாடுகளின் சகல மட்டத்தினர்க்கும் செல்லவேண்டுவது அவசியமாகிறது. அப்படிச் செல்லும்பொழுது அந்த ஊடகத்தின் தொடர்பு முறைமையிற் சிற்சில அழுத்தப்பாடுகள் ஏற்படும். ஓர் ஊடகம் வெகுசன ஊடகமாக மாறுகிறபொழுது அது தான் தொடர்புறும் மக்கள் தொகுதியை ஒரு திரள் ஆகவே அணுகுகிறது. அந்தத் திரளுக்குள் உள்ள பல்வேறு வேறுபாடுகளையும் ஊடறுத்து அவை யாவற்றுக்கும் இடையே நிலவும் ஒரு பொதுப்படையான அம்சத்தை முனைப்படுத்தி, சகலரினதும் ஈடுபாட்டைத் தவிர்க்க முடியாத ஒன்றாக்கிவிடுகிறது. இவ்வாறு செய்யும்பொழுது சகலருக்கும் பொதுவான சில அம்சங் களைக் கொண்டதாக அமைந்து விடுகிறது. அதாவது, இந்தத் தொடர்பாடலின் இலக்கு அதன்பால் ஈடுபடுவோர் சகலரிடத்தும் ஏதோ ஓர் ஒருமையைக் காண்பதாகும். அந்த ஒருமை நிலைப்பட்ட அம்சங்களை வலியுறுத்துவதும் விரிவுபடுத்து வதுமாகும். இவ்வாறு செய்யும்பொழுது, அந்தத் திரள் நிலைத் தொடர்பாடல் சில திரள் நிலைப் பண்புகளை வலியுறுத்த வேண்டுவதாகிறது.

அந்தத் திரள் நிலை ஒருமைப்பாடு சகலருக்கும் பொதுவானதாய், சகலரும் புரிந்து கொள்ளக்கூடிய குறியீடுகளைக் கொண்டதாய், சகலரினதும் மனப் பாங்குகள், சிந்தனைப் போக்குகள், அவற்றிலும் பார்க்க மேலாகப் பெறுமானங்கள் மதிப்பீடுகளில், ஒரு சமத்துவப் பொதுத்தன்மையை ஏற்படுத்துவனவாய் இருத்தல் வேண்டும். இவை நிகழும்பொழுது அதுவே ஒரு பண்பாடாகிறது. இவ்விடத்தில் பண்பாடு பற்றிய சமூக நிலைப்பட்ட ஒரு வரைவிலக்கணத்தைத் தருவது அவசியமாகிறது.

“பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூக வரலாற்று வளர்ச்சியினூடாகத் தோற்றுவித்துக் கொண்ட பௌதிகப் பொருள்கள், ஆத்மார்த்தக் கருத்துக்கள், மத நடைமுறைகள், சமூகப் பெறுமானங்கள் ஆகியவற்றினதும் தொகுதியாகும்.’ பண்பாடு என்பது ஒரு கூட்டத்தினரின் தொழில்நுட்ப வளர்ச்சி நிலை, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள், கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகும்.” சமூக மானுடவியல் நிலையிற் கூறப்பட்ட இது, வெகுசன ஊடகமொன்றின் வழியாகப் பொதுமைப்படுத்தப்படும் பொழுது சில எளிமைப்பாடுகளும் கவர்ச்சிப் பாடுகளும் இன்றியமையாத வகையில் தோன்றும். சகலருக்




கும் கவர்ச்சியைத் தரக்கூடியனவாய், அதேவேளையில் சகலரது உணர்வுகளுக்கும் பொதுவானதாய் அமைதல் மாத்திரமல்லாமல், அந்த நடைமுறைகளை அன்றாட வாழ்வில் பெற முடியாதவர்களுக்குப் பெறவேண்டிய அபிலாசைகளாய், மன நிறைவுக்கான இலக்குகளாய் ஆக்கிவிடுகின்றது.

இந்த நிலையிலேதான் திரள் நிலை ஊடகம், திரள் நிலைப் பண்பாட்டுக்கு வழி வகுக்கின்றது. அதாவது, வெகுசன ஊடகம், வெகுசனப் பண்பாட்டைத் தோற்றுவிக்கிறது. அவ்வாறு தோற்றுவிப்பதனூடாக அது தன்னைத்தானே அந்த வெகு சனத் திரள் நிலைக்கு இன்றியமையாததாக்கிக் கொள்கிறது. ‘ஆடை முதல் ஆசை வரை’ இதில் இடம்பெறுகின்ற எல்லாமே பார்க்கின்ற மக்கள் ஒவ்வொருவரதும் மனதைக் கவர்வதாய் அமையும். இந்த வெகுசனத் திரள்நிலை என்பது ஒரு வியாபார நிலைப்பட்டதாக அமைவது தவிர்க்கப்பட முடியாத ஒன்றாக அமைவது முதாலாளித்துவத்தின் இன்றியமையாத பண்பாகும்.

இந்த வெகுசனப் பண்பாட்டு நிலையில் பார்ப்பவர்கள் அந்தப் பண்பாட்டு வட்டத்தினுள் தம்மையும் ஒருவராகக் கொள்வதற்கு அதில் வரும் குறியீடுகள் பலவற்றைத் தாமும் தமதாக்கிக் கொண்டால் தாம் அந்த நிலையைப் பெற்றுவிடலாம் என்ற நினைப்பு இயல்பாகவே வரும். இதற்கொரு நல்ல உதாரணம், திரைப்பட வழிவரும் ஆடை, அணி மோஸ்தகர்கள், பதவிகள் ஆகும்.

வெகுசனப் பண்பாடு பற்றி இதுவரை தரப்பட்டுள்ள கருத்தியல் விளக்கம் பிண்டப் பிரமாணமான உதாரணங்களாக வரும் பொழுது ஹீரோவின் குணப்பண்பு, ஹீரோயினின் அழகு என்பனவோ அன்றேல் கதைப்பின்னலில் முக்கியம் பெறுகின்ற மற்ற வயதுப் பாத்திரங்களின் இயல்புகளோ ஒவ்வொருவருக்கும் தமக்கான வகிபாக மாதிரியங்களாக ஆகிவிடுகின்றன. இதனாலேதான் ஒவ்வொரு வெற்றிப் படத்தின் பின்னரும் சில விருப்புச் சின்னங்கள் ஏற்பட்டுவிடுகின்றன.

■ ■ ■

இதுவரை கூறப்பட்டதை மனதிற்கொண்டு தமிழ்ச் சினிமாவை நோக்கும் பொழுது அதன் தொடர்பு முக்கியத்துவம் அனைத்திந்திய, தென்னாசிய நிலையில் மாத்திரமல்லாது உலக நிலையிலேயே கணிக்கப்பெற்றதான அதன் அரசியல் தொடர்பு வலுவாகும். இதுபற்றி இத்தொகுதியில் வரும் பிறிதொரு கட்டுரை விரிவாக ஆராய்கிறது. 1947முதல் ஏறத்தாழ 20வருட காலத்து முயற்சியின் காரணமாக, 1967 முதல் இன்றுவரை (2004) 37 வருடங்களாகத் தமிழ்நாட்டில் மாநில ஆட்சியதிகாரம் சினிமா வழி வந்ததாகவே உள்ளது. அது மாத்திரமல்லாமல், இந்த அதிகாரத்தை எதிர்ப்பதற்கான கருத்துப் பரப் பலும் அதே சினிமாவின் வழியாகவே செய்யப்படுகிறது.

இந்த அரசியல் வெற்றி எவ்வாறு சாத்தியமாகப் பெற்றது என்பது பற்றி ஊன்றிக் கவனிக்கும்பொழுதுதான், பண்பாடு, மக்களின் வாழ்நிலையையும், அந்த வாழ்நிலையில் காணப்பெறும் வாழ்வியல் போக்குகளையும், ஆசைகளையும், கற்பனைகளையும் எந்தளவுக்கு இந்த அரசியற் கருத்துக் கையளிப்புக்குப் பயன்படுத்தியுள்ளது என்பது பற்றித் தெரியவரும். இவ்விடத்தில் மிகச் சுருக்கமாக எம்.ஜி. ஆர். அவர்கள் சித்திரித்த பாத்திரங்களின் தன்மையைக் காட்டலாம். எந்தப் பாத்திரத்தைச் சித்திரித்தாலும் அந்தப் பாத்திரம் தனது வீரத் திறனாலும், குணப்பண்புச் சிறப்பாலும், ஆள்நிலைக் கவர்ச்சியாலும் சகலரையும் சகலவற்றையும் வென்று மேல் நிலையில் நிற்பதைக் காணலாம். இந்தச் சித்திரிப்பு உண்மையை மனதில் கொண்டு, அவர் சித்திரித்த பாத்திரங்கள் எவையென நோக்கும்பொழுது அவை பெரும்பாலும் ஏறத்தாழ தமிழ்நாட்டின் கிராம, பட்டின நிலைகளின் அடிநிலை மட்டத்துக்குரிய பாத்திரங்களாகவே இருக்கும். மீனவனாக, விவசாயியாக, மாட்டு வண்டிக் காரனாக, ரிக்ஷாக்காரனாக, ஹோட்டல் சர்வராக எனப் பல்வேறு சமூக அடிநிலைப் பாத்திரங்களின் உயர்ச்சியை அவர் சித்திரித்தார்.

(தமிழ் பண்பாட்டில் சினிமா - பேரா.க.சிவத்தம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆன்மீக அவலங்கள் !

கவிதை

சூரியநிலா

முள்ளிவாய்க்காலிலும்
மியன்மாரிலும்
கிள்ளியெறியப்பட்ட உயிர்கள்
இயற்கைச் சமநிலைக்கு
ஈடுகொடுக்கப்பட்டிருக்கின்றன!

உலகச் சட்டம்பியார்கள்
கண்களை மூடியவாறு
கணக்கிட்டுக்
கொண்டிருக்கிறார்கள்
ஏவுகணைகளின்
எண்ணிக்கைகளை!

கொலையாளிகளை
கூண்டில் ஏற்றாமல் காப்பதில்
மலையென நிமிர்ந்து
நிற்கின்றன
அரசியல் கௌரவங்கள்!

குற்றவாளிகளைக் காப்பாற்ற
பிச்சைப் பாத்திரமேந்துகின்றன
ஆன்மீக அவலங்கள்!

காவித்துணிகளுக்குள்
கட்டப்பட்ட சித்தாந்தங்கள்
பாவியாய் மாற்றிப்போட்டன
சித்தார்த்தனையும்!

இனி
ஞானங் கலைந்து
ஞாலம் ஆள
வானம் பிளந்து
அவனும் வரலாம்!

தொடர்

# செல்லும் வழியின் தூரம்... 21

ப்ரியமதா பயஸ்

இப்போது வட்டுவாகல் பாலம். எல்லோரும் உருண்டு, புரண்டு, கத்திக் கதறிக் கொண்டு வந்தனர். இராணுவத்தினர் கண்களுக்குத் தென்படும் தூரம் வந்து விட்டோம். அங்கே அவர்கள் நிற்கின்றனர். ஏழு, எட்டு வருடங்களுக்குப் பின்னர் இலங்கை இராணு வத்தைப் பார்க்கிறோம். பெரும் கோரத்தாண்டவ மாடி ஓய்ந்துகொண்டிருக்கும் ஒரு களத்தில் அவர் களை நேருக்கு நேராகக் காண்கிறோம். வட்டுவா கல் பாலம் ஆங்காங்கே சிதைந்துபோய்க் கிடக்கி றது. மக்களில் யாரும் இப்போது வாய்திறக்கவில்லை. விம்மல்கள், அழுகைகள் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு மௌனமாக நகர்கின்றனர்.

**பெண்களின் உடல்கள் எப்படி வந்தன...?**

ஒருவர் பின் ஒருவராகப் பாலத்தில் நடக்கிறோம். அவ்வப்போது அருகில் நிற்கும் இராணுவம் துப்பாக் கிகளை உயர்த்தி மேல் வெடி வைக்கின்றது. அது எம்மைத் திடுக்குற வைக்கவில்லை. இத்தனை பெரும் குண்டுகளைக் கண்டு வரும் எமக்கு அந்த மேல்வெடிச் சத்தங்கள் பெரிதாகப் பயத்தைத் தர வில்லை. அந்தச் சன்னங்கள் எம்மை நோக்கி வந்திருந்தால்கூட ஆச்சரியப்படாமல் இறந்திருப் போம். பாலத்தின் இருமருங்கிலும் கடல் நீர் சலன மற்றுக் கிடக்கின்றது. நான்கைந்து உடல்கள் பாலத்துக்குக் கீழே மிதக்கின்றன. அதிர்ந்து போனேன் இங்கே பெண்களின் உடல்கள் எப்படி வந்தன...? கேள்விகள் குடைகின்றன. ஆனால், நிதானமாக நின்று சடலங்களை உற்றுப் பார்க்க முடியாது. கண்டும் காணாததுபோல் நகர்கிறேன். பற்கள் வெளித்தெரியாமல் வாயை விரித்து, உதடுகளை அசைக்காமல் பயசுக்குச் சொல்கின்றேன். "பாலத்துக்குக் கீழை பாருங்கப்பா..." என்று அவர் புரிந்த வராய் கண்ணுற்றுக் கொள்கிறார். நீலநிற மேல் சட்டை. ஒரு கை முழு வதும் 'பி.ஓ.பி.' போடப்பட்டுள்ளது. மற்றைய கை நந்திக்கடல் மீன்கள் அரித்துத் தின்று தோல் இல்லாமல் வெண்ணிறமாக இருக்கிறது. தலைமுடி கலைந்து நீரில் மிதக்கின்றது. பெண் உடல் என் பதும் நன்றாகப் புரிந்தது. கடைக் கண்ணால் பார்த்துக்கொண்டு கண நேரத்தில் கடக்கிறோம். அவ் விடத்தைச் சுற்றிலும் இராணுவம். மனது படபடக்கின்றது.

**சாவை நோக்கிப் போகிறோம்...**

செல் சத்தங்கள் ஓயவில்லை. அவ்வப்போது துப் பாக்கிச் சத்தங்களும் கேட்கின்றன. எங்கோ ஒரு பகுதியில் கடுமையாகச் சண்டை நடந்துகொண்டி ருப்பதைச் சத்தங்கள் உணர்த்துகின்றன. இன்று மே 18. நாம் இராணுவத்தினரிடம் சரணடைந்து விட்டோம் நடந்துகொண்டிருக்கின்றோம். அந்தக் கம்பிக்கூட்டை நோக்கி.

இப்போது எம்மோடு அம்மா, அப்பா யாரும் இல்லை. அவர்கள் பின்னே வருகிறார்கள் என்பது புரிகிறது. ஆனால் திரும்பிப் பார்த்து அவர்களை அழைத் துக்கொண்டு வரமுடியாத நிலையில் நாங்கள் நகர்கிறோம்.

தாகம் நாக்கை வறட்டி உடலியக்கத்தைக் குறைக் கிறது. குழந்தைகள் வீரிட்டு அழுகின்றனர். காயம் அடையும் இராணுவத்தினரைச் சாக்குகளில் தூக்கி கொண்டு எமக்குப் பின்புறமிருந்து ஓடி வருகின்ற னர்.

அவர்களின் இழப்புக்கள் அதிகம் என்பது தெரி கின் றது. பயமும், வேதனையும், உடல் சோர்வும் எது நடந்தாலும் பரவாயில்லை என்று எதையும் ஏற் றுக்கொள்ளும் மனநிலையை உரு வாக்கி இருக்கின்றன. திடமாக நகர்கின் றோம். வீதிகளின் குறுக்கே அமைக்கப் பட்டிருந்த மண் அணைகளைப் பிரித்து விடுகின்றனர். பெரும் பதுங்கு குழிகள் பயத்தைக் கூட்டுகின்றன. நாம் எங்கே போகிறோம்...? எமக்கு என்ன ஆகப் போகின்றது...? என்பதை நினைத்துக் கூடப் பார்க்கமுடியவில்லை. சாவை நோக்கிப் போகின்றோம் என்பதாக மன உணர்வு உறுத்தியது.



**எண்ணற்ற கேள்விகள்... பதில் இன்றைக்கும் இல்லை.**

எமக்கான குரல்கள் எப்போது ஒலித்தன...? எமக் காகப் போராடியவர்களின் நிலை என்ன...? எமது துயர் பற்றிப் பன்னாடுகளுக்கு ஏதாவது தெரி யுமா...? இத்தனை பிணங்களைத் தாண்டி வந்தி ருக்கிறோம் அவற்றின் ஆதாரங்களை எவரும் வைத்திருப்பார்களா? இவை தொடர்பில் எவர் எம் மீது கரிசனை கொள்வார்கள்...? இப்படியாக எண்ணற்ற கேள்விகள் எழுந்தன. "எல்லோரும் வெளியே [illegible]ங்கள்" என்று கூறியதும் பெட்டி, படுக்கைகளைக் கட்டிக்கொண்டு கிளிநொச்சியில் இருந்து ஓடிய தொண்டு நிறுவனங்களையும், மனிதநேய அமைப்புக்களையும் நினைத்துப் பார்த்துக்கொண்டேன். எமக்கான அவலத்தின் சாட்சியாக அந்த இயற்கையைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை. ஆதாரங்க ளைத் திரட்டிக்கொள்ள யாரும் தயாராகவும் இல்லை. கண்களில் கண்ணீரும் இல்லை. நடை பிணமாய் நகர்கின்றோம். ஒரு பகலும் ஒரு இரவும் நடந்து அந்தக் கம்பிக்கூட்டுக்குள் அடைக்கப்படுகி றோம். எம்மை அடைக்கும்போது நேரம் மாலை ஐந்து மணியைக் கடந்துவிட்டது.

**சிகிச்சைக்குப் போனதில் சிலர் இன்றைக்கும் திரும்பவில்லை**

அம்மாவையும் ,அப்பாவையும் தேடிப்பிடித்துக் கொண்டோம். அப்பாவின் காயம் பழுதடைந்து சீழ்பிடித்து விட்டது. அவர் மிகக் கொடுமையான வேதனையை அனுபவிக்கின்றார். இங்கேதான் பல உறவுகள் நிரந்தரமாகப் பிரியப்போகின்றன என்று பல குடும்பத்தவர்களுக்கும் தெரியாதிருந் தது. கடுமையாகக் காயம் அடைந்தவர்களை இரா ணுவத்தினரிடம் ஒப்படைக்கின்றனர். இராணுவம் சிகிச்சை அழிப்பதற்காக அவர்களை அழைத்துக்கொண்டு போகின்றது. அவர்களிலும் பலர் இன்னனும் திரும்பவில்லை. அப்பாவை அனுப்பிவைக்க எனக்கு விருப்பம் இருக்க வில்லை. எமை எங்கோ ஏற்றப் போகின்றார்கள் என்பது விளங்கியது. ஆகையால் அங்கே பார்த் துக்கொள்ளலாம் என்று அப்பாவைப் பொறுமை யாக இருக்கும்படி கேட்டுக்கொண்டேன்.

**மிருகங்களைப்போல் வதைக்கப்பட்டோம்**

தாகத்துக்குத் தண்ணீர் எடுக்க எல்லோரும் அங்க லாய்த்து ஓடித்திரிந்தனர். பெரிய பௌசர்களில் தண்ணீரைக் கொண்டுவந்து கடற்கரையில் கிடந்த 'போர்ட்'டுகளை எடுத்து, அவற்றுக்குள் நீரை இறைத்து, மக்களுக்குக் கொடுக்க முனைகின்றனர். ஆனால், [illegible] தாகத்தோடும், பசியோடும் நிற் கும் மக்களை அவர்களால் கட்டுப்படுத்த முடிய வில்லை. தடிகளைக் [illegible] விரட்டுகின்ற னர். தண்ணீர் எடுக்க [illegible] மக்களைக் கலைத்து கலைத்து அடிக்கின்றனர். மக்கள் அவற்றை மீறியும் தாகம் தீர்க்க ஓடி, ஓடி நீர் எடுக்க முனைகின்றனர். சுற்றிவர முட்கம்பிகள் ஒருவரும் அசையமுடியாத நிலை இப்போது மிருகங்களைப் போல் அடைக்கப்பட்டோம்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## மீன் மான்மியம்

செ. செல்வராஜா



சரசு மாமியின் தகப்பன் வேலுப்பிள்ளைச் சாமி யாரும் சைவமாம்! மீன் சாப்பிடுகிறதில்லை என்று வெளியிலை கதை.

# "கடலுக்கை எங்கட சைவம்...!"

'மீன்' என்று மட்டும் தலைப்புப் போட்டுட்டுப்போன நான், எதுகை மோனை வரத்தக்கதாக அங்காலையும் நீட்டித் தலைப்பைப் போடுவம் எண்டு பார்த்தால், ஒண்டும் தோதாய் வருகுதில்லை. "மீன்... மான்... ச்சீ... சரிவராது...."

"மீன் மான்யம்...?"

படபடவென்று கிரிஜா அகராதியைப் புரட்டினேன். மான்யம்என்பதற்குநீட்டிமுழக்கிக் கருத்துச் சொல்லப்பட்டிருந்தது. சுருக்கமாகப் பார்த்தால், மான்யம் என்பது உதவித் தொகை-தர்மம். என்றிருந்தது. 'மீன்' தொடர்பாக எவ்வாறு தலைப்பிடுவதென்று பார்த்தால், கிரிஜாவில் 'மான்மியம்'என்றொருசொல்லுமிருந்தது. அதன் அர்த்தம்மகிமை-மகாத்மியம்என்றிருந்தது.

வாய்த்துப் போனது. கூடப் படிப்பிக்கிற கயன்சேர் சொன்ன மாதிரி எதுகை, மோனையோடை தலைப்பு வாய்ச்சுப் போச்சுது. பெயர் போடாமல் வெளியிட்டால்கஜன்சேர் குறிப்பிட்ட அந்த எழுத்தாளர்தான் எழுதினதெண்டு நினைத்துக் கொள்வர் வாசகர்கள் எனஎண்ணிப்புழகாங்கிதம் அடைந்தேன்.

• • •

என்ரை பேரப் பிள்ளை கதைக்க வெளிக்கிட்டுட்டுது. நாங்கள் என்ன சொன்னாலும்அதை ஒரு முறை தான் திருப்பிச் சொல்லும். பிழை விடாமல் சொல்ல வேண்டமென்பதற்காக நாங்கள் அது விடுகிற பிழைகளைத் திருப்பித் திருத்திச் சொல்லு வம். உதாரணமாக நாங்கள் "முருங்கைக்காய்"என்றால்அந்தப் பிள்ளை "முறுங்ஙகாய்" என்று சொல்லும். நாம், "முறுங்ஙகாய் இல்லை முருங்கைக் காய்" என்று அறுத்து உறுத்துச்சொன்னால்தானும், "முறுங்ஙகாய் இல்லைமுறுங்ஙகாய்" என்றுமீண்டும்சொல்வார். அதேபோன்று "பழாபளம்" என்பார். நாங்கள் "பழாபளம் இல்லை, பலாப்பழம்" என்று சொல்லிக் கொடுத்தால், பிள்ளையும், "பழாபளம் இல்லைபழாபளம்" என்றுதிரும்பச்சொல்லும். இதுவே ஒரு தமாசாகப் போய்விடும். அதனால்தான் இத்தகைய செயற்பாடுகளை நாங்கள் சின்னப்பிள்ளைத் தனமானதெனச் சொல்கிறோம்.

அதேபோன்றுபலசின்னப்பிள்ளைத்தனமான செயற்பாடுகள் எம்மைச் சுற்றி நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் நாம் அதனைச் சின்னப்பிள்ளைத்தனமானதெனத் தமாசாக எடுத்துக் கொள்வதில்லை. 'சீரியசாக'எடுத்து, 'பிபி, பிளட் பிறசர்' போன்ற தொற்றா நோய்களுக்கு உள்ளாகின்றோம். அது 'சுகரை' - டயபற்றிக்கை' பன்மடங்காக்குகின்றது. பின்னர், அந்த 'கிளினிக்' இந்தக் 'கிளினிக்' என்று அலைகின்றோம். எனக்கு இன்னென்ன வருத்தங்கள் உள்ளதெனக் கூறிப் பெருமைப்படுவதும் ஒரு 'பாஷனாகி'விட்டது. நோய்களை ஆங்கிலத்தில்சொல்லுவதிலும் கௌரவம் என்கின்ற நினைப்பு.

• • •

ஓர் அணியிலிருந்து பிய்த்துக் கொண்டு வெளியேறிவிடுபவர்கள். பின்னர் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவேண்டுமெனப் பரப்புரை செய்வர். வெளியேறி ஓர் அணி அமைத்துக் கொண்டாலும் அது தழைத்துச் செழித்து வளருமுன் அதிலிருந்து இன்னொரு அணி... அதிலிருந்து இன்னொரு அணி. இப்படியாகக் 'கழன்றுவரும்'. அவர்கள் சொல்லும் தாரக மந்திரம் 'அனைவரும் ஒரேயணியாகச் செயற்பட்டால்தான் இலக்கை அடையலாம்.



வாருங்கள்... வந்து இணையுங்கள்" என்பதாகவே இருக்கும். இதனைச் சின்னப்பிள்ளைத் தனமானதெனத்தமாசாக நாம்எடுத்துக்கொள்வதில்லை. ஏனெனில் இப்படி நடந்து கொள்பவர்களும், சொல்பவர்களும் பெரியவர்கள். மூளை விருத்தி அடைந்தவர்கள். ஆயினும் சின்ன மீன்களை விழுங்குவதில் பெரிய மீன்கள் கவனமாகவே இருக்கும். இதில் ஏதும் அர்த்தம் காண முயற்சிக்காதீர்கள். மீன் மான்மியம் என்று தலைப்புப் போட்டபடியால் மீனைப் பற்றி எழுத வேண்டுமென்பதற்காக இதற்குள் மீன் கொண்டு வரப்பட்டதேயன்றி, மற்றும்படி இது பொருள் பொதிந்த தல்ல என்பது உங்களுக்குப் போகப் போகப் புரியும்.

• • •

சரசுமாமியின்தகப்பன்வேலுப்பிள்ளைச்சாமியாரும் சைவமாம்! மீன் சாப்பிடுகிறதில்லையென்று வெளியிலை கதை. ஒரு நாள் இரவு நண்பர்களுடன் நான் சூள் மீன் பிடிக்கக் கொழும்புத்துறைக்கடலுக்குப்போனன். அமாவாசை இருட்டு. பெற்றோல் மக்ஸ் வெளிச்சதிலைதான் சூள் பிடிக்கப் படகு ஒண்டில போனனாங்கள். ஒரு பலத்த காற்று வீசப் பெற்றோல் மக்ஸ் பொசுக்கென்று அணைஞ்சு போச்சுது. பிரயத்தன முயற்சி எடுத்தும் திரும்பவும் அதைக் கொழுத்த முடியவில்லை. கரையை நோக்கி வந்துகொண்டிருக்க, முழங்காலளவு தண்ணியிருக்கும்... சயிக்கிள் ரயரில சூள் கொழுத்தி ரெண்டு, மூண்டு பேர் மண்டா வாலைநண்டுகுத்திக்கொண்டுநிண்டிச்சினம். கிட்டப்போய்ப்பார்த்தால், எங்கடை சைவம்...! வேலுப்பிள்ளைச்சாமியார்...!என்னைமட்டுக் கட்டீற்றார் போலை முகத்தை அங்காலை திருப்பிப் பேட்டார்.

## தொகுப்பு

அயக்கிரீவன்

### நூல் அறிமுகம்




**நூல்: படைப்பின் கதவுகள் (இலக்கியக் கட்டுரைகள்)**
**ஆசிரியர்: தருமராசா அஜந்தகுமார்**
**விலை: 250 ரூபா**

இலக்கியம் என்பது என்னைப் பொறுத்தவரை மனதுக்கு இதம்தரும்என்னைப்புதுப்பிக்கும்மந்திரங்களலானது. ஒரு தொடர் வாசகனாகவும் ஆய்வாளனாகவும் படைப்பாளியாகவும் இயங்குவது அலாதியான அனுபவம்தான். இந்தக் கட்டுரைகள் என் வாசிப்பின் விளைவுகள். என்னைப் பாதித்த எழுத்துக்களின் அருட்டுணர்வில் என்னில் இருந்து வெளிப்பட்டவை.

படைப்பு என்பது நாம் நினைத்த மாத்திரத்தில் இயற்றிவிடும் சமையல் அல்ல. அது எம்மை அறியாமல் எம்மில் இருந்து பீறிடுவது. நாம்எழுதியவற்றையேதிரும்பிப்பார்க்கின்றபோது ஒருவகையானதிருப்தியையும்மகிழ்ச்சியையும்போதாமையையும் உணர்கின்றோம்.

இக்கட்டுரைகளில் பெரும்பாலானவை உதயன் ஞாயிறு சூரியகாந்தியில் 'ஒரு சோம்பேறியின் பக்கம்' என்ற தலைப்பில் சென்ற வருட (2012) இறுதியிலிருந்து இந்த வருட (2013) நடுப்பகுதி வரை தொடராக எழுதப்பட்டவை.

*(ஆசிரியர் த. அஜந்தகுமார்)*




**நூல்: நந்தவனச் சுகந்தம் (கவிதைகள்)**
**ஆசிரியர்: க.பேரின்பதாசன்**
**வெளியீடு: மன்னார் தமிழ்ச் சங்கம்**
**விலை: 500 ரூபா**

இந்தக் கவிதை முயற்சி புதியன படைக்கும் இவருடைய உள்ளுணர்வின்தெளிவானவெளிப்பாடுஎனலாம். "புதிதாக எதையும்முயற்சித்துப்பார்க்கும்தைரியமில்லைஎன்றால், நமது வாழ்க்கைக்கு அர்த்தம் என்ன? எந்த ஆபத்தும் இல்லாதா பத்திரமான இடம்தான் வேண்டும் என்றால், பேசாமல் கல்லறையில் போய்ப் படுத்துக் கொள்ளலாம்" என்பார் இந்திய யோகியான சற்குரு ஜக்கி வாசுதேவ்.

இவருடைய குடும்பம் தந்தை, சகோதரர்கள் கவி புனையும் ஆற்றல்வாய்ந்தவர்களாக இருந்துள்ளனராயினும் இவரது ஈடுபாடு உடற்கல்வியை மையப்படுத்தியதாகவே இருந்து வந்துள்ளது. ஆனால், இவருக்குள்ளேஒரு 'கவிதைமனிதன்' பல ஆண்டுகளாக உறங்கு நிலையில் இருந்திருக்கிறான். அரசபணியிலிருந்து இவர் ஓய்வு பெற்றதன்பின்னர் அந்தக் கவிதை மனிதன் வீறுகொண்டுவிழித்தெழுந்துசெயலாற்ற ஆரம்பித்துள்ளான்.

இவருடைய கவிதைகள் எளிமையானவை. பாரதியார் குறிப்பிடும் 'நவகவிதை'க்கு எடுப்பான எடுத்துக்காட்டுக்கள். ஓர் உண்மைக் கவிஞனுக்குரிய உணர்வு வெளிப்பாட்டை இவருடைய கவிதைகளில்நாம்கண்டுமகிழலாம். கோபம், ஆதங்கம், மகிழ்ச்சி, இயற்கை வனப்பில் இதயம் பறிகொடுக்கும் நிலை, இயற்கை பேண வேண்டும் என்ற இதய ஆவல், அரசின் அநியாயங்களைச் சாடும் கோபக்கனல், வாழ்க்கைக்குத்தேவையானதத்துவங்கள் எனப்பல்துறை சார்ந்த கவிதைகளை இவர் படைத்திருக்கிறார்.

*(அருட்திரு. தமிழ் நேசன் அடிகளார்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

தையிட்டி அ. இராசதுரை

# இந்த மானிடமே விறகுமாகி....



நித்திய, வழக்கம்போல்... பழகின பழக்கம்போல் விடியப்புறம் கண்ணுக்கிருட்டோடையே வெளிக்குப் போட்டு வந்து விட்ட, நல்லசிவம், ஒரு பீடியைக் கட்டுப்பிரித்தெடுத்து, வாயில் ஒரு வாஞ்சையுடன் வைத்து, பற்றவைத்து... அந்தப் பனிக்குளிர், நேரத்துக்குப் புகை, புகையாய் விடத் தொடங்கி மனதாலும் உடம்பாலும் ஜொலி பண்ணிக்கொண்டிருந்தார்...!

நித்திய வழக்கம்போல்.... பழகின பழக்கம்போல்... நல்லாய், நிலம் வெளித்த பிற்பாடு மளமளவென்று, படுத்தபாயைச் சுருட்டியடித்துக்கொண்டே எழும்பியும் விட்ட அபிராமி,

"இஞ்சரப்பா... இண்டையில், சமையலுக்கு ஒரு விறகுக் காந்தலுமல்லோ இல்லையாம்...! தேத்தண்ணியடுப்புக்குத் தான், நாலுதடி அருக்கி நுருக்கிக் கிடக்கு...?"

என்றவாறாய் நித்திரையாலெழும்பிய வீச்சில் கரிசனையாக பீடி குடித்து 'என்ஜோய்' பண்ணிக்கொண்டிருந்த கணவன் நல்லசிவத்தின் காதுகள் நிறையச் சொல்லிவிட்ட கணக்காய் அவனுடைய வாய் என்னத்தைப் பறைந்து முடிக்கப் போன்றதென்றபாஷனாய் அவன் வாயையே விழுந்து விழுந்து பார்த்தபடி இருந்த இடத்தை விட்டசையாது அந்தப்படியே இருந்தும் கொண்டாள்.

நல்லசிவத்துக்கு ஒரு பக்கம் விடியுது. விடிய முன்னராயிந்த தலைதெறித்த விறகுக் கதையைக் கேட்கவே என்ன வோவெல்லாம் செய்து கொண்டு வருவது போலிருந்து கொண்டது.

"...அம்மோய்... அம்மோய்... தேத்தா..தேத்தா...?"

அந்த அழகான, அமைதியான விடியலையும்தான் அலாக்காய்த் தூக்கியெறிவதும்போல் சத்தம்போட்டுக் கத்தித்தொலைத்துக்கொண்டே நல்லசிவம்-அபிராமி, தம்பதியரின் கடைக்குட்டிப் பயலும், போதாக்குறைக்குத் தனது நித்திய வழக்கம்போல்... பழகின பழக்கம்போல்... தேநீர்க் கும்மியடியைத் தொடங்கியும் விடுகிறான்...

"எடேய்... எடேய்... நீ கொஞ்சம் பொறடாப்பா... அப்பா போய்... கனவிறகு கொண்டு வந்தாப்பிறகு... நான் பிள்ளைக்குக் கனக்கத் தேத்தண்ணி ஊத்தித் தாறன்..."

தனது, செல்லக்குட்டியை ஓராட்டும், தாய்ப்பாச ஐடியாவோடு பிள்ளையின் தேநீர் கேட்பாவிற்கு, வகைசெய்திடும் ஒரு அவதிப்பட்ட தாயுள்ளமாக மளமளவென்று, ஒரெப்பனும் தான் சுணங்காமல்... கேத்தல் கழுவி அபிராமி, அந்த வேலையை 'ஸ்ற்ராட்' பண்ணியும் விடுகின்றாளே...!

"நான் மாட்டன்... எனக்கு... இப்பதா ரெண்டு தேத்தண்ணி...?"

கையைக்காலைப் போட்டு உதறித்தள்ளியவன் வீடுமுழுவதும் உருண்டு பிரண்டு, சன்னதங்கொண்டு ஒரு தேநீர்ப்போராளியாகியே விடுகின்றான். அடுப்பும்... அந்த நாலுதடி, விறகோடென்றாலும் ஓகோவென்று, முளாசிப் பிடிக்கத் தொடங்கியும் விடுகிறாது...!

இந்தளவையும் வாய்பேசாமல் பீடி குடிக்கும் சாட்டோடு பார்த்துக்கொண்டிருந்த நல்லசிவத்துக்கும் உள்ளுக்குள் முறையாகவும் தான் முளாசிப் பிடிக்கவும் தொடங்கி விட்டது.

வாய்திறந்து ரெண்டு கதை கதைத்தாலாவது... இந்த, மனமுட்டு ஒரு கொஞ்சநஞ்சமாவது தீரும். அதுவுமிந்த விடியக் காலத்தாலை ரெண்டு விறகுக்கதையைக் கதைக்கத்தான், போனாலும்... தன்னுடைய வாய்வீச்சு மனைவியோடு, அண்டலிக்க ஏலாதெண்ட ஐடியாவோடு நல்லசிவம் மரத்துப் போனவனாய் பேந்தும் தான் ஒரு பீடிக் கட்டை 'பினிஷ்' பண்ணிக்கொண்டிருந்தான். தன்னுடைய உயிரே வெட்டவெளிச்சமாய் எங்கோ வெளிக்கிட்டுமோடிப் போய்விட்ட கணக்காய் இன்னும் என்னென்னவோ விதமாகவெல்லாம் ஒரு திறில்லாய்க் கொண்டெழுப்பிக் கொண்டேயிருப்பதுபோல்....

"நாலு தடிவிறகில் சுப்பரான, மாத் தேநீரும் ஒரு கலப்படமாய்த் தயாராகியும் விட அதனை, முதலில் அந்தக் கடைக்குட்டித் தேநீர்ப் பேய்க்குத்தான் படைத்தும் விட்டு இரண்டாவது தெரிவுமாகத்தான் அந்த 6, பேரைக்கொண்ட வாழ்வாதார அடுப்பாய் சதா எரிந்துகொண்டிருக்கும்... விறகு போன்ற, தன்னுடையவனுக்குக், கொண்டுபோய்க் கொடுத்தும் விடு கின்றாள்.

ரெண்டு, கையையும் நீட்டி விடியக்காலத்தாலை ஒரு சொல்லப்பட்ட இயக்கமான அந்தத் தேநீரைக் குடித்து விடும் ஐடியாவோடு வாங்கிக் கொண்டவன் வாயைக் கொப்பளித்துவிட்டு அந்தத், தேநீரைக், குடித்தும் விட்ட பின்னர் இந்த விற கைப்பற்றி, இரண்டு சொல்லாவது சொல்லி விடவேண்டுமென்ற சங்கையானதொரு சங்கதியும் அவனுள், சங்கீதம்.. பாடவும் தவறவில்லை.

விறகும் தேவை தான்... வேலையும் அவசியம் தான்... இந்த விறகில்லாமல் அடுப்பெரியாது... வேலையில்லாமலும் அடுப்பெரியாது... இப்படியாய் அவன் மனம் ஓலமிட்டுக் கொண்டிருக்கச் செய்வதறியாத நல்லசிவம்... நாநென்ன விறகெண்டு என்ரை கையைக் காலையோ வைச்செரிக்கிறது....?" இப்படியாய் அபிராமி ஒரு விறகுக் கட்டையினால் அவன் தலையில் போட்டு விட்ட கணக்காய் கேட்டுவிட்டாளொரு கேள்வி.

"இந்தா அபிரா...! இப்ப நான் சொல்லப்போற அந்த விறகு ஐயிற்றத்தைப் பற்றிக் கொஞ்சம் வடிவாக் கேள்.... இண்டைக்கு அந்த மாடி வீட்டுக்குப் 'பிளொற்' போடுற பெரிய வேலைப்பாடிருக்கு. எல்லாவேலைக்காரர்களையும் வேளை காலைக்கே வந்திட வேணுமெண்டு ஹெட் மேசன் கந்தவனத்தார் கட்டாயப்படுத்திச் சொல்லியும் போட்டார். என்ன தலை போனாலும் போயேயாக வேணும். இல்லாட்டிப்போனா இனித் தன்ரை மேசன் பாட்டிக்கி . வேலைக்கு வரக்குடாதெண்டும் . துண்டு வெட்டிப்போடும் அந்தாள். தயவு செய்து கோவிக்காதை..."

இவ்வளவையும் கதைத்து முடிப்பதற்கிடையில் நல்லசிவம் நாள் முழுவதும் ... மாடாய் வேலை செய்த ஒரு மேசன் தொழிலாளியிலும் பார்க்கக் கூடவாகக் களைத்து விழுந் தவன் போலாகிவிடுகின்றான். "அப்ப பின்னை... நானென்ன விறகெண்டு என்ரை கையைக் காலையோ வைச்செரிக்கிறது....?"

இப்படியாய் அபிராமி ஒரு விறகுக் கட்டையினால் அவன் தலையில் போட்டு விட்ட கணக்காய் கேட்டு விட்டாளொரு கேள்வி.

நல்லசிவம் பாடு அங்கும் திரும்ப முடியாத இங்கும் திரும்ப முடியாத தொரு... பெரும் விறகுப் பாடாகி நல்லாக நெரித்துப் பிடித் துக் கொண்டது என்னவாயிருச்தாலும் அவள் கதைக்கு அடுத்த கதை பேசப் போனா லும் வந்து விடும் பெரிய வில்லங்கம்...

நல்லசிவம் பாடு அங்கும் திரும்ப முடியாத இங்கும் திரும்பமுடியாததொரு... பெரும் விறகுப் பாடாகி நல்லாக நெரித்துப் பிடித்துக் கொண்டது.

என்னவாயிருந்தாலும் அவள் கதைக்கு அடுத்த கதை பேசப் போனாலும் வந்து விடும் பெரிய வில்லங்கம்.

அந்தா... அவளுக்குத் தேவை. அடுப்பெரிக்க விறகே விறகுதான். அந்தா அவனுக்குத்தேவை வேலையோ வேலை.

அபிராமி இந்த விறகு விடையத்திலொரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரச தலைவர்தான் இந்த நல்ல சிவமோ... சகல உரிமைகளும் பறிக்கப் பட்டு விட்ட ஒரு பரிதாபகரமான சிறுபான்மையாக நம்மவர் போலாகிவிட.

அவள் வாயோ சும்மா கிடக்கவில்லை. அந்தொரு விறகுக்காக எத்தனையோ கதைகளையெல்லாம் கொட்டியளந்து கொண்டு தானிருந்தது.

நல்லசிவமோ நல்லாய்க் கேட்டுக் கொண்டும் தான் அடுத்த மூச்சு விடாமல் ஒரு பயந்தாங்கொள்ளி பெண்டாட்டி தாசன் போலவே குறாவிப் போய்க் கிடந்தார்.

விறகும் தேவைதான் வேலையும் அவசியம் தான் இந்த விறகில்லாமல் அடுப்பெரியாது வேலையில்லாமலும் அடுப்பெரியாது... இப்படியாய் அவன் மனம் ஓலமிட்டுக் கொண்டிருக்கச் செய்வதறியாத நல்லசிவம் ஹெட் மேசன் கந்தவனத்தாரின் காலில் விழுந்த கணக்காய் அவருக்கு ஒரு கோல் எடுத்தே விடுகின்றான்.

தன்னுடைய விறகுப் பத்தியெரிவையும் விறகுக்காக மனைவியின் ஆய்க்கினைக் குண்டுவெடிப்பை யும் அழுவாரைப்போல் வெட்ட வெளிச்சமாகச் செல்லி... மேசன் கந்தவனத்தாரைக் கட்டிப் பிடிக்காத குறையாகக் குமுறிக் கொட்டத் தொடங்கியும் விட.

"என்னடாப்பா சிவம்...! உன்ரை பெண்டிலுக்கு நீயென்ன அவ்வளவு பயமா என்ன..? உனக்கிப்ப வேலையோ, விறகோ எது வேணும்..? விறகுதான். கட்டாயம் வேணுமெண்டா அவசியமெண்டா... அதிமுக்கிய மெண்டா....நீ போய் நல்லாய் விறகையள்ளி வந்து உன்ரை 'வைவ்' க்குக் குளிர்த்தி போடு அதோடை உன்ரை குடும்பத்தைக் குளிர வைக்கிற வாழ வைக்கிற வேலைக்கு வாற வேலையையும் 'ஸ்ரொப்' பண்ணி விடு..."

நல்ல சிவத்தின் 'ஹெட்'டில் ஒரு கொங்கிறீட் கட்டிலையோ தூக்கிப் போட்டும் விட்ட கணக்காய்க் கதைத்துக் கொண்ட ஹெட் மேசனார்... அந்தமட்டோடு இருந்த விசருக்க தொக்கென்று போனையும்

43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுப்பு

# பயம் அறிவை மழுங்கடிக்கும்

மு சத்தியபாமா

வழி தெரியாமல் காடென்றுக்குள் மாட்டிக் கொண்ட மாதவன் எங்காவது மனித நடமாட்டம் இருக்கிறதா? வீதிகள் எவையாவது தென்படுகின்றனவா? என்பதைக் கவனித்தபடி நடந்து கொண் டிருந்தான். அவன் கால்கள், 'இந்தக் காட்டுக்குள்ளிருந்து மிருகங்கள் எவையாவது வெளிப்பட்டு விடுகின்றனவா...?' என்பதில் அவதானத்துடனேயே நகர்ந்து கொண்டிருந்தன. தூரத்தேயிருந்து சத்தங்கள் கேட்டன. மனித நடமாட்டம் இருப்பதை உணர்ந்து கொண்ட மாதவன், எந்தத் திசை நோக்கிப் பயணிப்பது என்பதில் குழப்பம் அடைந்தான். குழப்பத்தைப் போக்க எண்ணியவன் மரமென்றைத் தெரிந்தெடுத்து அதில் ஏறி மனித நடமாட்டத்தை அவதானிக்க முற்பட்டான். சிறு வயதில் மரத்தில் ஏறிப் பழகிக் கொண்டது அவனுக்கு இந்தச் சூழலில் கைகொடுத்தது.



காட்டுக்குள் நின்ற உயரமான மரம் ஒன்றில் ஏறிக்கொண்டான். கண்களை நலாபுறமும் விட்டு அவதானித்தான். எங்கும் காடு சூழ்ந்திருந்தது. எதையும் அவதானிக்க முடியவில்லை. மீதமுள்ள உயரம் வரையும் ஏறினாலேயே தெளிவாக அவதானிக்க முடியும் என்பதை உணர்ந்தான். ஏறினான்.

அந்த மரத்தின் உச்சி வரைக்கும் ஏறிவிட்டான். சுற்றிப் பார்த்தான். ஒரு திசையில் சில வாகனங்கள் ஓடிக் கொண்டிருந்தன. வீதி ஒன்று இருப்பதும் புரிந்தது. இவற்றைக் கண்ட மாத்திரத்தில் அவன் மனம் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியது. அவசரமாக இறங்குவதற்கு முற்பட்டான். கால்கள் சறுக்கிக் கொண்டன. பிடித்திருந்த கொப்புச் சறுக்கிவிடத் தொங்கிய நிலைக்கு வந்துவிட்டான். கீழே பார்த்தான். நிலம் மிகத் தொலைவில் இருந்தது. பயத்தில் உடல் நடுங்கி வியர்வை ஊற்றெடுத்தது. கையை விட்டால், அவ்வளவுதான். கொப்பைப் பிடித்து மரத்தில் தாவுவதற்கு முயற்சி செய்தான். முடியவில்லை. அந்தரத்தில் தொங்கிக் கொண்டிருந்தான். அந்த நேரம் பார்த்து அவ்விடத்துக்கு வயது முதிர்ந்த ஒரு விறகுவெட்டி வந்து சேர்ந்தான். அவனிடம் உதவி கேட்டு மாதவன் அலறினான். விறகு வெட்டியோ மாதவனைப் பார்த்துவிட்டு அலட்சியமாகத் தன் வேலையைச் செய்து கொண்டிருந்தான். தொடர்ந்தும் மாதவன் தனக்கு உதவி செய்யுமாறு கத்தினான். விறகு வெட்டி, சிறு கல் ஒன்றை எடுத்து மாதவன் மீது விட்டெறிந்தான். மாதவனுக்குக் கோபம் மேலிட்டது. 'இரு வருகிறேன்' என்று நினைத்தவாறு கடும் முயற்சி செய்து ஒருவாறு மரத்தின் பெரும் கொப்பைப் பிடித்துக் கொண்டான். அவசர அவசரமாக இறங்கியவன். நேராக அந்த விறகு வெட்டியிடம் வந்து. "ஏன் கல்லால் எறிந்தீர்கள்...? நான் உங்களை உதவியல்லவா கேட்டேன்...?" என்று கர்ஜித்தான்.

பதிலுக்கு அந்தப் பெரியவர் "நான் உனக்கு உதவி தான் செய்தேன் தம்பி" என்றார். மாதவன் ஆச்சரியமாகப் பார்த்தான்.

பெரியவர் தொடர்ந்தும். "தம்பி...! நீ தொங்கிக் கொண்டிருக்கும்போது நான் உன்னை நன்றாக அவதானித்தேன். நீ பயத்தால் உறைந்துபோய் இருந்தாய். உன் மூளை வேலை செய்யவில்லை. நான் கல்லை எடுத்து உன் மீது எறிந்ததும் உனக்குள்ளிருந்த பயம் போயிற்று. அத்தோடு என்னை எப்படிப் பிடிப்பது என்றும் யோசிக்க ஆரம்பித்துவிட்டாய். கடும் முயற்சி செய்து ஒருவாறு உன்னால் அந்த மரக்கொப்பையும் பிடிக்க முடிந்தது." என்றார். இப்போதுதான் தனக்குப் பெரியவர் உதவி செய்திருப்பது மாதவனுக்குப் புரிந்தது. அவருக்கு நன்றிகூறி. தான் செல்வதற்கும் பாதை அறிந்து அவ்விடமிருந்து விடை பெற்றான் மாதவன்.



# பாப்பாவும் பாரதியும்

பாட்டுக்கொரு புலவன் பாப்பா அந்தப்
பாவலனைப் பாட வேண்டும் பாப்பா
பாப்பாவுக்கொரு பாட்டு – நம்ம
பாரதியார் சொல்லி வைத்தார் பாப்பா

தமிழுக்கொரு புலவன் பாப்பா – அவனைத்
தரணியில் நாம் போற்ற வேண்டும் பாப்பா
பொய் சொல்லக் கூடாது பாப்பா என்ற
புலவனைப் பாட வேண்டும் பாப்பா

சாதிகள் இல்லையடி பாப்பா என்ற
சமத்துவத்தைச் சொல்லி வைத்தான் பாப்பா
கடவுளையே வணங்கினால் என்றும்
கவலை இல்லை என்றுரைத்தான் பாப்பா

பயந்து ஒதுங்காதே பாப்பா – என்றும்
பகிடிக்கும் பொய் சொல்லாதே பாப்பா
ஊர் கூடித்தேர் இழுக்க வேண்டும் – நாளும்
ஒற்றுமையே நம்ம பலம் பாப்பா!

தமிழ் மொழி போல இனிய மொழி பாப்பா – இந்தத்
தரணிதனில் இல்லை என்றான் பாப்பா
அமிழ்தின் இனியதென்றாய் பாப்பா – எங்கள்
அன்னை தமிழ் மொழி என்றான் பாப்பா!

முண்டாசுக் கவிஞனவன் பாப்பா
முத்து, முத்தாய்க் கவிதை சொன்னான் பாப்பா – அதை
விண்டுரைக்க முடியாது பாப்பா – அவன்
வேகம் நமக்கில்லையடி பாப்பா

பாரதியைப் படித்திடவே வேண்டும்
பண்போடு வாழ்ந்திடவே வேண்டும்
நல்லவனாய் நீ வாழ வேண்டும் – உன்னை
நானிலமும் போற்றிடவே வேண்டும்

கந்த பேரின்பம்

## செடிக்கு நீர் ஊற்றுவதற்கு வழிகாட்டுங்கள்



# 'ஜோகனஸ் குட்டன்பேர்க்'



கோடிக்கணக்கான புத்தகங்களும் பத்திரிகைகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன. இதற்கு அடிப்படையாக அமைந்தது அச்சுப்பதிப்பின் வளர்ச்சியே. அச்சிடும் முறை கண்டுபிடிக்கப்பட்ட பின்னர்தான் கல்வி வளர்ச்சி ஏற்பட்டது. வாசிப்பும் மனிதனின் பூரண வளர்ச்சியும் அதன்வழி வந்தன. கடதாசித் தயாரிப்பு முறை சீனாவில் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே அச்சுப்பதிப்புமுறை ஐரோப்பாவில் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அந்த அச்செழுத்துக்களை உருவாக்கிய பெருமை, 'ஜோகனஸ் வுட்டன்பேர்க்' என்பவரையே சாரும். இவர், ஜேர்மனியில், மெயின்ஸ் என்ற ஊரில், 1398ஆம் ஆண்டில் பிறந்தவர். பொற்கொல்லரான இவருடைய தந்தை, அரசுக்கு நாணயங்கள் செய்து கொடுக்கும் பணியில், ஈடுபட்டு வந்தார். ஜோகனஸ் வுட்டன்பேர்க் அச்செழுத்துக்களை உருவாக்குவதிலே கவனம் செலுத்தினார்.

ஆரம்பத்தில் இறப்பரில் எழுத்துக்களைச் செய்து, ஒரு மரப்பலகையில் அதை ஒட்டவைத்து, உருளை போன்ற ஒன்றை உருவாக்கி, அதில் பலகையை வைத்து, கடதாசியில் சுழல்முறையில் அச்சிட்டார். அது பயன் தரவில்லை. அதில் ஒருமுறை மட்டுமே அச்சுப் பதிக்க முடிந்தது. ஒரே அச்சில், பல்லாயிரம் பிரதிகளை அச்சிட முனைந்தார்.



பலகைக்குப் பதில் உலோகத்தைப் பயன்படுத்த நினைத்தார். இதற்கு அவரது தொழில் அறிவு பயன்பட்டது. நாணயத்தை உருவாக்குவதற்குப் பயன்பட்ட உலோக அச்சு இப்போது அவருக்கு பயன்பட்டது. எழுத்துக்களை [illegible]த்தில் உருவாக்கி [illegible] யில் பதித்தால் [illegible] பிரதிகளை எடுக்கலாம் என்பதைக் கண்டறிந்தார். அதன்படி 1450ஆம் ஆண்டில் ஜேர்மனியக் கவிதை ஒன்றை அச்சடித்தார். [illegible]இல் உலகின் முதல் புத்தகம் அச்சிடப்பட்டது. இலத்தீன் மொழியில், இரண்டு பாகங்களாக 300 பக்கங்களைக் கொண்ட பைபிள் அச்சிடப்பட்டது. புத்தகப் புரட்சி ஏற்பட்டது.

இன்று, பல்லாயிரக்கணக்கான புத்தகங்கள் அச்சிடப்படுகின்றன. சிறுவர் முதல் பெரியவர்கள் வரை, படித்து அறிவை வளர்க்கிறார்கள். அதிநவீன அச்சு இயந்திரங்கள் வந்து, மணிக்கு, இலட்சக்கணக்கான பிரதிகளை அச்சிடுகின்றன. இத்தனைக்கும் வழி சமைத்தவர் ஜோகனஸ் வுட்டன்பேர்க்கே ஆவர்.



பு.சந்தோஷ்
தரம் – 4,
யா/மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம்.



சு.நிலானி,
தரம் – 5,
யா/ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2500 வருடங்களுக்கு முன்பிருந்த ஐந்து தலை நாக வழிபாடு

13

வரலாறு

அருணா செல்லத்துரை

சைவசமய வழிபாடுகளில் காலத்துக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு பலவித மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன; ஏற்பட்டும் வருகின்றன. பெருநிலப்பரப்பில் ஐயனார், வைரவர், பிள்ளையார் போன்ற தெய்வ வழிபாடுகள் அனைத்தும் ஆரம்பத்தில் நடுகல் வழிபாடாகவே இடம் பெற்றுள்ளன. ஆலயங்களில் சேதமடைந்த சிலைகளை வைத்து வழிபடுவது தவறு என்று ஆகம சாஸ்திரங்கள் கூறுகின்றன. ஆனால் சிலை வழிபாடு ஆரம்பிக்கப்பட்ட பின்னர் நடுகற்களையும் தெய்வங்களின் சிலைகளோடு சேர்த்துப் பிரதிஷ்டை செய்துள்ளமை எமது பிரதேசத்தின் பாரம்பரியமாகும்.

விபீஷணனுடைய பரம்பரையினர் இலங்காபுரத்தில் ஆட்சிசெய்த காலத்தில் பார்வை இழந்த பாணன் ஒருவர் யாழ் வாசித்துத் தனது திறமையை வெளிப்படுத்தியமைக்காக அவருக்கு இரண்டு பரிசுகள் வழங்கப்பட்டன. இலங்காபுரத்துக்கு அடுத்திருந்த பெரிய கமமும், மணற்றிடல் ஒன்றும் பரிசுகளாகக் கொடுக்கப்பட்டன. பாணன் கமத்தைப் திருத்தி விவசாயத்தை அபிவிருத்தி செய்த காரணத்தால் 'பாணன் கமம்' என்று பெயர் வைக்கப்பட்டதோடு அது ஒரு இராசதானியாகவும் உருவாக்கப் பட்டது.

'பாணன் கமம்' என்ற பெயர் ஆங்கிலக் குறிப்புகளிலும், வரைபடங்களிலும் 'Panankamam' என்று குறிக்கப்பட்டுள்ளது. இதனைத் தமிழ் வரலாற்றாசிரியர்கள் எதுவித அர்த்தமுமில்லாமல் 'பனங்காமம்' என்று எழுதத்தொடங்கியதால் அதன் புராதன வரலாறு சிதைக்கப்பட்டுள்ளமையை உணர முடிகின்றது.

பாணன்கமத்தில் (பனங்காமம்) ஐந்து இலிங்கங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயம் இருக்கின்றது. இது 'பஞ்சலிங்கேஸ்வரர்' ஆலயம் என அழைக்கப்பட்டுள்ளது. பிற்காலத்தில் பிள்ளையார் வழிபாடும் இங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கி.பி. 1783களில் ஒல்லாந்தரால் இந்த ஆலயமும் சிதைக்கப்பட்டது. சிதைந்திருந்த ஆலயம் 1950களின் பின்னர் திருத்தப்பட்டுள்ளது. இந்த ஆலயத்திலிருந்த இரண்டு இலிங்கங்கள் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டுள்ளன. கடந்த பல வருடங்களுக்கு முன்னர் இந்த ஆலயத்தில் கும்பாபிஷேகத்துக்காகச் சிலைகள் பாலபிஷேகம் செய்யப்பட்டபோது பிள்ளையார் சிலையின் அருகே முன்னர் வணங்கப்பட்ட நடுகல்லும் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தமை, இனங்காணப்பட்டிருந்தமை முக்கிய அம்சமாகும்.



பாணன்கமம் நடுகல்லும் பிள்ளையாரும்

இராவண மகாராசா தோற்கடிக்கப்பட்ட பின்னர் இலங்காபுரத்தில் இருந்த இராவணனுடைய ஆதரவாளர்கள் அங்கிருந்து வெளியேறி கிழக்குமூலை, மேற்குமூலைப்பகுதிகளில் ஒதுங்கியிருந்ததற்கு அடையாளமாகப் பல புராதன சின்னங்கள் இருக்கின்றன. மேற்கு மூலையில் விளாத்திக்குளம் பகுதியில் கருங்கல் தூண்கள் நிறுத்துவதற்கான புராதன ஆதாரக்கற்கள் பல வடிவங்களில் வீதியின் அருகிலுள்ள காடுகளுக்குள் காணப்படுகின்றன. இந்த ஆதாரக்கற்களில் தூண்களின் அடிப்பாகங்களை நிறுத்துவதற்கான துளைகள் சதுர வடிவிலும், வட்ட வடிவிலும் பொளியப்பட்டுள்ளமையும், அவை அருகருகே காணப்படுவதும் முக்கிய வரலாற்று அடையாளங்களாகும். விளாத்திக்குளத்தின் இடதுகரைக்கு மேலேயுள்ள மலைக்குன்றில் பல புராதன சின்னங்கள் இருக்கின்றன. அவற்றிலிருந்து செம்மையாகப் பொளியப்பட்ட பெரிய நீள்சதுரக்கல்லொன்றைப் பிரதேசவாசிகள் இழுத்து வந்து குளக்கட்டில் விட்டுள்ளனர். மேற்கு மூலை விளாத்திக்குளத்தில் பிள்ளையார் வழிபாடு நடுகல்லாக இடம்பெற்றுள்ளது. குளத்தின் கட்டில், சிலை வணக்கம் ஆரம்பிக்கப்பட்டபோது பிள்ளையார் சிலைக்கு அருகில் தாம் வணங்கிய நடுகல்லையும் பிரதிஷ்டை செய்துள்ளனர்.



விளாத்திக்குளத்தில் நடுகல்லும் பிள்ளையாரும்

## நடுகற்களும் பிள்ளையார் வழிபாடும்

வவுனியா வடக்கு, நெடுங்கேணியில் புராதன கேணி இருக்கின்றது.



நெடுங்கேணி நொச்சியடியில் நடுகல்லும் பிள்ளையாரும்

கேணியின் மத்தியில் நொச்சிமரம் இருக்கும் காரணத்தால் இது 'நொச்சியடிக் கேணி' என அழைக்கப்படுகின்றது. இந்தக் கேணியைச் சுற்றிக் கருங்கற்களாலும், செங்கற்களாலும் படிகள் கட்டப்பட்டிருந்தமை அங்கிருக்கும் சிதைவுகளின் மூலம் தெரிய வருகின்றது. இந்தக் கேணிக்கு அருகிலுள்ள மலைக்குன்றிலிருந்து நீர் வடிந்து நிறைகின்றது. இந்தக் கேணியருகாக சென்றால், அங்குள்ள மலைக்குன்றில் ஐயனார் வழிபாடு இடம்பெறும் இடத்துக்குச் செல்ல முடியும். அந்த இடத்துக்குச்செல்லும்முன்னர் உள்ள மலைக்குன்றில் 'எழுத்து மலை' இருக்கின்றது. இங்கு புராதன எழுத்துக்கள் காணப்படுகின்றன. இந்த எழுத்துகள் உள்ள இடத்தின் கீழுள்ள மலைச்சரிவில் தமிழ்ப் பிராமிக் எழுத்துக்கள் இருப்பதைப் பேராசிரியர் பத்மநாதன் உறுதி செய்துள்ளார். கேணிக்கு அருகில் பிள்ளையார் வழிபாடு நடுகல் வடிவத்தில் இருந்துள்ளது. பிள்ளையாருக்கான சிலை பிரதிஷ்டை செய்யப்பட்ட போது பிள்ளையார் சிலைக்கு அருகே வழிபட்டுவந்த அந்த நடுகல்லும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

வவுனியா - நெளுக்குளம் புராதனமான கிராமம் என்பது அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஐந்து தலை நாக சிலை மூலம் தெரிய வருகிறது. இந்தப் பிரதேசத்தில் அதிக குடியேற்றம் உள்ள கிராமமாக நெளுக்குளம் இருந்துள்ளது. கி.பி.1911களில் பிள்ளையார் வழிபாட்டுக்கென நடுகல் ஒன்று ஒலுக்குளம் (பாவற்குளம்) பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். இந்த நடுகல் வழிபாடு கிட்டத்தட்ட 106 ஆண்டுகள் வரை இடம்பெற்றுள்ளது. 2017இல் ஆலயம் கட்டப்பட்டு, பிள்ளையாரின் உருவச்சிலை மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆரம்ப காலத்திலிருந்து பிள்ளையாரென வழிபட்ட நடுகல்லைப் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ஆலயத்தின் மூலஸ்தான வாசலில் பிரதிஷ்டை செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



நெளுக்குளம் பிள்ளையார் கோவிலில் நடுகல்

(தொடரும்)

## வாருங்க!

### கவிதை

என்.எஸ்.ரஜீவ்

கடத்தப்பட்ட, கையளித்த தமது
உறவுகளைக் கண்டறிவதற்காக
காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர்
காணாமல் ஆக்கப்பட்டோரின்
உறவுகள்.
கண்டிருக்க மாட்டினம்

காட்சி காணப் பலபேர்
கட்சி பேதமின்றி காரேறி வாராங்க
கண்ணீர்க் கதைகேட்டுப் பின்
கலர்போட்டோவும் எடுத்துக்கொண்டு
போறாங்க
மாற்றத்துக்காக மாத்திய

மைத்திரியும் பல இராத்திரி
ஆகியும் தீர்வு தரல்ல

சத்தியமா தீர்வு வரும் எண்ட
சம்மந்தரும் சனாதிபதிக்கிட்ட
சத்தம் போட்டுக் கேட்க முடியல்ல

இன்று இத்தனையாவது நாள்
என்று எழுதிய
[illegible]
[illegible]

எத்தனை நாள் ஆகுமென்று
எவருக்கும் தெரியாது

விதியென்று வீட்டில்
முடங்கி கிடக்கவும் முடியாது
முட்டி மோதி
முடிவொன்று
கண்டிடலாம் வாருங்க...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

தி.அரவிந்தன்



# வாழ்வியலை சிதைக்கும் சாதியம்

எப்பொழுது கடவுளுக்கும் தனக்கும் இடையில் தரகர் அமைத்து வழிபட ஆரம்பித்தானோ அன்று தான் இந்தச் சாதியமும் முளைவிடத் தொடங்கியது.

உலகின் எப்பாகத்திலிருந்தாலும் தமிழ் மக்களின் வாழ்வியலைப் பீடித்திருக்கும் பெரும் நோயாகவிருக்கிறது இந்தச் சாதியம். இது எப்படியாகத் தமிழ் மக்களின் வாழ்வியலுக்குள் நுழைந்தது என்று சற்றுச் சிந்தித்தால், தமிழன் எந்தக் காலத்தில் சிலை வழிபாட்டைத் தொடங்கினானோ, எப்பொழுது கடவுளுக்கும் தனக்கும் இடையில் தரகர் அமைத்து வழிபட ஆரம்பித்தானோ அன்றுதான் இந்தச் சாதியமும் முளைவிடத் தொடங்கியது என்றும் ஒரு வலுவான காரணம் இருக்கிறது.

**ஆரியர், சமூகக் கட்டமைப்புக்களைச் சாதியமாக்கினர்**

தொழில் வாரியாகப் பிரிவுகள் உள்ள ஒரு சமூகத்தில் திருமணங்கள் அனைத்தும் அந்தச் சமூகங்களுக்கு உள்ளேயே நடந்தேறின. அதற்குக் காரணம், கூட்டுக் குடும்ப வேளாண்மைச் சமூகமாக காணப்பட்டிருந்த அக்காலத்தில் (நிலவுடமைச் சமுதாயம்) சொத்துக்கள் (வேளாண்மை நிலங்கள்) பிரிக்கபடாதிருக்கவே பெரும்பாலும் திருமண நடைமுறை அந்தந்த சமூகத்துக்குள்ளேயே நடந்தேறின. அத்துடன் சமூக தோட்ட வேலை செய்யும் ஒரு பெண்ணுக்குத்தான் தெரியும் தன் கணவன் எத்தனை மணிக்கு வேலைக்குப் போவான், அவனுக்கு எத்தனை மணிக்குச் சாப்பாடு கொடுக்க வேண்டும் என்பதெல்லாம். அதேமாதிரி அந்தப் பெண்ணின் செயற்பாடுகளைப் புரிந்து கொள்ளும் பக்குவமும் அந்தச் சமூகத்துக்குள்ளிருக்கின்ற ஆண் மகனிடம் நிறைந்தி ருக்கும். தோட்டவேலைக்குரிய சமூகத்தினருக்கு மாத்திரமன்றி சகல தொழிலின் பாற்பட்டவர்களுடைய நிலமை யும் இப்படியானதே. அந்த ரீதியில் தொழில் என்பது சமூக ரீதியாகவே திருமண பந்தங்களை ஒழுங்கமைத்து வந்தது. இந்தக் கடப்பாடுகள் ஆரியரின் வருகைக்குப் பின் வர்ணக் கோட்பாட் டின் அடிப்படையில் தொழிலை அடிப்படையாகக் கொண்ட கோட்பாடு சாதியமாகவளர்ச்சிகண்டது. சாதியரீதியிலானதிருமணபந்தங்களாக மாற்றப்பட்டன. தமிழன் சாதிக் குழுக்களாகப் பிரிக்கப்பட்டான். இன்னும் சொல்லப்போனால், பிரித்தாளும் உத்தி ஒன்று தமிழனின் பண்பாட்டுப் பழக்க வழக்கத்தின் மீது ஆரியரால் திணிக்கப்பட்டது.

**புலிகளின் காலத்தில் மங்கிப்போனது சாதியம்**


இந்தச் சாதிய உணர்வால் தமிழனை அடிமைப்படுத்தும் செயற்பாடு தொடர்ந்தது. "தீண்டாமை வேண்டாம்" எனச் சொல்லும் தமிழ் சமூதாயத்திலேயே தீண்டாமை உருக்கொண்டு ஆண்டசாதி, அடிமைப்பட்ட சாதி எனப் பல வாறான சாதிப் பிரிவினைகள் உருவாகின. தமிழனின் சிந்தனையும், அறிவாற்றலும் ஒரு குறுகிய வட்டத்துக்குள் அடைக்கப்பட்டன. தமிழன் மீது எடுக்கப்பட்ட படையெடுப்புக்கள் ஒவ்வொன்றிலும் இலக்கு வைத்துப் புத்தகங்கள் அழிக்கப்பட்டன. காரணம், அவனுடைய வரலாறு அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படக் கூடாது என்பதே ஆகும். அந்த வகையில் இடைநடுவில் இணைப்பறுந்த ஒரு சந்ததியின் வழித்தோன்றலாகவும் நாம் சாதியத்தைக் காவித்திரிகிறோம். தமிழ்நாடாக இருக்கட்டும் ஈழமாக இருக்கட்டும் தீண்டாமை விடயத்தில் ஒரேமாதிரியாகவே செயற்படுகின்றன. தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆட்சியில் ஈழத்தில் சாதியம் என்பது சோபையிழந்திருந்தது. அவர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் மீண்டும் அது ஆட்டம்காட்டத் தொடங்கியிருக்கிறது.

**நமக்குள் பிரிவினைகளை முதலில் களையவேண்டும்**

போர் முடிந்து 10வருடங்களை எட்டப்போகும் இந்தக் காலகட்டத்தில் ஆறிய புண்ணைச் சொறிந்து சுகம் காண்பதுபோல் சில சக்திகள் மீண்டும் சாதியத் தீண்டாமை பேசிச் சுகம் அனுபவிக்கத் தலைப்படுகின்றன. இன்றைய யாழ்ப்பாணம் கொண்டிருக்கின்ற முதன்மைப் பிரச்சினைகள் அனைத்தும் சாதியத்தை ஊற்றாகக் கொண்டவையே. அடிமைப்பட்டுப் போய்க்கிடக்கின்ற நாம் எமக்குள்ளேயே பல பிரிவினைகளை வைத்துக்கொண்டு எமது விடுதலையை, அழிந்துபோன நமது பண்பாட்டை எவ்வாறு கட்டியெழுப்ப முடியும்? சாதிய சிந்தனை அற்ற சந்ததி தமிழர்கள் மத்தியில் என்றைக்கு உருவாகிறதோ அன்றைக்கே தமிழ் மக்கள் முன்னேறுவதற்கான பாதைகள் உருவாகும்.

**சாதியத்திலிருந்து விடுபட முயல்வோம்**

நாம் எப்படி இந்தச் சீழ்பிடித்த சாதியப் போக்குடமை வாதத்தில் இருந்து மாறப்போகிறோம்? எமது அடுத்த சந்ததி உலகை ஆழ வேண்டும் என்கிற இலக்கோடு வளர்த்தெடுக்கப்பட வேண்டும். வெறும் சமூக அந்தஸ்தை வைத்துத் தன்னைத் தீர்மானிக்காமல் 'யுனிவேர்சல் சிற்றிசன்' எனப்படும் உலகப் பிரஜையாக உலகில் உள்ள அனைவருடனும் ஒப்பிட்டுத் தான் எந்த நிலைக்குரியவன்



எனப் பிரிவினைகள் தாண்டியதாக அந்தத் தலைமுறை சிந்திக்கும் ஆயின் வருங்காலத்தில் சாதியம் என்பது உடைந்துபோகும். இனியாவது நாம், நம் சமூகத்தில் புற்று நோயாக மாறி நிற்கும் இந்தச் சாதியத்தை வேரோடு அழிக்க வேண்டும். அதற்காக நாம் அனைவரும் சிந்திக்க வேண்டும். எமக்கென்று தனித்துவமாக வழங்கப்பட்டிருக்கிற அந்த ஆறாம் அறிவைக் கொண்டு இனியாவது சிந்தித்து இந்தச் சாதியப் பொறிக்குள் இருந்து விடுபட முயல்வோமாக.

கவிதை

கை. சரவணன்



## மண்

அவதானக் குறிப்புக்கள் சில - 4

திருஸ்டிக்கான
புள்ளியளவு
கறுப்புமின்றி
கண் பரவும் தூரம்
பரவிக்கிடக்கிறது
அலை தழுவிப் போகும்
கரையில் கழுவிய மணல்
வெள்ளையாய்.
மண்ணின் நிறம்
வெள்ளை
என்றதொரு குழந்தை.

ஆழக் கிழிந்து
சால் பிழந்து காய்ந்தபடி
காற்றாடிக் கிடக்கிறது
தோட்டத்துச் செம்மண்.
மண்ணின் நிறம் சிவப்பு
எனும்படியாக.

சேறுழக்கி நொதித்து
சகதியான வயல் நிலத்தில்
குளிர்மையின் சுருதியில்
சீராயொலிக்கிறது
நடவுப்பாடல்.
மண்ணின் நிறம் கறுப்பு
என்றானொரு சிறுவன்.

இடைநெளிய
ஆறுநடக்கும் சுவடருகில்
மருத நிழலிருக்கும்
பச்சைத் தவளையை
மறைத்தபடி பாசிபூசிக்
கிடக்கிறது நிலம்.
மண்ணின் நிறம்
பச்சைதான்
என்றாள் மற்றொரு
சிறுமி.

போர்
முடிவுற்ற நாளில்
எல்லா நிறமுமாகிக்
கிடக்கிறது
களம்.

கவிதை

சிவம்



## மனச்சுடு

தோட்டத்து வேலியில் கட்டப்பட்ட
மட்டை கட்டின ஆட்டைப்போல
வாழ்கிறேன்.
வருடங்கள் பலவும்
பனியாய் உருகின்று.

இ...க்கும்
...மொழியில்லாத பனிக்கும்
என்ன சம்பந்தம்?

மூத்திரம் பேய்ஞ்சா
முறிச்செறிகிற குளிரில் பழுத்த
மேப்பிள் இலைக்குக்கீழே
அணிலொன்று ஒளித்துவைத்த
உழுத்துப்போன
வேர்க்கடலையாய்க் கூட
ஊர் பெயர்ந்த வாழ்வு இல்லை.
எல்லா மொழிகளும் பேசும்
உலகத்துப் பிள்ளைகளோடெல்லாம்
ஒரே வகுப்பில் படிக்கின்ற

கடைசிப் பிள்ளை
சிங்களமும்
ஒரு மொழிதான் என்கிறான்.
பேரன் கலப்பினம் என்பதால்
அவனோடு பேச
மொழியில்லாத தாத்தாவான
பின்பு
என் தமிழ்த் திமிரும்
பொல்லூன்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சின்னதா ஓர் அரட்டை

## கண்ணை கட்டிய மோடி

குஜராத் - அகமதாபாத்தில் 'புல்லட்ரயில்' ஆரம்ப விழாவுக்கு வருகை தந்த ஜப்பான் நாட்டுத் தலைமை அமைச்சர் 'சின்சோ அபே' யின் கண்ணில் படாமல் இருக்க அகமதாபாத் நகரக் குடிசைப் பகுதிகள் துணிகளைக் கட்டி மறைக்கப்பட்டுள்ளன. குடிசைப் பகுதிகளை மறைத்துவிட்டு 8 கிலோமீற்றர்கள் தூரம் வரைக்கும் திறந்த காரில், ஜப்பான் தலைமை அமைச்சருடன் ஊர்வலம் சென்றிருக்கிறார் குஜராத் முன்னாள் முதல்வரும் இன்றைய இந்தியத் தலைமை அமைச்சருமான மோடி.

*'போட்டோசொப் மென்பொருளின் இன்னொரு பரிணாமம் இதுவாகத் தான் இருக்கும்...'*



அலசல்

மோரிகிறேஸ் வரதராஜன்

## சோதிக்கிறார்கள் இயேசப்பா!

தந்தை இமானுவேல் இலங்கை வந்தார். அமெரிக்கத் தூதுவரைச் சந்தித்துக் கைகுலுக்கிகொண்டார். இதுவரை ஜெனிவாவில் அமெரிக்கத் தூதுவருடன் தேநீர் அருந்தி வந்த அருட் தந்தை, இப்போது கொழும்பு சென்று அமெரிக்கத் தூதுவருடன் தேநீர் அருந்தியுள்ளார்.

'இதற்குத்தானா ஆசைப்பட்டாய் பாலகுமாரா' என்று நீங்கள் இந்த அருட் தந்தையைப் பார்த்துக் கேட்க நினைக்கலாம். ஆனால், அவர், 'சிங்கத்தை அதன் குகையில் சென்று சந்தித்தேன்' என்று வீர வசனம் பேசினால் என்ன செய்வது? எமது பிரார்த்தனை என்னவென்றால் இந்த அருட் தந்தை இப்படியே போய் மகிந்தவுடனும் கைகுலுக்கி விடக்கூடாது என்பதே. இறுதியாக அருட் தந்தையிடம் ஒரு வேண்டுகோள் 'எல்லோரிடமும் பேசிவிட்டேன். இன்னும் ஒரு மாதத்தில் தீர்வு வரப் போகிறது' என்று எதிர்க்கட்சித் தலைவருக்குப் போட்டியாக அறிக்கை விட்டு விடாதீர்கள்' ஏனெனில் அதைத் தாங்கும் சக்தி தமிழ் மக்களுக்கு இல்லை!

## நமக்கு வாய்ச்ச தலைவர்கள்


எமது வாக்கில் பதவி பெற்ற எமது தலைவர் தமிழரை இனப்படுகொலை செய்த மகிந்தவிடம் சென்று சேர்ந்து ஆட்சி அமைப்போம் வாருங்கள் என்று அழைக்கிறார். இன்னொரு தலைவர் கடந்த வருடம் ஐ.நா சென்றார். இலங்கை கேட்காமலே ஒன்றரை வருட கால அவகாசத்தை அவர் பெற்றுக் கொடுத்தார். இவர் முதலில் நடந்தது இனப்படுகொலை அல்ல என்றார். பின்னர் பன்னாட்டு நீதிபதிகள் கொண்ட உள்ளக விசாரணை வேண்டும் என்றார். இப்போது இது பற்றி அவர் வாய் திறப்பதில்லை. முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா கூட நடந்த குற்றங்கள் பற்றி விசாரணை வேண்டும் என்று கூறுகிறார். ஆனால் அரசதலைவர் சட்டத்தரணி பதவியும் அதிரடிப்படைப் பொலிஸ் பாதுகாப்பும் பெற்ற பின்னர் அந்தத் தலைவர் போர்க்குற்ற விசாரணை பற்றி எதுவும் பேசுவதில்லை. அடுத்த தலைவர் ஐ.நாவுக்கு வருவதில்லை. ஆனால் தனக்கு நிதி சேகரிக்கக் கனடாவுக்கு மட்டும் சென்றுவிடுகிறார். இவர்கள் தமிழ் தலைவர்கள். தமிழ் பகுதிகளுக்கு வருவதற்கு இவர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வேண்டும். இவர்கள்தான் தமிழ் மக்களின் தலைவர்கள் என்று நம்புவோமாக.





## திலீபனின் சாவு கற்றுத் தரும் பாடம் என்ன?

உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்கள் திலீபனுக்கு நினைவஞ்சலி செலுத்தி முடித்திருக்கிறார்கள். ஐ.நா முன்றலில் வைகோவும் திலீபனின் உருவப்படத்துக்கு அஞ்சலி செலுத்தித் திலீபனின் தியாகத்தைப் போற்றிப் பேசியுள்ளார். திலீபன் தமிழீழம் கேட்டு அறவழிப் போராட்டத்தில் ஈடுபடவில்லை. அவரது கோரிக்கைகள் நிறைவேற்ற முடியாதவையும் அல்ல. இருந்தும் காந்திதேசம் எனப்படும் இந்தியாவே அவரது அகிம்சைப் போராட்டத்தை மதிக்கவில்லை. இப்படியிருக்க, இலங்கை அரசு அகிம்சைப் போராட்டத்தை மதிக்குமா? ஒருபோதும் மதிக்கப் போவதில்லை. அகிம்சைப் போராட்டத்தின் மூலம் ஒரு சிறிய தீர்வைக்கூடப் பெற முடியாது என்ற உண்மையைத் திலீபன் மற்றும் அன்னை பூபதியின் சாவுகள் கற்றுத் தருகின்றன.



## விஜயகாந்தும் சீமானும்

"விஜயகாந்தும் நானும்தான் மக்களுக்காகக் கட்சி தொடங்கினோம், நான் அவரை மிகவும் மதிக்கின்றேன்" என்றிருக்கிறார் சீமான். இப்படி ஒரு பல்டியை யாராவது அடிக்க முடியுமா? ஒலிம்பிக் ஜிம்னாஸ்டிக் வீரர்களால் கூட முடியாது. விஜயகாந்தைத் தெலுங்கன், வந்தேறி என்று எப்படி எல்லாம் தூற்றியிருந்தார் சீமான்.

விஜயகாந்தை எப்படி எல்லாம் திட்டினார் என்பதற்கு அவரின் முன்னாள் பேச்சுக்களே சாட்சி. இப்பொழுது அவர் விஜயகாந்தை மிகவும் மதிக்கின்றாராம். பாராட்டுகின்றாராம். அதாவது ஜெயலலிதா இல்லை, நடராஜன் கும்பல் அரண்டு போயிற்று, தாதுமணல் சிக்கலில் வைகுண்டராஜனுக்கும் தலைவலி. இனி அவர்களுக்கும் எதிர்காலமில்லை.

அதனால் மெதுவாக விஜயகாந்தின் பக்கம் நூல்விட்டுப் பார்க்கின்றார் போல. *"ரஜினியை எப்பொழுது பாராட்டப் போகின்றீர் மிஸ்ரர் சீமான்...?"*

## சீமான் அளவுக்கு சம்பந்தர் இல்லை

ஜெனிவாவில் ஐ.நா மனிதவுரிமைகள் சபையின் 34ஆவது கூட்டத் தொடர் நடந்து வருகிறது. இதில் சீமானின் நாம் தமிழர் கட்சியின் 11பிரதிநிதிகள் கொண்ட குழு கலந்து கொள்கிறது. இவர்கள் அடுத்துவரும் 8 நாட்களும் இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலை மற்றும் மீறப்பட்ட மனித உரிமைகள் போன்ற செய்திகளை ஐ.நா மன்றத்தில் எடுத்துரைக்க இருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஈழத் தமிழர்களின் வாக்கைப் பெற்று பதவி பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எத்தனை பிரதிநிதிகளை அனுப்பியுள்ளது?

தமிழ்தேசிய கூட்டமைப்பின் தலைவர்களான சம்பந்தன், மாவை சேனாதிராசா, சுமந்திரன் போன்றவர்கள் ஏன் கலந்து கொள்ளவில்லை?

தமிழகத்தில் உள்ள நாம் தமிழர் கட்சிக்கு இருக்கும் அக்கறைகூட ஈழத் தமிழர்களின் கட்சி எனக் கூறப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஏன் இல்லை?

தமிழகத் தலைவரான சீமானுக்கு இருக்கும் உணர்வு ஈழத் தமிழ்த் தலைவரான சம்பந்தனுக்கு ஏன் இல்லை?

'வாழ்நாள் வீரர்' பட்டம் பெறுவதற்குக் கனடா சென்ற சம்பந்தரால் தமிழ் மக்களுக்காக நியாயம் கேட்க ஐ.நாவுக்குச் செல்ல முடியாதா?

## மோடியின் முகத்திரையைக் கிழித்த, 'தி ஜப்பான் ரைம்ஸ்'

புகழ்பெற்ற பன்னாட்டுப் பத்திரிகையான 'தி ஜப்பான் ரைம்ஸ்' மோடியின் முகத்திரையைக் கிழித்து எறிந்துள்ளது. உலக அரங்கில் வர்த்தகத்தில் இந்தியாவை முதலிடத்தில் கொண்டு வருவதாகக் கூறினார் மோடி. தரப்படுத்தலில் 130தொடக்கம் 190ஆவது இடத்திலேயே இந்தியா இருக்கிறது. இப்படியாக உலக வங்கி அறிக்கையளித்துள்ளதைச் சுட்டிக் காட்டியே மோடியை பிரித்து மேய்ந்திருக்கிறது தி ஜப்பான் ரைம்ஸ்.

அது மட்டும் அல்ல, இந்தியாவின் மிகப்பெரிய துறையான கட்டுமானத் துறையில் முந்தைய அரசை விடக் கடும் சரிவைச் சந்தித்துள்ளது மோடி அரசு. மாட்டிறைச்சித் தடை, மதக்கலவரம், பாதுகாப்பின்மை, அச்சுறுத்தல் என்றெல்லாம் மோடி அரசு விமர்சிக்கப்பட்டுவருகிறது.

எலும்புத் துண்டுக்கு அலையும் இந்தியாவின் பெரும் ஊடகங்கள் மறைத்ததை எல்லாம் ஜப்பான்காரன் வெளிக்கொணர்ந்து, கிழி கிழியென்று கிழித்து விட்டான்.


"மோடி அப்படி... மோடி இப்படி" என்று உலக ஊடகங்கள் புகழ்கின்றன எனப் பெருமை பேசியவர்கள் எல்லாம் இப்ப சாணி அப்பின முகத்தோட இருக்கினம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல்

தவபாலன் திருநிலவன்



# உலக அழிவுக் கற்பனைகள்

மாயன் நாள்கட்டியின் முடிவுடன் பூமி அழிவடையப்போவதாக சரியாக ஆறு வருடங்களுக்கு முன்னர், உலகம் முழுதும் செய்திகள் பரப்பப்பட்டதை நாம் அறிவோம். தொடர்ந்து அதுசார்ந்த கட்டுக் கதைகளும் திரைக்கதை களும் பிரபல்யமாகின. கடைசியாக அது வதந்தியாகவே முடிந்து போனது. அதன் பின்னர் கடந்த 23ஆம் திகதி உலகம் அழியப்போவதற்கான முதலாவது சமிக்ஞை கிடைக்கப்போவதாக 'யூடியூப்' வலைத்தளத்தில், 'டேவிட் மெய்ட்' என்பவரால் ஒரு சில எடுகோள்களைச் சுட்டிக்காட்டிக் காணொலி ஒன்று வெளியிடப்பட்டுப் பரவலடைந்தது. குறிப்பாக அது மேற்கத்தேய நாடுகளிலேயே மிகப்பிரபல்யமாக இருந்தது.

இன்று 23ஆம் திகதியும் கடந்துபோக அந்தச் செய்தியும் வதந்தியாகக் கடந்துவிட்டது. ஆகவே உலக அழிவு பற்றித் தோன்றி மறையும் வதந்திகள் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

**மதம் சார்ந்த பரப்புரைகள்**

மாயன் நாள்காட்டி முடியப்போகின்றது, உலகம் அழியப்போகின்றது என்பதற்கு அடுத்ததாக இந்த முறை டேவிட் மெயிட்டால் பரப்பப்பட்ட வதந்தி கிறிஸ்தவர்களுடைய பைபிளின் தீர்க்கதரிசன வசனங்களையும் வானியல் சாஸ்திரத்தையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டிருந்தது. அதாவது 'செப்ரெம்பர் 23ஆம் திகதி சூரியன் ஒரு வித்தியாசமான சீரமைப்பில் இருக்கும். அந்த நிலையில் சந்திரன் ஒன்பது நட்சத்திரங்களுடனும் மூன்று கோள்களுடன் சேர்ந்து ஒரு கிரீடம்போல் கிழக்கில் தோற்றம் அழிக்கும்.

இப்படியான தோற்றப்பாடே பூமியின் அழிவின் அடையாளம் எனப் பைபிளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பைபிளின்படி சொர்க்கத்தில் ஒரு சிறந்த தோற்றப்பாடு தோன்றும். ஒரு பெண் மணிசூரியனை ஆடையாகப் புனைந்து நிலவை அவளின் காலுக்குக் கீழ் கொண்டு 12நட்சத்திரங்களால் ஆன கிரீடத்தை அணிந்திருப்பாள். அவள் கர்ப்பமாக இருப்பாள். பிரசவ வலியில் துடித்த வண்ணம் இருப்பாள்" என்றும் அந்த வதந்தி பைபிள் குறிப்பையும் வானியலையும் தொடர்புபடுத்திப் புனைவென்றை ஏற்படுத்தியிருந்தது.

**விசுவாசிகளுக்குச் சலுகை!**

அமேரிக்காவில் பூரண சூரிய கிரகணம் ஏற்பட்டுச் சரியாக 33ஆம் நாள்களுக்குப் பிறகு வருவதே இந்தச் செப்டம்பர் 23 என்று சுட்டும் மெய்ட், அதற்கும் சில புனைவுகளை அளித்துவிடுகிறார்.

இந்த 33ஆம் நாளுக்கு 'மெய்ட்' கொடுத்த விளக்கம் என்னவென்றால், யேசு கிறிஸ்து இறந்தபோது அவருக்கு 33 வயது. பைபிள் வசனங்கள் இதை உறுதிசெய்கின்றன. ஆகவே இந்தச் சமிக்ஞை பூமி அழிவதற்கான முதல் அடையாளம் என்கிறார். அத்துடன் ஒக்ரோபர் மாதம் இனம் தெரியாத கோள் ஒன்று பூமியை மிக நெருக்கமாகக் கடக்கும் எனவும், அதன் பின் வரும் ஏழு ஆண்டுகள் மிகமோசமான கஸ்டங்கள் பூமியை ஆட்கொள்ளும் எனவும், அவ்வேளை இயேசு கிறிஸ்து மீண்டும் பிறப்பார் எனவும், இதன் போது அவரின் விசுவாசிகள் பரலோகத்துக்கு அழைக்கப்படுவார்கள் எனவும் மதரீதியான கருத்துக்களை அடுக்கி இருந்தார்.

**வானியல் புனைவுகள்**

வானியல் ரீதியாக மெய்ட் சுட்டிக் காட்டியிருக்கின்றவற்றை ஆராய்ந்தால், உலக அழிவு நாள் என்பதை ஆங்கிலத்தில் 'டோம்ஸ்' நாள் என அழைக்கிறார்கள். இந்த நாளைப் பற்றிய வதந்திகள் அனைத்திலும் கோள் ஒன்று பூமியுடன்மோதும்என்றேகுறிப்பிடப்படுகிறது. 2012 மாயன் நாட்காட்டிப்படி 'நிப்றூ' எனும் கோள் மோதும் எனக் கூறப்பட்டது. அதன் முன் 2011 மற்றும் 2003 ஆம் ஆண்டுக்காலப்பகுதியிலும் இதே கருது கோள்களே முன்வைக்கப்பட்டன. அதாவது முரட்டுத்தனமான கோள் ஒன்று பூமியுடன் மோதி பூமி அழிந்து போகும் என்பவையே அவை. இப்படியாகப் பைபிளையும், வானியலையும் கலந்து, கற்பனையாக்கியிருக்கிறார் அண்மைய உலக அழிவு அவதானி மெய்ட்.

**'நாசா'வின் மறுப்புக்கள்**


உலக அழிவுக் கதைகளில் இவர்கள் குறிப்பிடும் கிரகங்கள் தொடர்பாக நாசா விஞ்ஞானியான டேவிட் மொறிஸ்சன் 'யூடியூப்'இல் காணொளி ஒன்றை உருவாக்கி இருக்கிறார். அதில் இந்தக் கோள்கள் அனைத்தும் கற்பனை எனக் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டுமன்றி அப்படி ஒரு கோள் எம்மை நெருங்குவதாக இருந்தால், எம்மால் இலகுவாக வெற்றுக் கண்ணால் அதை அவதானிக்க முடியும்.

அத்துடன் எங்களுடைய சூரியக்குடும்பத்தில் நடக்கும் புவியீர்ப்பு மாற்றங்களையும் இலகுவாக இனங்காண முடியும் என்றுமிருக்கிறார். மேலைத்தேசத்தவர்கள் மத்தியில் சூரிய கிரகணம் தொடர்பான கற்பனைகள் மிக நீண்ட காலமாகவே இருந்து வருகின்றன. 16ஆம் நூற்றாண்டில் சூரிய கிரகணம் ஏற்படும்போது சூரியன் வெளிவருவதற்கு மனித பலி கொடுக்கும் சடங்கு இருந்தாகவும் கூறப்படுகிறது.

ஆனாலோ சூரியனில் கடந்த 23ஆம் திகதி ஏற்பட்ட மாற்றம் ஒரு அரிய விடயம் அல்ல. அது வருடத்துக்கு ஒரு முறை நிகழ்வதே. அதுபோலவே நிலவில் ஏற்பட்ட மாற்றமும் என்கின்றனர் விஞ்ஞானிகள். இனியாவது உலகம் அழியப்போகின்றது என்று மதத்தை முன்னிறுத்தி இப்படியான வதந்திகளைப் பரப்புபவர்கள் திருந்திக் கொள்ள வேண்டும்.

# 'வாவ்'

## விண்வெளி மர்மம்




1977ஆம் ஆண்டு, ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி விண்வெளி ஆய்வுக்குழு ஒன்று அமெரிக்காவின் ஒகியோ மாநிலத்தில் இருக்கும் 'பிக் இயர் பெரிய காது' எனும்சமிக்ஞைகிரகிப்புநிலையத்திலிருந்து வானலை அலைக்கற்றைகளை அவதானித்துக்கொண்டிருந்தது.

திடீரென ஒரு வானலைத் தகவலை அங்குள்ள அலைக்கற்றை அவதானிப்பான் உள்வாங்கியது. ஆய்வுக்குழுவால் அது என்ன என்பது பற்றி உடனடியாக எந்த முடிவுக்கும் வரமுடியவில்லை. சில தினங்கள் கழித்து ஆராய்ச்சியாளர் 'ஜெர்ரி ஏமன்' அந்தச் சமிக்ஞையை ஆராய்ந்து ஒரு வியத்தகு விடையை அளித்தார். அது தான் 'வாவ்'.

**யாரால்...? எப்படி உருவானது...?**

உலகில் இன்று வரை அந்த வானலைக் குறிப்பு எங்கிருந்து வந்தது...? அது சொல்லவருவது என்ன...? என்பது போன்ற கேள்விகள் விடை காண முடியாதவையாகவே இருக்கின்றன. இந்தச் சமிக்ஞை 72 நொடிகள் நீளமுடையது. 'பெரிய காது' சமிக்ஞை சேகரிப்பானால் உள்வாங்கப்பட்டிருக்கின்ற இது, அந்த சமிக்ஞை சேகரிப்பானால் உள்வாங்கக்கூடிய உச்ச அளவுச் சமிக்ஞையின் நீளமாகும். இந்த 72 நொடியில் இருக்கும் குறிப்புச் சமிக்ஞையில் ஒரு சிறிய அளவே 'வாவ்' என்று ஏமனால் கண்டறியப்பட்டது.

இந்த சமிக்ஞை மனிதனால் உருவாக்கப்பட்டதா அல்லது இயற்கையால் உருவாக்கப்பட்டதா? என்பதைக் கண்டறிவதற்குப் பல ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. குறித்த சமிக்ஞை எப்படி உருவானது என்பதைக் கண்டுபிடிக்கும் முகமாக அதே போன்றதொரு சமிக்ஞையை உருவாக்குவதற்கான முயற்சிகளும் செய்யப்பட்டன. ஆனால் எவையும் வெற்றியளிக்கவில்லை.

**நாசாவால் கண்டுபிடிக்க முடியவில்லை...!**

பல [illegible] 'டி[illegible]' [illegible] இந்தச் சமிக்ஞையை உருவாக்கும் முயற்சிகள் தொடர்ந்தன. ஆனாலும் அதில் குறிப்பிட்டளவு முன்னேற்றமே காணப்பட்டது. இதை வேற்றுக்கிரகவாசிகள் உருவாக்கியிருக்கியிருக்கலாம் என்றும் கருத்துக்களுண்டு. மனிதரால் உருவாக்கப்பட்டிருந்தால், அது தகவல் பரிமாற்றத்துக்கானதாக இருந்தால், நாசாவாலேயே உடைக்கமுடியாத ஒரு குறிமுறையாக இருக்கிறது எனப் பெருமை கொள்ளலாம். அல்லது இயற்கையில் மனிதன் இன்னும் கண்டு பிடிக்காதவைகள் நிறைய இருக்கின்றன என்பதைப் புரிந்துகொள்ள லாம். எது எப்படியோ இந்த 'வாவ்' என்பது இப்போது வரைக்கும் கண்டுபிடிக்க முடியாத ஒன்றாகவே இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்கிழக்கு திசையில் இருந்து...



## செய்திக்கோர்வை

அனார்கலி

### அம்பாறையிலும் சரஸ்வதி பூஜை

வழமைபோன்று இந்த முறையும் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வாணி விழாக்கள் வெகுசிறப்பாக நடைபெற்று ஓய்ந்திருக்கின்றன. பெரும்பாலான அரச அலுவலகங்கள், திணைக்களங்கள் உட் பட தமிழ்ப் பாடசாலைகளிலும் இந்த வாணி விழாக்கள் களை கட்டி ஓய்ந்திருக்கின்றன. தமிழ் - முஸ்லிம் நல்லுறவுக்கு நல்லதொரு எடுத்துக்காட்டாக இந்த விழாக்கள் அமைந்தன. இந்த வாணி விழாக்களில் சிறப்புப் பூசைகள் மற்றும் வாணி விழாவின் சிறப்புக்கள் பற்றிய சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.





### வறட்சியும் நிவாரணமும்

அம்பாறை மாவட்டத்தில், பதினொரு பிரதேச செயலாளர் பிரிவுகளில் மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். 208கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள 29ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவர்களுக்கான வறட்சி நிவாரணம் வழங்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருவதாகவும் அம்பாறை மாவட்டச் செயலாளர் துசித பி. வணிகசிங்க தெரிவித்தார்.

நிந்தவூர்ப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரணப்பொருள்கள் வழங்கும் நிகழ்வு நிந்தவூர் கமநலசேவைகள் மத்திய நிலையத்தில் நடைபெற்றது. பதில் சுகாதார அமைச்சர் எம். பைசால் காசிம் நிகழ்வில் கலந்து கொண்டு நிவாரணப் பொருள்களை விவசாயிகளுக்கு வழங்கினார்.

### வடக்குக்குத் தெரிந்திருக்கிறது வலி!

கல்கிசையில் தங்கியிருந்த ரொகிங்கிய முஸ்லிம்கள் மீது பௌத்த பிக்குகள் குழு ஒன்று நடத்திய அடாவடித்தனமான தாக்குதலை அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன்பேணும் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது. அமைப்பின் செயலாளர் ஐ.எல்.எம்.பாறூக் விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே இது தொடர்பான கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வடமாகாண சபையின் 106ஆவது அமர்விலும் கல்கிசையில் இடம்பெற்ற இந்த அடாவடிச் செயற் பாட்டுக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட் டுள்ளது.



*'அகதி வாழ்க்கை மற்றும் இடப்பெயர்வு அவலங்களின் வலியை அனுபவித்தவர்களல்லவா வடக்கு மக்கள் அது தான் பொங்கி எழுந்து குரல் எழுப்பியுள்ளனர்*

### ஹசனலியின் கருத்து

"தமிழ்த் தலைவர்கள் புதிய அரசமைப்பு உருவாக்கம், அரசியல் தீர்வு தொடர்பான முக்கிய விடயங்களில் முஸ்லிம் காங்கிரசுடன் மட்டும் அதாவது தனிப்பட்ட அரசியல் இலாபம் தேடுபவர்களுடன் மட்டும் பேசக்கூடாது ஏனைய முஸ்லிம் கட்சிகளுடனும் பேசவேண்டும். அதுவே நிரந்தரமான சுமூகமான தீர்வுக்கு இட்டுச் செல்லும்" இப்படி வலியுறுத்திக் கருத்து வெளியிட்டிருக்கிறார். முஸ்லிம் கூட்டமைப்பு மற்றும் தூய முஸ்லிம்காங்கிரசின் முதன்மை ஏற்பாட்டாளரும் முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் செயலாளர் நாயகமுமான ஹசனலி அவர்கள்.

*"மேலோட்டமாகப் பார்க்கும் போது ஐயாவின் கருத்து நியாயமானது போலத்தான் இருக்குது"*

### பெருந்தன்மை காலம் கடந்து பேசப்படும்

முஸ்லிம் அரசியலில் குறிப்பாக முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப்ஹக்கீமுக்குப் பெரும் சவாலாக இருக்கின்ற முஸ்லிம் கூட்டமைப்பின் ஏற்பாட்டாளர்களான பஷீர் சேகுதாவூத், எம்.ரி.ஹஸனலி ஆகியோர் ரவூப் ஹக்கீமின் தாயாரது சாவுச் சடங்குக்குச் சென்றிருந்த விடயம் கிழக்கு முஸ்லிம் அரசியல் வட்டாரங்கள் மத்தியில் இந்த வாரம் அதிகளவு பேசப்பட்ட விடயமாக இருந்தது.

ஹக்கீமின் தாயாருடைய இறுதிச் சடங்குக்குச் சென்றிருந்த பஷீரும் ஹஸனலியும் ஹக்கீமுடன் அளவளாவி, அனுதாபங்களைத் தெரிவித்தனர். 'சலாம்;' அளித்து விடைபெற்றனர். 'இது வல்லவா பெருந்தன்மை' எனப் பலரும் பேசிக்கொண்டனர்.



### எங்கட ஐயா இப்படிச் சொல்கிறார்!

"நாம் எவரையும் புறக்கணிக்கத் தயாரில்லை சகல முஸ்லிம் கட்சிகளுடனும் முக்கிய விடயங்கள் தொடர்பில் பேசுவதற்கு தயாராகவேயுள்ளோம்"

இவ்வாறு கல்முனையில் நடைபெற்ற தமிழ் அரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தின் இறுதியில் இடம்பெற்ற செய்தியளர் சந்திப்பில், செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கூறியுள்ளார்.

"முஸ்லிம் காங்கிரசின் ஆரம்பத்தலைவர் அஷ்ரபின் காலத்திலிருந்தே நாம் முஸ்லிம் காங்கிரசுடன் பேசிவருகின்றோம். அது இன்றும் தொடர்கின்றது" என்று கூறிய சம்பந்தன், 'தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு நன்மை பயக்கும் விடயங்களில் ஒன்றிணைந்து செயற்படவும், பயணிக்கவும் நாம் முன்னிற்கின்றோம்' எனவும் தெரிவித்தார்.

*'சேர்ந்து கை தட்டினால்தான் சத்தம் வரும் பாருங்கோ...!*

### மத்தியஸ்தர் சபைக்குப் பாராட்டு...



நிந்தவூர்ப் பிரதேசத்தில் இயங்கி வரும் நிந்தவூர் மத்தியஸ்தர் சபையின் இரண்டு வருடப்பூர்த்தியை ஒட்டி ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வு சபைத் தவிசாளர் திருமதி பல்கீஸ் அப்துல் மஜீத் தலைமையில் நடைபெற்றது.

வைபவத்தில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்ட நிந்தவூர்ப் பிரதேச செயலாளர் றிபா உம்மாஜலீல் மத்தியஸ்தர் சபையின் செயற்பாடுகளை விதந்து பாராட்டியதுடன் சபையைச் சிறந்த முறையில் வழிநடத்திவரும் தவிசாளர் பல்கீஸ் அப்துல் மஜீத்துக்கு மாலை அணிவித்தும் கௌரவமளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரவுண்ட் த வேர்ல்ட்

பிரகாஸ்



## தலிபான்களிடம் இருந்து தப்பித்தார் மேட்டிஸ்

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் பாதுகாப்புத் துறைச் செயலாளர் ஜிம் மேட்டிஸை இலக்கு வைத்து ரொக்கட் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. இந்தத் தாக்குதல்களில் இருந்து மேட்டிஸ் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தலிபான்களுக்கு எதிராக அமெரிக்கா கடும் போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. ட்ரம்ப் அதிபரான பிற்பாடு ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டுள்ள அமெரிக்கச் சிப்பாய்களின் எண்ணிக்கையை இரண்டு மடங்காக உயர்த்தியுள்ளார். சுமார் 15 ஆயிரம் முதல் 18 ஆயிரம் வரையிலான சிப்பாய்கள் ஆப்கானிஸ்தானில் உள்ளனர். ட்ரம்பின் இந்த நடவடிக்கையை எதிர்த்து கடும் கருத்துக்களை முன்வைத்தது தலிபான் அமைப்பு. அமெரிக்கச் சிப்பாய்கள் ஒவ்வொருவராகக் கொல்லப்படுவார்கள் என்றும் அது எச்சரித்தது. அமெரிக்காவுக்குச் சரியான பாடம் புகட்டுவதற்காகத்தான் மேட்டிஸ் இலக்கு வைக்கப்பட்டார். எனினும் அதிர்ஷ்டவசமாக அவர் தப்பித்தார்.

*"தலிபான்களும் விடுவதாயில்லை. காபூலையே கைப்பற்றிய அமைப்பாச்சே அது..."*

## அபேயின் வியூகம்

சுமார் ஒருவருடத்துக்கு முன்னதாகவே நாடாளுமன்றத்தைக் கலைத்து ஆட்சியை மீண்டும் கைப்பற்ற வியூகம் அமைத்துள்ளார் அபே. ஜப்பானில் தற்போது லிபரல் குடியரசுக் கட்சி ஆட்சியமைத்துள்ளது. எதிர்க்கட்சியாக ஜனநாயகக் கட்சி உள்ளது. தற்போதைய நாடாளுமன்றின் ஆயுட்காலம் முடிவடைய இன்னும் ஒரு வருடம் உள்ளது. வடகொரியாவுக்கு எதிராக லிபரல் குடியரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து அண்மையில் வாக்குப் பதிவு மேற்கொள்ளப்பட்டது. சுமார் 44 சதவீத மக்கள் அதற்கு ஆதரவாக வாக்களித்தனர். 8 சதவீதமானவர்கள் மட்டுமே தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர். இந்தத் தேர்தல் அபேக்கு பெரும் ஆதரவு உள்ளது என்பதைச் சொல்லாமல் சொல்லி நிற்கிறது. இதனால் ஆட்சியைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தலை நடத்தி ஆட்சிப்பீடம் ஏறத் திட்டமிட்டார் அபே. இதன்படி ஜப்பான் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 22ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்றும் அறியவருகிறது.

*"ஜப்பானின் தேர்தலைத் தீர்மானிக்கும் சக்தியாக வடகொரியா..."*



## உருகுகிறது அந்தாட்டிக்கா

உலக வெப்பமயமாதலுக்காக ஒவ்வொருநாடும்ஏதேனும்ஒருதிட்டத்தைச் செயற்படுத்திவரும் நிலையில், மறுமுனையில் அந்தாட்டிக்கா உருகிக் கொண்டுதான் செல்கிறது.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் சுமார் 650 கிலோமீற்றர்கள் பரப்பரளவு உடைய பனிப்பாறையொன்று உடைந்தது. இது உலக நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்த நிலையில் தற்போது மற்றுமொரு பனிப்பாறை உடைந்துள்ளது. சுமார் 250 கிலோமீற்றர்கள் பரப்பளவுடைய பாறையே அவ்வாறு உடைந்துள்ளது. உலகின் வெப்பநிலையை 2 பாகை செல்சியசால் குறைக்க வேண்டும் என்று உலக நாடுகள் கடும் முனைப்புடன் செயற்பட்டு வருவதாக ஒருபுறம் காட்டிக் கொள்ளப்படுகின்ற போதிலும் மறுபக்கம் வெப்பநிலை அதிகரிப்பால் பனிப்பாறைகள் உடைந்துகொண்டுதான் உள்ளன.

*"அப்ப திட்டங்கள் எல்லாம் வெறும் பேப்பர்களிலதான் இருக்கு. செயலில் ஒன்டும் இல்லப்போல..."*





## 'பிளேபோய்' மறைந்தார்

உலகம் முழுவதும் பிரபலமுடைய கவர்ச்சி இதழான 'பிளேபோய்'யின் நிறுவனர் ஹக் ஹெப்னர் தனது 91ஆவது வயதில் வயோதிபம் காரணமாக கடந்த வியாழக்கிழமை காலமானார்.

அமெரிக்காவிலிருந்து வெளியாகும் 'பிளேபாய்' இதழுக்கு, உலகம் முழுவதும் வாசகர்கள் உண்டு. இந்த இதழின் அட்டையில், சினிமா, மொடலிங் மற்றும் பாப் பாடகிகளின் நிர்வாண, அரை நிர்வாணப் படங்கள் இடம்பெறுவது வழக்கம். இதழின் அட்டையில் தங்கள் படம் இடம்பெறுவதை, பிரபலங்கள் பலரும் கவுரவமாக கருதினர். ஹெப்னர் தனது 86ஆவது வயதில் தன்னைவிட 60 வயது குறைவான கிறிஸ்டன் என்ற பெண்ணை மூன்றாவது மனைவியாக மணமுடித்தார். 1990ஆம் ஆண்டில் அமெரிக்காவின் தற்போதைய அதிபர் டொனால்ட் ட்ரம்ப் 'பிளேபோய்' இதழின் அட்டைப்படத்தில் இடம்பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

*ம்ம்ம்... 'பிளேபோய்' தான்...*





## கிடைக்குமா தனி நாடு?

குர்திஸ்தான் சுதந்திர நாடு கோரி நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில் 92 சதவீத மக்கள் ஆதரவாக வாக்களித்துள்ளனர் என குர்திஷ் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். எனினும் அந்த நாடு சுதந்திரம் பெறுவதற்கு ஈராக் தொடர்ந்தும் முட்டுக்கட்டை போட்டு வருகிறது. ஈராக்கின் வடபகுதியில் குர்து இன மக்கள் பெரும்பான்மையாக வாழும் குர்திஸ்தான் பகுதி ஈராக் ஆட்சியின் கீழ் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படுகிறது. ஈராக்கின் எண்ணெய் வளம் மிக்க இந்தப் பகுதியை குர்திஸ்தான் என்ற சுதந்திர நாடாக அறிவிக்கும்படி குர்து மக்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர். அண்மையில் குர்திஸ்தானை தனி நாடாக அறிவிக்க வேண்டும் என்று கோரி வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 92 சதவீதமான மக்கள் தனிநாட்டுக்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். எனினும் ஈராக் அதை தனிநாடாக அறிவிக்கும் திட்டத்துடன் இல்லை. இந்த வாக்கெடுப்பு நடத்தப்பட்டதற்கு ஈராக் தலைமை அமைச்சர் தனது கண்டனத்தைத் தெரிவித்தார். இந்த வாக்கெடுப்பு ஏற்றுக் கொள்ளப்படாது என்றும் அவர் அறிவித்துள்ளார்.

*"எனின், குர்திஸ்தான் தனக்கென்று தனி அடையாளம் காண்பது கடினமே..."*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'ஒன் ஹார்ட்'

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் இயக்கத்தில் புதிய படம் ஒன்று வெளியாகியிருந்தது. ஒரு இசைக்கலைஞர் தன்னுடைய இசைக்குழுவுடன் இணைந்து ஒரு இசை நிகழ்ச்சியை எவ்விதம் வெற்றிகரமாக மேடையேற்றுகிறார் என்பதை விவரிக்கும் திரைப்படமாக அதை உருவாக்கி இருக்கிறார். இயக்குநர் ஏ.ஆர்.ரகுமான்.

ஏ.ஆர்.ரகுமான், அமெரிக்காவில் மேற்கொண்ட இசைப்பயணம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அந்த இசை நிகழ்ச்சியைத் தொகுத்துப் படமாக உருவாக்கி இருக்கிறார். 87 நிமிடங்கள் ஓடுகின்றது இந்தப் படம். ஏ.ஆர். ரகுமான், மேடையில் பாடியிருப்பதைக் பார்த்திருக்கிறோம். ஒரு நேரடி இசை நிகழ்ச்சியை அவர் எப்படி ஒருங்கிணைத்து நடத்துகிறார் என்பதையும் பார்த்திருக்கிறோம்.

ஆனால், ஒரு இசை நிகழ்ச்சிக்கு முன்னர் எப்படித் தயாராகிறார், ஒரு இசையை உருவாக்க அவர் குழுவினருடன் எடுக்கும் முயற்சிகள், இசைக்கலைஞர்களுடன் இணைந்து அதை எப்படி மேம்படுத்துகிறார் என்கிற பின்னணி குறித்து யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. இவை அனைத்தையும் இந்தப் படத்தில் பார்க்கலாம். மேலும் இசைக் குழுவினர் ஏ.ஆர். ரகுமான் பற்றிப் பேசுவதும், தன்னுடைய குழுவினர்களைப் பற்றி ஏ.ஆர்.ரகுமான் பகிர்ந்து கொள்ளுவதும் இதில் இடம்பெறுகின்றன.



இதில் இடம் பெறும் பாடல்களை சிற்சில புது இசைகளைப் புகுத்தி மிகவும் ரசிக்கும்படி கொடுத்திருக்கிறார்கள். மேலும் தற்போதுள்ள தொழில் நுட்பத்தில் எப்படியெல்லாம் இசையை உருவாக்கலாம் என்று விவரித்தும் இருக்கிறார்கள். குறிப்பாக ஒரு சிறு கருவியைக் கணினியுடன் இணைத்து அதில் இசையைத் தோற்றுவிக்கும் காட்சி ரசிகர்களைக் களிப்பூட்டுகிறது.


இது ஒரு திரைப்படமாக, கதையாக இருக்கும் என்று நினைத்துப் போனால் ஏமாற்றமே மிஞ்சும். இதை ஒரு புதுவித அனுபவம் என்றே சொல்லலாம். இசைக்கு அடிமையாகாதவர்கள் எவரும் இல்லை என்று சொல்லலாம். இசைப் பிரியர்கள், ஏ.ஆர். ரகுமானின் இசைக்கு அடிமையானவர்கள் அனைவருக்கும் இந்தப் படம் கொண்டாட்டமாக இருக்கும். தமிழில் இப்படியொரு படம் வருவது இதுவே முதல்முறை.

தமிழ் சினிமா

> பார்த்தாலே பயப்படுகிற மாதிரி, மிரட்டலான கதாபாத்திரத்தில் எஸ்.ஜே.சூர்யா பின்னி எடுக்கிறார். கோபம், அழுகை, ஆற்றாமை என நுட்பமான உணர்வுகளிலும், உச்சரிப்பிலும் பக்குவப்பட்ட, துல்லியமான நடிப்பை வழங்கி இருக்கிறார்.



# ஸ்பைடர்



தெலுங்கின் முன்னணி நடிகரான மகேஷ்பாபுவை நாயகனாகக் கொண்டு தெலுங்கிலும் தமிழிலுமாக ஏ.ஆர். முருகதாஸ் இயக்கியிருக்கும் படம் ஸ்பைடர். 'கத்தி' படத்துக்குப் பிறகு, முருகதாஸ் இயக்கத்தில் தமிழில் வெளிவரும் படமும்கூட.

### கதைப் பார்வை

ஹைதராபாத்தில் அரசுக்காகத் தொலைபேசி அழைப்புக்களை ஒட்டுக்கேட்கும் வேலையில் சேர்கிறார் சிவா (மகேஷ் பாபு). அப்படி ஒட்டுக் கேட்டுப் பல குற்றங்களை நடப்பதற்கு முன்பாகவே தடுக்கிறார். ஒரு நாள், ஒரு பெண் மிகுந்த பயத்துடன் அவளுடைய நண்பியுடன் கதைப்பதை ஒட்டுக்கேட்கும் சிவா, ஒரு பெண் காவலரை அவ்விடத்துக்கு அனுப்புகிறார். மறுநாள் இருவருமே வெட்டிக் கொல்லப்பட்டிருக்கின்றனர். ஏன் அந்தக் கொலைகள் நிகழ்ந்தன...? குற்றவாளி யார்...? புலனாய்வு அதிகாரியான மகேஷ் பாபுவால் அந்தக் கொலையாளியைக் கண்டுபிடிக்க முடிந்ததா? பொலிஸ் பிரிவு என்ன நடவடிக்கைகள் எடுத்தது? என்பதே மீதிக் கதை.

### பாத்திரப் படைப்பு

தமிழுக்கான தன் வருகையை அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார் மகேஷ்பாபு. நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, புத்திசாலித்தனம், விரைந்து செயல்படுதல், நடனக் காட்சிகள், சண்டைக் காட்சிகள் என நாயகனுக்கான அனைத்து அம்சங்களையும் சிறப்பாகச் செய்து முடிக்கிறார். ஆனால், உணர்வுபூர்வமான காட்சிகளில் எந்தவித வெளிப்பாடுகளையும் காட்டாமல் கடந்து செல்கிறார். இது காட்சியின் உயிரோட்டத்தைக் குறைத்து விடுகிறது. கதாநாயகிக்கான பங்களிப்பை ரகுல் ப்ரீத் சிங் சரிவரச் செய்கிறார். ஆர்.ஜே.பாலாஜி ஓரிரு இடங்களில் மட்டும் வசனங்களால் கலகலக்க வைக்கிறார். ஜெயப்பிரகாஷ், தீபா ராமானுஜம், ஷாஜி, சாயாஜி ஷிண்டே, ஹரீஷ் ஆகியோர் வந்து போகிறார்கள்.

### சூர்யாவின் நடிப்பு நன்றாயிருக்கிறது

பரத் முக்கிய பாத்திரத்தில் நடித்தாலும் அது வலுவாக இல்லை. அவருக்கான இடம் குறைவாகவே உள்ளது. பார்த்தாலே பயப்படுகிற மாதிரி, மிரட்டலான கதாபாத்திரத்தில் எஸ்.ஜே.சூர்யா பின்னி எடுக்கிறார். கோபம், அழுகை, ஆற்றாமை என நுட்பமான உணர்வுகளிலும், உச்சரிப்பிலும் பக்குவப்பட்ட, துல்லியமான நடிப்பை வழங்கி இருக்கிறார். அவருக்கு இனி பிரகாசமான வாய்ப்புகள் அமையும் என்று நம்பலாம். கண்களின் வழியே வெளிப்படுத்தும் அச்சமும், அழுகையும் அவரைத் தேர்ந்த நடிகனாக அடையாளம் காட்டுகின்றன.

### ஒளிப்பதிவு, இசை

சந்தோஷ் சிவனின் ஒளிப்பதிவு படத்துக்குக் கூடுதல் பலம். ஹாரீஸ் ஜெயராஜ் சில இடங்களில் அதிரடியைக் கூட்டுகிறார். சில இடங்களில் இரைச்சலே தொடர்கிறது. ஸ்ரீகர் பிரசாத் பாடல்களை இன்னும் கொஞ்சம் சரி செய்திருக்கலாம். தெலுங்கில் கொண்டாடப்படுகிற மகேஷ் பாபுவின் நேரடித் தமிழ்ப் படம் என்பதால் அதியுச்ச நாயகத்தனம், அடுக்கு வசனம் என்றில்லாமல் இயல்பான திரைக்கதையின் ஊடே அவரை நடிக்க வைத்திருப்பது வரவேற்கத்தக்க விடயம். வில்லன் தன் வீட்டில் நுழைந்த பிறகு எப்படி அம்மாவையும், தம்பியையும் நாயகன் காப்பாற்றுகிறார் என்பதைக் காட்சிப்படுத்திய விதம் புத்திசாலித்தனமாகவும், ரசிக்கும்படியும் இருக்கிறது. எஸ்.ஜே.சூர்யாவின் பாத்திரப் படைப்பை இயக்குநர் ஏ.ஆர்.முருகதாஸ் மிகுந்த கவனத்துடன் செதுக்கி இருக்கிறார். அதற்கான உழைப்புப் பாராட்டுக்குரியது.

### பெண்களைப் பிரதிபலிக்க முனைந்திருக்கிறார்

பெண்களுக்கான முக்கியத்துவத்தை அளிக்க முருகதாஸ் முடிவு செய்திருப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், நடுத்தர வயதுள்ள பெண்கள் சாகசம் செய்வதாகக் காட்டுவதை நம்ப முடியவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக விசாரணைக் குழுவில் இருக்கும் ஒரு சாதாரண அதிகாரி முழுப் பொலிஸ் படையையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து வில்லனைத் தேடிப் பிடிப்பது மிகையாகவே உள்ளது. அந்தத் தேடலுக்குப் பிறகு கொடுக்கப்படும் தண்டனை வழக்கமானதாகவே உள்ளது. சண்டைக் காட்சிகள் மற்றும் இறுதிக் காட்சியில் இயக்குநர் மிகுந்த கவனம் செலுத்தி இருக்கலாம்.

### குறைபாடுகள் சில

உளவியல் புரள்வை மையப்படுத்திய ஒரு விறுவிறுப்பான திரைக்கதையை அமைக்க முயற்சித்திருக்கிறார் இயக்குநர். படம் ஆரம்பமாகும்போது, நாயகன் பணியாற்றும் இடம் எங்கும் நீல வண்ணத்தில் பெரிய, பெரிய கணிணித் திரைகள் உட்பட்ட தொழில்நுட்பங்களைக் காட்சிப்படுத்தும்போது ஐயோ! மற்றொரு 'விவேகமோ' என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆனால், திருப்திகரமாகச் சற்று நேரத்திலேயே படம் திசை மாறிவிடுகிறது. ஒரு கொடூரமான கொலை சம்பவம், அதைச் செய்தது யார் என்பதற்கான தேடல். அந்தத் தேடலில் ஒரு பெரிய பயங்கரம் தெரியவருவது என ஸ்கண்டிநேவிய நாட்டு விறு விறுப்புப் படங்களுக்கான அனைத்துச் சாத்தியங்களும் இந்தப் படத்தில் இருக்கின்றன.

ஆனால், புத்திசாலித்தனமாகக் குற்றவாளியைப் பிடிப்பதற்குப் பதிலாக நாயகன் சாகசங்களை நிகழ்த்திக் குற்றவாளியை நெருங்கும்போது படம் ஏமாற்றமளிக்க ஆரம்பிக்கிறது. குறிப்பாக, மலை மீதிருக்கும் பெரிய பாறை உருண்டுவருவதை, நாயகன் பாரவூர்தி மூலம் நிறுத்துவது, இறுதிக் காட்சிச் சண்டைகள் போன்றவை.


தவிர, நாயகனும் அவரது நண்பர்களும் நினைத்தால் எந்தக் கமராவையும் பரீட்சிக்க முடிவது, தொலைக்காட்சி ஒளிபரப்பை இடைமறித்து, தாங்கள் விரும்பியதை ஒளிபரப்புவது போன்ற காட்சிகளும் மோசமான [illegible] உருவாக்கங்களும் படத்தை ரசிப்பதற்கு மேலும் சில தடைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹொலிவூட் சினிமா

கோமளவண்ணன்

# 'பிளேட் றன்னர் 2049'






1982 இல் வெளியாகியிருந்தது 'பிளேட் றன்னர்'. அந்தப் படத்தின் அடுத்த பாகம் 35 வருடங்கள் கழித்து ஒக்ரோபர் 6ஆம் திகதி வெளியாகவிருக்கிறது. 'பிளேட் றன்னர் 2049' என்று தலைப்பிடப்பட்டுள்ள இந்தப் படம் இந்த வருடத்தின் எதிர்பார்ப்புக்குரிய முக்கியமான ஹொலிவூட் படங்களில் ஒன்றாக அமைந்திருக்கிறது.

**கதைப்பார்வை**

2049ஆம் ஆண்டு கதையின் களமாகிறது. இளம் நாயகனாக 'பிளேட் றன்னர்' ரியன் காஸ்லிங், இயந்திர மனிதர்களை வேட்டையாடுவதில் மும்முரமாக இருக்கிறார். அதன்போது அவருக்குச் சில மர்மங்கள் தென்படுகின்றன. அந்த மர்ம முடிச்சுகளை அவிழ்க்க முயற்சிக்கிறார். அதில் 30 ஆண்டுகளாக மறைந்திருந்த பழைய 'பிளேட் றன்னரான ஹாரிசன் போர்ட் வெளிப்படுகிறார். அவரின் பின்னணியில் முந்தைய படத்தின் தொடர்ச்சியாகப் பல இரகசியங்கள் வெளிப்படுகின்றன. பிளேட் றன்னர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தனரா...? செயற்கை அறிவில் மிஞ்சும் இயந்திர மனிதர்களிடமிருந்து மனித குலம் காப்பாற்றப்பட்டதா...? என்பதே மீதிக் கதை.

**இழுபறிகளுக்குப் பிறகு 'பிளேட் றன்னர் 2049'**

1968இல் வெளியான 'டு அன்ட்றொய்ட்ஸ் ட்றீம் ஒவ் எலெக்ட்ரிக் ஷீப்?' என்ற நாவலைத் தழுவியே முந்தைய 'பிளேட் றன்னர்' படம் உருவாக்கப்பட்டது. அச்சு அசலாக மனித உருவமும் செயற்கை அறிவுமாக உலவும் இயந்திர மனிதர்களைக் கண்டறிந்து அழிக்கும் பொலிஸ் படையில் இருப்பவர்களுக்கே 'பிளேட் றன்னர்'கள் என்று பெயர். படத்தில் வெற்றிகரமான பிளேட் றன்னராகவும் நாயகனாகவும் 'ஹாரிசன் போர்ட்' கலக்கியிருந்தார்.

வெற்றிகளைக் குவித்த இதனைத் தொடர்ச்சிகளாகப் படமாக்கும் முயற்சிகள், கடந்த 20 ஆண்டுகளாகத் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. தொடங்குவதும் கைவிடுவதுமாக பலமுறை இழுபறிபட்டுக் கைவிடப்பட்டன. இறுதியாகப் பிளேட் றன்னரின் இயக்குநர் 'ரிட்லி' ஸ்கோட் தயாரிப்பில் 'பிளேட் றன்னர் 2049' இன்றைக்கு முடிவாகியிருக்கிறது. 'பெறிசனர்ஸ்', 'அறிவல்' படங்களின் இயக்குநரான டெனிஸ் வில்னோவ் இந்தப் படத்தை இயக்கி உள்ளார்.

நவீன இயந்திர மனிதர்களை உற்பத்தி செய்யும் பார்வையற்ற வில்லன் கதாபாத்திரத்தில் 'ஜாரெட் லெடோ' நடித்திருக்கிறார். ஹொலிவூட்டின் சிறந்த மாதிரி நடிப்புப் பிரபலங்களில் ஒருவரான இவர், படப்பிடிப்பு முடியும் வரை தனது பாத்திரத்துக்கு வேண்டப்பட்ட சிறப்புக் கண்வில்லைகளைப் பொருத்திக்கொண்டு தற்காலிகப் பார்வை இழப்புடன் காலத்தைப் போக்கியிருக்கிறார். தமிழில் காசி விக்ரமைப்போல.

> 1968இல் வெளியான 'டு அன்ட் றொய்ட்ஸ் ட்றீம் ஒவ் எலெக்ட்ரிக் ஷீப்?' என்ற நாவலைத் தழுவியே முந்தைய 'பிளேட் றன்னர்' படம் உருவாக்கப்பட்டது.




> அவதார்' படத்தின் இரண்டாம் பாகத்தை 18 டிசெம்பர் 2020ஆம் ஆண்டில் வெளியிடப்போவதாகவும், மூன்றாம் பாகத்தை 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்போவதாகவும் நான்கு மற்றும் ஐந்தாம் பாகங்கள் முறையே 2024 மற்றும் 2025ஆம் ஆண்டில் வெளியிடப்போவதாகவும் 'பக்ஸ்' நிறுவனம் அறிவித்துள்ளது.




# அடுத்தடுத்து வரவிருக்கிறது 'அவதார்'



அவதார்' படத்தின் அடுத்த நான்கு பாகங்களுக்கான படப்பிடிப்பை ஜேம்ஸ் கமரூன் ஆரம்பித்திருக்கிறார். 2009ஆம் ஆண்டில் ஜேம்ஸ் கமரூன் இயக்கத்தில் வெளியான 'அவதார்' உலக அளவில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்றது. அதன் அடுத்த பாகத்துக்கான எதிர்பார்ப்பையும் ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டிருந்தது. ஆனாலும் இயக்குநர் ஜேம்ஸ் கமரூன், அடுத்த பாகத்தை உடனடியாகத் தொடங்கவில்லை. அது சார்ந்த ஆயத்தங்களையோ, அறிவிப்புக்களையோகூடச் செய்திருக்கவில்லை. எட்டுவருடங்கள் கழித்து அதாவது அவருடைய எட்டு வருடத் திட்ட மிடல்களுக்குப் பிறகு, இப்போது ஜேம்ஸ் கமரூன், அமெரிக்காவிலுள்ள மன்ஹறாட்டன் கடற்கரையில் 'அவதார்' படத்தின் அடுத்த நான்கு பாகங்களுக்கான படப்பிடிப்பைத் தொடங்கியிருப்பதாகக் ஹொலிவூட் வட்டாரங்கள் செய்தி பகர்ந்துள்ளன. இவை அனைத்தும் முப்பரிமாணத்திலும் தயாராகவிருக்கின்றன. இதனால் அவதாரின் இந்த அடுத்தடுத்த நான்கு பாகங்களுக்கு இப்போதே ரசிகர்களிடம் பலத்த எதிர்பார்ப்பு ஏற்பட்டுவிட்டது.

ஹொலிவூட் உலகில் முன்னதாக, 'தி லோர்ட் ஒவ் தி ரிங்க்ஸ்' படத்தின் மூன்று பாகங்களுக்கான படப்பிடிப்புக்களாகத் தொடர்ச்சியாக நடைபெற்றன. அதைப்போலவே அவதாரின் நான்கு பாகங்களும் தொடர்ச்சியாக தயாரிக்கப்படவுள்ளன.

அவதாரின் இந்த நான்கு பாகங்களுக்குமான நிதி ஒதுக்கீடு 1 பில்லியன் அமெரிக்க டொலரைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உலக அளவில் அதிக வசூலை அள்ளிக் குவித்த 'டைட்டானிக்', 'அவதார்' ஆகிய படங்கள் மட்டுமன்றி, ஆர்னோல்ட் நடித்த 'டெர்மினேட்டர் 2: ஜட்ஜ்மென்ட் டே', 'ஏலியன்ஸ்' ஆகிய படங்களையும் இயக்கிய பெருமை ஜேம்ஸ் கமரூனுக்கே உரியது.

எனவே அவதாரின் நான்கு பாகங்களுக்குமான இத்தகைய பெரியதொகை நிதி ஒதுக்கீடு குறித்துக் கவலை கொள்ளத் தேவையில்லை. காரணம், நிச்சயமாகக் குறித்த நான்கு பாகங்களும் ஏராளமான வசூலைக் கமரூனுக்குப் பெற்றுத் தரும் என்று நம்பலாம்.

அவதார்' படத்தின் இரண்டாம் பாகத்தை 18 டிசெம்பர் 2020ஆம் ஆண்டில் வெளியிடப்போவதாகவும், மூன்றாம் பாகத்தை 2021ஆம் ஆண்டில் வெளியிடப்போவதாகவும் நான்கு மற்றும் ஐந்தாம் பாகங்கள் முறையே 2024 மற்றும் 2025ஆம் ஆண்டில் வெளியிடப்போவதாகவும் 'பக்ஸ்' நிறுவனம், அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியா வழக்கு குற்றவாளிகளுக்கு ஒரு பகிரங்க மடல்!



புங்குடுதீவில் குடி கொண்டிருக்கும் மடத்துவெளி நுழைவாயில் சிறி வீரகத்தி விநாயகர் பாதம் பணிந்து அடியேன் எழுதிக்கொள்வது...

எல்லோரும் உங்களைப்பார்த்து "ஒழிக... ஒழிக..." என்று கூக்குரலிட உங்களைக் கருத்தில் கொண்டு இந்த மடலை வரைகிறேன். சிலவேளை போகம்பரைச் சிறையின் சிறைக்காவலர்களில் யாராவது இந்தக் காகிதத்தினை உங்கள் கையில் ஒப்படைக்கலாம். தவறினால், உங்களுக்குக் கொண்டு வரப்படும் உணவுப் பொட்டலம் சுற்றப்பட்ட தாளாகவாவது இந்தக் கடதாசி பயன்படுத்தப்பட்டு, நான் வரைந்த மடல் உங்களை வந்தடைய வேண்டும் என்பதே எனது அவா.

நான் நலம்... ஆனால் நீங்கள் நலமாயிருப்பதற்குச் சாத்தியமேயில்லை. கடந்த புதன் கிழமை யாழ். மேல் நீதிமன்றத்தில் நடந்த பேனைமுறிப்புச் சம்பவம், இன்று, நேற்றல்ல இனிமேலும் நீங்கள் நலமாக இருப்பதற்கான சாத்தியத்தினை இல்லாமல் செய்திருக்கிறது. ஒரு நீண்ட விறுவிறுப்பான தொடர்கதையின் கடைசி அத்தியாயத்தை வாசித்து முடித்த திருப்தியை அது பலருக்குக் கொடுத்திருக்கிறது. அந்த நீதிமன்ற விளக்கணைப்புச் சம்பவம் வரலாற்றில் முக்கியமானது. அது திருப்திக்குரிய, வெற்றிக்குரிய, ஆறுதலுக்குரிய சம்பவமாகவும் நோக்கப்பட்டிருக்கிறது.

### உங்களுக்காகவேனும் தூக்கை நடைமுறைப்படுத்த மாட்டார்களா...?

"அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்" என்பதற்கான அண்மைய உதாரணமாக, நீதி நிலைநாட்டப்பட்டதாகவும் வர்ணிக்கப்படும் உங்களுக்கான தண்டனை பலரிடமும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஆனால் நாட்டின் வேலைப்படையில் பங்கெடுக்கவேண்டிய, நாட்டுக்கும் வீட்டுக்கும் பங்களிக்க வேண்டியஏழு இளம் வேர்களாகிய நீங்கள் ஒரேயடியாகச் சாவுக்குத் தீர்ப்பிடப்பட்டிருக்கிறீர்கள். ரிய உங்கள் மீது 41குற்றச்சாட்டுக்களை அடுக்கியிருக்கிறார்கள்.

குற்றத்தைத் திட்டமிட்டது, அப்பாவி மாணவியை வன்புணர்ந்தது, அவரைக் கொன்றது என்று வரிசையாக உங்களுடைய திருவிளையாடல்க ளைத் தீர்ப்பிலே சொல்லியிருக்கிறார்கள். சிறப்பு ஆடைகளைக் கொண்டு பத்திரப்படுத்தப்படும், சந்ததிவிருத்திக்காக இறைவன் தந்த அந்த உறுப்புக்களைச் சரியாகக் கட்டுப்படுத்தவும் பயன்படுத்தவும் தவறி... புத்தி தடுமாறி... குற்றவாளிகளாக... காமுகர்களாக... கொலைஞர்களாக... மிருகங்களாக மாறிவிட்ட உங்கள் அனைவரையும் நினைந்துருகி, ஒருசொட்டுக் கண்ணீர் விட ஒருவருக்குமே மனது எத்தனிக்கவில்லை. முகநூலில் கருத்துரைக்கும் பலரும், "உங்களுக்காகச் சிறப்பாகவேனும் இலங்கை அரசு இரங்கி... இறங்கி... தூக்குத் தண்டனையை நடைமுறைப் படுத்தக்கூடாதா...?" என்றல்லவா அங்கலாய்க்கிறார்கள்.

### தப்பாகிப்போனதே உங்கள் கணக்கு!

உலகம் பூராகவும் இருக்கும் மனிதாபிமானிகள் நீதித் துறைக்குக் கொடுத்துவரும் நச்சரிப்பினால், உங்கள் கழுத்துக்கு வந்தது நீதிமன்ற எழுத்தோடு நின்றுவிடும் என்று நம்புகிறேன். ஆனால், நாடாளுமன்றம் தலையசைக்குமானால், எழுத்தில் உள்ளதைக் கழுத்தில் வழங்கத் தான் தயாராக இருப்பதாக அரசதலைவர் கூறியிருக்கிறாராம். அவருடைய சிறப்புக் கவனிப்பைப் பெற்ற வழக்கு இது. நீதி தேவதையின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு, கடற்படையின் தலையில் இதைக் கட்டிவிடலாம் என்று நீங்கள் போட்ட கணக்கு, தப்புக்கணக்காகிவிட, சட்டத்தின் இருட்டறையில் வக்கீலின் வாதங்கள் குற்றவாளிகளை இனங்காட்டியிருக்கின்றன. சாரதாம்பாள் சரவணபவானந்தக் குருக்களுக்காகவும் இளையதம்பி தர்சினிக்காகவும் நாங்கள் நீதி கோரி வேண்டிக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், "அதுவும் இது மாதிரித் தான்... நாங்கள் குற்றவாளிகள் அல்ல" என்று சீருடைத் தரப்பினர், கையைக் கழுவிக் கொள்வதற்கான எத்தனத்தினைப் பெற்றுக் கொடுத்திருக்கிறீர்கள் நீங்கள்.

### மக்கள் தீர்ப்பிட்டிருந்தால் மரம் முளைத்திருக்கும்!

'காலம் தாழ்த்திய நீதி அநீதி' என்று சொல்லப்படுகையில், அந்தப் பிஞ்சின் சாவு நிகழ்ந்து 898 நாள்களுக்குப் பிறகு வழங்கப்பட்டிருக்கும் இந்த நீதிமன்றத் தீர்ப்பு, விசாரணைகளின் முடிவில் உங்களைச் சந்தேகத்துக்கு அப்பால் குற்றவாளிகளாக இனங்கண்டிருக்கிறது. சட்டமும், நீதித்துறையும், பொலிஸ் தரப்பும் உங்ளைப் பாதுகாத்து, சரியாக விசாரணை செய்து, தடயங்களைச் செவ்வனே ஆராய்ந்தே தண்டனையை வழங்கியிருக்கின்றன. ஆனால், காலம் தாழ்த்தாத நீதியை வழங்க உங்கள் ஊரவர்களே திரண்ட வரலாற்றை நான் தான் உங்களுக்கு ஞாபகமூட்டவேண்டும் என்றில்லை. அந்த நீதிவழங்கல் பொறிமுறையை அன்றைக்கே அனுமதித்திருந்தால், குறிப்பிட்ட இடத்தில் புல் மாத்திரமல்ல இன்றைக்கு மரமும் முளைத்திருக்கும்.

### காணொலி கைப்பற்றப்பட்டால் உங்கள் நிலைமை...?

உங்கள் தரப்புச் சட்டவாதியின் உசுப்பேற்றலாலோ அல்லது தடயங்களை மழை கழுவியதை அதிர்ஷ்டத்தின் அடிப்படையாகக் கொண்டோ அல்லது ஒத்துப் போகாத மரபணுப்பரிசோதனையைக் கணக்கில் வைத்தோ, சட்டத்தின் ஓட்டைகளைக் கருத்தில் கொண்டு மேன்முறையிடப்போவதாக தெரிவித்திருக்கிறீர்களாம். சட்டத்துறையை அதிகம் தொல்லைக்குட்படுத்துவது நல்லதல்ல. உங்கள் மனச் சாந்திக்காகவேனும் ஒருமுறை முயற்சி தான் பண்ணிப்பாருங்களேன். நீங்கள் எடுத்ததாகக் குறிப்பிடப்படும் காணொலி, தீர்ப்புக்கு முன்னதாக இலங்கைச் சட்டத்துறைக்கு கிடைக்காத பட்சத்தில், உலகின் எந்த மூலையில் அது கசிந்தாலும் அதைக் கையும் களவுமாகக் கைப்பற்றுவதற்கான முயற்சி களை இலங்கையின் நீதித் துறை எடுத்திருக்கும் என்று நான் திடமாக நம்புகிறேன்.

> **உண்மையில் உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. நீங்கள் உங்கள் தாயின் கருப்பையிலிருந்து வெளிவந்தபோது, பரிசுத்தமாகவே தான் இருந்தீர்கள். வாழ்ந்த சூழலும் வளர்ந்த விதமும் இன்று உங்களை இந்த நிலைக்கு மாற்றி, ஓரங்கட்டித் தனது கைகளைக் கழுவித் துடைத்து வேடிக்கை பார்க்கிறது.**

### மறை போதிக்க வேண்டியவர்கள் மறைந்திருக்கின்றனர்

முன்பெல்லாம் புங்குடுதீவென்றால் அம்பலவாணர் தாம்போதிதான் எனக்கு ஞாபகத்துக்கு வரும். இப்போதெல்லாம் புங்குடுதீவென்றால் நினைவூட்டுவதற்கு மக்காள் நீங்கள் இருக்கிறீர்களே வரலாற்றுத் தடயமாக.....! அதுபோக வித்தியாவுக்கு நீதி கிடைத்துவிட்ட தாக இறும்பூது எய்தும் சமூகம், உங்களைப் போன்ற அறநெறி பிறழ்ந்த, முறை தவறியஇளஞ்சமுதாயம் ஒன்றை உய்யவிட்டமை தொடர்பில் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. அறநெறியும் மறைக்கல்வியும் கற்பிக்கவேண்டிய ஆலயங்கள், இன்று கும்பாபிஷேகங்களிலும் கோபுரங்களை உயர்த்துவதிலும் சுறுசுறுப்பாக இருப்பதால் உங்களைப் போன்றவர்களுக்கு அறநெறி போதிக்க அவர்களுக்கு நேரமே கிடைப்பதில்லை.

இன்னும் சில தர்மகர்த்தா சபைகளும் வழிபடுவோர் சங்க உறுப்பினர்களும் ஆலயங்களை விட்டுவிட்டு நீதிமன்றங்களையல்லவா வலம் வருகிறார்கள். அவர்களிடமிருந்து அறநெறியை நாங்கள் எப்படி எதிர் பார்க்க முடியும்?

உண்மையில் உங்களைச் சொல்லிக் குற்றமில்லை. நீங்கள் உங்கள் தாயின் கருப்பையிலிருந்து வெளிவந்தபோது, பரிசுத்தமாகவே தான் இருந்தீர்கள். வாழ்ந்த சூழலும் வளர்ந்த விதமும் இன்று உங்களை இந்த நிலைக்கு மாற்றி, ஓரங்கட்டித் தனது கைகளைக் கழுவித் துடைத்து வேடிக்கை பார்க்கிறது.

தண்டனை என்னவோ உங்களுக்குத் தான். ஆனால், தர்க்க ரீதியாக ஆராய்ந்தால், உங்களை உங்களது இளமைப்பருவத்தில் நல்வழிப்படுத்தத் தவறிய ஆன்மிகவாதிகளும் ஆசிரியர்களும் நியாயத்தைக் கருத்தில் கொண்டு தலைகவிழ்ந்தே செல்ல வேண்டும்.

உங்கள் விடயத்தில் குற்றவாளிகளை இனங்கண்டமைக்காகவும் கடுமையான தண்டனை வழங்கியமைக்காகவும் நீதிமன்றம் ஒருபோதும் திருப்திப்பட்டுக் கொள்ளக் கூடாது. இந்தத் தண்டனைகளைக் கண்டு மிரண்டு இனிமேல் தவறு குறையும் என அனுமானிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

குடிமக்களில் இவ்வாறானோர் முளைகொள்வதைத் தடுக்க விளைபயிரிலே அவர்களைத் தெரிந்து, பாடசாலைகளூடாகவும் ஆலயங்கள், அறநெறி நிலையங்கள் ஊடாகவும் போஷித்து வளர்க்க வேண்டும். இதற்கு நீதிமன்றம் சமூகத்துக்கு அழுத்தம் வழங்குமாயின், அப்போதுதான் நீதி தன்பணியை நிறைவேற்றியதாகக் கொள்ள முடியும். இல்லையேல் தொடர்ந்தும் சில வித்தியாக்களை நாம் காணவேண்டியே இருக்கும்.

நல்லது நடக்கட்டும்!
நன்றியுடன்
ஸ்டோ ஸ்வாமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரிப்பு

மிருசுவில் தமிழ் தாசன்

# “யமனுக்கு இரும்பு கொடுத்தவர்”

தூதுவனால் அழைத்து வரப்பட்டுவிட்டார் பரமசிவம். இனம்புரியாத திகில்! என்றுமே பார்த்திருக்காத ஒரு விசித்திரமான சூழல்! யமலோகமென்றால் இப்படித்தான் இருக்குமென்று அவர் கற்பனை பண்ணிக்கூடப் பார்த்ததில்லை.

“உப்பிடி உந்த வாங்கிலிலை கொஞ்சம் இரும் ஐயா கூப்பிடுவார் சரியே”

அழைத்து வந்த தூதுவன் பேச்சுத் தமிழில் கூறிவிட்டுப் போய்விட்டான்.

உறுதியான இரும்பால் தயாரிக்கப்பட்ட வாங்கில் பச்சை வர்ணம் பூசப்பட்டிருந்தது. அப்படியே எங்களூர் புகையிர நிலையத்து வாங்கிலை நினைவுக்குக் கொண்டு வந்தது. கோழிபிடித்த கள்வனாக விழிகள் பிதுங்கப் பம்மிக் கொண்டி ருந்தார் பரமசிவம்.



“கடவுளே பிள்ளையாரப்பா! உங்கை கூப்பிட்டு என்ன செய்யப் போறாங்களோ! சுடுகிற தாருக்கை போடுறாங்களோ! கொதிக்கிற எண்ணைத் தாச்சிக்கை போடு வங்களோ! பிள்ளையாரே இதுக்கிளாலை என்னைக் காப்பாற்றித் திரும்பவும் என்னை என்ரை ஊருக்கு எடுத்துப் போட்டியெண்டால் நூற்றெட்டுத் தேங்காய் உடைப்பன். என்னைக் காப்பாற்றையா.”

பரமசிவத்தின் மனம் அறுந்து போன பல்லி வாலாகத் துடித்துக் கொண்டிருந்தது. பூவுலகத்தில் எத்தனை பேருக்குக் கயிறுவிட்டவர். எத்தனை அப்பாவிகளைத் திருகுதாளங்கள் விட்டு ஏமாற்றியவர். இதன் காரணமாக யமனுக்கு இரும்பு கொடுத்தவர் எனும் பட்டத்தையும் பெற்றுக் கொண்ட மகா கில்லாடி இவர்! இப்போது நிஜமாகவே யமனுக்குப் பயந்து கொண்டிருந்தார் பரமசிவத்தார். அந்த அலுவலகத்தின் முகப்பில் ‘யமதேவன்’ என்று பெரிய பித்தளை எழுத்துக்களால் பொறிக்கப்பட் டிருந்தது.

“எட இஞ்சை எல்லாம் தமிழ் மயமாய்த் தானிருக்குது. தமிழுக்கு எங்கடை ஊரிலை இல்லாத மதிப்பு யமலோகத்திலை இருக்குது சா…! தமிழ்… தமிழ் தான்” ஆச்சரியம் ஒரு புறமும் மகிழ்ச்சி மறுபுறமுமாக உணர்ச்சி வசப்பட்டார்.

“நீர் தானே பரமசிவம்? ஐயா வரட்டாம்” மற்றுமொரு சிப்பந்தி சொல்லிவிட்டுப் போகப் பரமசிவத்தார் நெருப்புக்குள் காலை வைப்பது போலப் பயந்து பயந்து அந்த அலுவலகத்துக்குள் நுழைந்தார்.

“ப்ளீஸ் சிற்!”

கூறியது யாருமல்ல யமதேவனுடைய இருக்கையில் அமர்ந்திருந்த அதிகாரி. பரமசிவத்தாருக்குத் தூக்கி வாரிப் போட்டது.

“இதென்னடா இது! யமலோகத்திலை இங்கிலீசும் கதைக்கிறாங்கள். தமிழும் கதைக்கிறாங்கள் அப்ப இவங்கள் நல்லாய்ப் படிச்ச ஆக்கள் போலை…! அப்பிடியெண்டால் இதை வைச்சே இவைக்கு இடியப்பம் தீத்த வேண்டியது தான்”. காத்திரமாகத் திட்டம் தீட்டிவிட்டார்.

“ஓம் ஐயா! நான் பூவுலகிலை ஒரு வாத்தி யார்!”

““ஓ…! சீ…!””

““ஓம் சேர் என்னண்டால் இப்பவந்து எங்கடை பூவுலகிலை கல்வித்தரம் சரியாய் குறைஞ்சிட்டுது. உந்தக் கோதாரி விழுந்த சண்டைக்குப் பிறகு எங்கடை பிள்ளையளின்ரை படிப்பு மெத்தக் குறைஞ்சிட்டுது.

அதுதான் நான் கொஞ்சம் ‘றிஸ்க்’ எடுத்து எங்கடை பிள்ளையளுக்குப் படிப்பிச்சுக் கொண்டிருக்க அவசரப்பட்டு அம்பத்தாறு வயதிலையே என்னைக் கூப்பிட் டுப்போட்டியள். இந்தமுறை யெண்டா லும் கஷ்டப்பட்டுப் படிப்பிச்சு எல்லாப் பிள்ளையளும் பத்து ‘ஏ’ எடுக்க வைக்க வேணுமெண்டு பாத்தன். சே! எல்லாம் பிழைச்சுப் போச்சுது”

“அப்படியே! சொறி… சொறி நாங்களும் என்ன செய்யுறது! ஒவ்வொருத்தருக்கும் விதிச்ச காலத்திலை அவையவையை மேல எடுக்கிறது தானே எங்கடை ‘டியூட்டி’ எங்கடை ‘டிப்பாட்மென்ரில’ சரியா வேலை நடக்கேல்ல எண்டு ஆரோ சிவபெருமானுக்குக் ‘கொம்பிளைன்ற்’ பண்ணியிருக்கினம். அதாலை எங்கடை பெரியவர் யமதர்மராசா கயிலையங்கி ரிக்கு விசாரணைக்கும் போய்வந்தவர்.

“பெரியவரெண்டு… சேர்…! அப்ப நீங்கள்…?”

“நான் அவற்றை ‘அக்டிங்’. அக்டிங் தர்மராஜா எனக்குக் கண்டபடி அதை இதைச் செய்யுறதுக்கு ஒருவிதமான ஒதறோட்டியுமில்லை.”

பதில் யமதேவன் குழைந்தார்.

இது ஒன்று போதுமே பூவுலகத்தானுக்கு. அதிலும் யாழ்ப்பாணத்தானுக்கு இடம் கொடுத்தால்…! மடமே கட்டிவிடுவான். விடுவாரா பர்மசிவம். மடம் கட்ட ஆயத்தமானார்.

“ஏதோபாத்துச் செய்யுங்கோ சேர். நீங்கள் நல்லாய் படிச்சனீங்கள் போல கிடக்கு. உங்களுக்குத் தெரியாதா ஆசிரியர்மாற்ற அருமையை. ‘குருவில்லா வித்தை பாழ் எண்டெல்லே’ சொல்லுறது. உப்பிடி எத்தினையோ ஆசிரியர்மாரை இப்பகொஞ்ச நாளையுக்கை எடுத்துப் போட்டியள். இப்பிடி எங்களிலையே கை வைச்சுக் கொண்டிருந்தால் எங்கடை பிள்ளைகளின்ர வாழ்க்கை பாழாப் போயிரும். ஏன்! மற்ற உத்தியோகக் காரரிலும் கலந்து மாறி எடுங்கோவன். வாத்திமாற்றை வாழ்க்கையிலை நெடுகிலும் கை வைக்காதேங்கோ சேர். என்னைப் பூவுலகத்துக்கு அனுப்புங்கோ” அழாக் குறையாகக் கெஞ்சினார்.

“சரி என்ன செய்யுறதெண்டு உங்களைத் திருப்பி அனுப்பலாமெண்டாலும் உங்க இருக்கிற ஆசிரியர் மாரைப் பற்றி இஞ்சை ஏராளமாய் முறைப்பாடுகள் எல்லோ வருகுது. கண்ட இடங்களிலை கொட்டிலுகளைப் போட்டு பெடியளை ரியூஷனுக்குக் கூப்பிட்டுக் காசடிக்கிறது. பிள்ளையளுக்கு மிருகத்தன மாய் அடிக்கிறது. பெம்பிளைப் பிள்ளையளோடை சேட்டை விடுறது. எண்டு ஏராளம் முறைப்பாடுகள் வந்து கொண்டேயிருக்குது”

சற்றுக் கடும் தொனியில் கூறிய உதவி யமனின் முகத்தைப் பார்க்கத்திராணியற்ற நிலையில் அவரைத் தனது இதமான வார்த்தைகளால் தயவு பண்ண எண்ணிக் கொண்டார் வாத்தியார்.

“ஓம் சேர்! அப்பிடியும் எங்கையேன் ஒருசில இடத்திலை நடக்குதுதான். ஆனால் நீங்கள் என்னை நம்பி விடுங்கோ. நான் போய் அப்பிடியான எங்கடை வாத்திமாரைத் திருத்தியெடுத்துக் காட்டுறனோ இல்லையோ பாருங்கோ. உங்கடை தலையிலை தொட்டுச் சத்தியம் பண்ணுறன்.”

வாத்தியாரின் இந்தக் கூற்றுக்கு எதிர்க்குரல் கொடுக்காது அந்த இயம அதிகாரி மேசையில் கிடந்த ‘இன்ர கோமை’ எடுத்து யாருடனோ பேசினார். பேசியது தமிழோ, ஆங்கிலமோ அல்ல. அவர்களுடைய யமலோகத்துப் பாஷையாக இருக்கலாம்.

அவருடைய உத்தரவின்படி ஒரு சிப்பந்தி வந்து வாத்தியாரை அழைத்துக் கொண்டு போனான். போகும் வழியில் ‘சொர்க்கலோகம்’ என்று அம்புக்குறியுடன் அறிவித்தல் பலகை மாட்டப்பட்டிருந்தது. ஆசையை அடக்க முடியவில்லை வாத்தியாருக்கு.

“ஐயா! பீயோன் ஐயா! வந்ததுதான் வந்திட்டம் உந்தச் சொர்க்கலோகத்தை யும் ஒருக்கால் பாத்திட்டுப் போவமே!”

சிறுபிள்ளைத்தனமாகக் கேட்ட பரம சிவம் வாத்தியாரின் ஆசை நிராசை யாகத் தொடர்ந்து நடந்து கொண்டே யிருக்க மீண்டும் ஒரு அறிவித்தல் பலகை ‘நரகலோகம் ஐம்பது மீற்றர்கள்’ என எழுதப்பட்டிருந்தது. அங்கே கதறல்கள் கூக்குரல்கள் அபயக்குரல்க ளென நெஞ்சைப் பிழியும் வகையில் ஒலித்துக் கொண்டிருந்தன. வாத்தியா ரின் நடை முன்னதை விடக் குறைந்தது.

“நாங்களிப்ப எக்கவுண்ட் பிறாஞ்சுக்குப் போறம் உங்கடை பைல் பாத்து ஏதோ வெறிவைவ் பண்ணப் போகினம் போலை கிடக்குது”

வாத்தியார் கேட்காமலே சிப்பந்தி சொன்னான். அவனுக்கும் ஆங்கிலம் தெரிந்திருந்தது.

“கடவுளாணை நல்ல மனிசனாய் கிடக்கு உவனைப் பாக்க எங்கடை கனகம்மாக் குஞ்சியாச்சியின்ரை நடுவிலான் சாந்தன் மாதிரிக் கிடக்குது”

மனம் சொல்லிக்கொண்டது.

கணக்குப் பகுதியில் ஏராளமான அலுவலர்கள் பைல்களைப் புரட்டிய படியிருந்தனர். நடுவில் ஒரு மேசை கதிரையில் தூங்கி வழிந்து கொண்டி ருந்தார். அவர் தான் சித்திரகுப்தனார் என அறிந்து கொள்வது வாத்தியாருக்குச் சிரமமாயிருக்கவில்லை.

“ஓ… நீங்கள் தானே பரமசிவம் மாஸ்ரர். உங்கடை விஷயமெல்லாம் எங்கடை அக்டிங் ஐயா சொல்லியிருக்கிறார். இப்ப ஒரு கிறிற்றிக்கல் சிற்றிவேஷன் மாஸ்ரர். அவர் அக்டிங்கிலை இருக்கிற ஒராள் நானோ பல வருஷ என்ரென்ஷிலை இருக்கிறன்.”

அவருடைய தளர்ந்துபோன உடலையும் முடியில்லா மண்டையையும் கட்டுப்பல் வரிசையையும் பார்த்தபோது அவர் மிகவும் பழையவர்தான் என்பதை ஒப்புக் கொண்டது வாத்தியாரின் மனம்.

“அதுதான் மாஸ்ரர்! நீங்கள் ஒரு வாத்தியார். ஒரு குரு. சமூகத்தைக் கட்டி யெழுப்பிற சிற்பி. இதெல்லாத்தையும் யோசிச்சுத் தான் உங்களைத் திரும்பவும் பூவுலகத்துக்கு அனுப்புறதாய் முடிவெடுத்திருக்கிறம். அங்கைபோய் உங்கடை புனிதமான சேவையை அர்ப்பணிப்போட செய்யுங்கோ!”

சிந்திரபுத்திரனாரின் வார்த்தைகள் வாத்தி யாரின் செவிகளில் தேனாகப் பாய்ந்தன.

“அப்ப ‘ட்றான்ஸ்போட்’ என் மாதிரி சேர்…?”

அதொண்டும் பிரச்சினையில்லை உங்களைக் கொண்டு வந்த மாதிரிக் கொண்டு போய்விடுவம். ஒண்டு சொல்லுறன் அங்கை போய் ஒழுக்கமான வாத்தியாராய் ஒழுங்காய்ப் படிப்பிக்கவேணும். நம்பித்தான் விடுறம்.

இனியும் தாமதித்துச் சித்திரகுப்தனாரின் மனம் மாறிவிட்டால் எல்லாம் வம்பாகிப் போகும். அவசரமாகத் துள்ளிக் குதித்துப் புறப்பட ஆயத்தமான வாத்தியாரைச் சித்திரகுப்தனாரின் குரல் தடுத்தது.

“போச்சுதடா! கோதாரி விழுவான் பேந்தேன் கூப்பிடுறான்”

மனம் திக்கென்றது

“இனி எங்கடை அக்டிங் ஐயாவைச் சந்திக்கத் தேவையில்லை. அங்கை உங்கடை ஆக்கள் உங்கடை உடம்பைக் கொண்டு போய் எரிச்சுப் போடுவினம். கெதியாய்ப் போங்கோ”

தூதுவன் வந்தான். ஓய்வெடுத்து அசை போட்டுக்கொண்டிருந்த எருமை மாட்டைத் தட்டியெழுப்பினான். பயணம் தொடங்கியது. பூவுலகப் பயணம் மகிழ்ச்சியாயிருந்தது. வாத்தியாரின் கையில் பாசக்கயிற்றைக் கொடுத்துவிட்டு எருமைக் கடாவைச் செலுத்தினான் தூதுவன். யாராவது தனக்கு வேண்டா தவர்களைச் சந்தித்தால் பாசக்கயிற்றை வீசி விடுவார் வாத்தியார் நம்ப முடியாது. அப்படியொரு குள்ளன்.

“உதுதான் வீடு மெல்ல நிப்பாட்டுங்கோ”

மெல்ல இறங்கினார் வாத்தியார்.

நல்லவேளை வாத்தியார் நினைத்தது போல ஒரு பொல்லாப்பும் நடக்கவில்லை. உடல் கிடந்தது. “எடி வாத்தியார் பாலைக் குடிக்கிறார் போலை. ஊத்துங்கோ பாலை” இப்போது கண்களையும் விழித்து விட்டார். “ஐயோ என்ரை ஐயா…! எழும்பீட்டியோ!” மகிழ்ச்சி ஆரவாரம் பொங்கிப் பிரவாகித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தொலைக்காட்சித் தொடரில் நடிக்கிறார்

# எமி ஜாக்சன்

தமிழ் திரையுலகில் முன்னணி நடிகையாக உருவெடுத்துள்ள எமி ஜாக்சன், அமெரிக்காவில் புகழ்பெற்ற தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் நடிக்கவுள்ளார்.

இங்கிலாந்து மொடல் அழகியான எமி ஜாக்சன் தமிழில் 'மதராசப்பட்டினம்' மூலம் நடிகையாக அறிமுகமானார். இதையடுத்து தமிழில் 'ஐ', 'தங்கமகன்', 'தெறி' உள்ளிட்ட பல படங்களில் நடித்துள்ளார். தற்போது சங்கர் இயக்கத்தில் ரஜினியுடன் இணைந்து '2.0' படத்தில் நடித்து வருகிறார்.

இந்தப் படம் அடுத்த ஆண்டு ஜனவரியில் வெளியாக உள்ளது. இந்த நிலையில், அமெரிக்காவில் ஒளிபரப்பாகி வரும் 'சூப்பர் கேர்ள்' என்ற தொலைக் காட்சித் தொடரில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இந்தத் தகவலை அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம)



## குரங்கு மனம் வேண்டாமே!

*"ஒரு குரங்கு இறப்பதற்கு ஒரே ஒரு காயம் போதும். ஒரு முட்டாள் சாவதற்கு ஒரே ஒரு பிரச்சினை போதும்."*

இவ்வாறாக கிராமங்களில் ஒரு உவமை வாக்கியம் உண்டு. காடுகளில் வாழும் குரங்குகள் பெரும்பாலும் நோய் வாய்ப்படுவதில்லை. ஆனால் அவைகளுக்கு ஒரேயொரு காயம் ஏற்பட்டுவிட்டால் போதும். அதை நோண்டி நோண்டிப் பெரிதாக்கித் தன்னை அழித்துக் கொள்ளும்.

அதுபோலத் தான் மனிதன், தன் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டி, அதைப் பெரிதாக்கிக் கொள்வதும்.

அந்த குரங்கு கொஞ்சம் பொறுமையாய் தனக்கு ஏற்பட்ட காயத்தை நோண்டாமல் இருந்தாலே போதும். அது விரைவில் ஆறிவிடும்.

இதைக் குரங்குக்கு புரிய வைக்கவும் முடியாது. நோண்டுவதைத் தடுக்கவும் முடியாது.

ஆனால், மனிதன் புரிந்து கொள்ள முடியும் தானே?

வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளை மனதிற்குள் போட்டு நோண்டி நோண்டிப் அதைப் பெரிதாக்கிக் கொள்ளாமல் வாழ முடியும் தானே?

மனித மனதை, மனித மனமாகவே இருக்கவிடுங்கள்!

குரங்கு மனம் வேண்டாமே!!

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**இடபம்:** பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஆதரவு உண்டாகும்.

**மிதுனம்:** மற்றவர்களிடம் நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** திட்டமிட்டு செயல்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்கி வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பண வரவு அதிகரிக்கும். வெகுநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**துலாம்:** பேச்சால் அனைவரையும் கவர்ந்திழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

**விருச்சிகம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்திப் பணிபுரிவீர்கள். இலாபம் உயரும்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**மகரம்:** மனக்குழப்பம் நீங்கி நிம்மதி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தகதி அகலும். இலாபம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**கும்பம்:** குடும்ப விஷயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர்.










## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 4 | | 1 | | 3 | | | 2 |
| | 5 | | | | | 6 | 4 | 3 |
| 2 | | 3 | 7 | | | | 1 | |
| | | 9 | 8 | | | | | 4 |
| | 2 | | | | | | 6 | |
| 6 | | | | | 7 | 2 | | |
| | 1 | | | | 9 | 4 | | |
| | | 5 | | | | | 2 | |
| 8 | | | 6 | | 1 | | 5 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 4 | 8 | 1 | 5 | 9 | 3 | 2 | 6 |
| 9 | 2 | 5 | 6 | 3 | 7 | 4 | 8 | 1 |
| 1 | 6 | 3 | 4 | 8 | 2 | 7 | 5 | 9 |
| 8 | 1 | 4 | 5 | 7 | 6 | 2 | 9 | 3 |
| 6 | 9 | 2 | 3 | 4 | 1 | 8 | 7 | 5 |
| 5 | 3 | 7 | 2 | 9 | 8 | 6 | 1 | 4 |
| 4 | 8 | 1 | 9 | 2 | 3 | 5 | 6 | 7 |
| 3 | 7 | 6 | 8 | 1 | 5 | 9 | 4 | 2 |
| 2 | 5 | 9 | 7 | 6 | 4 | 1 | 3 | 8 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேங்காய் போளி

**தேவையான பொருள்கள் :**
மைதா - அரைக்கிலோ
ரவை - 2 மேசைக்கரண்டி
மஞ்சள் தூள் - 1 சிறங்கை
வெல்லம் - 1 1/2 கோப்பை
தேங்காய்- 2 கோப்பை (துருவியது)
ஏலக்காய் - 3 (பொடி செய்தது)
நெய் - 2 மேசைக்கரண்டி
தண்ணீர் - 1 கோப்பை

**செய்முறை :**
ஒரு பாத்திரத்தில் கோதுமை, ரவை, மஞ்சள் தூள், பொடி செய்த ஏலக்காய் மற்றும் தண்ணீர் சேர்த்து கலவையை நன்கு மென்மையாக பிசைந்து 30 நிமிடம் ஊற வைத்துக் கொள்ள வேண்டும்.
ஒரு பாத்திரத்தில் 1/2 கோப்பை தண்ணீர் ஊற்றி, அதில் வெல்லத்தை இட்டு, நன்கு கரைய வைக்க வேண்டும்.
வெல்லம் நன்கு கரைந்ததும், அதில் துருவி வைத்துள்ள தேங்காயைக் கலந்து சூடாக்க வேண்டும். பாகு சற்று கெட்டியாக வரும் போது அதனை இறக்கி குளிர வைக்க வேண்டும்.
பின்பு பிசைந்து வைத்துள்ள மாவை சிறு உருண்டைகளாக பிடித்து, ஒவ்வொரு உருண்டையின் நடுவிலும் விரலால் ஓட்டை போட்டு, அதன் நடுவே வெல்லக் கலவையை வைக்க வேண்டும். முனைகளை மூடி மீண்டும் உருண்டைகளாக பிடித்துக் கொள்ள வேண்டும்.
ஒரு தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடேற்ற வேண்டும்.
கல்லானது சூடாவதற்குள், ஒரு பிளாஸ்டிக் கவரில் நெய் தடவி, அதில் ஒரு உருண்டையை வைத்து, தட்டையாக தட்டி, தோசைக்கல்லில் போட்டு நெய் ஊற்றி, முன்னும் பின்னும் வேக வைத்து எடுத்தால், தேங்காய் போளி தயார்.

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | | | | |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 900 | 800 |
| நண்டு | 400 | 400 | 450 | 300 |
| கணவாய் | 700 | 600 | 700 | 800 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 400 | 700 | 800 | 800 |
| சீலா | 400 | 400 | 400 | 500 |
| விளை | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 400 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 350 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 300 | 300 |
| ஓரா | 300 | 300 | 450 | 300 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 150 | 400 | 200 |
| சூடை | 100 | 100 | 160 | 100 |
| ஒட்டி | 150 | 200 | 200 | 250 |
| திருக்கை | 300 | 200 | 400 | 300 |
| மதனம் | 200 | 150 | 200 | 300 |
| கொய் | 100 | 70 | 80 | 50 |
| பாலை | 150 | 200 | 400 | 300 |
| வாளை | 200 | 250 | 300 | 250 |

# காலில் ஆணியா? பாட்டி வைத்தியம்



கால் ஆணி, பாதங்களை தாக்கும் முக்கிய பிரச்சினைகளில் ஒன்று. இந்தக் கால் ஆணிப் பிரச்சினை உள்ளவர்களுக்கு கால்களை தரையில் வைக்கவே முடியாத அளவுக்கு வலி உண்டாகும். இது உடல் அழுத்தம் காரணமாகவும், செருப்பு அணியாமல் நடப்பதாலும், கால் ஆணி உள்ளவர்களின் செருப்பை பயன்படுத்துவதாலும் உண்டாகிறது. இந்தக் கால் ஆணிகளுக்கு முறையான மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் அவையே பின்னாளில் பெரிய பிரச்சினைகளைக் கொடுப்பதற்கு வாய்ப்பு உண்டு. இந்த பிரச்சினையை போக்குவது எப்படி என்பது பற்றி இந்தப் பகுதியில் காணலாம்.
பாதத்தில் சிறு கொப்புளங்கள் போல உண்டாவதைத்தான் கால் ஆணி என்று கூறுகிறார்கள். கால் ஆணி உடையவர்களின் செருப்புகளைப் பயன்படுத்தினால் அதைப் பயன்படுத்துபவர்களுக்கும் கால் ஆணி வர வாய்ப்புள்ளது. காலுக்குப் பொருந்தாத சிறிய அளவு செருப்புகளைப் பயன்படுத்தவதாலும், வெறும் காலில் நடப்பதாலும் கூட கால் ஆணி ஏற்படும். கால் ஆணி ஏற்பட்டு விட்டால் அதனை உடனடியாகச் சரிப்படுத்தி விட வேண்டும். இல்லாவிட்டால் கால் முழுவதும் பரவி நடக்க முடியாத நிலை ஏற்படும்.
கால் ஆணி ஏற்பட்ட உடனேயே பூண்டை நசுக்கி அதன் சாறை காலில் ஆணி இருக்கும் இடங்களில் தடவி வரவும். இரவுப் பொழுதில் பூண்டை நசுக்கி காலில் வைத்து துணியால் கட்டுப்போட்டு காலையில் எடுத்துவிடலாம். இதுபோல் ஒரு வாரம் செய்து வந்தால் கால் ஆணியில் இருந்து நிவாரணம் கிடைக்கும்.
மஞ்சள் ஒரு துண்டு, வசம்பு ஒரு துண்டு, மருதாணி ஒரு கைப்பிடி அளவு எடுத்து விழுதாய் அரைத்து அதனை கால் ஆணிகள் மீது தொடர்ந்து 21 நாள்கள் வரை பூசிவர கால் ஆணிகள் அனைத்தும் மறையும்.

# மெல்லிய புருவத்தை அடர்த்தியாக்குதல்



சிலருக்கு புருவ முடிகள் உதிரும் பிரச்சினை இருக்கும். இது தைமராய்டு பிரச்சினையின் அறிகுறியாக இருக்கலாம். மன அழுத்தம், புரதம் அல்லது விற்றமின் குறைபாடு போன்றவற்றாலும் புருவ முடி உதிர்தல் ஏற்படலாம். இயற்கை வழிகளை பின்பற்றி மெல்லிய புருவத்தை அடர்த்தியாக்குவது எப்படி என்று பார்க்கலாம்.
பருவ முடியை அடர்த்தியாக மற்றும் விரைவாக வளர செய்ய ஆரம்பகாலம் முதல் நடைமுறையில் இருந்து வருவது விளக்கெண்ணெய். இது வேர்க்கால்களை புத்துணர்ச்சி அடையச் செய்து முடி வளர்ச்சியை அதிகரிக்கிறது. ஒரு பஞ்சை எடுத்து விளக்கெண்ணெயில் நனைத்து, புருவத்தில் தடவவும். விரல் நுனியை கொண்டு 23 நிமிடம் நன்றாக மசாஜ் செய்யவும். 30 நிமிடங்கள் விடவும். பின்பு வெது வெதுப்பான நீரில் கழுவவும். தினமும் ஒரு முறை இதனை செய்யலாம். குறிப்பாக இரவு வேளையில் படுக்கைக்குச் செல்லும் முன்பு இதனை செய்யலாம்.
இரவு நேரத்தில் சில துளி தேங்காய் எண்ணெயை எடுத்து உங்கள் புருவத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்யவும். மசாஜ் செய்வதால் இரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இதனால் முடி வளர்ச்சி அதிகரிக்கிறது. இரவு முழுதும் அப்படியே விட்டு விடவும். மறுநாள் காலை, வெது வெதுப்பான நீரில் முகத்தை கழுவவும். சில மாதங்கள் தொடர்ந்து இதனை செய்வதால் நல்ல மாற்றம் தெரியும்.
ஆலிவ் எண்ணெய் சில துளிகள் எடுத்து புருவத்தில் தடவவும். நன்றாக மசாஜ் செய்யவும். இரவு முழுவதும் அப்படியே விடலாம் அல்லது 30 நிமிடங்கள் கழித்து கழுவலாம். ஆலிவ் எண்ணெயுடன் தேன் சேர்த்து புருவத்தில் பூசிக் கொள்ளலாம். நன்றாக மசாஜ் செய்து 10 நிமிடங்கள் கழித்து நீரில் கழுவலாம். தினமும் இதனை செய்வதால் விரைவில் நல்ல பலன் கிடைக்கும்.



# இது புதுசு

முதுகுப் பை வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை ஆயிரத்து 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | 80 | 60 | 60 | 60 |
| கத்தரி | 150 | 180 | 140 | 180 | 180 |
| மரவள்ளி | 80 | 70 | 80 | 60 | 60 |
| பயிற்றை | 70 | 110 | 120 | 100 | 140 |
| பாகல் | 140 | 400 | 300 | 400 | 200 |
| க.கிழங்கு | 100 | 100 | 80 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 140 | 140 | 120 | 120 |
| சி.வெங்காயம் | 250 | 180 | 250 | 240 | 180 |
| பூசணி | 40 | 40 | 40 | 50 | 40 |
| தக்காளி | 120 | 160 | 220 | 140 | 120 |
| வாழைக்காய் | 80 | 100 | 100 | 60 | 60 |
| கீரை | 50 | 30 | 40 | 30 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 30 |
| ப.மிளகாய் | 280 | 280 | 260 | 180 | 240 |
| புடோல் | 100 | 100 | 90 | 80 | 100 |
| கோவா | 140 | 100 | 80 | 80 | 80 |
| வெண்டி | 80 | 70 | 80 | 100 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 160 | 200 |
| லீக்ஸ் | 150 | 140 | 140 | 140 | 120 |
| தேங்காய் | 70 | 90 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 120 | 120 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 280 | 250 | 200 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 120 | 170 | 160 | 160 |
| கரட் | 200 | 180 | 100 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 160 | 200 | 250 | 200 | 140 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த மானிடமே விறகுமாகி....



(29ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தும் விடுகின்றார்...? ஒரு பெரும் அம்பாரம் விறகுக்கு மேலே யாரோ தன்னைத்தூக்கி வீசிக் கொளுத்தவும்தான் நல்லசிவம்நல்லாய்க்கலங்கியும்போனான் பற்றித் தொலைத்து ஆறுதலமைவதற்கென்று பீடியைத் தேடினாலும் ஒரு துவள் பீடி கூட வீட்டிலில்லை. ஓடிப் போய்க் குஞ்சர் கடையில் பீடி வாங்கவும் தான் ஒரு சதக் காசுமில்லையே கடனுக்கு ஒரு பீடி கேட்டாலும் நல்ல பேச்சுத்தான் அந்த மூனாவின் வாயிலிருந்து செல்லடிக்கும் தோற்காத சொல்லடிகளாய் வந்து கொட்டுண்ணும் மனதில் அகோர கடி கூடிவிட்டது போல் தலையைப் போட்டுச் சொறிந்தான் எங்காவது ஓடிப்போய் கிணறு, கடலில் விரைந்து வரும் வாகனங்களில் அடிபட்டுச் சா எல்லாம் முடிவில் அந்த மானிடத்தின் முடிவில் அந்த முடிசார்ந்த மன்னரையும் ஒரு பிடி சாம்பலாக்கியே விடுமிந்த விறகு படுத்தும்பாடு.

நல்லசிவம் "காண்ட்" ஆகி நிற்கையில்

தேனீருக்கு உலைத்துத் தள்ளிய அதே கடைக்குட்டி மகன்காரன் தான் "பசிக்குது கொண்டாடி சாப்பாட்டை" என்று தாயைப் போட்டுக் கிண்டிக் கிளறிக் கொள்ளத் தொடங்கினதன் விளைவு அவளும் ஆட்டியைப் பூட்டத் தொடங்க ஆமியின் செல்லடியை விட இது தான் இன்னும் மகா மகா கொடிய "ஜயிற்றம்" என "அண்டஸ்ற ராண்ட்" பண்ணிக் கொண்டே விறகுக்குப் போகச் சைக்கிள் வண்டியை உருட்டத் தொடங்கினார் நல்லசிவம். அந்த வேளை பார்த்துக் கேற்றடியில் ஒரு ஆட்டோ...!

அது சடாரென வந்து படாரென நின்று விட, தனது இளைய மகனின் ஆட்டோவில் ஹெட் மேசனார் கந்தவனம் அனுப்பி வைத்த இரண்டு நாள்களுக்குச் சிக்காரமாய்க் காணக்கூடிய விறகு. நல்ல சிவம் குடும்பத்துக்கு நல்லதொரு குளிர்த்தியைப் போட்டும் விட நல்லசிவம் நல்லபடியாய்த் தனது சைக்கிளில் மேசன் வேலைத்தளத்தை நோக்கிப் பறந்து கொண்டிருந்தான்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 491

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | 5 | | ■ |
| 6 | | | ■ | 7 | | ■ | 8 |
| 9 | | ■ | 10 | | | | |
| ■ | ■ | 11 | | | | ■ | |
| 12 | 13 | | | | ■ | 14 | ■ |
| ■ | 15 | | ■ | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | ■ | 19 | |
| 20 | | ■ | 21 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:...............................................
முழுமையான தபால் விலாசம்: ..............................
...............................................................
கையொப்பம்:......................................................

### இடமிருந்து வலம்

1. கதையின் முதன்மைப் பாத்திரம்
6. ஊட்டம்
7. மனஈடுபாடு கொள்
9. உண்ணுமாறான ஏவல்
10. நளன் இவனோடு சூதாடி அனைத்தையும் இழந்தான்
11. தேசத்தின்
12. பருகச் செய்து வை
14. பாடல்
15. தாண்டு
16. பொறுப்பு
17. உள்ளம்
19. கனவு
20. தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி
21. தோழன்

### மேலிருந்து கீழ்

1. கண் தெரியாதவன்
2. அடிமை / ஊழியம் செய்பவன்
3. மிடா
4. சேர்த்து வை
5. ரசிப்பவன்
8. திருமணமாகாத இளம் பெண்
10. குப்பி
11. விருப்பம்
13. ஆகாயம்
14. பாடுவதில் வல்லவன்
17. மயக்கமூட்டும் பானம்
18. மனித உடலின் ஓர் உறுப்பு

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.
சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 489 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) அக்கிரமம் (5)கொடு (6)வினயபிடகம் (8)மார்பு (10)மனது (12)மாசற்ற (13)அரம் (16)கான (17)ஓம் (18)மாயாஜாலம்

**மேலிருந்து கீழ்**
(1)அறிவிலி (2)கிரயம் (3)மட்டமான (4)நடு (5)கொம்பு (7)கர்மம் (9)ஆசனம் (10)துற (11)ஆரணம் (14) அகால (15) ஆயா

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.491**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (11.10.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.491இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 15.10.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 489 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
**க.தில்லையம்பலம்,**
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

**2 ஆம் பரிசு**
**வாசுதேவன் அநந்தன்,**
கப்பம்புலம், சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்

**3 ஆம் பரிசு**
**சா.துவாரகா,**
'பிருத்தாவனம்',
ஆத்தியடி, பருத்தித்துறை.

**4 ஆம் பரிசு**
**கே.இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை

**5 ஆம் பரிசு**
**பா.சாயிபவானி,**
புதுத்தோட்டம்,
அல்வாய் தெற்கு, அல்வாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

**க.ஜெகதாம்பிகை,**
இல.158 சட்டநாதர் வீதி,
யாழ்ப்பாணம்.

**செ.யோகபாலன்,**
இல.40 புதுவீதி,1ஆம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

**செ.கபிலன்,**
மேத்தர் ஒழுங்கை,
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில் போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 489 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேடம்

சூரியன், புதன், குரு, சுக்கிரன் அனுகூல அமர்வில் உள்ளனர். உங்கள் பேச்சு, செயல் சிறப்பாக அமையும். நண்பர்களுக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர் படிப்பு, அறிவாற்றலில் மேம்படுவர். இஷ்டதெய்வ அருளால் துன்பம் விலகும். வழக்கில் சுமுகத் தீர்வு கிடைக்கும். மனைவியின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவீர்கள். குடும்பத் தேவை பெருமளவில் நிறைவேறும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் கேட்ட கடனுதவி கிடைக்கும். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருட்கள் வாங்குவர். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை.

## இடபம்

ராகு, சுக்கிரன், சந்திரன் நன்மை தருவர். வீடு வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு அவசியம். புத்திரரின் மனக்குழப்பம் தீர ஆலோசனை சொல்வீர்கள். உறவினர்கள் அன்பு, பாசத்துடன் உதவ முன் வருவர். பூர்வ சொத்தில் உரிய கண்காணிப்பு தேவை. மனைவி உங்களின் நல்ல குணத்தை பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்வது நல்லது. பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாக நேரிடலாம். பெண்கள், தாய் வீட்டு உதவியை கேட்டுப் பெறுவர். மாணவர்கள் படிப்பு தவிர பிற விவாதம் பேசக் கூடாது.

## மிதுனம்

பெரும்பான்மை கிரகங்களால் நற்பலன் உண்டாகும். நிலுவைப்பணி விரைவாக நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். புத்திரரின் செயல் சிறப்பாக அமையும். குடும்பத்தில் சுபநிகழ்ச்சி நடந்தேறும். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வெளியூர் பயணம் மூலம் ஆதாயம் கிடைக்கும். எதிரிகள் சொந்த சிரமங்களால் விலகிச் செல்வர். விருந்து, விழாவில் அடிக்கடி பங்கேற்பீர்கள். மனைவியின் ஆலோசனை குடும்பத்தில் ஒற்றுமையை உண்டாக்கும். தொழில் வளர்ச்சியால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை எளிதில் நிறைவேற்றுவர். பெண்கள் கணவரின் அன்புக்குரியவராக திகழ்வர். மாணவர்கள் நன்றாகப் படித்துப் பரிசு பெறுவர்.

## கடகம்

சூரியன், சுக்கிரன், சந்திரனால் நற்பலன் உண்டாகும். மனதில் உற்சாகம் நிலைத்திருக்கும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கப் பெறுவீர்கள். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். எதிரியின் செயலை சமயோசிதமாகச் சரி செய்வீர்கள். மனைவி வழி சார்ந்த உறவினர்கள் அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்க விடாமுயற்சியும், கடின உழைப்பும் தேவை. பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டதை தவறாமல் பின்பற்றவும். பெண்கள் தெய்வ வழிபாடு நடத்துவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளிலும் ஈடுபடுவர்.

## சிங்கம்

சுக்கிரன், கேது, சந்திரன் அனுகூலமாக உள்ளனர். பணிகளில் மனப்பூர்வமாக ஈடுபடுவீர்கள். நண்பரின் உதவி எதிர்பார்த்த நேரத்தில் கிடைக்கும். புதிய வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு அவசியம். புத்திரரின் பிடிவாத செயலை இதமாக சரி செய்வது நல்லது. ஒவ்வாத உணவு உண்பதை தவிர்க்கவும். நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம். மனைவியின் அன்பு, பாசத்தில் மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்வீர்கள். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை கிடைக்கும். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். பெண்கள் கணவரின் அன்பை பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை.

## கன்னி

சுக்கிரன், ராகு, குரு சனீஸ்வரர் ராஜயோகபலன் தருவர். மனிதாபிமானத்துடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். பூர்வீகச் சொத்தில் நல்ல வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். புத்திரர் பெற்றோருடன் அன்பு பாசத்துடன் பழகுவர். நிர்ப்பந்த கடனில் ஒரு பகுதி அடைபடும். இஷ்டதெய்வ அருள்பலம் துணைநிற்கும். மனைவியின் நற்செயல் குடும்பத்தில் ஒற்றுமையை வளர்க்கும். தொழில், வியாபாரத்தில் இடையூறு விலகும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் உறவினர்களுக்கு இயன்ற அளவில் உதவுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்..

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 01.10.2017 தொடக்கம் 07.10.2017 வரை

## துலாம்

செவ்வாய், சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். பிறர் மனம் அறிந்து நட்புடன் பழகுவீர்கள். வாகன பராமரிப்புப் பயணத்தை எளிதாக்கும். புத்திரர் தங்களின் விருப்பம் நிறைவேற பிடிவாத குணத்துடன் செயல்படுவர். பூர்வீகச் சொத்தில் வளர்ச்சியும், பணவரவும் அதிகரிக்கும். ஒவ்வாத உணவுகளை தவிர்ப்பது நல்லது. மனைவியின் அன்பான செயல் குடும்ப ஒற்றுமையைப் பாதுகாக்கும். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான வளர்ச்சி உண்டாகும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல தவறாமல் பின்பற்றவும். பெண்கள் ஏனையோர் விஷயத்தில் கருத்து சொல்ல வேண்டாம். மாணவர்கள் படிப்பில் கூடுதல் அக்கறை செலுத்துவர்.

## விருச்சிகம்

சூரியன், கேது, புதனால் அனுகூலம் உண்டாகும். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். உற்சாகமுடன் அன்றாட பணிகளை நிறைவேற்றுவீர்கள். தம்பி, தங்கை அதிக அன்பு பாராட்டுவர். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும். புத்திரர் படிப்பு, வேலை வாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். ஆரோக்கியம் பலம் பெறும். வழக்கு, விவகாரத்தில் இதமான அணுகுமுறையை பின்பற்றவும். மனைவியின் பேச்சு, செயல்பாட்டால் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக உயரும். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் அதிக பயன் தராத பொருட்களை விலைக்கு வாங்க வேண்டாம்.

## தனுசு

சூரியன், புதன் சேர்க்கையால் நன்மை உண்டாகும். குரு, சுக்கிரன் அதிக நன்மையை வழங்குவர். பேச்சு, செயலில் வசீகரம் உண்டாகும். சமயோசித செயலால் அன்றாடப் பணி எளிதாக நிறைவேறும். வெளியூர் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். மனைவி அன்பு கண்டு மனம் நெகிழ்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியும், ஒற்றுமையும் நிறைந்திருக்கும். தொழில், வியாபாரம் அபரிமிதமாக வளர்ச்சி பெறும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்களின் வெகுநாள் பிரார்த்தனை நிறைவேறும். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர் உதவுவர்.

## மகரம்

சுக்கிரன், சனீஸ்வரர், சந்திரன் அளப்பரிய நற்பலன் தருவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அன்றாட செயல்களில் ஆர்வம் கூடும். உடன்பிறந்தவர்கள் ஓரளவு உதவுவர். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கும். வெளியூர் பயணத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறையை பின்பற்றவும். புத்திரர் பெற்றோரின் எண்ணங்களை மதித்து செயல்படுவர். அதிக நிபந்தனையுடன் பணம் கடன் பெற வேண்டாம். மனைவி குடும்ப ஒற்றுமைக்கு துணை நிற்பார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப்பணிகளில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் நிம்மதியான வாழ்வு பெறுவர். மாணவர்கள் சாகச விளையாட்டில் ஈடுபடக் கூடாது

## கும்பம்

ராகு, புதன், குரு யோகபலன் வழங்குவர். புதிய உத்தியால் பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். பொதுநலனில் ஆர்வம் கூடும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை உண்டாகும். புத்திரர் உங்கள் சொற்படி நடந்து, கல்வி, வேலைவாய்ப்பில் முன்னேற்றம் காண்பர். உறவினரால் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. ஆரோக்கியம் பலம் பெறும். மனைவியிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை தாமதமாகலாம். பெண்கள் பிள்ளைகள் நலனில் அக்கறை கொள்வர். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை தேவை.

## மீனம்

செவ்வாய், கேது, சுக்கிரனால் அதிக நன்மையுண்டாகும். நேர்மை எண்ணம் கொண்டவராக செயல்படுவீர்கள். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு நடைமுறை பின்பற்றுவது நல்லது. புத்திரர் நற்செயல்களால் பெற்றோருக்கு பெருமை சேர்ப்பர். நண்பருக்கு கடனாக கொடுத்த பணம் திரும்ப கிடைக்கும். ஆரோக்கியம் மேம்படும். மனைவி விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். வெளியூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்ளலாம். தொழில், வியாபாரத்தில் பணவரவு சீராக இருக்கும். பணியாளர்கள் கண்ணும் கருத்துமாக செயல்பட்டு நற்பெயர் காண்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

சி.சந்திரகலா



# யானைகள் ஏன் ஊருக்குள் வந்தன...?

யானைகள்-மனிதர்களுக்கிடையிலான முரண்பாடு சமீப நாள்களில் மிக அதிகமாகக் காணப்படுகிறது. கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை எனத் தமிழர்வாழும் பகுதிகளிலும்கூட இது பெரிய பிரச்சினையாக உள்ளது. இந்தப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்க முடியும் என்று ஆராய்ந்ததில்பலதீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றில் ஒன்று மின்சார வேலிகள் போடுவது. மின்சார வேலிகளால் மட்டும் யானைகளைக் கட்டுப்படுத்திவிட முடியுமா? ஏனைய மிருகங் களை விட யானை மிகவும் புத்திக் கூர்மையுடையது. ஒரு சில உதாரணங்களைக் கவனிப்போம்.

– – – – –

தேங்காய்க்குள் சுண்ணாம்பை அடைந்து கதிர்காமத்திலுள்ள ஒரு கோயில் யானைக்கு அதை உண்ணக் கொடுத்துவிட்டு அவ்விடம் விட்டு ஓடிவிட்டார் ஒருவர். யானை அந்தத் தேங்காயைக் கடவாய்க்குள் எடுத்ததும் விடயத்தை அறிந்துள்ளது. அடுத்த வருடம் அந்த மனிதன் அவ்விடத்துக்குச் சென்றபோது அந்த யானையைப் பார்த்திருக்கிறான். யானை அவனைக் கண்டதும், ஒருவருடமாக கடவாய்க்குள் வைத்திருந்த, அவன் முன்பு கொடுத்த அந்தத் தேங்காயை எடுத்து அவனது தலையில் அடித்து அவனைக் கொன்றிருக்கிறது.

– – – – –

கந்தளாய்ப் பகுதியில் ஒரு காட்டு யானை மாலை நேரம் ஊருக்குள் வந்திருக்கிறது. கத்தியபடி வந்ததால், ஊர்மக்கள் பதறியடித்து ஓடியிருக்கிறார்கள். ஒருவர் மட்டும் நின்று யானையைப் பார்திருக்கிறார். யானை தும்பிக்கையை அசைத்து அவரைக் கூப்பிட்டிருக்கிறது. அவர் அருகில் சென்றதும் தனது முன்னங்காலை உயர்த்திக் காட்டியிருக்கிறது. காலின் அடிப்பாகத்தில் ஒரு ஆப்புப்போன்ற கூரிய கட்டையும், 'கொமான்டோ' முட் கம்பியும் இருந்திருக்கிறது. அதனை அந்த நபர் பெரும் சிரமப்பட்டு இழுத்து எடுத்திருக்கிறார். கட்டையை எடுத்ததும் யானை அவரது தலையைத் தடவிவிட்டுத் திரும்பிப் போயிருக்கிறது.

அதன் பின்னர் அந்த யானை இடையிடையே அந்த ஊருக்குள் வந்து எவருக்கும் பிரச்சினை கொடுக்காமல், கட்டையை எடுத்துவிட்டவரின் வாசலுக்கு வந்து ஒரு குழைக்கொப்பை வேலியில் செருகிவிட்டுச் சத்தம் போட்டுவிட்டுத் திரும்பிச் செல்வதை வழக்கமாக்கியிருக்கிறது. அங்கு வந்து திரும்பும்போது அருகில் உள்ள வாழை மரத்தையோ, தென்னைமரத்தையோ பிடுங்கிச் சாப்பிடுவதில்லை. எதையும் நாசம் செய்வதில்லை.

– – – – –

அம்பாறைப் பகுதியில் யானைகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக மின்சார வேலியொன்று அமைக்கப்பட்டது. கிட்டத்தட்ட 40 வரையான யானைகள் அந்த வீதியை ஊடறுத்துத் தமது வழமையான அந்தப் பாதையால் செல்ல முயன்றபோது, புதிதாக ஏதோ குறுக்காக இருப்பதைத் தலைமை யானை கண்டுவிட்டதாம். உடனே மற்ற யானைகளை மின்சார வேலிக்கு அருகில் போகவிடாது தடுத்துவிட்டுப் பெரியதொரு பட்டமரத்தை இழுத்து வந்து அந்த வேலிக்கு மேலால் போட்டுவிட்டுப் போட்ட மரத்தின்மீது ஏறி மறுபக்கம் சென்றிருக்கின்றது அந்தத் தலைமை யானை. பின்னர் ஏனைய யானைகளும் அவ்வாறே சென்றிருக்கின்றன. ஊரவர்கள் அதனைப் பார்த்து ரசித்திருக்கிறார்கள்.

– – – – –

2004ஆம் ஆண்டில் சுனாமி அடித்த வேளை இந்தோனேசியாவில் யானையின் மீது சவாரி செய்துகொண்டிருந்த வெளிநாட்டவர்களைக் காவிக் கொண்டு மலைப்பாங்கான இடத்தை நோக்கி அந்தச் சுற்றுலா யானைகள் ஓடியிருக்கின்றன. உல்லாசப் பிரயாணிகள் யானைகளுக்கு மதம் பிடித்துவிட்டது என்று பயந்திருக்கிறார்கள். பின்னர் தான் அவர்களுக்குப் புரிந்தது தங்களைச் சுனாமி அலையிலிருந்து காப்பாற்றுவதற்காகவே அந்த யானைகள் ஓடிச்சென்றன என்பது.

## மனித இடையூறு

காட்டு யானைகளிடம் ஓர் ஒழுங்கு பேணப்படுவதுண்டு. ஒரு குளத்தில் தண்ணீர் குடிப்பதற்காகச் செல்லும் யானைகள் ஒரு குறிப்பிட்ட நேரத்தையே பயன்படுத்துகின்றன. மாலை 5.00 மணிக்கு ஒரு வீதியைக் கடந்தால், பின்னர் இரவு 9.00 மணிக்குத்தான் அவை திரும்புகின்றன. இதைத் தினமும் கவனிப்பவர்கள் புரிந்துகொள்வர். சில பாதைகளை வருடத்துக்கு ஒருதடவை மட்டும் கடந்து செல்லும் வழக்கத்தை அந்த யானைகள் கொண்டிருக்கும். அவற்றின் போக்குவரத்துக்குக் குறுக்காக மனிதர்கள் வீடு கட்டினால், அல்லது வேலி போட்டால் அல்லது வேறு தடைகளைப் போட்டால் யானைகள் அதனைச் சகித்துக்கொள்ள மாட்டா. யானைகளுக்கு அரசியல் எல்லைகளோ குடியிருப்பு எல்லைகளோ அவசியமில்லை. யானை செல்லும் வழியில் இடையூறுகளைச் செய்துவிட்டு தன்னை யானை அடித்துவிட்டது அல்லது தான் நாட்டிய பயிர்களைச் சேதம் செய்துவிட்டது எனும்சம்பவங்களும்நடந்துகொண்டுதானிருக்கின்றன.

## நகர்வைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள்

யானைகள் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்துக்குச் செல்வதை உணவு, நீர் என்பனவே தீர்மானிக்கின்றன. பலகிலோமீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் நீர் நிலைகளை மோப்ப சக்தியால் அறிகின்றன. இலங்கையில் யானைகளின் எண்ணிக்கை வருடா வருடம் அதிகரித்து வருவதால் அவற்றுக்கான உணவுத் தேவையும் குடிநீர்த் தேவையும் அதிகரித்துள்ளது. அண்மைய நாள்களில் கிழக்குக் கடலுக்குள் யானைகள் சில இறங்கியிருந்தன. யானைகளின் பெருக்கத்துக்கு ஏற்றவாறு யானைகள் விரும்பி உண்ணும் தாவரங்களைக் காட்டுக்குள் அதிகம் நாட்டவேண்டும். பெரிய காடுகளுக்குள் இருக்கும் மோட்டைகள், குட்டைகள், நீர்நிலைகள் போன்றவற்றை ஆழப்படுத்தி, அகலப்படுத்தி போதிய நீரைத் தேக்கவேண்டும். இந்த நடவடிக்கைகள் மூலம் யானைகளைக் காட்டுக்குள்ளேயே கட்டுப்படுத்த முடியும். குளம் கட்டுவது மனிதருக்கு மட்டுமல்ல யானைகளுக்கும் ஏனைய காட்டு மிருகங்களுக்கும் என்பதனை மனிதன் கருத்தில் எடுக்கவேண்டும். அவற்றுக்கான தேவைகளை நிறைவு செய்யும் அபிவிருத்தியும், மனிதனுடைய வாழ்வியலுடன் சம்பந்தப்பட்டதாகும்.

> யானைகளின் பெருக்கத்துக்கு ஏற்றவாறு யானைகள் விரும்பி உண்ணும் தாவரங்களைக் காட்டுக்குள் அதிகம் நாட்டவேண்டும். பெரிய காடுகளுக்குள் இருக்கும் மோட்டைகள், குட்டைகள், நீர்நிலைகள் போன்றவற்றை ஆழப்படுத்தி அல்லது அகலப்படுத்தி போதிய நீரைத் தேக்கவேண்டும். இந்த நடவடிக்கைகள் மூலம் யானைகளைக் காட்டுக்குள்ளேயே கட்டுப்படுத்த முடியும்.


## அம்பாறையில் ஒரு எடுத்துக்காட்டு

அம்பாறை நகருக்கு அருகில் காட்டுப் பக்கமாக ஒரு பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் எல்லைவரை யானைகள் வந்து செல்வதுண்டு. அந்தப் பயிற்சி நிலைய வளாகத்துக்குள் அவை வருவதில்லை. இது பற்றிக் கேட்டறிந்தபோது அந்தப் பயிற்சி நிலையத்தை அண்மித்த காட்டுக்குள் பூ மரங்கள் மற்றும் அழகான மரங்கள் என யானைகளுக்கு உகந்த பலவற்றை நாட்டியிருக்கிறார்கள். அதனால் அவை யானைகளைக் கவர்கின்றன. அதேவேளை "ஒரு வாழைமரமோ, தென்னைமரமோ வளாகத்துக்குள் நாட்டினால் நிச்சயம் யானைகள் உள்ளே வந்தே தீரும்" என்கிறார் அந்தப் பயிற்சி நிலையத்துக்குப் பொறுப்பான அதிகாரி.

வடகிழக்கில் இயற்கைச் சமநிலை குழம்பியதற்கு 30வருடமாக நீண்ட போரும், சட்டபூர்வ மற்றவகையில் பலராலும் வளர்க்கப்பட்ட யானைகளை வனவளத் துறையினர் மீளப்பெற்றுக் காட்டில் விட்டதும் கூடக் காரணங்களே. அவை மனிதருடன் பழக்கப்பட்ட தனி யானைகளாக இருப்பதால் துணிந்து ஊர்களுக்குள் இறங்குகின்றன.

ஊருக்குள் வரும் காட்டுயானையைச் சுட்டுக்கொல்லாமல் அந்த யானையை விரட்டி அடிக்கக்கூடிய பயிற்றப்பட்ட 'கும்கி' யானைகளைப் பயன்படுத்துவது பற்றித் திரைப்படங்களில் காண்பிக்கப்படுகிறது. மின்சார வேலிகளால் மட்டும் யானைகளைக் கட்டுப்படுத்திவிட முடியாது என்பதை மனிதர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால் மனிதன்மீது யானைகள் ஆத்திரம் கொள்வதைக் கட்டுப்படுத்திவிட முடியாது. ஏனெனில் மிருகங்களில் ஓரளவுக்காவது புத்திக் கூர்மையுள்ள மிருகம் அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரை

தங்கவடிவேலு கிருபாகரன்

# சமூகங்களுக்கு முதியோர் வரப்பிரசாதமே

முதியவர்கள் ஆசியாவில் மிகுந்த சவாலுக்கு உரியவர்களாக மாறிவருகின்ற நிலமை 1963ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்டுள்ளது. தெற்காசியாவில் முதியோர் சனத்தொகை அதிகரிக்கும் ஒரு நாடாக இலங்கை விளங்குகிறது. 2016இல் இலங்கையில் ஆண்களின் ஆயுட்காலம் 72வருடங்களாகவும் பெண்களின் ஆயுள்காலம் 78.6 ஆகவும் காணப்பட்ட அதேவேளை முதியோர் சனத்தொகை இலங்கையின் சனத்தொகையில் 12வீதமாகக் காணப்பட்டது. இலங்கையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட முதியவர்கள் இருக்கின்றனர் எனவும் இவர்கள் சுமார் 306 முதியோர் இல்லங்களில் உள்ளனர் எனவும் சமூக வலுவூட்டங்கள் மற்றும் நலன்புரி அமைச்சின் செயலகம் தகவல்வெளியிட்டுள்ளது.

உலகில் உள்ள முதியோரைப் பாதுகாத்து அவர்களுக்கான மதிப்பினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்குடன் ஐ.நா.சபையானது 1991ஆம் ஆண்டிலிருந்து ஒக்டோபர் முதலாம் திகதியை முதியோர் தினமாகக் கடைப்பிடித்து வருகின்றது. இலங்கையிலும் அதனுடன் தொடர்ந்த ஒரு வார காலப்பகுதி முதியோர் வாரமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தத் தினத்திலாவது முதியோரை நினைவு கூருதல் அவசியமானது. இதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.



கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த எமது சமூகக்கட்டமைப்பில் பாதுகாப்பு, பராமரிப்பு, மகிழ்ச்சி, விட்டுக் கொடுப்பு, பொறுப்புக் கூறும் தன்மை, மரியாதை, புரிந்துணர்வு என்பன தாராளமாக பின்பற்றப்பட்டிருந்தன. சமூக அந்தஸ்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிடைக்கப்பெற்றிருந்தது. இன்றைய தனிக்குடும்ப வாழ்வில் இவற்றை எல்லாம் ஆச்சரியமாகத் தேட வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. விளைவாக முதிர்கன்னிகள், விவகாரத்துப்பெற்றவர்கள், பாதுகாப்பு இன்றி வாழ்பவர்கள், போதைக்கு அடிமையானவர்கள் என்ற புது உருவாக்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. குடும்பங்களில் மூத்தோரின் பங்களிப்பு இல்லாமல் போனதால் ஏற்பட்ட தன்மையே இவற்றுக்கான முன்னணிக் காரணமாகும். மூத்தோரின் குடும்பங்களில் இருந்து விலகியமைக்கான காரணங்களில் முதன்மையானது இயலாத நிலை ஏற்படும்போது அவர்களைப் பராமரிக்காமல் புறக்கணிப்பதேயாகும்.

**இலங்கையில் தங்கிவாழும் முதியவர்கள்**

உலகில் முதியவர்கள் அதிகமாகக் காணப்படும் நாடு சீனா. முதியவர்கள் மகிழ்வாக இருக்கும் நாடு டென்மார்க். இலங்கையில், 2012ஆம் ஆண்டில் தங்கியிருக்கும் ஒவ்வொரு60 பேரிலும் 40 சிறுவர்களும் 20 முதியோரும் அடங்குகின்றனர் என்று கணிப்பிடப்பட்டது. இந்த நிலை 2050ஆம் ஆண்டளவில் தலை கீழாக மாற இருக்கிறது. தனியார் துறையில் வேலை செய்யும் 70 வீதமானோரில் 25 வீதமானோரே சமூகத்தில் தமக்குரிய பாதுகாப்பை முதுமையில் பெறுகின்றனர். இலங்கையில் தொழில் புரிபவர்களில் 50 வீதமானவர்கள் ஓய்வூதியத் திட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. எனவே முதியவர்களின் வருமான அற்ற நிலை அவர்களை ஏனையோரில் தங்கிவாழும் நிலையை ஏற்படுத்தப்போகின்றது.

**முதியவர்கள் இசைவடையவேண்டும்**

தமது பழமைவாதங்களில் இருந்து விடுபடாமலிருப்பது இன்று முதியவர்களுக்குப் பெரிய சவாலாக மாறியுள்ளது. இப்படியான சில பழமைவாத எண்ணப்பாடுகள் முதியவர்களைச் சமூகத்தில் இருந்து அந்நியப்படுத்திவிடுகின்றன. முதுமையில் அனுசரித்து வாழும் மனப்பக்குவம் இருப்பது அவசியமானது. களம் பல கண்ட, அனுபவத்தின் பெட்டகமான, எதிர்காலத்தினரின் கலங்கரை விளக்கமான முதியோர்கள் முதுமையில் சமாளிக்கும் நிலைமையைத் தக்க வைக்கும்போது இந்த நிலை மறைந்து சமூகத்துடனான ஒன்றிப்பு ஏற்பட்டு விடுகின்றது.

**அவதானம் அவசியம்**

முதுமையில் பாதுகாப்பு என்பது அவசியமானதாகிறது. புறக்கணிக்கப்படுவதைத் தவிர்த்துக்கொள்ளும்போது சுகமான முதுமையைப் பூரணமாக அனுபவிக்க முடியும். முதியவர் எப்போது கீழே விழுகின்றாரோ அப்போது அவரது இயல்பான இயக்கம் தடைப்படுவது ஆரம்பமாகி விடுகிறது. படுத்த படுக்கையான நிலமையை நோக்கியதான பயணிப்பு ஆரம்பிக்கப்படுகின்றது. உடலைப் பேணுவதும் மனதைத் திடகாத்திரமாக வைத்திருப்பதும் விழுதலைத் தவிர்க்கும் வழிகளாக அமைகின்றன. முதியவர்களுக்கான தேவைகளில் சரியான நேரத்துக்கு உணவு உண்ணுதல் என்பது முதன்மையானதாக உள்ளது. அது இயல்பான மகிழ்வாக அமைகின்றது. அதை அன்பாகக் கொடுத்தல் என்ற விடயம் முன்னிலைப்படுத்தப்படும்போது தமது எதிர் பார்ப் புக்கள் நிறைவேறிக் குழந்தை மனம் படைத்த மூத்தவர்கள் மகிழ்வுறுகின்றார்கள். உணவுகளைப் போட்டுக் கோப்பையை அவர்கள் பக்கம் தள்ளிவிடுவது, "போட்டு வைச்சிருக்கு எடுத்துச் சாப்பிடுங்கோ' எனக் கூறுவது மூத்தவர்களை இம்சைப்படுத்தக்கூடும். விரக்தியை ஏற்படுத்தும்.

**முதியவர்களாற்றும் சமூக வளர்ச்சி**

இன்றைய முதியோர் நிலையின் போக்கையும் பொறுப்பில்லாமல் திரியும் பிள்ளைகளை யும் பார்க்கும்போது பயமாக இருக்கின்றது. வளர்ப்புச்சரியில்லைஎன அங்கலாய்க்க நேரிடுகின்றது. ஆனால் உண்மையான காரணம் சமூகப் பொறுப்புத் தொடர்பான ஊட்டல்கள் கிடைக்காமையே ஆகும். உணர்வூட்டல் என்பதை சூழல் ஏற்படுத்த வேண்டும். பாடசாலைகள், சமூக நிறுவனங்கள், மதச் சார்பு நடவடிக்கைகள் என்பன பலவீனப்பட்டுக்காணப்படுவதன் நிலையையே இவை காட்டுகின்றன. முதியோர் பராமரிப்பு இடங்களைத் தரிசித்தல், நலிவுற்ற மக்களைக் காணுதல், உதவுதல் போன்ற செயற்பாடுகளில் சிறுவர்களோ, இளைஞர்களோ தமது காலத்தைச் செலவிடுவதில்லை. இப்படி நிகழும் காலத்திலேயே நல்ல பெறுபேறுகளை அறுவடை செய்ய முடியும். இந்தச் செயற்பாடுகள் இன்றைக்குப் போதாமல் கிடக்கின்றன. உலக மயமாக்கலுக்குள் புகுந்துவிட்டவர்களுக்கு நல்லது, கெட்டது எவை என்பதை பகுத்தறிந்து உள்வாங்கும் தன்மை இருக்கவில்லை. இந்தப்பணியை முதியவர்கள் முன்பு செய்துகொண்டு இருந்தார்கள். வழிப்படுத்தினர்கள். தமது அனுபவங்கள் மூலம் துன்பங்களை கடந்து செல்ல வழிகாட்டினார்கள். இன்று துன்பங்களுக்குள் வீழ்ந்தவர்களை மீட்க முடியவில்ல. வாழ்க்கை முடிந்து விட்டதாக முடிவெடுத்துத் தத்தளிக்கின்றார்கள். தங்கள் துயரங்களை மூத்தவர்களுடன் பகிர்ந்துகொண்டவர்கள் தம்மைச் சமூகத்தில் மீளவும் நிலைநிறுத்தியமை உணரப்பட்டுள்ளது.

**முதியோர்களை ஆட்கொள்ளும் நோய்கள்**

இலங்கையில் சுகாதாரத்துறை வளர்ந்துள்ளது. ஆயினும் முதியோரில் 90 வீதமானவர்கள் தொற்றா நோய்களுக்கு ஆளாகியுள்ளனர். முதியோர் சனத்தொகையில் 55வீதமானோருக்குத் தீராத நோய்களான நீரிழிவு, உயர் குருதி அமுக்கம், ஆஸ்துமா என்பவை காணப்படுகின்றன. உணவுப் பழக்க வழக்கங்களால் 'கொலஸ்ரோல்', புற்றுநோய் போன்றவற்றாலும் பாதிப்புறுகின்றனர். 'டிமின்சியா' எனும் மறதி வியாதி, கூறியதைத் திரும்ப திரும்பக் கூறுதல் போன்றவை முதுமையில் சாதாரணமாக ஏற்பட்டுவிடுகின்றன. இது பராமரிப்பாளருக்குச் சவாலானதாகக் காணப்படுகின்றது. காத்திரமான சமூக வலுவூட்டல்,சமூகப் பாதுகாப்பு என்பன முதியவர்கள் மத்தியில் கட்டி எழுப்பப்பட வேண்டிய தேவையாக உள்ளன. இதற்குச் சமூகத்தில் வாழ்கின்ற குடும்பத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஊன்று கோலாக இருக்க வேண்டும். முதுமை அனைவருக்கும் பொதுவான ஒன்று. இந்த நிலையைச் சிறப்பாக எதிர்கொள்ளத்தக்க நேரிடையான மனப்பக்குவம் சமூகங்களுக்கு மத்தியில் வளர்த்தெடுக்கப்படுதல் வேண்டும். இந்த நிலைப்பாடே காலத்தின் தேவையும்கூட. முதுமை என்பது புதுமையானது அல்ல. அது அனைவருக்குமுரிய ஒன்றாகும்.

கட்டுரையாளர் - அத்தியட்சகர்,
அரச முதியோர் இல்லம். கைதடி



உலக மயமாக்கலுக்குள் புகுந்து விட்டவர்களுக்கு நல்லது, கெட்டது எவை என்பதை பகுத்தறிந்து உள்வாங்கும் தன்மை இருக்கவில்லை. இந்தப்பணியை முதியவர்கள் முன்பு செய்துகொண்டு இருந்தார்கள். வழிப்படுத்தினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு

பிரகாஸ்




ஆஸ்திரேலியாவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்துக்கு முன்பாக இந்திய அணியின் வீராங்கனைகள் சிலரைச் சந்தித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.



# ஒரு தொடரில் 100 இடங்கள் முன்னேற்றம்

பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் சுமார் 100 இடங்கள் முன்னேறி 103ஆவது இடத்தில் பட்டியலிடப்பட்டுள்ளார் ரஷ்ய வீராங்கனை செரபோவா.

முன்னணி வீராங்கனையான செரபோவா, கடந்த 2015ஆம் ஆண்டு ஆஸ்திரேலியத் தொடரில் களமறங்கிய போது அவரிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளைச் சோதித்துப் பார்த்ததில் அதில் மெல்டோனியம் என்ற தடை செய்யப்பட்ட மருந்து இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதையடுத்து அவருக்கு சுமார் 2 வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. தடைக்கு முன்பாக ஆறாவது இடத்தில் இருந்த அவர் தடைக்குப் பின்பாக 250ஆவது இடத்துக்கு அப்பால் பின்தள்ளப்பட்டார். இந்த வருடத்தின் மத்திய பகுதியிலேயே அவர் தடையில் இருந்து மீண்டு வந்தார். சிறுசிறு தொடர்களில் பங்கேற்று தரப்படுத்தலில் ஓரளவு முன்னேற்றம் கண்டிருந்தார். அண்மையில் முடிவடைந்த ஆஸ்திரேலியத் தொடர்தான் செரபோவா தடைக்குப் பின்னர் களமிறங்கிய முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக அமைந்தது. இந்தத் தொடரில் அரையிறுதி வரை முன்னேறினார் செரபோவா. இந்த ஒரு தொடரின் மூலம் சுமார் 100 இடங்கள் முன்னேறி தரப்படுத்தலில் தற்போது தரப்படுத்தலில் 103ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளார்.

நடப்பு வருடத்துக்கான பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்கள் அனைத்தும் முடிவடைந்துள்ளன. அடுத்ததாக தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களில் மட்டும் உள்ள வீராங்கனைகளுக்கான சிங்கப்பூர் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் செரபோவா கலந்துகொள்ள முடியாது. எனினும் அடுத்த வருடம் நடைபெறவுள்ள தொடர்களில் கலந்துகொண்டு விரைவில் அவர் தனது முன்னயை இடத்தைப் பிடிப்பார் என்று நம்பியிருக்கலாம்.



# ஒரு ஓட்டத்தால் தவற விடப்பட்ட இரட்டைச் சதம்

பங்களாதேஷ், தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. இந்த ஆட்டத்தில் ஒரு ஓட்டத்தால் தனது இரட்டைச் சதத்தைத் தவறவிட்டார் தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் எல்கர்.

முதலில் தடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 496 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடை நிறுத்தியது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரராகக் களமிறங்கிய எல்கர், சுமார் ஒன்றரை நாள் தாக்குப் பிடித்து விளையாடினார். அவர் 199 ஓட்டங்களுடன் எதிர்பாரா விதமாக ஆட்டமிழந்தார். முன்னதாக இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்யாத எல்கர், இந்த ஆட்டத்தில் தனது முதலாவது இரட்டைச் சதத்தைப் பதிவுசெய்வார் என்ற எதிர்பார்ப்பு பெரியளவில் நிலவிய போதிலும் கடைசிக் கட்டத்தில் அவர் தடுமாற்றம் காட்டினார்.

## ரியல் மட்ரிட் தக்கவைப்பு

ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட் தனது வீரர்களைத் தொடர்ந்தும் தக்கவைக்க முனைப்புக் காட்டுகின்றதென்பது அந்த அணியின் புதிய ஒப்பந்தங்களில் இருந்து அறிய முடிகிறது. கடந்த சில வருடங்களாக ரியல் மட்ரிட் அணி மிகச் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளது. கடந்த வருடத்தில் சம்பியன்ஸ் லீக், லா லிகா ஆகிய இரு பெரும் தொடர்களையும் கைப்பற்றி அசத்தியது. இதனால் தனது வீரர்களை அப்படியே தக்கவைக்க முடிவெடுத்துள்ளது மட்ரிட்.

ரியல் மட்ரிட் கழகத்தின் தலைவர் ராமோஸ், நட்சத்திர வீரர்களான ரொனால்டோ, பேல் ஆகியோரின் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டது. தற்போது இரண்டாம் கட்டமாக இஸ்கோ, மொராக்கோ, மார்செலோ, அசென்சியோ, பென்சிமா ஆகியோருடனும் தான் கொண்டிருந்த ஒப்பந்தத்தை நீடித்துள்ளது மட்ரிட். அதிலும் குறிப்பாக இளம் வீரர் அசென்சியோவுக்கு கூடுதல் முக்கியத்துவத்தை மட்ரிட் வழங்கியுள்ளது. ஏனைய வீரர்களுடனான ஒப்பந்தத்தை 2020, 2021, 2022ஆம் ஆண்டு வரையே மட்ரிட் நீடித்திருந்தது. ஆனால் அசென்சியோவுடனான ஒப்பந்தம் எதிர்வரும் 2023ஆம் ஆண்டு வரை நீடிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Ministry of National Integration and Reconciliation

# தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு

**Request for Proposal (RFP) முன்மொழிவுக்கான கோரிக்கை (RFP)**

**50,000 Brick and Mortar Type Housing Programme for North and East**

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 50,000 நிரந்தர கல்வீடுகளை அமைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம்

**Financing and Construction of 50,000 Permanent Brick and Mortar Type Houses for the Conflict Affected Families in the Northern and Eastern Provinces of Sri Lanka**

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் மோதல்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 50,000 நிரந்தர கல்வீடுகளை நிர்மாணித்தலும் நிதிசுட்டலும்

1. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka intends to construct 50,000 brick and mortar type housing units under contractor-driven modality for the persons affected by conflict in Northern and Eastern Provinces of Sri Lanka by using funds arranged by the bidder on a competitive soft term from reputed Donors or Financing Institutions.

2. The Chairman, Cabinet Appointed Negotiation Committee (CANC), on behalf of Ministry of National Integration and Reconciliation invites sealed Request for Proposals(RFP) from the eligible bidders (national or international orJoint Ventures) for the Construction of 50,000 permanent houses under various packages.This is organized and sliced into number of packages and each package will have 500 housing units. The total number of packages will be 100. A bidder may apply for one or more packages.

3. These houses will be individual housing units with the plinth area of 550 Sq.ftextent per house and should have two bed rooms, living room, verandah, kitchen and toilet facilities.

4. The bidder shall establish a firm commitment of funding from the reputed donors or Funding Agency or Agencies for 100% financing of the relevant package or packages of the project on competitive soft financing arrangements. The Government of the Democratic Socialist Republic of Sri Lanka or its authorized agency will enter into a financing agreement (national / international) with the reputed donor or Funding Agency/Agencies proposed by the successful bidder. The contractor to be employed will be selected in accordance with the criteria set out in the RFP.

5. RFP will be considered through competitive bidding procedure and is open to all eligible bidder who fulfilled the minimum criteria described in the RFP document.

6. The bidder should submit confirmed financing arrangement with soft terms with a firm commitment letter from internationally or locally recognized and credibility rated bank, financial institution or donor acceptable to the Central Bank of Sri Lanka and Ministry of Finance of Sri Lanka.Financing facility for packages for which bids are submitted should be clearly confirmed without any ambiguity by the financing bank, institution or donorand should be supported with detailed Term Sheet. The financing arrangements with soft terms should be in the form of interest, grace period and repayment period.

7. Interested eligible Bidders may obtain further information from Secretary/ Programme Coordinator, Ministry of National Integration and Reconciliation and inspect the RFP documents at the address given below from 9.00 hours to 15.00 hours on working days from 2nd October 2017 to 12th November 2017

   Ministry of National Integration and Reconciliation(2nd Floor)
   No.34, Narahenpita Road, Nawala, Sri Lanka.
   Email address: ministrysec.nir@gmail.com
   Telephone /Facsimile:Telephone : +94-11-2805360 ; Fax : +94-11-2806530.

8. A complete set of RFP documents in English language may be purchased by eligible bidders on submission of a written application on a business letterhead to the address above and upon payment of non- refundable fee of SL Rs. 60,000.00 in cash or Bank draft (acceptable by the Central Bank of Sri Lanka) in favour of Secretary, Ministry of National Integration and Reconciliation from2nd October 2017 to 12th November 2017 from 9.00 a.m to 3.00 p.mon any working day.

   The bidder who wishes to receive the RFP by couriers shall authorize the Ministry to do so.The Ministry will promptly dispatch the hard copy of the documentsby courier serviceon payment of a non-refundable fee but under no circumstances will be held responsible for late delivery or loss of the documents so mailed. An additional non-refundable fee of SL Rs. 20,000.00should be paid for dispatching the documents by courier.

9. All bids must be accompanied by a bid security as set out in the RFP. Proposals shall be submitted in one (01) original and two (02) copies delivered to the address below on or before 2.00 p.m on 13th November 2017.
   "Secretary, Ministry of National Integration and Reconciliation, No.34, Narahenpita Road, Nawala, Sri Lanka"

   The proposals should be submitted under two envelops system as set out in the RFP document. Bids shall be marked on the top left hand corner of the envelop "RFP for 50,000 Housing Programme".

   Bids will be opened immediately after closing of bids.

10. Proposals which are received late will be rejected and returned unopened.The Ministry of National Integration and Reconciliation will not be responsible for any costs or expenses incurred by Bidders in connection with the preparation or delivery of RFP.

11. RFP Documents will be issued from 2nd October 2017

**Chairman, CANC**
**Ministry of National Integration and Reconciliation**
**No. 34, Narahenpita Road, Nawala, Sri Lanka.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 60 ரொஹிங்யர்கள் பரிதாப உயிரிழப்பு



டாக்கா, ஒக். 1

மியன்மார் அரசின் இனச் சுத்திகரிப்பில் இருந்து தப்பித்து அடைக்கலம் கேட்டு பங்களாதேஷ் நோக்கிப் பயணித்த படகொன்று விபத்துக்கு உள்ளானதில், அதில் பயணித்த 60 பேர் உயிரிழந்தனர்.

பௌத்த பேரினவாத நாடான மியன்மார் சிறுபான்மை மக்களான ரொஹிங்யர்களை இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று காலாகாலமாகக் குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த மாதம் இறுதிப் பகுதியில் இருந்து மியன்மார் அரசின் இந்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இதனால் லட்சக் கணக்கான ரொஹிங்யர்கள் அயல் நாடான பங்களாதேஷுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். இதுவரை சுமார் 4 லட்சத்து 50 ஆயிரம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

அவ்வாறு சுமார் 90 பேரை ஏற்றிக்கொண்டு மியன்மாரில் இருந்து பங்களாதேஷ் நோக்கி முன்தினம் சென்ற படகொன்று விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த 60 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)




## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் கருணாநிதி

**(மாவட்ட முன் பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் - முல்லைத்தீவு)**



மலர்வு 06.12.1977 உதிர்வு 29.09.2017

வரணி, கரம்பைக்குறிச்சி மேற்கு, குருக்கள் குடியிருப்பை பிறப்பிடமாகவும், வியாபாரிமூலை, பருத்தித்துறையை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கருணாநிதி 29.09.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் சுப்பிரமணியம் - புவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், ரூபாவின் (ஆசிரியர் - யா/ தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை) பாசமிகு கணவரும், கிருணிகாவின் பாசமிகு தந்தையும், தம்பிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான சின்னாச்சிப்பிள்ளை, வெற்றிவேலு ஆகியோரின் பேரனும், சிவானந்தராசாக் குருக்கள் - யோகேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கருணாகரன் (சமுர்த்தி உத்தியோகத்தர் - வரணி), பாஸ்கரன் (ஆசிரியர் - மணியங்குளம் வித்தியானந்தா), ஸ்ரீகரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கணக்கு உதவியாளர், யாழ். நீதிவான் நீதிமன்றம்), கார்த்திகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவைகள் திணைக்களம் - கைதடி), சரண்யா (பட்டதாரி - யாழ்.பல்கலைக்கழகம்), பாலகரன் ( உரிமையாளர் - ஸ்ரீகருணா மல்ரி சொப்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், அனுஷா, கவிதா (ஆசிரியர் - வ/ பூவரசு ஆரம்ப பாடசாலை), அபிராமி ( கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் - யாழ்ப்பாணம்), சுதர்சன் (முகாமைத்துவ உதவியாளர் - மாவட்ட செயலகம் - யாழ்ப்பாணம்), வதனா, தர்சன் ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம்மா, வைரவநாதன் மற்றும் செவ்வந்திநாதன், சிவசெந்தில்நாதன் (கணக்காளர் - கிழக்கு மாகாண திறைசேரி) ஆகியோரின் மருமகனும், மகாலிங்கசிவம், ஞானேஸ்வரி, காலஞ்சென்ற நாகேஸ்வரி, தில்லையம்பலக்குருக்கள் ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் (வரணி) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தறளப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரம்பைக்குறிச்சி மேற்கு,**
**வரணி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 077 3504**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழக ஆளுநராக புரோகித் நியமனம்

தமிழகத்தின் புதிய ஆளுநராக புரோகித் என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக ஆளுநராக இருந்த ரோசையா ஓய்வு பெற்றதையடுத்து, மராட்டிய மாநில ஆளுநர் வித்யாசாகர் ராவ் ஓராண்டுக்கும்மேலாக தமிழகபொறுப்பு ஆளுநராகச் செயற்பட்டார். இந்த நிலையில், தமிழகத்தின் புதிய ஆளுநராக பன்வாரிலால் புரோகித் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். (ம)



## காணி விற்பனைக்கு

மல்லாகம் சோடாக் கொம்பனி, கிழக்கு ஒழுங்கையில் இரயில் பாதையில் இருந்து மூன்றாவதாக உள்ள 5பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: அ.இராஜேந்திரன்

**077 101 4505**


## இதயத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்

### இதயநாடிகளில் நோய் அன்ஜைனா – மார்பு அடைப்பு

கொழுப்பு படிவதால் நாளங்கள் சுருங்கி சீரான இரத்த ஓட்டத்தைக் குறைக்கிறது. மேலும் இவை மார்புவலி மற்றும் இதயபாதிப்பு ஏற்படுத்தக் கூடியது.

**நெஞ்சடைப்புக்கான காரணிகள்**
புகைத்தல், உயர்இரத்தஅழுத்தம், அதிக கொழுப்புச்சத்து, நீரிழிவு

நெஞ்சுவலி, மார்படைப்பையும் பூரணமாகக் குணப்படுத்தும் எமது ஆயுர் வேதமருத்துவம் உன்னதமானது. நிரூபணமானது




**எங்களால் குணப்படுத்தப்படுகிறது**

- இருதயநோய்
- நோய் எதிர்ப்பு சக்தி
- புற்றுநோய் தணிப்பு
- ஈரல் பாதிப்புக்கள்
- மூட்டு வாதம்
- மூட்டுவலி / முதுகு வலி
- புரோஸ்டேற் பிரச்சினைகள்
- ஒற்றைத் தலைவலி
- புழையழற்சி
- மனஅழுத்தம்
- இருமல் / சளி
- படுக்கைப்புண்கள்
- நாட்பட்ட காயங்கள்
- நீரிழிவு நோய்கள்
- வைரஸ் தொற்றுக்கள்
- பாலியல் குறைபாடு
- மண்குஷ்டம்

FAIR PHARMA (PVT) LTD
செலிங்கோ ஹவுஸ், 10ஆம் மாடி, கிழக்கு.
இல.69 ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு - 01
Website : www.ayurveda.lk
E-mail : fairpharmasrilanka@yahoo.com

**Hotline: 077 755 5600 / 077770 8310/ 077 770 8330**
**Office: 011 438 8200 / 4 388 100/ 4 388 101 /4 388 102**

APPROVED BY DEPARTMENT OF AYURVEDA,
ஆயுர்வேத மருத்துவசபை. BIO & ISO 9001:2008
அத்தாட்சிப்படுத்தப்பட்ட நிறுவனம்.

## HOTEL விற்பனைக்கு

யாழ் நகர் சுண்டுக்குழியில் ஐரோப்பிய பாணியில் ஐரோப்பிய கட்டடக் கலைஞரால் 6 பரப்பு 5 குளி அளவுள்ள காணியில் வடிவமைக்கப்பட்ட

**HOTEL, COTTAGE + RESTAURANT** (17 அறைகள்)

வாகனத் தரிப்பிட வசதி

மற்றும் அனைத்து உபகரணங்களுடன் விற்பனைக்கு உண்டு.

**077 783 4024, 0044 7503 098 204**

## உடனடி விற்பனைக்கு

1. அரியாலை, கண்டி வீதியில் 3 பரப்புக்காணி
2. அரியாலை குசவன்மார் வீதியில் 10பரப்பு, கிணறு, தென்னை மரங்களுடன்.
3. கிழக்கு அரியாலை, ஐயனார் கோயில் வீதியில் 10 பரப்பு
4 கைதடி பிள்ளையார் கோயிலுக்கு எதிரில் 10 பரப்பு
5. அரியாலை ஈச்சங்காடு, ஏ9 வீதிக்கு அருகில் 105 பரப்புக்கு மேற்பட்ட காணி, தென்னை வளர்க்கவோ, Hotel கட்டவோ ஏதுவானது.

**076 973 8663** -(08.10.2017 வரை இந்த இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்)
**021 222 6309**

## விற்பனைக்கு உண்டு

AC, TV.(View Sonic) குளிர்சாதனப்பெட்டி (LG) , அலுமாரி, கட்டில், மோட்டார் சைக்கிள், பிளசர் - VMXXXX, TVS ஸ்கூட்டி ஸ்ரிக் - VW XXXX மின்விசிறி, போட்டோ கொப்பி இயந்திரம், கடையில் பாவித்த அலுமாரிகள் மேசை, கதிரை லைட் போட்டுகள் 2 அயன் சேவ் என்பன விற்பனைக்கு உண்டு.

கந்தர்மடம், யாழ்ப்பாணம். **076 851 4296**

## டாஸ் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்துக்கு (Land Cruiser) சாரதிகள் தேவை.

தகுதிகள்:-
✓வயதெல்லை 45 இற்குள் ✓செல்லுபடியாகும் பாரவூர்தி சாரதி அனுமதிப்பத்திரம் ✓குறைந்தது 3 வருட அனுபவம்
✓பொறுப்பாகவும் கடமையுணர்வுடன் செயல்படுவாராகவும் இருத்தல் வேண்டும்.

தகுதிக்கேற்ப ஊதியம் நிர்ணயிக்கப்படும்

DASH
டாஸ் கண்ணிவெடியகற்றல்
இல.32, செல்வா வீதி, ஆனந்தபுரம், கிளிநொச்சி.
**021 320 7784, 072 727 2139**

## விற்பனைக்கு

ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பெரிய ட்ரக்டர் (KUBOTA WITH ROTARY) சிறிய ட்ரக்டர், சீமெந்துக்கலவை இயந்திரம், நெல் அறுவடை இயந்திரம், ஜெனரேட்டர்கள் (2kw, 3kw, 25kw, 33kw, 36 kw, 40kw) Boat Engines மலிவான விலைக்கு விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **076 689 1791**

## பகுதிநேர வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை நாடி நிற்போருக்கு காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 50வருடங்களாகச் சேவையாற்றி வரும் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்ற வாய்ப்பு.

- 1 வாரப் பயிற்சிக் காலத்தையுடையது.
- பயிற்சி முடிவில் தொழில் தகைமை தொடர் பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.
- பணி நிலையங்கள்:

**யாழ்ப்பாணம், நெல்லியடி.**

### அடிப்படைத் தகைமைகள்

- G.C.E (O/L) பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாடங் களில் சித்தி.
- 18 - 55 வயதுக்குட்பட்டவர்களாக இருத்தல் வேண் டும்.

தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையுடன் (BIO DATA) விண்ணப்பங்களை 20.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல: 5545**
**C/O உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# Study Abroad Day in Jaffna

**Australia, New Zealand** மற்றும் **Malaysia**
ஆகிய நாடுகளில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப உயர் கல்வியை பெறுங்கள்.

**14th October | 9.30 am - 3.00 pm**
**Tilko Jaffna City Hotel**



**Mahalingam Thinesh**
Master of IT - Deakin University,
Graduate of University of Jaffna

“நான் எனது மேற்படிப்புக் கற்கையை ஆஸ்ரேலியாவில் தேர்ந்தெடுத்தமைக்கான காரணங்கள், அதன் மிகச் சிறந்த கல்வி முறை, உலகின் அதிஉன்னத வாழ்க்கை முறை, மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட கலாசார பின்னணி உடைய மாணவர்களுடன் பழகும் வாய்ப்பு என்பனவாகும். எனது பல்கலைக்கழக மற்றும் விசா அனுமதியைப் பெறும் வழிமுறைகளையும் உதவிகளையும் வழங்கிய Edlocate (Pvt) Ltd இன் யாழ்ப்பாண அலுவலகத்துக்கு எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றேன்.”

- **FREE** information on 65 Universities & Institutions
- Scholarships & **FREE** Application processing*
- Australia , New Zealand அல்லது Malaysia ஆகிய நாடுகளில் கற்கை நெறியை தொடர்வதற்கு மிகப்பெரியளவில் பணம் தேவைப்படாது என்பதை தெரியப்படுத்துவோம்
- மாணவர் விசாவிற்கான அடிப்படை தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்தல் மற்றும் post study வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பான தகவல்களை வழங்குவோம்
- Australia | New Zealand ஆகிய நாடுகளில் குடும்பத்தினர் / நண்பர்கள் இருந்தால் உங்களது விசாவை பெற்றுகொள்வதற்காக அவர்களிடமிருந்து எவ்வாறான உதவிகளை பெறமுடியும் என தெரியப்படுத்துவோம்
- **IELTS** coaching **FREE** of charge*

Entrance **FREE**

Study options : **Foundation, Diploma, Bachelor's & Postgraduate**

**FOR REGISTRATIONS CALL 021 5 700 750**

* Conditions apply

edlocate — Reach Light Beyond Borders — 17 years of excellence
www.edlocate.lk
200, Sivan Pannai Road, Jaffna
E- jaffna1@edlocate.lk
Follow Us On

ECHOSMS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

# செபமாலைத்தாசர், செபமாலைக்கன்னியர் சபைகளின் பெருவிழா



இம்மாதம் 7ஆம் திகதி செபமாலைக் கன்னியர் தியான யோக துறவுச் சபையினர் தமது சபையின் பெரு விழாவைக் கொண்டாடுகின்றனர். அந்தவகையிலே அவர்களின் வாழ்வையும் பணியையும் பற்றியதாக இவ்வாக்கம் பேசுகிறது.

**மறைந்த செப தப தியான வாழ்வு வாழ்பவர்கள்**

பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரை நிறுவுனராகவும் திருக்குடும்ப சபை அருட்சகோதரி ஜான் மேரியை துணை நிறுவுனராகவும் கொண்ட செபமாலைக் கன்னியர் சபையினர், உயர்ந்த நான்கு மதில்களின் உள்ளே மறைந்த செப தப தியான வாழ்வு வாழ்கின்றனர். 'மௌன சபையினர்' என அழைக்கப்படும். இவர்கள் தம் வாழ்வில் அவசர தேவைக்காகவன்றி கதைக்காமல் மௌனமாகவும், வெளி உலகுடன் எந்தத் தொடர்பு இன்றியும் வாழ்ந்து செபத்திலும் தம் பணியிலும் ஈடுபடுகின்றனர். தமது குடும்பத்தவரின் இறப்பு நிகழ்வில் மட்டும் கலந்து கொள்வார்கள். இறைச்சியை முற்றாக தவிர்த்து வாரத்தின் மூன்று தினங்கள் மட்டும் மீன் உணவை உட்கொள்வர். மரக்கறி உணவே இவர்களின் பொதுவான உணவு திருவழிபாட்டுப் பொருள்களைத் தயாரிப்பதில் கிடைக்கப்பெறும் உழைப்பின் ஊதியத்தில் தினம் வாழ்பவர்கள். திருப்பலி பூசையில் பயன்படுத்தப்படும் ஒஸ்தி மற்றும் வைன், திருப்பலி ஆடைகள் என்பவற்றை இவர்கள் தயாரிக்கின்றனர்.

தோலகட்டி வைன், தோலகட்டி நெல்லிரசம் போன்ற பானங்கள் எல்லாவற்றிற்கும் செபமாலை தாசர் மற்றும் செபமாலை கன்னியர் சபையினரே முன்னோடிகள். தோலகட்டி என்ற பெயர் கொண்ட பானங்களின் உண்மையான சொந்தக்காரர் இவர்களே. தோலகட்டி என்ற பெயரை தமது பானங்களின் பெயருடன் ஒட்டிக்கொண்டால் விற்பனையை அதிகரிக்கலாம் என்ற சிந்தனையின் நேர் வழியற்ற குறுக்கு வழி உத்தியை இன்று பலர் கற்றுக்கொண்டு விட்டனர்.

**இரக்கத்தின் இடைநிலையாளராக நற்கருணை ஆண்டவர் முன் செபிப்பவர்கள்**

இரக்கத்தின் இடைநிலையாளராக நற்கருணை ஆண்டவர் முன் 24 மணிநேரமும் முழந்தாட்படியிட்டு இடைவிடாது உலகிற்காகவும், செபிக்கும்படி வேண்டுவோருக்காகவும் வழிபாட்டில் ஈடுபடுவர். செப உதவி வேண்டுவோர் இவர்களிடம் தொலைபேசி மூலமாகவோ தபால், மூலமாகவோ தொடர்பு கொண்டு தமது தேவையினை தெரிவித்தால் இறைவரம் வேண்டி செபிக்க ஆயத்தமாக உள்ளனர். இந்தியா வரை பரந்துள்ள இச்சபையினர் செபம், தபம், கடின உழைப்பு என வாழ்ந்து வருகின்றனர். 6 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிர்வாக அமைப்பை தெரிவு செய்யும் 9ஆவது அமர்வு இம்மாதம் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. 'செபமாலை தியான வாழ்வையும் பணியையும் மீண்டும் உயிர் ஊட்டம் பெறச்செய்தல்' என்னும் கருப்பொருளில் இந்த அமர்வு இடம்பெறவுள்ளது.

**புனிதர் பட்டநிலையை பெற்ற பி.ஏ.தோமஸ் அ.ம.தி. அடிகளார்**

பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் முதலில் அருளாளர் நிலையையும் தொடர்ந்து புனிதர் பட்டத்தையும் பெற்றுக் கொள்வதற்கான ஆயத்தப்பணிகள் அடங்கிய ஆவணங்கள் யாழ். ஆயரால் திருத்தந்தையின் கொழும்பில் உள்ள பிரதிநிதி மூலமாக வத்திக்கானுக்கு அனுப்பப்பட்டது. அந்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் இறையடியார் நிலையை அடைந்துள்ளார். இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் முதலில் அருளாளர் நிலையையும் தொடர்ந்து புனிதர் பட்டத்தையும் பெற்றுக் கொள்ளவேண்டுமென செபிக்க ஏராளமான பக்தர்கள் அருள் ஆச்சிரமத்தில் உள்ள இவரின் கல்லறைக்கு வந்து வேண்டுதல் செய்கிறார்கள். இவரின் புனிதர் பட்டத்திற்காக செபிக்கும் செப அட்டையை பக்தர்கள் அருள் ஆச்சிரமத்தில் பெற்றுச் செபிக்க முடியும் எனவும் இவர் பெயரில் நடைபெறுகின்ற புதுமைகளை யாழ் கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் ஆதாரங்களுடன் தெரிவிக்க அழைக்கப்படுகின்றனர் எனவும் இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் புனிதர் பட்ட பணிகளை மேற்கொள்ளும் ஏ.எம். ஸ்ரிபன் அடிகளார் தெரிவித்துள்ளார்.

உரோமாபுரியில் இருந்து றோலன் ஜக் அ.ம.தி. அடிகளார் தற்போது யாழ் நகர் வந்து இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரின் வீரமான புண்ணியங்கள் தொடர்பான சாட்சியங்களையும் புனிதர் பட்டம் தொடர்பான ஏனைய பணிகளையும் மேற்கொண்டு வருகிறார். இறையடியார் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளாரின் வாழ்வையும் பணியையும் தெரிந்தவர்கள் மற்றும் அவருடன் நேரடியாக தொடர்பு கொண்டவர்கள் அவரின் வீரமான புண்ணியங்கள் தொடர்பான சாட்சியங்களை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இறையடியாராக பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார்**

எலும்பும் தோலுமாக நலிந்து மெலிந்த தோற்றத்துடன் ஒரே ஒருசுவாசப்பையுடன்பிறந்து சுவாசிக்கவேதிணறிக்கொண்டு ஒரு சில மணி நேரமே உயிர் வாழ்வார் எனக்கருதப்பட்டார். ஆனாலும் அன்றைய தினமே திருமுழுக்குப் பெற்று 78 ஆண்டுகள் (1886-1964) வாழ்ந்தார். முதல் சுதேச தியான யோக செபமாலைத்தாசர் சபையை குருக்களுக்கும், செபமாலைக் கன்னியர்களுக்கும் நிறுவி ஆசியாவின் ஜோதி என அழைக்கப்படுபவர் யாழ் பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் தவத்திரு பி.ஏ. தோமஸ் அடிகளார் திகழ்கிறார். பிறப்பிலிருந்தே நோயாளியான இவர் அன்றாடம் நோயோடு போராட வேண்டிய ஒருவராகவே இருந்தார். ஆனால் எவருக்குமே பாரமாகாமல் எந்தப் பணியிலுமே குறை விடாமல் இறுதி வரை பயணித்தார் என்றே அறிய வருகிறது.

மெலிந்த உடல், சாந்தமான தோற்றம், வட்டக் கண்ணாடி, தாடி நிறைய வளர்ந்த முகம், நிமிர்ந்த பார்வை, கையினில் செபமாலை, நிதானமான நடை, அன்பான பேச்சு என்பன எல்லாம் இவரை ஒரு முனிவராகவே இனம் காட்டின. திரு திருமதி பஸ்தியாம்பிள்ளை லூசியா தம்பதிகளின், முதல் ஆண் குழந்தை பிறந்த உடன் இறந்து இரண்டாவது குழந்தையான அந்தோனிப்பிள்ளை என்ற நாமம் கொண்ட தோமஸ் அடிகளாரின் நிலையும் கவலைக்கிடமாய் இருந்தமையால் பெரும் அங்கலாய்ப்பே நிலவியது. ஆனால் இறைவன் ஆறு ஆண்கள் கொண்ட ஏழு குழந்தைகளால் அக் குடும்பத்தை ஆசீர்வதித்ததோடு உயிர்வாழ மாட்டார் எனக்கருதப்பட்டவரை பஸ்தியாம்பிள்ளை அந்தோனிப்பிள்ளை தோமஸ் அமதி அடிகளார் என்ற நிலைக்கு உயர்த்தி தம் கருவியாக பயன்படுத்தியுள்ளார்.

> பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் முதலில் அருளாளர் நிலையையும் தொடர்ந்து புனிதர் பட்டத்தையும் பெற்றுக் கொள்வதற்கான ஆயத்தப் பணிகள் அடங்கிய ஆவணங்கள் யாழ். ஆயரால் திருத்தந்தையின் கொழும்பில் உள்ள பிரதிநிதி மூலமாக வத்திக்கானுக்கு அனுப்பப் பட்டது. அந்த விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் இறையடியார் நிலையை அடைந்துள்ளார்.

ஆரம்பக் கல்வி புனித சாள்ஸ் ஆரம்பபள்ளி (1893 ஜீலை 20), புனித பத்திரிசியார் கல்லூரி, புனித மாட்டீனார் குருமடம் (1904), சீனியர் கேம்பிறிச் பரீட்சையில் தேர்ச்சி (1904), அரசதுறை எழுத்துப் பரீட்சையில் தேர்ச்சி (1904), நவசன்னியாசம் கொழும்பு அலோசியஸ் நவதுறவு இல்லம் (1907), துறவற அர்ப்பண வார்த்தைப்பாடு (1910 பெப்ரவரி 02), குருப்பட்டம் (1912 ஜனவரி 06), அந்தோனிப்பிள்ளை என்னும் பெயர் தோமஸ் என மாற்றம், செபமாலைத்தாசர் தியானயோக துறவுசபை தோலகட்டியில் நிறுவல் (1928 பெப்ரவரி 02), கன்னியர்க்கான செபமாலைக் கன்னியர் சபை வசாவிளானில் நிறுவல் (1948 செப்ரெம்பர்8), குருத்துவப் பொன்விழா (1962), இறப்பு (1964 ஜனவரி 26) என இவரின் வாழ்வும் பணியும் 78 ஆண்டுகள் (1886 1964) வேகமாக முடிந்தன.




**ஆசியாவில் முதல் தியான யோக துறவு சபை**

குருப்பட்டத்தின் பின்னர் புனித பத்திரிசியார் கல்லூரியில் இந்து மாணவர்களுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்ட தோமஸ் அடிகளாருக்கும், புனித பத்திரிசியார் கல்லூரியில் கல்விப் பணியாற்றிக் கொண்டிருந்த பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த ஜே.ஏ.கியோமர் அ.ம.தி அடிகளாருக்கும் இடையே நெருங்கிய நட்பு ஏற்பட்டது. அப்போது இருவரும் தியான யோக துறவு சபைகள் ஆசியாவில் தோற்றம் பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் என்ற எண்ணத்தைக் கொண்டிருந்தனர். ஜே.ஏ.கியோமர் அமதி அடிகளார் யாழ். ஆயராக 1924 ஜனவரி மாதம் நியமிக்கப்பட்டார். 1926 பெப்ரவரி 28 ஆம் திகதி பத்திநாதர் பாப்பரசர் திருச்சபையின் பணிகள் என்ற சுற்று மடலில் கீழைத்தேய நாடுகளில் நடைபெறும் மனம் திரும்பல் பணிக்கு செப தப துறவு கொண்ட துறவற சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தார்.

ஆயர் ஜே.ஏ.கியோ மர் ஆண்டகை தோமஸ் அடிகளாருடன் தாம் கொண்டிருந்த எண்ணப்பாட்டை மனதில் கொண்டு இப்பணியை தோமஸ் அடிகளாரிடமே ஒப்படைத்தார்.

யாழ். பாண்டியன்தாழ்வு மண்ணின் மைந்தர் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் (1886 1964) முதலில் செபமாலைத்தாசர் தியானயோக துறவுசபையை (1928.02.02) தோலகட்டியில் நிறுவினார். பின்னர் கன்னியர்க்கான செபமாலைக் கன்னியர் தியானயோக துறவுசபையை சபையை (1948.09.08) வசாவிளானில் நிறுவினார். இவையே ஆசியாவின் முதல் தியான யோக துறவற சபைகள் ஆகும்.

**செபமாலைக் கன்னியர் தியான யோக துறவுசபை**

இவ்வாக்கம் செபமாலைக் கன்னியர் தியானயோக துறவுச் சபை பற்றியே குறிப்பாகப் பேசுகிறது. முதலில் செபமாலைத்தாசர் தியானயோக துறவுச் சபையை (1928.02.02) தோலகட்டியில் நிறுவிய பின்னர் பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் செபமாலைக் கன்னியர் தியானயோக துறவுசபையை நிறுவப் பல முறை முயன்றுள்ளார். 1928 ஆம் ஆண்டு முதற் தடவையும், 1935ஆம் ஆண்டு இரண்டாம் தடவையும், 1936ஆம் ஆண்டு மூன்றாம் தடவையும் முயன்று தோற்றுப் போனாலும் அவர் மனம் தளரவில்லை.

பி.ஏ.தோமஸ் அ.ம.தி அடிகளார் செபமாலைக் கன்னியர் தியானயோக துறவுசபையை நிறுவுவதிற் தோல்வி கண்ட இரு விடயங்களை இனங்கண்டார். அவை அவர்களுக்கு பொருத்தமான ஒரு தங்குமிடம் இல்லாமை. மற்றையது அவர்களை நெறிப்படுத்தி வழிகாட்ட ஒரு தகுதியான தாயார் இல்லாமை என்பனவாகும். வசாவிளான் கிராமத்தை சேர்ந்த கந்தையா என்பவரால் கன்னியர் மடத்திற்கென நன்கொடையாகக் கொடுக்கப்பட்ட நிலத்துண்டில் அமைக்கப்பட்ட சிறிய கட்டடம் 'புனித அக்னெஸ் கன்னியர் மடம்' எனப் பெயர் பெற்றது.

1945 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் லயனல் பொன்சேகா என்பவர் தோலகட்டிக்கு வருகை தந்து புனித அக்னெஸ் கன்னியர் மடத்தின் நிலையை பார்வையிட்டு தனது உறவினர் நண்பர்களின் உதவியுடன் நிலம் வாங்கி கட்டடமும் அமைக்க உதவினார். செபமாலைக் கன்னியர் தியானயோக துறவுசபையை நெறிப்படுத்தி வழிகாட்ட ஒரு தகுதியான தாயாரைப் பெற யாழ் ஆயர் திருக்குடும்ப கன்னியர் சபையை நாடினார்.

தொடர்ந்து நடந்த நிகழ்வுகளையும் இம்மாதம் 7ஆம் திகதியின் பின்பாக இடம்பெறவுள்ள நிர்வாக அமைப்பை தெரிவு செய்யும் 9ஆவது அமர்வு பற்றியும் அடுத்த வாரம் நோக்குவோம்.

'செபமாலை தியான வாழ்வையும் பணியையும் மீண்டும் உயிர் ஊட்டம் பெறச்செய்தல்' என்னும் கருப்பொருளில் இடம்பெறவுள்ள 9 ஆவது அமர்வு நிகழ்வுகள் சிறப்புற அமைய இறைவரம் வேண்டுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்

01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்
ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!
Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்) ரகசியம் பாதுகாக்கப்படும்
றெங்கசாமி காளியம்மா
மாத்தளை வீதி, கண்டி.
077 327 2302 / 076 466 4153 / 075 509 5887

உடல் எடை குறைய வேண்டுமா ?
☆ உடல் எடை, மார்பு, வயிறு குறைக்க வேண்டுமா? மேலும்
☆ தலைமுடி நீளமாகவளர வேண்டுமா?
☆ தலைமுடி வளர, பேன், பொடுகு தொல்லை நீக்கும் எண்ணை
☆ கருமை தோற்றம் நீங்க வேண்டுமா?
☆ முகத்தில் உள்ள கருமை, உதட்டு கருமை, கழுத்து முதுகு கருமை, பருக்கள், தேவையற்ற ரோமம், காய்கள் (பாலுண்ணி), மூக்கில் உள்ள கொழுப்பு நீக்கும் கிறீம் என்பன பெற்றுக்கொள்ள
100% பக்க விளைவுகளற்ற ஆயுள்வேத ஔடதம் (சூரிசை, எண்ணெய், கிறீம், டொனிக்) பாவித்து 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை பெறுவீர்கள்.
077 210 6155
பதிவு இல. 16168 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள் சீட்டிழுப்பு வாரம் 709
சீட்டிழுப்பு திகதி 30.09.2017 நீலம்
Z 02 12 30 33
சுப்பர் ஜக்பொட் ரூ. 40, 759, 200/=
03 21 58 65
ஊதா நிற டிக்கட்டுகள் 2017.10.02 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2936 திகதி 30.09.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
14 41 46 55 M
போனஸ் இல. 66
திங்கட்கிழமை ஜக்பொட் 44, 184, 535/-
18 24 68 70
நீல நிற டிக்கட்டுக்கள் 2017.10.02 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## மரண அறிவித்தல்



### சுப்பையா சிவநேசன்

நவாலியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சிவநேசன் (29.09.2017) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா சரஸ்வதி தம்பதியரின் அன்புமகனும் சகுந்தலாதேவியின் (ஆசிரியை சி.சீ.த.க. பாடசாலை) அன்புக்கணவரும் ரஞ்சனா (ஆஸ்திரேலியா), சிவகுமார் (கனடா), காஞ்சனா (ஏழாலை) ,சாதனா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச்சகோதரனும் டிலக்சனா, திவாகர், சசிராஜ், தர்சனா ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 8736 734

வாடகைக்குண்டு
பல்கலைக்கழகத்துக்கு அருகில் அறை கள்வாடகைக்கு. பெண்களுக்குமட்டும்.
077 915 1247, 076 838 3672

விற்பனை
டவுன் ஏசி 250 XXXX வான் 5 டோர் லொஸ்டோ கைறுப் மொடல் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு - 077 917 7281

Kapil Electro Spot
இங்கு சகலவிதமான LED Panal Board வேலைகளை செய்து பெற்றுக்கொள்ளலாம். திருத்தவேலைகளும் செய்து கொடுக்கப்படும்.
075 071 5264 நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்

மணமகள் தேவை
யாழ். இந்து கௌரவகுடும்பம் 1985 உத்தராடம் Civil Engineer Moratuwa University PHD Australia மூலம் தற்போது சிங்கப்பூரில் தொழில் புரியும் மணமகனுக்கு பெற்றோர் Doctor, Engineer, Dentist, Accountant மணமகளைத் தேடுகின்றனர். பாவம் 60, மகரராசி லக்கினத்தில் செவ்வாய் ராகு.
தொடர்பு : 075 712 8086

Kapil Regifoam Spot
அனைத்து வகையான றெஜிபோம் வேலைகளும் சிறந்த முறையில் செய்து கொடுக்கப்படும்.
Regifoam Letters
Regifoam Cake Design's
075 0715264. நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

விற்பனைக்கு
மானிப்பாய் தெற்கு, புளியடி சந்தை ஒழுங்கையில் 03 பரப்புக்காணி உடனடி விற்பனைக்கு உண்டு. பரப்பு 6.5 லட்சம்
தொடர்பு : 077 4787 523

தேவை
* கல்லுடைக்கும் தொழிற்சாலைக்கு காவலாளி தேவை
* இரும்பு கடைக்கு வேலைஆட்கள் தேவை (ஆண்) தூர இடத்தில் இருந்து வருவோருக்கு தங்குமிடம் உண்டு.
* உழவு இயந்திரத்திற்கு சாரதி தேவை.
தொடர்புகளுக்கு - 077 520 6856

சீட்டிழுப்பு வாரம்: 31
வர்ணம்: இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.09.30
அத கோடிபதி
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 58,697,970/-
வெற்றி இலக்கங்கள் 03 39 45 62 N
18 24 31 48

உத்தியோகபூர்வ முடிவுகள்
සංවර්ධන වාසනාව
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 079
சீட்டிழுப்பு திகதி 30.09.2017 இளம்சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 12 17 35 44
சுப்பர் இலக்கம் 04
அதிர்ஷ்ட மாதம் ஜூன்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 17, 460, 574/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3, 951, 218/=
அடுத்த ஜக்பொட் ரூ. 3, 213, 564/=
இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள் 31 36 41 65
2017.10.05 ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு 06 12 1977



உதிர்வு 29 09 2017

எமது கல்லூரிஸ்தாபகரும் தமிழ் ஆசானும் ஆகிய

### சுப்பிரமணியம் கருணாநிதி

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆறாத பிரிவில்
கல்லூரிச் சமூகம்,
கலை வர்த்தக கல்லூரி, வரணி

முன்பள்ளி வேலைவாய்ப்பு
● முன்பள்ளி ஆங்கில ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள், பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது.)
● முன்பள்ளி தமிழ் ஆசிரியர் (முன்பள்ளி Diploma முடித்தவர்கள், பழக விரும்புபவர்கள் விரும்பத்தக்கது.)
● முன்பள்ளி மேற்பார்வையாளர் ( முன்பள்ளி அனுபவமுள்ளவர்.)
● சிங்கள ஆசிரியர் (Full Time, Part Time.)
● முன்பள்ளி உதவியாளர்
● கணக்காய்வாளர் (Ms Office கற்கைநெறி அனுபவமுள்ளவர்கள்.)
● முன்பள்ளி இணைப்பாளர் ( முன்பள்ளி அனுபவமுள்ளவர்.)
நேர்முகத் தேர்வு நடைபெறும் திகதி:- 02.10.2017 திங்கட்கிழமை காலை 9.00மணி முதல் நண்பகல் 12.00மணி வரை நடைபெறும்.
• EPF,ETF என்பன வழங்கப்படும்.
நேர்முகத்தேர்வுக்கு சமூகமளிக்கும் போது சுயவிபரக்கோவையும் கல்வித் தகமைச் சான்றிதழ்களும் கொண்டுவருதல் வேண்டும்.
நேர்முகத்தேர்வுக்குரிய இடம்:- Little Masters' Montesoori, மல்லாகம் தெற்கு மல்லாகம். (காங்கேயன் பேக்கரிக்கு முன்பாக)
தொடர்புகளுக்கு:- 0777474741

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



03.09.2017 அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் சின்னத்தம்பி முத்துலிங்கம்

[ஓய்வுபெற்ற ஆசிரியர்]

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (01.10.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03.10.2017 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பை மனமுவந்து தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

தோற்றம் 1931.11.01 மறைவு 03.09.2017

மடத்தடி லேன்,
மானிப்பாய்.
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வட - கிழக்கு...

கள் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண தலைமை அலுவலகத்தில், அந்தக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆகியோரை நேற்றுமாலை சந்தித்துக் கலந்துரையாடியபோதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் உள்ள மலையக மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் இதன்போது எடுத்துரைக்கப்பட்டுள்ளது. வீட்டுத் திட்டம் வழங்கப்படுவதில் காட்டப்படும் பாரபட்சம், காணி பெர்மிட் பெற்றுக் கொள்வதில் உள்ள தடங்கல்கள் குறித்தும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இவற்றைத் தீர்த்து வைப்பதற்கு உதவவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"மலையக மக்களுக்கு தேர்தலின்போது சரியான பிரதிநிதித்துவம் கிடைக்கவில்லை. ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் ரெலோ ஆகியவை, தமது கட்சிக்கு மலையக மக்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக மலையக மக்கள் சார்ந்த பிரதிநிதிகளைத் தேர்தலில் நிறுத்துகின்றார்கள். மலையக மக்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்கவேண்டும் என்பதற்காக அந்தக் கட்சிகள் தேர்தலில் நிறுத்தவில்லை" என்றும் மலையக மக்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் குறிப்பிட்டுள்ளனர்.

எதிர்காலத்தில் தேர்தல்களின்போது மலையக மக்களுக்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி பிரதிநித்துவம் வழங்க வேண்டும் என்று கோரியுள்ளனர். வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.பி.நடராஜ், இந்தக் குழுவுக்கு தலைமை தாங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-5)

## வாக்காளர்...

பட்டியல் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி (நேற்று) வெளியிடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருந்தது. மூன்று மாகாண சபைகளின் ஆட்சிக் காலம் இந்த வாரத்துடன் நிறைவடைந்துள்ளதால் அவற்றுக்கான தேர்தல் நடத்த வேண்டியிருந்ததால், செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதி (நேற்று) வாக்காளர் பெயர்ப் பட்டியலை வெளியிடத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்திருந்தது.

இருப்பினும் மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது. இதனையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழு, எதிர்வரும் 12ஆம் திகதி நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியலை வெளியிட தீர்மானித்துள்ளது. இந்த வாக்காளர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையிலேயே, மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் என்பன நடைபெறவுள்ளன. (வ-5)

## அலவாங்கு...

இந்திராணி (வயது - 65) என்பவரே உயிரிழந்தார்.

"வளர்ப்பு மாட்டை மேய்ச்சலுக்குக் கொண்டு சென்று அலவாங்கு ஒன்றை நிலத்தில் இறுக்கி அதில் அவர் மாட்டைக் கட்டியுள்ளார். அவர் தனது மாட்டை பிற்பகல் அவிழ்க்கச் சென்றிருந்தார். மாட்டை அவர் அவிழ்த்துக் கொண்டிருக்கும்போது மாடு இழுத்துள்ளது. அதனால் அலவாங்கு பிடுங்கப்பட்டு குடும்பப் பெண்ணின் நெஞ்சில் பாய்ந்துள்ளது.

நெஞ்சுப் பகுதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அவர் உடனடியாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மேலதிக மருத்துவத்துக்காக அவர் வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு மருத்துவம் பயனளிக்காது அவர் உயிரிழந்துள்ளார்" என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுள்ளனர். (வ-4,ரி3)

## மரக்கட்டை...

(வயது - 51) என்பவரே உயிரிழந்தார். இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

"அவர் நேற்றுமுன்தினம் தனது வீட்டுக்கு அருகிலுள்ள காணிக்குள் தனது வளர்ப்பு ஆடு ஒன்றை மேய்ச்சலுக்குக் கட்டக் கொண்டு சென்றுள்ளார்.


நிலத்தில் அவர் கட்டையடித்துக் கட்டிக்கொண்டிருந்தபோது அவர் நிலைதடுமாறி அந்தக் கட்டைக்கு மேலே சரிந்துள்ளார். அதனால் அவருடைய நெஞ்சில் அந்தக் கட்டை ஏறியுள்ளது" என்று அவரது இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த அவர் கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக மருத்துவத்துக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அதற்கு முன்னரே அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ சோதனையில் தெரியவந்தது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி. ந.பிறேம்குமார் மற்றும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (வ-4,8ரி1)

## பாடசாலை...

யக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், மற்றொரு விருந்தினராகப் பாடசாலையின் பழைய மாணவரும் வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சி உறுப்பினருமான


Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs
Northern Provincial Council
29.09.2017
A.Santhaseelan
Senior Assistant Secretary
Ministry of Education, Cultural Affairs, Sports & Youth Affairs, Northern Province.

வை.தவநாதனும் கலந்து கொள்வுள்ளனர்.

பாடசாலையின் வைர விழாவுக்கான ஏற்பாடுகள் நிறைவுற்றிருந்த நிலையில், நிகழ்வை பிற்போடுமாறும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலருக்குப் பதிலாக, மேலதிகச் செயலர் ஒப்பமிட்டு பாடசாலை அதிபருக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்தக் கடிதம் அனுப்பப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள் ளது. இந்த நிகழ்வு தொடர்பில் பாடசாலையுடன் தொடர்புடைய தரப்புக்களால் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதனடிப்படையிலேயே நிகழ்வை ஒத்திவைக்கப் பணிப்பதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடிதம் கிடைக்கப்பெற்ற பின்னர் பாடசாலை அதிபர், பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் உள்ளிட்ட பாடசாலையுடன் தொடர்புடைய தரப்பினர் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனை நேரில் சந்திப்பதற்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளனர். காலை 10.30 மணிக்குச் சென்ற அவர்களை இரண்டு மணி நேரத்தின் பின்னர் கல்வி அமைச்சர் சந்தித்துள்ளார். பாடசாலை அதிபரை மாத்திரமே கல்வி அமைச்சர் சந்தித்துப் பேசியுள்ளார். பாடசாலையின் அதிபர், வடக்கு மாகாண கல்வி அமைச்சருடன் பல்கலைக் கழகத்தில் ஒன்றாகப் படித்தவர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு கல்வி அமைச்சரான தன்னைப் புறக்கணித்து, நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனை நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக அழைத்தமையே நிகழ்வைப் பிற்போடும் பணிப்பை அவர் பிறப்பிக்க காரணம் என்பதை, இந்தச் சந்திப்பின் ஊடாக உணர முடிந்ததாகப் பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

பாடசாலை நிகழ்வுகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைக்க வேண்டாம் என்று அறிவுறுத்தல் ஏதாவது வழங்கியுள்ளீர்களா? என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனிடம் கேட்டபோது, "அவ்வாறு எந்த அறிவுறுத்தலும் பிறப்பிக்கப்படவில்லை. அப்படி ஏதாவது அறிவுறுத்தல் வழங்கியிருந்தால் அவர்களை அதனைக் காட்டுங்கள்" என்றார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் நிகழ்வைப்பிற்போடுமாறு தெரிவித்துள்ளபோதிலும், திட்டமிட்டபடி நாளை நிகழ்வை நடத்துவது என்பதில் பாடசாலைச் சமூகம் உறுதியாக இருப்பதாகத் தெரியவருகின்றது. (வ-5,101)

## தேரர்களை...

முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் எடுத்துரைத்தார்.

இரண்டு நாள் பயணமாக வடக்குக்கு வருகை தந்துள்ள முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் சகோதரரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ச நேற்றையதினம் நல்லை ஆதீன குரு முதல்வர் ஶ்ரீலஶ்ரீ சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகளைச் சந்தித்தார். இதன்போதே குரு முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"நாட்டில் ஏற்படவுள்ள அரசியல் தீர்வுக்கு எமது தரப்பில் இருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. பௌத்த தேரர்களின் எதிர்ப்பை தென்னிலங்கை அரசியல் தலைவர்களே சரிசெய்ய வேண்டும். அதேநேரம் அரச தலைவருடன் பேசி தீர்வு காணவேண்டியதும் உங்களின் பொறுப்பு. தற்போதைய அரச தலைவரும் உங்களின் கட்சியில் இருந்தே அரசியல் செய்தார்.

இவற்றின் அடிப்படையில் நீங்களே பேசி ஓர் இணக்கத்தைக் காணவேண்டும். இவையே நாட்டுக்கும் நன்மை பயக்கும். அதேவேளை காணாமற்போனோர் விடயம் ஓர் பெரும் தீராத பிரச்சினையாகவே தொடர்ந்த வண்ணம் உள்ளது. அதற்கும் தீர்வு எட்டவேண்டும்" என்று நல்லை ஆதீன குரு முதல்வர் மேலும் தெரிவித்தார்.

யாழ். மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையையும் பசில் ராஜபக்ச நேற்றுச் சந்தித்து கலந்துரையாடினார். (வ-101)

## காணாமற்...

உறவினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு மாகாணத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் பிரதிநிதிக ளுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருக்கும் இடையேயான சந்திப்பு மன்னார் ஆயர் இல்லத்தில் நேற்று இடம்பெற்றது.

சந்திப்பில் மன்னார்,வவுனியா,கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

"காணாமற்போனோர் விடயங்களைக் கையாள்வதற்காக உருவாக்கப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் உருவாகும் காணாமற்போனோர் அலுவலகத்துக்கு 7 ஆணையாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். அவர்களில் நால்வர் தமிழர்களாக இருக்க வேண்டும். அத்துடன் கொழும்பில் அமையும் அலுவலகத்துக்கு உள்ள அதிகாரத்தை ஒத்த கிளை அலுவலகம் வடக்கிலும் அமையப் பெற வேண்டும்.

எமது இந்தப் பிரச்சினைகள் தொடர்பிலும் எமது நிலமைகள் தொடர்பிலும் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து எடுத்துக் கூற வேண்டும். அதற்கான ஏற்பாட்டை கூட்டமைப்பின் தலைவர் செய்து தரவேண்டும்" என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வலியுறுத்தினர்.

"காணாமற்போனோர் அலுவலகத்துக்கு 4 தமிழர்களை நியமிக்கும் விடயம் மற்றும் கொழும்பில் அமையும் அலுவலகத்துக்கு உள்ள அதிகாரத்தை ஒத்த ஓர் அலுவலகம் வடக்கிலும் அமையப் பெறவேண்டும் என்பவை தொடர்பில் விரைவில் பேச்சு நடத்திப் பதிலளிக்கப்படும். அதேநேரம் அரச தலைவரைச் சந்திப்பதற்கு செல்லும் பிரதிநிதிகளின் விவரங்களைத் தயாரித்து வழங்கினால் அதற்கான ஏற்பாடு செய்து தரப்படும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார். (வ-101)

## வட மாகாண...

யாழ்ப்பாணம், ஒக். 1

வடக்கு மாகாண அரச உத்தியோகத்தர்களின் வசதி கருதி மாகாண உள்ளூராட்சி அமைச்சால் நடத்தப்படும் பேருந்து சேவைகளை விரைவில் நிறுத்துவதற்கு முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனை வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சுகளின் செயலாளர் திருமதி ரூபினி வரதலிங்கம் உறுதி செய்தார்.

வடக்கு மாகாணத்துக்குட்பட்ட அரச அலுவலகங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் போக்குவரத்து வசதி கருதி சிறப்புப் பேருந்து சேவை 2010ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெற்று வருகின்றது. இதற்காக ஓர் குறிப்பிட்ட தொகைப் பணமும் உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட்டது.

எனினும் அறவிடப்படும் பணத்தை பல உத்தியோகத்தர்கள் செலுத்தாத காரணத்தால் அந்த பேருந்து சேவையால் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனாலேயே அந்தச் சேவையை நிறுத்தும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று உதயன் அறிகிறான்.

அந்தச் சேவை நாளை திங்கட்கிழமையுடன் நிறுத்த முடிவு எட்டப்பட்டிருந்தது. எனினும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுகவீனம் காரணமாக ஓய்வில் இருப்பதனால் இது தொடர்பில் நேரில் ஆராய்ந்து இறுதி முடிவை எட்டும் வகையில் தற்காலிக தீர்வு எட்டப்பட்டுள்ளது.

பேருந்து சேவையை எதிர்வரும் 14ஆம் திகதிவரை நடத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான சேவை நிறுத்தப்படும் நிலை காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

"பணத்தைச் செலுத்தாத அரச ஊழியர்களிடம் அதனை அறவிட்டு சீரான முறையில் போக்குவரத்துச் சேவையைக் கொண்டு நடத்த மாகாண சபை முன்வர வேண்டும். மாறாக முழு ஊழியர்களுமே பாதிக்கும் வகையில் அந்தச் சேவையை நிறுத்தும் முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும்" என்று அரச உத்தியோகத்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"மாகாண அரச உத்தியோகத்தர்களுக்கான சேவையில் தற்போது 7 பேருந்துகள் ஈடுபடுகின்றன. இதற்காக தனியான ஒதுக்கீடுகள் இல்லாதபோதும் அந்தச் சேவை இடம்பெற்று வந்தது. பெரும் நிதி இழப்பின் மத்தியிலும் சேவை இடம்பெற்றது. தற்போது மாகாணப் போக்குவரத்து அதிகார சபை உருவாக்கப்பட்டுள்ளது. அதனால் தனிப்பட்ட சேவைகள் எவையும் இடம்பெற முடியாது. அதன் அடிப்படையிலேயே இந்தப் பேருந்து சேவையை நிறுத்தும் முடிவு எட்டப்பட்டது.

இருப்பினும் ஊழியர்களின் போக்குவரத்து வசதிக்காக தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் ஊடாக ஒழுங்கு செய்து வழங்கப்பட்டுள்ளது" என்று வடக்கு மாகாண முதலமைச்சரின் அமைச்சுகளின் செயலாளர் திருமதி.ரூபினி வரதலிங்கம் தெரிவித்தார். (வ-101)

## மூத்த...

மூத்த குடிமக்களாக இருப்பர். நாட்டின் பொருளாதாரத்தில் இது பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் -என்றார். (வ-5)

## தமிழர்கள்...

சுவாம்பிள்ளை ஆண்டகையிடம் ஆணித்தரமாகத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தைப் பாராட்டுவதோடு அரசியல் அமைப்பு முயற்சி வெற்றிபெற எமது ஆசிகள் என்றைக்கும் இருக்கும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் பங்கேற்றார். பின்னர் மன்னார் மாவட்ட ஆயரைச் சந்தித்து சம்பந்தன் ஆசி பெற்றுக் கொண்டார்.

"தற்போது இடைக்கால அறிக்கையே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. எமது மக்கள் விரும்பாத தீர்வு அடங்கிய அரசமைப்பை நாம் ஏற்கப் போவதில்லை. தமிழ் மக்கள் ஏற்கும் தீர்வை எட்டுவதற்கான முயற்சிகளே தொடர்கின்றன. அதற்காக நாம் தொடர்ந்தும் முழு அளவில் முயற்சிக்கிறோம்" என்று எதிர்க் கட்சித் தலைவர் மன்னார் ஆயரிடம் எடுத்துக்கூறினார்.

" தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தைப் பாராட்டுகிறேன். அரசமைப்பு முயற்சி வெற்றிபெற எமது ஆசிகள் இருக்கும். எமது மக்களுக்கான அரசியல் உரிமையைப் பெறும் முயற்சிக்கும் எமது முழுமையான ஒத்துழைப்புக்களும் ஆசியும் இருக்கும்" என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார். இந்தச் சந்திப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப் பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர். அதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், மன்னார் மறை மாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றார். (வ-4101,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

**திருக்குமரன் வி.க. கால்பந்துத் தொடர்**

உரும்பிராய் திருக்குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும் சோபநாத் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மாவத்தை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறி அம்பாள் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி ஏ.எல். விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**துடுப்பாட்டத் தொடர்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் மூன்றாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான துடுப்பாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியை எதிர்த்து சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம -23)



இளைஞர்களுக்கான தேசிய விளையாட்டுவிழாவில் யாழ்ப்பாண மாவட்ட அணி சார்பாக தட்டெறிதலில் பங்குபற்றிய பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் எஸ். பிரகாஸ்ராஜ் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். 20 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதலில் 38:53 மீற்றர் தூரத்துக்கு எறிந்தே அவர் தங்கப்பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். (ம-108)



# சக்திவேலின் தொடர்; றேஞ்சர்ஸ் சம்பியன்

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுகழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில், கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துள்ளது.

சக்திவேலின் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியை எதிர்த்து செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் றேஞ்சர்ஸ் அணியின் சிவறோயன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்தார். 18ஆவது நிமிடத்தில் நஜித் றேஞ்சர்ஸின் சார்பாக மற்றொரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது றேஞ்சர்ஸ் அணி.

இரண்டாவது பாதியிலும் றேஞ்சர்ஸின் ஆதிக்கம் தொடர்ந்தது. 35ஆவது நிமிடத்தில் சுஜாஸ்கான் ஒரு கோலைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது றேஞ்சர்ஸ் அணி.

கொற்றாவத்தை றேஞ்சஸ் அணியின் சுஜாஸ்கான் ஆட்ட நாயகனாகவும், சிவறோயன் தொடராட்ட நாயகனாகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (ம-108,422)

## 10ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா வீரருக்கு வெள்ளி

யாழ்ப்பாணம், ஒக். 1

தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் ஆண்களுக்கான 10ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த வீரரான கிந்துசன் வெள்ளிப் பதக்கத்தைப் கைப்பற்றினார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் இலங்கை இளைஞர் கழக சம்மேளனம் ஆகியன இணைந்து நடத்தும் 29ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா அனுராதபுரத்தில் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவுனியா மாவட்ட வீரர் கிந்துசன் 35:00:65 நிமிடங்களில் ஓடி முடித்து வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றார். (ம)



## சரஸ்வதி, கலைமதி அணிகள் வென்றன

யாழ்ப்பாணம், ஒக். 1

மணற்காடு சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியும், கலைமதி விளையாட்டுக் கழக அணியும் வெற்றிபெற்றன.

அன்ரனீஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வரணி யுத் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழக அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்ட நாயகனாக உரும்பிராய் சரஸ்வதி அணி வீரர் கஜதீபன் தெரிவானார்.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விளான் அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கலைமதி விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக கலைமதி அணியின் பானுப்பிரியன் தெரிவானார். (ம - 23,108)



ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பார்சிலோனாவை எதிர்த்து லொஸ் பல்மாஸ் அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்துக்காக நேற்று பார்சிலோனா அணியின் வீரர்கள் கடும் பயிற்சியில் ஈடுபட்டனர். (ம)



தேசிய இளைஞர் விளையாட்டு விழாவின் ஒரு அங்கமான [illegible] கான கயிறிழுத்தல் போட்டியில், யாழ்ப்பாண மாவட்ட அணி [illegible] இடத்தைத் தனதாக்கியது. (ம - 23)

## போராடி வென்றது இந்து இளைஞர்

யாழ்ப்பாணம், ஒக். 1

மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரில், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழக அணி சம்பியனானது.

மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் [illegible] விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் அமைந்தது. முதலிரு செற்களையும் முறையே 26:24, 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது இந்து இளைஞர் அணி. அடுத்த இரண்டு செற்களையும் முறையே 25:21, 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியப் பதிலடி கொடுத்தது ஆவரங்கால் மத்தி.

முதல் நான்கு செற்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு செற்களைக் கைப்பற்றிய காரணத்தால் ஐந்தாவது செற் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் விதத்தில் அமைந்தது. அந்த செற் 15:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞரின் வசமாக முடிவில் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது இந்து இளைஞர் அணி. (ம -108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கிந்தியத் தீவுகளை வீழ்த்தியது இங்கிலாந்து




மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்றது இங்கிலாந்து. இதனால் அந்த அணி 4:0 என்ற அடிப்படையில் கிண்ணம் வென்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி நிர்ண யிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக கோப் 72 ஓட்டங்களையும், கெய்ல் 42 ஓட்டங்களையும், அம்ரிஸ் ஆட்டமிழக்காமல் 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பிளங்கட் 2 இலக்குகளையும், போல், கரன், ரசிட், மொயின் அலி நால்வரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து அணி முன்வரிசை வீரர்களின் சிறப்பான ஆட்டத்தால் 38 பந்துப் பரிமாற்றங்களிலேயே இலக்கை எட்டியது. ஒரு இலக்கை மட்டும் இழந்து 9 இலக்குகளால் இங்கிலாந்து வெற்றிபெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான பரிஸ்ரௌவ் ஆட்டமிழக்காமல் 141 ஓட்டங்களைப் பெற்றார். அவரை விட றோய் 96 ஓட்டங்களையும், ரூட் ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் பெற்றனர். (ம)

## அத்லெட்ரிகோ மட்ரிட் அதிர்ச்சிகரத் தோல்வி

**ஐரோப்பியக் கால்பந்துக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அத்லெட்ரிகோ மட்ரிட் அணி அதிர்ச்சித் தோல்வியடைந்தது.**

அத்லெட்ரிகோ மட்ரிட்டை எதிர்த்து செல்சியா மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் செல்சியா வெற்றிபெற்றது. ஆட்டத்தின் 40ஆவது நிமிடத்தில் அத்லெட்ரிகோவின் முதல் கோலைப் பதிவுசெய்தார் கிரீஸ்மன். எனினும் 59ஆவது மற்றும் 94ஆவது நிமிடங்களில் செல்சியாவின் சார்பில் கோல்கள் பதிவாக அதிர்ச்சித் தோல்வி கண்டது அத்லெட்ரிகோ மட்ரிட். (ம)

## தென்னாபிரிக்காவையும் இலகுவில் வீழ்த்துவோம்

### என்கிறார் கோக்லி

“தென்னாபிரிக்க அணிக்கு எதிரான தொடரிலும் இந்திய அணியின் வெற்றி தொடரும்” என்று நம்பிக்கை தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.



இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் எதிர்வரும் ஜனவரியில் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ளதால், இந்திய அணி தடுமாற்றத்தை வெளிப்படுத்தும் என்று பரவலாக எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், ஆஸ்திரேலிய அணிக்கு எது நடந்ததோ அதுவே தென்னாபிரிக்க அணிக்கும் நடக்கும் என்று எச்சரித்துள்ளார் கோக்லி.

“சொந்த மண்ணில் நாம் எவ்வாறு செயற்படுகிறோமோ அவ்வாறே வெளிநாட்டு மண்ணிலும் செயற்படுவோம்” என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் முடிவுகள் சில

**யாழ்ப்பாணம், ஒக். 1**

**பிரான்ஸ் தமிழர் கால்பந்தாட்டச் சம்மேளனம் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றன. அவற்றில் சிலவற்றின் முடிவுகள்:**

காலை 8 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புங்குடுதீவு நசரேத் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்ததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

காலை 8.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. கோல்கள் எவையும் பதிவுசெய்யப் படாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் விடத்தல்தீவு யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் ஐயனார் அணி வெற்றிபெற்றது.

காலை 10.15 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கிளிநொச்சி ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கில்லறி விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் கில்லறி அணி வெற்றிபெற்றது.

முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கிளிநொச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணி 3.0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

முற்பகல் 11.45 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மன்னார் டிலசாலகுடி விளையாட்டுக் கழக அணி மோதியது. கோல்கள் எதுவும் பதிவு செய்யப்படாததை அடுத்து ஆட்டம் சமநிலையில் முடிந்தது. (ம -23)





## இந்தியா - ஆஸ்திரேலியா ஐந்தாவது ஆட்டம் இன்று

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஐந்தாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. முன்னதாக முடிவடைந்த முதல் மூன்று ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதி செய்துள்ளது இந்திய அணி. நான்காவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்றது. தற்போது இந்திய அணி 3:1 என்று முன்னிலையில் உள்ளது. இந்த நிலையில் இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ம)

## சமநிலையை நோக்கி

இலங்கை - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் தற்போது நடைபெற்று வரும் முதலாவது ஆட்டம் சமநிலையில் முடிவுக்கு வருவதற்கு அதிக சாத்தியமுள்ளது.

அபுதாபியில் கடந்த 28ஆம் திகதி ஆரம்பமாகி இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 419 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக சந்திமல் 155 ஓட்டங்களையும், கருணாரத்ன 93 ஓட்டங்களையும், டிக்வெல்ல 83 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் அப்பாஸ், யாசிர் ஷா இருவரும் தலா 3 இலக்குகளையும், ஹசன் அலி 2 இலக்குகளையும், சொகைல் ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. அசார் அலி 74 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். முதல் மூன்று நாள்களில் இன்னும் ஒரு இன்னிங்ஸ் கூட முடிவடையவில்லை. இதனால் இந்த ஆட்டம் சமநிலையை நோக்கிச் செல்ல அதிக சாத்தியமுள்ளதாகக் கருதப்படுகிறது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவின் பிடியில் சிக்கியது பங்களாதேஷ்;




பங்களாதேஷுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் வெற்றிபெறக்கூடிய அறிகுறிகளை வெளிப்படுத்தியுள்ளது தென்னாபிரிக்க அணி.

பங்களாதேஷ் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் கடந்த 28ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 496 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதென அறிவித்தது. அதிகபட்சமாக எல்கர் 199 ஓட்டங்களையும், அம்லா 137 ஓட்டங்களையும், மார்க்ரம் 97 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கக்கியூ 28 ஓட்டங்களுடனும், இக்பால் 22 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ்; அணி 320 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் மகாராஜ் 3 இலக்குகளையும், மோர்கல், ரபாடா இருவரும் தலா 2 இலக்குகளையும், ஒலிவர், பிளுக்வையோ இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய தென்னாபிரிக்கா நேற்றைய நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 54 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.




ஆண் பரிசாரகர் (Male Attendant) தொழிலாளி (Labour)
உடனடி தொழில் வாய்ப்பு

யாழ் மாவட்டத்தில் இயங்கும் பிரபல தனியார் வைத்தியசாலைக்கு மேற்படி பதவிக்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. நியாயமான சம்பளம் வழங்கப்படும்.
விண்ணப்பங்களை 05.10. 2017 இற்கு முன்னர் தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல்மூலமோ அல்லது நேரில் வரவேற்பாளர்களிடம் கையளிக்க முடியும்.

மனிதவள முகாமையாளர்
நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை,
இல 342,பலாலி வீதி திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
Tel No : 0212219988 Extension No : 324
Mobile : 077 773 2892 . Email : nchjaffna@gmail.com

FLC FRENCH LANGUAGE CENTRE
பிரெஞ்சு வகுப்புக்கள்
V. ஜெகன் (Trained in France- 2007)
2006 முதல் இன்றுவரை 1305 மாணவர்கள்.
40, பலாலி வீதி, இலுப்பையடி
0779 789 456 / 021 221 7781
ஆரம்பம் 07.10.17 சனி காலை 10மணி
181, பிரதான வீதி, நெல்லியடி
021 320 2973
ஆரம்பம் 09.10.17 மாலை 4மணி
திருமணம் முடித்து U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் Grammar வகுப்புக்களும் நடை பெறுகின்றன.

M.B.B.S 2018 INTAKE
WHO Recognized Commonwealth State Universities. Only Local fees apply.
" PARTIAL SCHOLARSHIPS AVAILABLE " " ADMISSION NOW ON"
BANGLADESH / RUSSIA
State Universities - Volgograd & Stavropol
" Limited seats available, Dont miss this opportunity."
• with very attractive tution fees | comfortable
• hostel with many more fac lities
OPTIMA INTERNATIONAL COLLEGE - Malaysia
Foundation in Arts & Science / Modern Languages / Hospitality & Tourism
Opportunity to go overseas ( internship or employment )
Call : 0777348049 / 0757213200
Global Education Training & Services (GETS)
No. 315/D, Negombo Road, Kandana.
Email : getslanka@gmail.com | getslanka@sltnet.lk
Web : www.getslanka.com
max adz

காணி விற்பனைக்கு
நவக்கிரி பாடசாலைக்கு அண்மித்ததாக நி.பர. 4 விற்பனைக்குண்டு.
075 469 9368

வீடு, காணி விற்பனைக்கு
நல்லதண்ணீர் கிணற்றுடன் வீடு. காணி விற்பனைக்குண்டு.
இடம் : கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு , யாழ்ப்பாணம்.
076 785 1067

உடனடி வேலைவாய்ப்பு
கணினி, ஆங்கிலம், மின்அஞ்சல், இணையத்தளம், கணக்கியல், வாடிக்கையாளர் தொடர்பு போன்றவற்றில் அனுபவமுடையவர் தேவை.
வயதெல்லை : 25 - 40 வரை
உங்கள் சுயவிவரக்கோவையை இரு சிபார்சு செய்பவர்களின் விவரங்களுடன் அனுப்பி வைக்கவும்.
சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.
15.10.2017 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
தலைவர்
யாழ் ஐக்கிய வியாபாரச்சங்கம்
கார்கில்ஸ் கட்டடம், மாடி - 1
530, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
Email: jcsltd@hotmail.com

வீடு வாடகைக்குத் தேவை
சிறிய குடும்பம் ஒன்றுக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு கந்தர்மடம், திருநெல்வேலி, கோண்டாவில் பகுதிகளில் பலாலி வீதிக்கு அண்மையாக தேவை.
076 726 6899, 070340 0669

வான் விற்பனைக்கு
Toyota Dolphin - LH - 112 - 1995 உற்பத் தியாகிய புதிய வான் 56 - xxxx, Dual AC, Rotable Seats, Rivers Camera, Long Model Green colour, Very good Condition உடன் விற்பனைக்குண்டு.
077 137 5715, 077 645 4888

Wijitha Trading
Kilinochchi
எமது நிறுவனத்திற்கு முகாமையாளர் சேகரிப்பு அதிகாரிகள் சந்தைப்படுத்தல் அதிகாரிகளுக்கு வேலைவாய்ப்பு உண்டு. மற்றும் வட்டா வாகனங்கள் தேவை.
கிளிநொச்சி
011 438 4120/ 011 406 2836
011 432 0232/ 076 707 4609

## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு காசிநாதர்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு காசிநாதர் 28.09.2017 வியாழக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - செல்லாபரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோன்மணியின் அன்புக் கணவரும், கார்த்திக்குமாரனின் (லண்டன்) தந்தையும், சச்சிதானந்தம் (கே.எஸ். ஆனந்தன்), நித்தியானந்தம், காலஞ்சென்ற கௌசல்லாதேவி மற்றும் விவேகானந்தன் (வெள்ளை - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரைசிங்கம், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, பாலசுப்பிரமணியம் (சின்னராசா) மற்றும் கணேசலிங்கம் (ஆனந்தி), கமலாதேவி, விமலாதேவி (கொழும்பு), காலஞ்சென்ற முத்துலிங்கம் மற்றும் மகாதேவன், கமலாதேவி, பரமேஸ்வரி, ரஞ்சிதமலர்,செல்வராஜா (ஓய்வுநிலை உதவி பிரதேச செயலர்) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் மகாலட்சுமி, சந்திரவதனா, பாலச்சந்திரன், சிவலிங்கம், சரோஜினிதேவி, பத்மாவதி, லீலாவதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு கட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**021 492 5323**

## மரண அறிவித்தல்

### இராசலிங்கம் நாகராஜா (மாஸ்ரர்)

*(ஓய்வுநிலை ஆசிரியர்)*



சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வீரபத்திரர் வீதி, நுணாவில் மேற்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசலிங்கம் நாகராஜா கடந்த (29.09.2017) வெள்ளிக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம் - வள்ளியம்மை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் பரமேஸ்வரி (ஆசை)யின் பாசமிகு கணவரும் புவனேஸ்வரி, பேரின்பநாயகம் (ஸ்ரீ சுபா பேக்கரி, சுதுமலை), மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரமேஷ் (நோர்வே), ரமணன் (நொதேர்ன் பவர், சுன்னாகம்),அஞ்சனா (கனடா), அனுபமா (கனடா), அகல்யா (H.N.B., சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஏலின் அனிற்றா (நோர்வே), ரஜித்தா (அளவெட்டி), குணராஜா (கனடா), வரதராஜா (கனடா), பாபுஜீ (H.N.B., கிளிநொச்சி வடக்கு) ஆகியோரின் அன்பு மாமனும் தவராசா, அழகம்மா, காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் நாகேஸ்வரி, காலஞ்சென்ற புவனேஸ்வரி மற்றும் அன்னம்மா ஆகியோரின் மைத்துனரும் எம்மி அஜந்தா, மாயா ரொக்ஷனா, மார்ட்டின், மதுமிதா, கோபிஷன், சஞ்சீவ், சாம்பவி, சாருகா, ஓவியன், ஓவியா, பூஜா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2017) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 529 6242,**
**077 8[illegible]**

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.